සේවා නියුක්තයන්ගේ භාර අරමුදල් මණ්ඩලය
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை
Employees' Trust Fund Board




වාර්ෂික වාර්තාව
வருடாந்த அறிக்கை
Annual Report
2025

# தேசத்தின் இதயத்துடிப்பை வலுவூட்டல்

தேசத்தின் இதயத்துடிப்பை வலுவூட்டுவதற்கு தொடர்ச்சியான பரிணாம வளர்ச்சியும் அர்ப்பணிப்பும் அவசியமாகும். டிஜிட்டல் மாற்றம், வெளிப்படையான நிர்வாகம் மற்றும் கொள்கை ரீதியான தலையீடுகள் மூலம் இந்த இலக்குகளை அடைவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க நாம் கடமைப்பட்டுள்ளோம்.

2025 ஆம் ஆண்டிலும், எமது உறுப்பினர்கள் நம்மீது வைத்துள்ள தளராத நம்பிக்கையின் பாதுகாவலராக நாம் விளங்குகின்றோம். நாம் வெறும் நிதியமொன்றை மாத்திரம் நிர்வகிப்பதோடு நின்றுவிடாமல், இலங்கையின் இதயத்துடிப்பைப் போஷித்து, நாடு செழிப்பை நோக்கி பயணிக்கும் பாதையில் நாட்டை கட்டியெழுப்பும் கரங்களை உண்மையாகவே வலுவூட்டுவதை உறுதிசெய்கின்றோம்.

# உள்ளடக்கம்



143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்

155 நிறுவனத்தின் பொறுப்புடமை

210 நிதித் தகவல்கள்

261 மேலதிக தகவல்கள்

## 143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்


144 அறிக்கையின் உள்ளடக்கம்
145 நாம் யாவர்
145 பிரதான நிதி நிலைமைகள்
147 பிரதான மைல்கற்கள்
149 பெறுமதி உருவாக்க மாதிரி
151 சபையின் பிரிவுகள் / கிளைகள் / அலகுகளின் தொழிற்பாடுகள்
153 செயலாற்றுகை மீளாய்வு


## 155 நிறுவனத்தின் பொறுப்புடமை


156 தவிசாளரின் மீளாய்வு
160 பணிப்பளர் சபையின் செய்தி
162 முகாமைத்துவக் கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு
179 பணிப்பாளர் சபை
184 சிரேஷ்ட முகாமைத்துவம்
191 முகாமைத்துவக் குழு
193 நிறுவன ஆளுகை
203 இடர் முகாமைத்துவம்


## 210 நிதித் தகவல்கள்


211 விரிவான வருமானக் கூற்று
213 நிதி நிலமைப் பற்றிய கூற்று
215 அமைப்பு மாற்றம் பற்றிய கூற்று
216 காசுப் பாய்ச்சல் கூற்று
217 திறைசேரி பிணைமுறி தொகுப்பின் சந்தைப் பெறுமதி
219 பட்டியலிடப்பட்ட கடன்பத்திர அமைப்பின் சந்தைப் பெறுமதி
220 அமைப்பு முதலீட்டுக் கூற்று
224 முக்கிய கணக்கியல் கொள்கைகள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்


## 261 மேலதிக தகவல்கள்


262 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை 2025
270 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை தொடர்பில் சபையின் அவதானிப்புகள்
415 பத்து வருட கால சாராம்சம்
417 புள்ளிவிபரவியல் பின்னிணைப்புகள்
420 எமது அடைவுகள்

# 45ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்



www.etfb.lk

143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்

155 நிறுவனத்தின் பொறுப்புடமை

210 நிதித் தகவல்கள்

261 மேலதிக தகவல்கள்

# அறிக்கையின் **உள்ளடக்கம்**

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் சமர்ப்பிக்கப்படும் 45 ஆவது வருடாந்த அறிக்கை இதுவாகும். 2025 ஆம் ஆண்டில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் நலன்பெறுநர்களுக்கும் ஏனைய பங்குதாரர்களுக்கும் முக்கியமான பெறுமானத்தை தாபனம் எவ்வாறு உருவாக்கியது என்பதற்கான விரிவான அறிக்கையொன்று இதன் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்றது.

2025 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையின் உள்ளடக்கம் 2025 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2025 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் தலைமை அலுவலகம் மற்றும் கிளை வலையமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கியுள்ளன. மிக அண்மைய வருடாந்த அறிக்கையான 2024 ஆம் ஆண்டின் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த அறிக்கையுடன் இவ்வறிக்கை ஒப்புநோக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் உள்ளடக்கம் நிறுவனத்திற்கும் அதன் முக்கிய பங்குதாரர்களுக்கும் முக்கியத்துவம்மிக்க அம்சங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

### அறிக்கையின் நோக்கம்

இவ்வறிக்கையானது தாபனத்தின் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால தனித்துவமிக்க பெறுமான உருவாக்கத்தினை தமது தனித்துவமான பங்குதாரர்களுடன் பகிர்ந்துகொள்வதனை நோக்காகக் கொண்டுள்ளது. அதன் மூலம் நிதியத்தின் தந்திரோபாயம், ஆளுகை மற்றும் நிதி முகாமைத்துவம் குறித்து சுருக்கமான தொடர்பாடலையும் இது வழங்குதுடன் அதன் நிதிசார் செயலாற்றுகை மற்றும் தாபனத்தினால் உருவாக்கப்பட்ட சமூகத்தடங்கள் ஆகியவற்றுக்கு இடையிலான உறவினையும் நிரூபணஞ் செய்கின்றது.

இவ்வறிக்கையானது அளவுசார் மற்றும் தர ரீதியான தரவுகளைக் கொண்டுள்ளதுடன், ஒப்புநோக்குவதற்கு மற்றும் மேலதிக பகுப்பாய்வினை எளிதாக்குவதற்கு முடியுமான அளவு ரீதியான தரவுகளை வழங்குவதே எமது நோக்காகும். நிதிக் கூற்றுக்களும் அதனுடன் தொடர்பான குறிப்புக்களும் அரசாங்க கணக்காய்வாளர் அதிபதியினால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளதுடன் உத்தரவாத அறிக்கையும் இவ்வறிக்கையில் உள்ளது

### அறிக்கையின் இணக்கம்

இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அரசாங்க தொழில் முயற்சிகளுக்கான நிறுவன ஆளுகை தொடர்பான சிறந்த ஒழுக்க நெறிக் கோவை மற்றும் 1980 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம் என்பவற்றுடன் நிறுவனம் எவ்வாறு இணங்கி ஒழுகுகின்றது என்பது குறித்து கலந்துரையாடுகின்றது.

### மூலோபாய நோக்கு

வருடம் பூராகவும் செயலாற்றுகைக்கு கவனம் செலுத்தி இந்த வருடாந்த அறிக்கை பங்குதாரர்களின் வளர்ச்சிக்காக சபையின் தற்போதைய மற்றும் எதிர்காலப் பணிகள் தொடர்பில் புரிந்துணர்வை வழங்குகின்றது.

**தொடர்புகொள்ள வேண்டிய உத்தியோகத்தர்**

**திரு. கே.டி.ஏ.பி. கருணாரத்ன**
பிரதி பொது முகாமையாளர் (நிதி)

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சபை
தொலைப்பேசி : +94 11 7747250
தொலைநகல் : +94 11 7747209
மின்னஞ்சல் : finance@etfb.lk

# நாம் யாவர்



ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டு 1981 ஆம் ஆண்டு மார்ச் 1 ஆம் திகதி செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. இது தொழில் அமைச்சின் கீழ் நிறுவப்பட்டு, தற்போது நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கிவருகின்றது. அரசாங்க ஓய்வூதியத்திற்கு உரித்தாகாத எல்லா அரச துறை ஊழியர்களும் மற்றும் தனியார் துறை ஊழியர்களும் இந்நிதியத்தில் அங்கத்தவர்களாவதுடன், அவர்களது தொழில் வழங்குநர்கள் அவ்வூழியர்களின் மொத்த உழைப்பிலிருந்து 3% இனை நிதியத்திற்கு மாதாந்தம் அனுப்ப வேண்டியுள்ளனர். எனவே ஊழியர் சேமலாப நிதியத்தைப் போலன்றி, தொழில் வழங்குநர் மாத்திரமே ஊழியர் / அங்கத்தவர் சார்பாகப் பங்களிப்பொன்றை மேற்கொள்வதுடன் அங்கத்தவர்கள் பங்களிப்புச் செய்யாத ஒரு நலனாகும். நாட்டின் பொருளாதாரத்திற்கு கணிசமான பங்களிப்பை வழங்கும் சுயதொழில் முயற்சியாளர்களினதும் புலம்பெயர் தொழிலாளர்களினதும் தன்னார்வ அங்கத்துவத்தினை அதிகரிப்பதற்கு விசேட கவனஞ் செலுத்தப்படுகின்றது.

## சபையின் குறிக்கோள்கள்

1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 07 ஆம் பிரிவுக்கு அமைய

அ) நிதியிடல் மற்றும் முதலீட்டில் பங்குபெறுவதன் ஊடாக ஊழியர் உடைமையாண்மை, ஊழியர் நலன்புரி, பொருளாதார சனநாயகம் ஆகியவற்றை ஊக்குவித்தல்

ஆ) தொழில் முயற்சிகளில் உரிமை பங்கினைப் பெற்றுக் கொள்வதன் மூலம் முகாமைத்துவத்தில் ஊழியர் பங்களிப்பினை ஊக்குவித்தல்

இ) ஊழியர்கள் ஓய்வு பெறும் போது தான் பங்களிப்புச் செய்யாத நலன்களை பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்தல் மற்றும்

ஈ) மேலே (அ), (ஆ) மற்றும் (இ) பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களிற்குத் தேவையான ஏனைய செயற்பாடுகளை நிறைவேற்றுதல்.

## எமது பொறுப்புக்கள்

### நோக்கு

நிறுவன ரீதியான திறமையினூடாக அனைத்து பங்குதாரர்களுக்கும் செயலூக்கமிக்க மற்றும் சாத்தியமிக்க முதன்மையான நம்பிக்கைப் பொறுப்பாக திகழ்தல்.

### செயற்பணி

நிதிசார் உறுப்பினர் நலன்கள் மற்றும் சிறந்த வாடிக்கையாளர் சேவைகளை பரந்த அளவில் வழங்குவதில் மிகவும் அக்கறையுள்ள மற்றும் விவேகமுள்ள நம்பிக்கைப் பொறுப்பாக விளங்குதல்.

### பெறுமானங்கள்

- ஆக்கத்திறனமிக்க, புத்தாக்கமிக்க மற்றும் அர்ப்பணிப்புமிகு பணிக்குழாம்
- மக்கள் நேயமிகு வேலைச் சூழல்
- ஆதரவுமிக்க கொள்கைகள் மற்றும் செயன்முறைகள்
- சிறந்த அமைப்புக்கள் மற்றும் நடைமுறைகள்
- உயர் நிதி ஸ்தீரத்தன்மை
- திருப்தியான வாடிக்கையாளர்கள்

www.etfb.lk

143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடைமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

# நிதிசார் **சிறப்பம்சங்கள்**

| | 2025 | 2024 | வித்தியாசம் |
|---|---|---|---|
| | இ.ரூபா ´000 | இ.ரூபா ´000 | % |
| **தொழிற்பாடுகள்** | | | |
| மொத்த வருமானம் | 71,277,599 | 65,987,907 | 8.02 |
| மொத்த வட்டி வருமானம் | 68,766,748 | 61,819,095 | 11.24 |
| மொத்த தொழிற்பாட்டுச் செலவினம் | 2,767,476 | 2,811,307 | (1.56) |
| வரிக்கு முன்னரான இலாபம் | 68,510,122 | 63,176,600 | 8.44 |
| வரிச் செலவினம் | 9,611,094 | 8,678,062 | 10.75 |
| வரிக்கு பின்னரான இலாபம் | 58,899,028 | 54,498,538 | 8.07 |
| **நிதி நிலைமைப் பற்றிய கூற்று** | | | |
| காசும் காசுக்கு சமமானவையும் | 661,831 | 794,613 | (16.71) |
| நிதிச் சொத்துக்கள் FVTPL | 2,936,878 | 2,646,191 | 10.99 |
| நிதிச் சொத்துக்கள் FVTOCI | 14,893,209 | 14,708,973 | 1.25 |
| கடன் தீர்ப்புச் செலவின் மீதான நிதிச் சொத்துக்கள் | 644,575,893 | 563,248,506 | 14.44 |
| அங்கத்துவர் நிதியம் மற்றும் ஒதுக்குகள் | 667,406,942 | 585,984,840 | 13.89 |
| **அங்கத்தவர் நோக்கு** | | | |
| அங்கத்துவர் நிதியம் | 637,443,057 | 564,326,576 | 12.96 |
| வட்டி மற்றும் பங்கிலாபம் | 55,303,829 | 51,301,803 | 7.80 |
| வட்டி மற்றும் பங்கிலாபம் (%) | 9.50% | 10% | (0.50) |
| அங்கத்தவர் நலன்கள் | 403,573 | 452,742 | (10.86) |
| முதலீட்டின் மீதான நலன்கள் ROI | 11.36% | 11.92% | (0.56) |
| பங்கின் மீதான நலன்கள் ROE | 9.80% | 10.20% | (0.40) |
| சொத்துக்கள் மீதான நலன்கள் ROA | 9.32% | 9.77% | (0.45) |

1
**மொத்த சொத்துக்கள்**
(ரூ.மில்.)
**673,228**
591,256 (2024)

2
**வருடத்தில் இலாபம்**
(ரூ.மில்.)
**58,899**
54,498 (2024)

3
**அங்கத்தவர் நிதியம்**
(ரூ.மில்.)
**637,443**
564,327 (2024)

# பிரதான மைல்கற்கள்

**1986**
மரண நலத்திட்டம்
ரூ. 100,000/-

**1989**
மரண நலத்திட்டம்
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் :
ரூ. 200,000/-

**1991**
மரண நலத்திட்டம்
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம்
இதய சத்திர சிகிச்சைக்கான நிதியுதவி:
ரூ. 200,000/-

**1992**
மரண நலத்திட்டம்
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம்
இதய சத்திர சிகிச்சைக்கான நிதியுதவி
கண் வில்லை செலவிற்கான மீளளித்தல்
ரூ. 18,000/-

**1994**
மரண நலத்திட்டம்
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம்
இதய சத்திர சிகிச்சைக்கான நிதியுதவி
கண் வில்லை பொருத்தும் செலவிற்கான மீளளித்தல்
5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் ரூ. 15,000/- வீதம் 9,000 புலமைப் பரிசில்கள்

**1997**
மரண நலத்திட்டம் | நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் | இதய சத்திர சிகிச்சைக்கான நிதியுதவி | கண் வில்லை செலவிற்கான மீளளித்தல் | 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் | "சிரமசுவ ரெக்கவரண" சிகிச்சைத் திட்டம் (ரூ. 25000 வீதம் ஒரு வருடத்திற்கு உச்சமாக ரூ. 50,000 சேவைக்காலத்திற்குள்)

**2002**
மரண நலத்திட்டம் | நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் | இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி | கண் வில்லை செலவிற்கான மீளளித்தல் | 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் "சிரமசுவ ரெக்கவரண" சிகிச்சைத் திட்டம்
"வியன" வீட்டுக் கடன் திட்டம்






143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடைமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

## 2006

மரண நலத்திட்டம் | நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் | இதய சத்திர சிகிச்சைக்கான நிதியுதவி | கண் வில்லை செலவிற்கான மீளளித்தல் | 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் | சிரமசுவ ரெக்கவரண" சிகிச்சைத் திட்டம் | "வியன" குறைந்த வீட்டுக் கடன் திட்டம் சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கு நிதியுதவி ரூ. 300,000/-

## 2010

மரண நலத்திட்டம் | நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் | இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி | கண் வில்லை செலவிற்கான மீளளித்தல் | 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் | "சிரமசுவ ரெக்கவரண" சிகிச்சைத் திட்டம் | "வியன" வீட்டுக் கடன் திட்டம் | சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கு நிதியுதவி | கபொத (உ/த) மாணவர்களுக்கான நிதியுதவி ரூ. 12,000/- வீதம் 5,000 புலமைப் பரிசில்கள்

## 2016

மரண நலத்திட்டம் | நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் | இதய சத்திர சிகிச்சைக்கான நிதியுதவி | கண் வில்லை செலவிற்கான மீளளித்தல் | 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் | "சிரமசுவ ரெக்கவரண" சிகிச்சைத் திட்டம் | "வியன" வீட்டுக் கடன் திட்டம் | சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கு நிதியுதவி | கபொத (உ/த) மாணவர்களுக்கான நிதியுதவி கண் வில்லை செலவிற்கான மீளளித்தல் ரூ. 30,000/-

## 2022

மரண நலத்திட்டம் | நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் | கண் வில்லை செலவிற்கான மீளளித்தல் | 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் | "சிரமசுவ ரெக்கவரண" சிகிச்சைத் திட்டம் | "வியன" வீட்டுக் கடன் திட்டம் | கபொத (உ/த) மாணவர்களுக்கான நிதியுதவி | கண் வில்லை செலவிற்கான மீளளித்தல் | சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கு நிதியுதவி ரூ. 350,000/- இதய சத்திர சிகிச்சைக்கான நிதியுதவி: ரூ. 350,000/-

## 2023

மரண நலன் திட்டம் | நிரந்தர அங்கவீன நலன் திட்டம் | இருதய சத்திர சிகிச்சை நிதியுதவி | உள்ளக கண் வில்லைப் பொருத்தும் செலவுகளை மீளளிப்புச் செய்தல் | ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் பிள்ளைகளுக்கு நிதியுதவி | சிரமசுவ ரெகவரண வைத்திய சாலை அனுமதி மருத்துவ காப்புறுதித் திட்டம் | "வியண" குறைந்த வட்டி வீடமைப்புக் கடன் | சிறுநீரகம் பொருத்தல் நிதியுதவி | க.பொ.த. உயர்தரம் பரீட்சைக்கு தோற்றும் பிள்ளைகளின் தொழிற் பயிற்சி பாடநெறிக்கு நிதியுதவி "நிபுணதா சவிய" ரூ. 50,000/-

## 2024

மரண நலன் கொடுப்பனவுத் திட்டம் | நிரந்தர அங்கவீன நலன் திட்டம் | இருதய சிகிச்சைக்கான நிதியுதவி | உள்ளக கண் வில்லைகள் பொருத்தும் செலவினங்களை மீளளித்தல் | தரம் ஐந்து பரீட்சையில் சித்தியடையும் பிள்ளைகளுக்கான நிதியுதவி | சிரமசுவ ரெகவரண வைத்தியசாலை அனுமதிக்கான மருத்துவக் காப்புறுதித் திட்டம் | "வியன" குறைந்த வட்டி வீடமைப்புக் கடன் திட்டம் | சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைக்கான நிதியுதவி | க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியுள்ள பிள்ளைகளுக்கு தொழிற் பயிற்சிப் பாடநெறிகளுக்கான நிதியுதவி "நிபுணதா சவிய" ரூ. 50,000 | அரசாங்கப் பல்கலைக்கழகங்களில் நுழைவதற்கு தகைமைப் பெற்றுக்கொள்ளும் பிள்ளைகளுக்கான நிதியுதவி (விஷ்வ யாத்ரா – ரூ. 25,000)

## 2025

மரண நலன் கொடுப்பனவுத் திட்டம் | நிரந்தர அங்கவீன நலன் திட்டம் | இருதய சிகிச்சைக்கான நிதியுதவி | தரம் ஐந்து பரீட்சையில் சித்தியடையும் பிள்ளைகளுக்கான நிதியுதவி | சிரமசுவ ரெகவரண வைத்தியசாலை அனுமதிக்கான மருத்துவக் காப்புறுதித் திட்டம் | "வியன" குறைந்த வட்டி வீடமைப்புக் கடன் திட்டம் | சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைக்கான நிதியுதவி | க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியுள்ள பிள்ளைகளுக்கு தொழிற் பயிற்சிப் பாடநெறிகளுக்கான நிதியுதவி "நிபுணதா சவிய" ரூ. 50,000 | அரசாங்கப் பல்கலைக்கழகங்களில் நுழைவதற்கு தகைமைப் பெற்றுக்கொள்ளும் பிள்ளைகளுக்கான நிதியுதவி (விஷ்வ யாத்ரா - ரூ. 25,000) | கண் வில்லைகள் பொருத்தும் செலவினங்களை மீளளித்தல் (ரூ. 50,000 வரை அதிகரித்தல்)

# பெறுமதி உருவாக்க மாதிரி

## பெறுமதி இயலுமைகள் (உள்ளீடுகள்)

### முதலீட்டு மூலதனம்

- அங்கத்தவர் நிதியம் - 564 பில்லியன்

### அங்கத்துவ மூலதனம்

- மொத்த தொழில் வழங்குநர்கள் 84,578
- மொத்த அங்கத்தவர் கணக்குகள் 2,654,811
- சுயதொழில் மற்றும் குடிப்பெயர் ஊழியர்கள் 45,728

### ஊழியர் மூலதனம்

- மொத்த ஆளணி 847
- சபையில் 35% க்கும் மேலான ஆளணி 20 வருடத்திற்கும் மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டவர்கள்
- திறமை தகுதி மற்றும் தகைமைப்பெற்ற ஆளணி

### பங்குடமை மூலதனம்

- நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
- ஊழியர் சேமலாப நிதியம் (EPF)
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை (ICTA)

### சமூக மற்றும் சமுதாய மூலதனம்

- தொழிலாளர் சமூகம்

www.etfb.lk

143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

## பெறுமதி உருவாக்கம் (செயன்முறை)

**தொலைநோக்கு, செயற்பணி மற்றும் பெறுமானங்கள்**

**இலக்குகள் மற்றும் நோக்கங்கள்**

**மூலோபயங்கள் மற்றும் செயற்பாடுகள்**

**அடிப்படையான செயற்பாடுகள்**

- சேகரிப்பு
- இணக்கம் மற்றும் செயற்படுத்தல்
- தொழிற்வழங்குநர் தொடர்புகள்
- அங்கத்துவ சேவைகள்
- முதலீடுகள

**இரண்டாம் நிலை செயற்பாடுகள்**

- நிதியீட்டம்
- தகவல் தொழில்நுட்பம்
- மனிதவளம்
- உள்ளக கணக்காய்வு

**1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க சட்டம்**

- நிறுவன நல்லாட்சி
- நிறுவன இடர் முகாமைத்துவம்

## உருவாக்கப்பட்ட பெறுமதி (வெளியீடுகள்)

**முதலீட்டாளர்கள்**

- அங்கத்தவர் நிதியம் 637 பில்.
- முதலீட்டின் மீதான நலன்கள் 11.36%

**அங்கத்தவர்கள்**

- வட்டி 3.00%
- பங்கிலாபம் 6.50%

**ஊழியர்கள்**

- தனிப்பட்ட செலவினம் 1.5 பில்லியன்
- பயிற்சி மற்றும் அபிவிருத்திச் செலவு 3.8 மில்லியன்
- ஆளணிப் புரள்வு 5% க்கு குறைவு

**சமூகம்**

- கோரிக்கை கொடுப்பனவு 30 பில்லியன்
- இருதய சிகிச்சை 168 மில்லியன்
- மரண நலன்கள் 98 மில்லியன்
- ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் 94 மில்லியன்
- உயர் கல்வி நிதி 54 மில்லியன்
- நிபுனதா சவிய 0.44 மில்லியன
- சிரமசுவ திட்டம் 17 மில்லியன்
- நிரந்தர அங்கவீனம் 25 மில்லியன்
- சிறுநீரகம் மாற்றுதல் 6 மில்லியன்
- கண்வில்லை பொருத்தல் 9.8 மில்லியன




# சபையின் திணைக்களங்கள்/ பிரிவுகள்/ அலகுகள் ஆகியவற்றின் தொழிற்பாடுகள்

## சேகரிப்பு மற்றும் தொழில் வழங்குநர் தொடர்புகள் பிரிவு

தனியார் நிறுவனங்களிலும் இளைப்பாற்றுச் சம்பளம் கிடைக்கப் பெறாத அரச நிறுவனங்களிலும் பணிபுரியும் ஊழியர்களின் மொத்த வருவாயில் 3% இனைப் பங்களிப்புச் செய்வது கட்டாயமாகும். தொழில்தருநர்களிடமிருந்து உரிய நேரத்தில் பங்களிப்புக்களைச் சேகரித்தல், மேலதிக கட்டண அறவீடுகளைச் சேகரித்தல், தவறுபவர்களை/ பங்களிக்காதோரை அடையாளங்காணுதல், தவறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுத்தல் போன்றன பங்களிப்புச் சேகரித்தல் படிமுறையுடன் தொடர்புடைய முக்கியமான செயற்பாடுகளாகும். சபையின் சேகரிப்பு இலக்குகளை அடைவதே சேகரிப்பு மற்றும் தொழில்தருநர் தொடர்புப் பிரிவின் பொறுப்பு ஆகும்.

## முதலீட்டுப் பிரிவு

சபையின் பல்வேறு முதலீட்டு நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கு அமைக்கப்பட்டுள்ள முதலீட்டுப் பிரிவு நிறுவனத்தின் முக்கிய வர்த்தக அலகாகும். முதலீடுகள் மற்றும் திரவத்தன்மையின் பாதுகாப்பினைப் பேணும் அதே வேளையில் உச்ச வருவாயை ஈட்டுவதே இவ்வலகின் முக்கிய நோக்கமாகும். முதலீட்டுத் தீர்மானங்களுக்கான வழிகாட்டியாக விரிவான முதலீட்டுக் கொள்கை ஒன்று உள்ளது.

## அங்கத்தவர் சேவைகள் பிரிவு

இப்பிரிவின் பிரதான தொழிற்பாடுகளாவன, அங்கத்தவர் கணக்குகளை இற்றைப்படுத்தல் மற்றும் பேணுதல், அங்கத்தவர்களுக்கு வருடாந்த அங்கத்தவர் கூற்றுக்களை வெளியிடுதல், பொது நலன்களின் (சாதாரண மற்றும் மரண நலன் கோரல்கள்) துரித செயலாக்கம் மற்றும் செயற்படு அங்கத்தவர்களுக்கான ஏனைய நலன்புரித் திட்டங்களைப் பேணுதல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன. இப்பிரிவின் செயற்பாடுகளை மேலும் வலுவூட்டுவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கான போதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

## நிதிப் பிரிவு

நிதிப் பிரிவின் முக்கிய தொழிற்பாடுகளாவன, மாதாந்த மற்றும் வருடாந்த கணக்குகள், வருடாந்த வரவு செலவுதிட்டம் மற்றும் பணிக்குழாத்தினரதும் ஏனையவற்றினதும் கொடுப்பனவுகள் ஆகியவற்றை அரச வரிகளுக்கு உட்பட்டவாறு தயாரித்தல், அரச கணக்காய்வு விடயங்களை ஒருங்கிணைத்தல், கூட்டிணைந்த திட்டம் மற்றும் ஏனைய முகாமைத்துவ தகவல் அறிக்கைகள் ஆகியவற்றைத் தயாரித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன.

## நிர்வாகம் மற்றும் மனித வளப் பிரிவு

தற்போதைய போட்டிமிக்க வர்த்தகச் சூழலில் இன்றியமையாத நவீன மனித வள நுட்பங்கள் மற்றும் சிறந்த அலுவலக நடைமுறைகள் ஆகியவற்றை பின்பற்றுவதன் தேவை அறியப்பட்டுள்ளது. ஒரு சேவை நிறுவனமான ETF சபை மக்கள் மீது (ஊழியர்கள்) தங்கியிருக்கும் தன்மையானது மிகவும் உயர்வானது. எனவே, நிர்வாகம் மற்றும் மனித வளப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை அபிவிருத்தி மற்றும் விருத்தி செய்வதற்கு உயர் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே நிர்வாகம் மற்றும் மனித வளப் பிரிவினால் பின்பற்றப்படும் வழிமுறைகள் மற்றும் காணப்படும் முறைமைகளை இற்றைப்படுவதற்கும் விருத்தி செய்வதற்கும் மற்றும் பணிக்குழாத்தினருக்குத் தேவையான பயிற்சிகளை வழங்குவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## தகவல் தொழில்நுட்பப் பிரிவு

தகவல் தொழில்நுட்பப் பிரிவானது பிரதானமாக அங்கத்தவர் நிர்வாக மென்பொருள் முறைமையினை முகாமை செய்வதற்கும் பேணுவதற்கும் பொறுப்பாயுள்ளது. இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவராண்மை நிறுவனத்துடன் இணைந்து தொழில்நுட்பப் பிரிவை மறுசீரமைப்பதற்கு தேவையான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## உள்ளக கணக்காய்வுப் பிரிவு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது போதிய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் நிறுவப்பட்டுள்ளன எனவும் அவ்வாறான முறைமைகள் தொடர்ச்சியாகவும் பொருத்தமாகவும் பிரயோகிக்கப்படுகின்றன எனவும் உறுதிப்படுத்தவதற்கு பொறுப்பாயுள்ளது. பிரதிப் பொது முகாமையாளர் (உள்ளகக் கணக்காய்வு) நேரடியாகவே தலைவருக்கு அறிக்கையிடுவார். உள்ளகக் கணக்காய்வின் ஏற்கனவே உள்ள முறைமைகள் மற்றும் நடைமுறைகளின் நம்பகத்தன்மையை மீள்மதிப்பீடு செய்வதற்கு ஓர் ஆய்வினை மேற்கொள் வேண்டும் என்றும் நிறுவனத்தின் தீர்மானம் எடுக்கும் செயன்முறையில் பயனுறுதிமிக்க கருவியொன்றாக உள்ளகக் கணக்காய்வின் வகிபங்கினை வலுவூட்டுவதற்கும் முகாமைத்துவம் கருத்திற் கொண்டுள்ளது.

## சட்டப் பிரிவு

சட்டப்பிரிவானது சபையின் அனைத்து சட்ட விவகாரங்களுக்கும் ஆலோசனை சேவைகளை வழங்கும் அலகொன்றாகச் செயற்படுகின்றது. பிராந்திய அலுவலக வலையமைப்பு விரிவாக்கத்துடன் பிராந்திய மட்டத்திற்கு சட்ட நடவடிக்கைகள் பரவலாக்கப்பட்டுள்ளன. சட்டப் பிரிவானது பிரதிப் பொது முகாமையாளரின் (சட்டம்) கண்காணிப்பின் கீழ் இயங்குகின்றது.



# செயலாற்றுகை மீளாய்வு

## பெறுமதி சேர்க்கப்பட்ட வெளிப்படுத்தல்

சபையின் பெறுமதியை உருவாக்குதல் தொடர்பிலான பகுப்பாய்வு மற்றும் குழுமத்தின் பிரதான தரப்பினர்களுக்கு மத்தியில் உள்ள வேறாக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

| | 2025 | 2024 | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூ.மில்லியன். | ரூ.மில்லியன். | % |
| **சேர்க்கப்பட்ட பெறுமதி** | | | |
| பிரதான வியாபார முயற்சிகள் மூலம் உழைக்கும் வருமானம் | 70,653.68 | 65,353.78 | 8.11 |
| சேவை கிரயம் | (379.93) | (375.85) | 1.09 |
| **பிரதான வியாபார முயற்சிகள் மூலம் சேர்க்கப்பட்ட பெறுமதி** | **70,273.75** | **64,977.93** | **8.15** |
| வேறு வருமானங்கள் | 623.92 | 634.13 | (1.61) |
| FVTOCI முதலீட்டிலிருந்து கிடைக்கும் வருமானம் | 2,172.06 | 215.28 | 908.95 |
| கடன் மற்றும் வேறு நட்டங்களுக்கான அறவீடுகள் | (21.07) | (4.91) | 329.12 |
| **பெறுமதியை சேர்த்தல்** | **73,048.66** | **65,607.15** | **10.98** |
| | | | |
| **ஊழியர்களுக்கு பெறுமதியை வேறாக்கல்** | | | |
| சம்பளம், வேதனம் மற்றும் வேறு நலன்கள் | 1,453.48 | 1,400.62 | 3.77 |
| | | | |
| **அங்கத்தவர்களுக்கு** | | | |
| அங்கத்தவர்களுக்கு செலுத்தப்பட்ட வட்டி | 17,464.35 | 15,390.53 | 13.47 |
| அங்கத்தவர்களுக்கு செலுத்தப்பட்ட பங்கிலாபம் | 37,839.48 | 35,911.28 | 5.37 |
| | | | |
| **அரசுக்கு** | | | |
| வரிச் செலவினம் | 9,611.09 | 8,678.06 | 10.75 |



143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடைமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

| | 2025 | 2024 | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூ.மில்லியன். | ரூ.மில்லியன். | % |
| **சமூகத்திற்கு** | | | |
| அங்கத்தவர் நலன்கள் | 403.57 | 452.74 | (10.86) |
| | | | |
| **விரிவாக்கல் மற்றும் விருத்திக்காக** | | | |
| தடுத்துவைக்கப்பட்ட இலாபம் | 386.20 | 727.79 | (59.05) |
| தேய்மானம் மற்றும் கடன்கழிப்பு | 46.65 | 46.13 | 1.13 |
| பங்கிலா சமநிலை ஒதுக்கம் | 5,843.84 | 3,000 | 94.79 |
| | | | |
| **வேறாக்கப்பட்ட மொத்தப் பெறுமதி** | **73,048.66** | **65,607.15** | **10.98** |

## சேர்க்கப்பட்ட பொருளாதாரப் பெறுமதி (EVA)

சேர்க்கப்பட்ட பொருளாதாரப் பெறுமதி நிறுவனமொன்றின் உண்மையான பொருளாதார இலாபத்தை எடுத்துக்காட்டும். சேர்க்கப்பட்ட பொருளாதாரப் பெறுமதி என்பது குறிப்பிடத்தக்க ஆபத்தான பங்குதாரர்களுக்கு தேவையான ஆகக் குறைந்த நலன்களை விஞ்சும் அல்லது குறையும் உழைப்பின் அளவு பற்றிய மதிப்பீடாகும்.

| | 2025 | 2024 |
|---|---|---|
| | ரூ.மில்லியன். | ரூ.மில்லியன். |
| **முதலீட்டு மூலதனம்** | | |
| பொதுவான அங்கத்தவர் நிதியம் | 600,884.82 | 534,380.64 |
| சேர்க்க : கடன் மற்றும் வேறு நட்டங்களுக்கான திரண்ட இழப்பீட்டு ஒதுக்கம் | 9.04 | 30.10 |
| | **600,893.86** | **534,410.74** |
| | | |
| **முதலீட்டு மூலதனம் மீதான நலன்கள்** | | |
| வரிக்குப் பின்னரான இலாபம் | 58,899.03 | 54,498.54 |
| சேர்க்கப்பட்ட கடன் மற்றும் வேறு நட்டங்களுக்கான திரண்ட இழப்பீட்டு ஒதுக்கம் | (21.07) | (4.91) |
| **முதலீட்டு மூலதனத்தின் மீதான மொத்த நலன்கள்** | **58,877.96** | **54,493.63** |
| | | |
| முதலீட்டு மூலதனத்தின் சூழ்நிலை கிரயம் | (46,869.02) | (49,697.40) |
| **சேர்க்கப்பட்ட பொருளாதாரப் பெறுமதி** | **12,008.94** | **4,796.23** |

*2025 சாதாரண பாரமில் – 7.80% 12 மாத பொதுத் திறைசேரிப் பட்டியல் மீது கணக்கிடப்பட்டுள்ளது. (2024 - 9.30%)

# நிறுவனத்தின் பொறுப்புடைமை



www.etfb.lk

143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடைமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்



# தவிசாளரின் மீளாய்வு

"

2025 ஆம் ஆண்டில் இலங்கையின் நிதிச் சந்தையானது, 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மிகவும் ஸ்திரமான மற்றும் முதலீட்டாளர்களின் நம்பிக்கை மீண்டும் கட்டியெழுப்பப்பட்ட ஒரு காலப்பகுதியாகக் கருதப்படுகின்றது. குறிப்பாக, கொழும்பு பங்குச் சந்தை (CSE) மற்றும் திறைசேரிப் பிணையங்கள் சந்தை ஆகிய இரண்டும் 2022–2023 நெருக்கடியான காலப்பகுதிக்குப் பின்னர் மீட்சிப் போக்கைக் காட்டின. அந்த நேர்மறையான சூழ்நிலையில் நிலவிய சந்தை நன்மைகளைச் சபை தனதாக்கிக் கொள்ள முடிந்தமை விசேடமாக அவதானிக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

**மதிப்பிற்குரிய பங்குதாரர்களே,**

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கைக்கு விசேட செய்தியொன்றை வழங்குவதற்கு வாய்ப்புக் கிடைத்ததையிட்டு பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன். நாட்டின் சமூக, அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைகள் குறித்து உணர்திறன் மிக்கதாகச் செயற்பட்டு, அந்த வெளிகளை மிகவும் பரந்த அளவில் கண்டறிந்து, ஒரு சமூகப் பாதுகாப்பு நிதியமாக அதன் பங்களிப்பை ஆற்றுவதற்கும், உறுப்பினர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் நாம் விசேட அவதானத்தை செலுத்தியுள்ளோம்.

2025 ஆம் ஆண்டில், இலங்கைப் பொருளாதாரம், 2022 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட ஸ்திரப்படுத்தல் மற்றும் சீர்திருத்தச் செயல்முறைகளை மேலும் வலுவாக முன்னோக்கிக் கொண்டு செல்வதில் வெற்றியடைந்துள்ளது. 2024 ஆம் ஆண்டில் பொருளாதாரம் மீண்டும் வளர்ச்சிப் பாதைக்குத் திரும்பியதைத் தொடர்ந்து, 2025 ஆம் ஆண்டிலும் அந்தப் போக்கைத் தக்கவைத்துக்கொண்டு, மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) சுமார் 5% வளர்ச்சியினைப் பதிவு செய்துள்ளது. 2024 ஆம் ஆண்டில் நிலவிய பணவீக்க வீழ்ச்சி (deflationary) நிலைமை, 2025 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் படிப்படியாக முடிவுக்கு வரத் தொடங்கியதுடன், உணவுப் பொருட்களின் விலை உயர்வு மற்றும் உள்நாட்டுத் தேவை அதிகரிப்பு என்பன காரணமாக பணவீக்கம் மீண்டும் நேர்மறையான மட்டத்திற்கு வந்தது. மத்திய வங்கி 2025

ஆம் ஆண்டு முழுவதும் ஒப்பீட்டளவில் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கையைப் பின்பற்றியதுடன், கொள்கை வட்டி விகிதங்களை 7.75% மட்டத்தில் பேணியதன் மூலம் தனியார் துறைக்கான கடன் வழங்கள் ஓட்டத்தை அதிகரிப்பதற்கு வழிவகுத்தது. இதன் மூலம் வர்த்தக நடவடிக்கைகள் வளர்ச்சியடைந்தன.

2025 ஆம் ஆண்டின் உலகப் பொருளாதாரச் சூழ்நிலையில், புவிசார் அரசியல் நெருக்கடிகள், சர்வதேச வர்த்தக ஸ்திரமற்ற தன்மை மற்றும் அமெரிக்க இறக்குமதி வரிவிகிதக் கொள்கைகள் போன்ற காரணிகள் இலங்கைக்கும் தாக்கங்களை ஏற்படுத்தின. குறிப்பாக, ஆடை ஏற்றுமதித் துறைக்குத் தாக்கத்தை ஏற்படுத்தும் சர்வதேச வர்த்தகத் தடைகள் குறித்த அபாயங்கள் தோன்றின. இருப்பினும், சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF) இணைந்து நடைமுறைப்படுத்தப்பட்ட பொருளாதாரச் சீர்திருத்தத் திட்டம் மற்றும் அரசாங்க நிதி ஒழுக்கத்தை உறுதிப்படுத்தியமை என்பன காரணமாக இலங்கையில் பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பேண முடிந்தது. அரசாங்கத்தினால் 2025 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட வருமான அடிப்படையிலான அரசாங்க நிதிச் சீர்திருத்தங்கள், வரி வருமானத்தை அதிகரித்தல், அரசாங்க செலவினங்களைக் கட்டுப்படுத்தல் மற்றும் கடன் மறுசீரமைப்புத் திட்டம் என்பன பொருளாதாரத்தின் மீதான நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்ப உதவின. அத்துடன் வங்கி மற்றும் நிதி நிறுவனங்களின் ஸ்திரத்தன்மையும் 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2025 ஆம் ஆண்டில் மேலும் வலுவடைந்தது. இந்தச் சமூக-பொருளாதார மாற்றங்களும் ஆற்றல்களும் தோற்றுவிக்கும் புதிய நிலைமைகள், இலங்கையின் இரண்டாவது பெரிய சமூகப் பாதுகாப்பு நிதியமான எமது சபையின் அன்றாடச் செயற்பாடுகளிலும் எதிர்காலத் திட்டங்களிலும் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

## நிதியத்தின் செயல்திறன்

2024 ஆம் ஆண்டு இறுதியில் சுமார் 564,327 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட இந்நிதி, 2025 ஆம் ஆண்டின் இறுதியில் 13 சதவீத வளர்ச்சியைக் காட்டி 637,443 பில்லியன் ரூபா எல்லையைக் கடந்தது. வட்டி மற்றும் பங்கிலாபத் தொகை வருமானத்தில் அடையப்பெற்ற 7.8% வளர்ச்சியும், பங்களிப்புத் தொகை சேகரிப்பில் எட்டிய 14.5% வளர்ச்சியும், முதலீட்டுக் கலவை (Investment Portfolio) 14.1% வளர்ச்சியடைந்தமையும், அதேபோன்று சட்டரீதியான நன்மைகள் விடுவிப்பு 9.4% இனால் வீழ்ச்சியடைந்தமையும் நிதியத்தின் இந்த 13% வளர்ச்சிக்கு நேரடியாகப் பங்களித்துள்ளன. 2022 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளில் காணப்பட்ட சட்டரீதியான நன்மைகளை மீளப்பெறும் போக்கு, 2024 மற்றும் 2025 ஆகிய ஆண்டுகளில் படிப்படியாகக் குறைவடைந்துள்ளதைக் காண முடிகின்றது. இது பொருளாதார ஸ்திரத்தன்மையைக் காட்டும் ஒரு வலுவான குறிகாட்டியாகக் கருத முடியும். உறுப்பினர்களின் நன்மைகள் மற்றும் உரிமைகள் குறித்து சபையினால் இலத்திரனியல் ஊடகங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்ட பரந்தளவிலான பிரச்சார நடவடிக்கையின் பின்னரே இந்த நிலைமை பதிவாகியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

2025 ஆம் ஆண்டில் இலங்கையின் நிதிச் சந்தையானது, 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மிகவும் ஸ்திரமான மற்றும் முதலீட்டாளர்களின் நம்பிக்கை மீண்டும் கட்டியெழுப்பப்பட்ட ஒரு காலப்பகுதியாகக் கருதப்படுகின்றது. குறிப்பாக, கொழும்பு பங்குச் சந்தை (CSE) மற்றும் திறைசேரிப் பிணையங்கள் சந்தை ஆகிய இரண்டும் 2022-2023 நெருக்கடியான காலப்பகுதிக்குப் பின்னர் மீட்சிப் போக்கைக் காட்டின. அந்த நேர்மறையான சூழ்நிலையில் நிலவிய சந்தை நன்மைகளைச் சபை தனதாக்கிக் கொள்ள முடிந்தமை விசேடமாக அவதானிக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

2024ஆம் ஆண்டில் 581.1 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட முதலீட்டுக் கலவை, 2025 ஆம் ஆண்டு இறுதியில் 662.8 பில்லியன் ரூபா வரை வளர்ச்சியடைந்ததுடன், சபையின் பிரதானமானதும் பாதுகாப்பானதுமான முதலீட்டுக் கருவியான (Investment Instrument) திறைசேரிப் பிணையங்கள் மற்றும் உண்டியல்களில் செய்யப்பட்டுள்ள முதலீடு 2025 ஆம் ஆண்டு இறுதியில் 14.5% இனால் அதிகரித்துள்ளது. பங்குச் சந்தை முதலீடுகள் 2.7% இனால் அதிகரிப்பைக் காட்டியுள்ளதுடன், முதலீட்டுக் கலவையை கையாள்வதில் முதலீட்டுக் குழுவினால் வழங்கப்படும் வினைத்திறன்மிக்க பங்களிப்பு விசேடமாகக் குறிப்பிடப்படல் வேண்டும். உறுப்பினர்களின் நிதியமாகச் சந்தை நன்மைகளைப் பெற்றுக்கொள்வது போலவே, உறுப்பினர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காக முதலீடுகளின் பாதுகாப்பு குறித்த பொறுப்புக்கூறலும் மிக முக்கியமான ஒரு விடயமாகும்.

## உறுப்பினர் உரிமைகளை உறுதிப்படுத்தல்

உறுப்பினர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவது குறித்துச் சபையினால் 2025 ஆம் ஆண்டில் விசேட அவதானம் செலுத்தப்பட்டது. தொழில் வழங்குநர்களின் பொறுப்புகள் மற்றும் சட்டப்பூர்வக் கடப்பாடுகள், உறுப்பினர்களின் உரிமைகள், சபையினால் வழங்கப்படும் நலன்புரி நன்மைகள் குறித்து நாடு தழுவிய மட்டத்தில் இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்திப் பிரச்சாரத் திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டதுடன், நிதியம் மற்றும் அதன் பொறுப்புகள் குறித்து ஒரு பரந்த உரையாடலை உருவாக்க அது உதவியது.

2025 ஆம் ஆண்டுக்காகச் சபையின் அனைத்து உறுப்பினர் கணக்குகளுக்கும் 9.5% வட்டி மற்றும் பங்கிலாபத் தொகையை வழங்கச் சபை தகுதி பெற்றதுடன், உறுப்பினர் கணக்குகளில் 55,304 மில்லியன் ரூபா பெறுமதி சேர்க்கப்பட்டது. இத்தொகை 2024 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்ட 51,302 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 7.8% வளர்ச்சியாகும். பங்களிப்புத் தொகை சேகரிப்பில் 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஏற்பட்ட 14.5% வளர்ச்சி, உறுப்பினர் உரிமைகள் மற்றும் நன்மைகளை உறுதிப்படுத்துவதில் ஒரு குறிப்பிடத்தக்க காரணியாகும்.

2025 ஆம் ஆண்டில், 166,444 உறுப்பினர் விண்ணப்பங்களுக்காக 30.7 பில்லியன் ரூபா தொகையைச் சட்டரீதியான நன்மைகளாக உறுப்பினர்களுக்கு விடுவிக்கச் சபை நடவடிக்கை எடுத்தது. அதேபோன்று, பல்வேறு நலன்புரித் திட்டங்களின் கீழ் (கல்வி மற்றும் சுகாதாரம்), உறுப்பினரின் கணக்கு நிலுவையைப் பாதிக்காத வகையில், உறுப்பினர்கள் மற்றும் அவர்களின்



143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

குடும்பத்தினது பிள்ளைகளின் சமூக நலனை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## சேவைகளை டிஜிட்டல் மயமாக்கல்

புதிய அரசாங்கத்தின் டிஜிட்டல் மயமாக்கல் கொள்கையைச் சபைக்குள் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அத்தியாவசிய உட்கட்டமைப்புத் தேவைகள் குறித்த பகுப்பாய்வு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், இடையில் தடைப்பட்டிருந்த பிரதான கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டத்தை (Core System Development) மீண்டும் ஆரம்பிப்பதற்கான அத்தியாவசிய அனுமதிகளைப் பெற முடிந்தமை 2025 ஆம் ஆண்டில் பெற்ற ஒரு வெற்றியாகும். இத்திட்டத்தின் பணிகளை 2026 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் நிறைவு செய்து, அனைத்து உறுப்பினர் சேவைகளையும் இக்கட்டமைப்பின் ஊடாக வழங்குவதற்குச் சபை விசேட அவதானம் செலுத்தியுள்ளது.

உறுப்பினர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக மிகவும் வலுவான சைபர்பாதுகாப்புஅமைப்பை (Cyber Security System) நிறுவுவதில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதுடன், புதிய அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சைபர் பாதுகாப்புக் கொள்கைக்கு இணங்க, நிதியத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான அனைத்துப் படிமுறைகளையும் எடுப்பதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

## மனிதவள அபிவிருத்தி

அரசாங்க மற்றும் அரச சார்பு சேவைகளில் நீண்ட காலமாக நிறுத்தப்பட்டிருந்த புதிய நியமனங்களுக்கான அமைச்சரவை அனுமதி கிடைத்ததைத் தொடர்ந்து, 2025 ஆம் ஆண்டில் முறையான வழிமுறைகளின் ஊடாக 55 புதிய பணியாளர்களைப் பணியில் அமர்த்த முடிந்ததுடன், அதன் மூலம் சேவை வழங்கலில் காணப்பட்ட கடுமையான பற்றாக்குறைகளைத் தவிர்க்க முடிந்தது. இந்த புதிய நியமனங்களின் அளவு, 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நியமனங்களுடன் (14) ஒப்பிடுகையில் 292.8% வளர்ச்சியாகும். அதேபோன்று, நிறுவனத்திற்குள் பதவி உயர்வுகளை வழங்கும் முறைகள் குறித்துப் பணியாளர்கள் மத்தியில் நீண்ட காலமாக நிலவிய நம்பகத்தன்மையற்ற சூழலை முற்றாக ஒழித்து, மிகவும் வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தும் வகையில் 52 உத்தியோகத்தர்களுக்குப் பதவி உயர்வுகளை வழங்க முடிந்ததுடன், இது 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 147.6% வளர்ச்சியாகும். மேலும், வருடாந்த பயிற்சித் திட்டத்தை நிறைவு செய்து 51 பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளமை மனித வள அபிவிருத்தித் துறையில் ஒரு சாதகமான நிலைமையாகும்.

## சம்பள முரண்பாடுகளை நீக்குதல்

2006 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட தேசிய சம்பளக் கொள்கையின்படி, பொது நிறுவனங்களுக்குப் பொருந்தக்கூடிய முகாமைத்துவச் சுற்றறிக்கை 30 ஐச் சபைக்குள் நடைமுறைப்படுத்துவதில் பல குறைபாடுகள் காணப்பட்டதால், புதிய ஆட்சேர்ப்பு நடைமுறையின் கீழ் இணைந்த பணியாளர்களுக்கும் 2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் இணைந்த பணியாளர்களுக்கும் இடையே கடுமையான சம்பள முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன. இந்தச் சம்பள முரண்பாடுகள் ஒரே தரத்திற்குள்ளும் வெவ்வேறு தரங்களுக்கு இடையேயும் காணப்பட்டன. புதிய அரசாங்கத்தினால் சம்பள உயர்வுகளுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட 01/2025 சுற்றறிக்கையைச் சபைக்குள் நடைமுறைப்படுத்தும் போது, ஒட்டுமொத்த பணியாளர்களின் சம்பள அளவுகள் குறித்த பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டதுடன், பல வருடங்களாக நிலவிய சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இது நிறுவனத்தின் நீண்ட கால முன்னேற்றத்திற்காக எடுக்கப்பட்ட ஒரு அத்தியாவசியமான மற்றும் முக்கியமான நடவடிக்கை என நம்புகின்றேன்.

## விசேட சாதனைகள்

மனித வளத் துறையில் மேற்கொள்ளப்பட்ட அறிமுகங்கள், திருத்தங்கள் மற்றும் ஒட்டுமொத்த செயல்முறைகளையும் பாராட்டி, 2025 ஆம் ஆண்டில் இலங்கை பட்டய ஆளணி முகாமைத்துவ நிறுவனத்தினால் (CIPM) ஏற்பாடு செய்யப்பட்ட 'Great HR Awards - 2025' மதிப்பீட்டில் சபை விசேட பாராட்டு விருதை வென்றமை எமக்குக் கிடைத்த ஒரு விசேட வெற்றியாகும்.

அதேபோன்று, அரசாங்க மற்றும் அரச சார்பு நிறுவனங்களின் வருடாந்த அறிக்கைகளைச் சமர்ப்பித்தல், அறிக்கையிடல், வெளிப்படுத்தல்களின் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், சமூகப் பொறுப்பு மற்றும் நிறுவன ஆளுமை போன்றவற்றின் தரத்தை அளவிடுவதற்காக இலங்கை அரசாங்க நிதி கணக்காய்வாளர்கள் சங்கம் (APFASL) வருடாந்தம் நடத்தும் சிறந்த வருடாந்த அறிக்கை விருது விழாவில், மத்திய பொதுத் துறையின் தங்க விருதையும், கூட்டுத்தாபனங்கள் மற்றும் அதிகாரசபைகள் பிரிவின் தங்க விருதையும் ஆகிய இரு தங்க விருதுகளையும் வெல்ல முடிந்தமை சபையின் விசேட சாதனையாகும் என்பதுடன், இது சபை மீதான ஒட்டுமொத்த உறுப்பினர்களின் நம்பிக்கையை மேலும் வலுப்படுத்துவதற்கு உதவியுள்ளது.

## கட்டுப்பாட்டு நிறுவனத்தின் செயல்திறன்

எமது சபையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள லங்கா சோல்ட் நிறுவனம் (Lanka Salt Ltd) மூலமாக வருடாந்தம் கிடைக்கும் பங்கிலாபத்தொகை நிதியத்தை வலுப்படுத்துவதற்குப் பங்களிக்கின்றது. 2025 ஆம் ஆண்டில் உப்பு உற்பத்திக்கு ஏற்பட்ட மோசமான காலநிலை சூழ்நிலையிலும் 315.7 மில்லியன் ரூபா பங்கிலாபத்தொகை கிடைத்துள்ளது.

இந்த நிறுவனத்தின் பணியாளர்கள் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைகள் இதுவரை முறையாக அங்கீகரிக்கப்படாமை ஒரு பெரிய பிரச்சினையாகக் கண்டறியப்பட்டுள்ளதுடன், தற்போது பணியாளர்களின் எண்ணிக்கையைத் துல்லியமாகக் கண்டறிதல், சம்பளக் கட்டமைப்பை மறுசீரமைத்தல் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைகளைத் தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2026 ஆம் ஆண்டு இறுதிக்குள் இப்பணிகளை நிறைவுசெய்து முறையான அனுமதிகளைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் இந்நிறுவனத்திற்கான துணை நிறுவனக் கொள்கையொன்றைத் (Subsidiary Policy) தயாரிக்கும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## நிறுவனத்தின் எதிர்கால நோக்கு

நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதற்கான முக்கிய காரணியான உள்ளக கணக்காய்வுப் பிரிவில் உள்ள வெற்றிடங்களை விரைவாக நிரப்பி, அனைத்துப் பிரிவுகள் மற்றும் பிராந்திய அலுவலகங்களின் உள்ளக கட்டுப்பாட்டிற்கு மிகவும் உகந்த முறையொன்றைத் தயாரிப்பது அடுத்த ஆண்டில் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படும் பிரதான பணியாகும்.

பங்களிப்புத் தொகைகளை நிதியத்தில் வைப்புச் செய்வதற்காக தற்போது இலத்திரனியல் வங்கி முறைமை (e-banking)

அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், பெரிய அளவிலான தொழில் வழங்குநர்கள் இம்முறைமைக்கு இணங்குவதற்கான சட்டம் 2022 ஆம் ஆண்டில் வர்த்தமானி மூலம் பிரகடனம் செய்யப்பட்டிருந்த போதிலும், இதுவரை அதை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாமல் போயுள்ளதால், அடுத்த நிதியாண்டில் அந்த இணக்கப்பாட்டைப் பூர்த்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

பிரதான மென்பொருள் கட்டமைப்பின் (Core System) அபிவிருத்திப் பணிகளை நிறைவு செய்து, சபையின் அனைத்துச் சேவை வழங்கல்கள், பங்களிப்புத் தொகை சேகரிப்புகள் மற்றும் நிறுவனக் கணக்குகளைப் பேணுதல் போன்ற பணிகளை இக்கட்டமைப்பின் மூலம் மேற்கொள்வதற்கு முதன்மை அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

ஒரு முன்னணி நிதி நிறுவனமாகச் சைபர் பாதுகாப்பு முறைகளை உறுதிப்படுத்துவதற்கான உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக 2026 ஆம் ஆண்டில் சுமார் 100 மில்லியன் ரூபா முதலீடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கு இணையாக, அனைத்து வசதிகளையும் கொண்ட வாடிக்கையாளர் சேவை மையமொன்றை நிறுவுவதற்குத் தேவையான பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 2026 ஆம் ஆண்டில் அதன் பணிகளை நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

சபையின் அனைத்து அன்றாடச் செயற்பாடுகள் மற்றும் அனைத்துப் பணியாளர்களின் செயல்திறனை முறையாகவும் தர்க்கரீதியாகவும் மதிப்பிடுவதற்காகச் செயல்திறன் குறிகாட்டி அமைப்பொன்றை (KPI System) மேம்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2026 ஆம் ஆண்டில் உரிய அனுமதிகளைப் பெற்ற பின்னர் இவ்வமைப்பை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுவதுடன், இதன் மூலம் அனைத்துப் பணியாளர்களுக்கும் தற்போது வழங்கப்படும் மாதாந்த ஊக்கத்தொகைகளை முறையான மதிப்பீட்டு முறையின் கீழ் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பொருளாதாரத்தில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள் முதலீட்டுச் சூழலைத் தீர்மானிப்பதால், புதிய முதலீட்டு வாய்ப்புகள் குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, நவம் மாவத்தையில் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான சுமார் இரண்டு ஏக்கர் காணியில் பெரிய அளவிலான முதலீடொன்றை மேற்கொள்வது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

## நன்றி நவிழல்

சபையின் செயலில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை தற்போது சுமார் 2.6 மில்லியனாக உள்ளதுடன், அவர்களுக்கான மாதாந்த பங்களிப்புத் தொகையை நிதியத்தில் வைப்புச் செய்வதைத் தங்களின் முதல் பொறுப்பாகக் கருதி, உறுப்பினர்களின் தகவல்களை இற்றைப்படுத்திப் பேணுவதில் பெரும் பங்களிப்பை வழங்கும் தொழில் வழங்குநர் சமூகம் எமக்கு வழங்கும் ஒத்துழைப்பு உறுப்பினர் உரிமைகளை உறுதிப்படுத்துவதில் பெரும் துணையாக அமைகின்றது. இது சபையின் பணியாளர்களையும் ஊக்குவிப்பதாக அமைகின்றது.

ஒரு பொறுப்புள்ள நிறுவனமாக, அமுலிலுள்ள சட்டதிட்டங்களுக்கு இணங்க, உறுப்பினர் சமூகத்திற்குச் சேவைகளை வழங்குவதற்காகத் தங்களின் அன்றாடக் கடமைகளை அர்ப்பணிப்புடன் ஆற்றிவரும் சபையின் ஒட்டுமொத்த பணியாளர்களின் பங்களிப்பை நான் விசேடமாக நினைவு கூறுகின்றேன். நிறுவனத்தின் விடயப்பரப்பு உரித்தாகும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கௌரவ அமைச்சர், பிரதி அமைச்சர், அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அனைத்து அதிகாரிகளின் வழிகாட்டல்கள், ஆலோசனைகள் மற்றும் ஒழுங்குபடுத்தல்கள் சபையின் நடவடிக்கைகளை முறையாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் மேற்கொள்வதற்கு பெரும் துணையாக அமைந்தன.

அதேபோன்று, அனைத்துப் பணிகளையும் ஒரு குறிப்பிட்ட கொள்கை வரம்பிற்குள் செயல்படுத்துவதற்காக உழைக்கும் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்கள், அரசாங்கத்தின் மற்றும் பொதுமக்களின் அபிலாஷைகளைப் புரிந்து கொண்டு செயல்படுவதைப் பாராட்டுவதுடன், மேற்கூறிய அனைத்துத் தரப்பினருக்கும் எனது மரியாதையையும் மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்ள இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்கிறேன்.



**சோமசிறி ஏக்கநாயக்க**
தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி

www.etfb.lk

143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

# பணிப்பாளர் சபையின் செய்தி




2024 ஆம் ஆண்டு இறுதியில் சுமார் 564,327 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட இந்நிதி, 2025 ஆம் ஆண்டின் இறுதியில் 13% சதவீத வளர்ச்சியைக் காட்டி 637,443 பில்லியன் ரூபா எல்லையைக் கடந்தது. அதற்கமைய, 2025 ஆம் ஆண்டிலும் எதிர்பார்த்தவாறே 9.5% வட்டி மற்றும் பங்கிலாபத்தொகை விகிதத்தை உறுப்பினர்களின் தனிப்பட்ட கணக்குகளில் வைப்புச் செய்ய சபையினால் முடிந்துள்ளது.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் வெளியிடப்படும் 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கைக்கு, பணிப்பாளர் சபை என்ற ரீதியில் செய்தியொன்றை வழங்குவதற்கான வாய்ப்புக் கிடைத்ததையிட்டு நாம் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றோம். ஒரு சமூகப் பாதுகாப்பு நிதியமாக எமது செயற்பாடுகளின் குறிக்கோள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்தும், ஒட்டுமொத்தமாக அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு இணங்க நிறுவனச் செயல்முறைகளைப் பேணிச் செல்வது குறித்தும் அவதானம் செலுத்துவதை எமது முதன்மைப் பணியாக நாம் கண்டறிந்துள்ளோம்.

ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் சபையினால் எட்டப்படும் செயல்திறனானது ஒரு தனிப்பட்ட விடயமாகவன்றி, ஒட்டுமொத்தப் பொருளாதாரத்தின் பிரதிபலிப்பாகவும் கருதப்படுகின்றது. 2024 ஆம் ஆண்டு இறுதியில் சுமார் 564.327 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட இந்நிதி, 2025 ஆம் ஆண்டின் இறுதியில் 13 சதவீத வளர்ச்சியைக் காட்டி 637.443 பில்லியன் ரூபா எல்லையைக் கடந்தது. பங்களிப்புத் தொகை சேகரிப்பு மற்றும் சபையின் முதலீட்டுக் கலவை என்பன 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே 14.5% மற்றும் 14.1% வளர்ச்சியைக் காட்டியுள்ளன. இது சபை மீதான தொழில் வழங்குநர்கள் மற்றும் உறுப்பினர்களின் நம்பிக்கையை மேலும் உறுதிப்படுத்துவதற்கும், ஒரு சமூகப் பாதுகாப்பு நிதியத்திடமிருந்து அரசாங்கம் எதிர்பார்க்கும் நிதி ஸ்திரத்தன்மை மற்றும் உறுப்பினர் நன்மைகளை எவ்வித தடையுமின்றி வழங்குவதற்கேற்ற சூழலை உருவாக்குவதற்கும் துணையாக அமைந்துள்ளது. அதற்கமைய, 2025 ஆம் ஆண்டிலும் எதிர்பார்த்தவாறே 9.5% வட்டி மற்றும் பங்கிலாபத்தொகை விகிதத்தை உறுப்பினர்களின் தனிப்பட்ட கணக்குகளில் வைப்புச் செய்ய சபையினால் முடிந்துள்ளது. ஒட்டுமொத்த வட்டி விகிதங்கள் 7% - 8% போன்ற மட்டங்களில் காணப்பட்ட

ஒரு சூழ்நிலையில், உறுப்பினர் கணக்குகளுக்கு இத்தகைய குறிப்பிடத்தக்களவிலான வட்டி மற்றும் பங்கிலாபத்தொகையைச் சேர்க்க முடிந்தமை நிதியத்தின் ஸ்திரத்தன்மையை வெளிப்படுத்துகின்றது.

நிதியத்தின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் அதனை நீண்ட காலத்திற்குத் தக்கவைத்துக் கொள்வதற்கும் உகந்தவகையிலானமூலோபாயத்திட்டமொன்றை (Strategic Plan) நடைமுறைப்படுத்த முடிந்ததுடன், அதன் போது அன்றாட செயற்பாட்டுச் செயன்முறையை வலுப்படுத்தல், முதலீடுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல், சேவை வழங்கலை டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் அரசாங்கத்தின் சைபர் பாதுகாப்புக் கொள்கைக்கு இணங்க சபைக்குள்ளும் வலுவான சைபர் பாதுகாப்புக் கொள்கை மற்றும் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல் ஆகிய விடயங்கள் குறித்து அடிப்படை மற்றும் பிரதான அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இதில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையானது ஒரு தனிமைப்படுத்தப்பட்ட நிறுவனமாகவன்றி, சமகால கூட்டு மற்றும் பங்குதாரர் நிறுவனங்களுடன் சிறந்த புரிதலுடனும் நம்பிக்கையுடனும் செயற்படுவது ஒரு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் சபைகளின் பணிகளைப் பொதுவான கொள்கையொன்றின் கீழ் தரப்படுத்தப்பட்ட முறையில் செயல்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் அவ்வப்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வழிகாட்டல்கள், சட்டதிட்டங்கள் மற்றும் அறிவுறுத்தல்களை நடைமுறைப்படுத்தும் போது ஏற்பட்டுள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து, அவற்றை நிவர்த்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், நிறுவனத்திற்குள் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுகளின் போது அனைவருக்கும் சமமான வாய்ப்புகளை உறுதிப்படுத்துவதும், வெளிப்படைத்தன்மையுடனான கொள்கையின்படி செயல்படுவதும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இடர் முகாமை (Risk Management) மற்றும் அபாயங்கள் குறைந்த சூழலொன்றை உருவாக்குவது குறித்துச் சபையின் தீவிர அவதானம் செலுத்தப்பட்டுள்ளதுடன், அதனை அடுத்த ஆண்டிற்கான பிரதான இலக்காகக் கருதுகின்றோம். வாடிக்கையாளர் சேவைகளைத் திறமையாகவும் எளிதாகவும் மாற்றுவதுடன், நிறுவனத்திற்குள்முறையானமற்றும்தர்க்கரீதியான செயல்திறன் குறிகாட்டி அமைப்பொன்றை (KPI System) நடைமுறைப்படுத்துவதன் மூலம் முடிவுகளை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டை மேற்கொள்வதற்கும், அதன் அடிப்படையில் ஊக்கத்தொகை முறையொன்றை அறிமுகப்படுத்துவதற்கும் தேவையான திட்டங்களும் கொள்கைகளும் வகுக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, மூலோபாயத் திட்டத்தின் மூலம் முன்மொழியப்பட்டுள்ள முடிவுகளை எய்துவதற்கும், உறுப்பினர்கள் மற்றும் தொழில் வழங்குநர் மத்தியில் நம்பிக்கையை உறுதிப்படுத்திக் கொண்டு, அரசாங்க கொள்கையின் மூலம் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடைவதற்கும், உறுப்பினர் நிதியங்களைப் பாதுகாப்பதற்கும் சபை என்ற ரீதியில் எமது பங்களிப்பை முழுமையாக வழங்குவதே எமது எதிர்பார்ப்பு என்பதையும் குறிப்பிட விரும்புகின்றோம்.

**பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்**



143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடைமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்



# முகாமைத்துவ
## கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு

### 2025 மீளாய்வுக்குரிய ஆண்டு

இலங்கையின் பொருளாதாரம், 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2025 ஆம் ஆண்டில் ஸ்திரத்தன்மைக்கான அறிகுறிகளை வெளிப்படுத்தியது. 2024 செப்டம்பர் மாதம் முதல் பணவீக்க சூழலில் காணப்பட்ட முதன்மைப் பணவீக்கம் ஆண்டின் இறுதியில் 5% க்கும் குறைவானதொரு மிதமான மட்டத்தை எட்டியதுடன், இது ஆண்டின் இறுதியில் 1.2% வருடாந்த புள்ளிக்குப்புள்ளி அதிகரிப்பைப் பிரதிபலித்தது. மீட்சியடைந்து வரும் தேவை, விவசாயப் பற்றாக்குறைகள், எரிபொருள் மற்றும் மின்சாரக் கட்டணங்களில் மேற்கொள்ளப்பட்ட விலை உயர்வுத் திருத்தங்கள் என்பன இதற்கு முக்கிய காரணங்களாக அமைந்தன. அடிப்படைப் பணவீக்கம் ஆண்டு முழுவதும் நேர்மறையான மட்டத்திலிருந்ததுடன், தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் (NCPI) 2025 மே மாதத்தின் முற்பகுதியில் நேர்மறையான நிலையை அடைந்தது.

**கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் அடிப்படையிலான (வருடாந்தப் புள்ளி) தலைப்பு பணவீக்கம்**




*மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்*

பணவீக்கம் இலக்கிடப்பட்ட அளவை விட மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்ட போதிலும், மத்திய வங்கி 2025 ஆம் ஆண்டில் சந்தைக் கடன் வட்டி விகிதங்களை 12% இலிருந்து 14% வரை தளர்வான மட்டத்தில் அனுமதித்ததுடன், கொள்கை வட்டி விகிதங்களை 8.00% இலிருந்து 7.75% ஆகப் பேணி, ஒரு சாதகமான நிலைப்பாட்டைப் பின்பற்றியது. வங்கித் துறையின் சொத்துக்களின் தரத்திலான அழுத்தங்கள் தொடர்ச்சியாக அப்படியே காணப்பட்ட போதிலும், சந்தை வட்டி விகிதங்கள் கீழ்நோக்கிய போக்கைக் காட்டியதுடன், திறைசேரி உண்டியல்களின் வருவாயும் வீழ்ச்சியடைந்து மிகையான திரவத்தன்மை நிலைமைகளும் காணப்பட்டன.

**கொள்கை வட்டி வீதம்**




*மூலம் : இலங்கை மத்திய வங்கி*

2025 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) வளர்ச்சி, 4.5% இலிருந்து 5% வரையிலான வரம்பிற்குள் ஸ்திரமடைந்ததுடன், அது தொடர்ச்சியாக எட்டு காலாண்டுகள் முழுவதும் வளர்ச்சிப் போக்கைப் பதிவு செய்தது. அமெரிக்க இறக்குமதி வரிவிதிப்புகளின் இறுதி காலப்பிரிவிற்கு முன்னர் நிலவிய ஆடை மற்றும் நெசவுத் துறையின் வலுவான செயல்திறன், சிறிய அளவிலான கருத்திட்டங்கள் மூலம் கட்டுமானத் துறையில் ஏற்பட்ட புதிய நடவடிக்கைகள் மற்றும் சுற்றுலாத் துறை மற்றும் அதிகரித்து வரும் நுகர்வு ஆகியவற்றால் உந்தப்பட்ட உணவு மற்றும் பானங்கள் உற்பத்தியின் வளர்ச்சி போன்ற பின்னணிகளின் காரணமாக 7.9% வளர்ச்சியடைந்த கைத்தொழில் துறை, இந்த மீட்சிக்கு முக்கிய காரணியாக அமைந்தது. நிதிச் சேவைகள் மற்றும் தங்குமிட வசதி வழங்கல் மற்றும் போக்குவரத்து போன்ற சுற்றுலாத் துறை சார்ந்த நடவடிக்கைகளால் வழிநடத்தப்பட்டதன் மூலம் சேவைத் துறையும் 3.3% ஸ்திரமான வளர்ச்சியைப் பதிவு செய்தது. இதேவேளை, சாதகமற்ற காலநிலை நிலைமைகள் சில பிரதான பயிர்களின் உற்பத்தியில் பாதிப்பை ஏற்படுத்தியதன் காரணமாக, விவசாயத் துறை 0.6% என்ற மிதமான மட்டத்திலேயே வளர்ச்சியடைந்தது. சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) சீர்திருத்த ஒத்துழைப்புடனான கட்டமைப்பிற்குள் பேணப்பட்ட அரசாங்க நிதி ஸ்திரத்தன்மை, ஆரம்ப நிதி மிகையை பதிவு செய்து அதனைப் பேணிச் செல்வதற்கு அரசாங்கத்திற்கு உதவியது.

2025 நவம்பர் மாதத்தில் இலங்கையைத் தாக்கிய 'தித்வா' சூறாவளி, அண்மைய ஆண்டுகளில் அதன் காலநிலையைப் பாதித்த மிக மோசமான பேரழிவுகளில் ஒன்றாகும். பலத்த மழை, வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவுகள் காரணமாக சுமார் 2 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதுடன், 600 க்கும் மேற்பட்ட மரணங்களும் பதிவாகியுள்ளன. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4% க்கு சமமான, அண்ணளவாக 4.1 பில்லியன் அமெரிக்க டாலர் என மதிப்பிடப்பட்ட பொருளாதார இழப்பு, போக்குவரத்து வலையமைப்பு சேவைகள், வீடமைப்பு மற்றும் விவசாயம் உள்ளிட்ட முக்கியமான உட்கட்டமைப்புகளுக்குக் கடுமையான சேதங்களை ஏற்படுத்தியது. உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார சவால்களை மேலும் தீவிரமாக்கிய இப்பேரழிவு, விநியோகச் சங்கிலிகளுக்குத் தடையை ஏற்படுத்தவும், விவசாய உற்பத்தியின் விளைச்சலைக் குறைக்கவும், குடும்பங்கள் இடம்பெயர்வதற்கும் காரணமானது. அரசாங்க செலவினங்களின் பெரும் அதிகரிப்பு மற்றும் வரவுசெலவுத் திட்ட மீள் ஒதுக்கீடுகளை அத்தியாவசியமாக்கியுள்ள மறுசீரமைப்பு மற்றும் நிவாரணத் தேவைகள், அரசாங்க நிதியின் மீது குறிப்பிடத்தக்க அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளன. காலநிலை அதிர்ச்சிகளால் இலங்கை கடுமையான பாதிப்புக்குள்ளாகும் அபாயத்தில் இருப்பதை இந்நாசகார நிகழ்வு அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளதுடன், காலநிலைக்குத் தாக்குப் பிடிக்கக்கூடிய உட்கட்டமைப்புகள், பேரிடருக்கு முன்னைய ஆயத்தநிலை மற்றும் வலுவான இடர் நிதியளிப்பு வழிமுறைகளின் அவசரத் தேவையை அது முன்னிலைப்படுத்தியது. இதில் நிதி நிறுவனங்களைப் பொறுத்தமட்டில், அவற்றின் விரிவான இடர் முகாமைக் கட்டமைப்புகளின் முக்கியத்துவத்தையும், தீவிர காலநிலை நிகழ்வுகளுக்கு முகங்கொடுத்து மீளெழும் திறனை உறுதி செய்வதற்காக வலுவான மேலதிக பாதுகாப்பு மூலதனத்தைப் பேணிச் செல்ல வேண்டியதன் அவசியத்தையும் இது மீண்டும் கடுமையாக வலியுறுத்தியது.

# முதலீடு

## 2025 ஆம் ஆண்டிற்கான முதலீட்டு நடவடிக்கைகளின் சுருக்கமான பகுப்பாய்வு

கடன் மறுசீரமைப்பிற்குப் பின்னரான நிச்சயமற்ற தன்மைகள், குறிப்பாகக் கடன் வழங்குநர்களுடனான இருதரப்பு ஒப்பந்தங்கள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) நீடித்த நிதியுதவி வசதி (EFF) ஆகியவற்றின் பின்னணியில் இலங்கை மத்திய வங்கி எடுத்த கொள்கைத் தீர்மானங்கள் மற்றும் புதிய நிர்வாகத்தின் கீழான அரசியல் மாற்றங்கள்

143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

போன்றவற்றால் வடிவமைக்கப்பட்ட சவாலான சந்தை நிலைமைகளுக்கு மத்தியிலேயே 2025 ஆம் ஆண்டில் முதலீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. முதலீட்டுக் கொள்கையின் வழிகாட்டலின் ஊடாக, சொத்துக்களின் பாதுகாப்பிற்கு மிக உயர்ந்த முன்னுரிமை வழங்கப்படுவதை உறுதிசெய்து, முதன்மைப் பிணையங்களை ஒதுக்குவதற்கு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை முன்னுரிமை அளித்துச் செயற்பட்டுள்ளது. எவ்வாறாயினும், தற்போது நடைமுறையிலுள்ள பொருளாதாரச் சீர்திருத்தங்களின் கீழ் மத்திய வங்கியின் கொள்கைத் தளர்த்தல்கள் மூலம் வழிநடத்தப்பட்டதன் காரணமாக, 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் சந்தை வட்டி விகிதங்களில் ஏற்பட்ட தொடர்ச்சியான வீழ்ச்சியானது, நிலையான வருமானக் கலவையின் மூலமான வருவாயை எதிர்மறையாகப் பாதித்தது. பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காக ஒரே இரவில் கொள்கை வட்டி விகிதங்களில் மேற்கொள்ளப்பட்ட பரந்தளவிலான குறைப்புகள், அரசாங்க மற்றும் நிறுவனங்கள் ஆகிய இரு துறைகளினதும் கடன் கருவிகள் மூலம் ஈட்டப்படும் வருவாயின் விளைச்சலை மேலும் குறைக்கக் காரணமாக அமைந்தது.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையானது பங்குச் சந்தை முதலீடுகள் தொடர்பாக மிகவும் எச்சரிக்கையுடனான அணுகுமுறையைப் பின்பற்றியதுடன், ஆண்டின் இறுதி காலாண்டு முழுவதும் பங்குச் சந்தையில் நிலவிய வலுவான செயல்திறன் மூலம் உருவான வாய்ப்புகளைச் சாதகமாகப் பயன்படுத்தி மூலதனமாக்கிக் கொள்வதிலும் வெற்றியடைந்தது. இந்த மூலோபாயத்தின் மூலம், 8% வருடாந்த புள்ளிக்குப்புள்ளி வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் வகையில் 71.3 பில்லியன் ரூபா மொத்த வருமானத்தை ஈட்டுவதற்கு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபைக்கு இது பங்களித்தது. மேலும், ஒரு வருட திறைசேரி உண்டியல்கள் மற்றும் நிலையான வைப்பு விகிதங்களை விடக் கவர்ச்சிகரமான உயர் விகிதமான 9.50% முழுமையான நலனை நிதியத்தின் உறுப்பினர்களுக்கு இதன் மூலம் அறிவிக்க முடிந்தது. மொத்த முதலீட்டுக் கலவையின் பெறுமதி 2025 ஆம் ஆண்டின் இறுதியில் 663 பில்லியன் ரூபாவாக வளர்ச்சியடைந்ததுடன், இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 14% வளர்ச்சியை வெளிப்படுத்துகின்றது. பங்குகளின் மூலமான வருமானத்திலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சி பதிவாகியுள்ளதுடன், அது 2024 இல் 2.42 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட மட்டத்திலிருந்து 2025 இல் 3.98 பில்லியன் ரூபா வரை உயர்ந்து 64% வளர்ச்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. சபை கொண்டுள்ள விசித்திரமாக்கப்பட்ட பங்குகளின் வலுவான செயல்திறன் காரணமாகக் கிடைத்த உயர் பங்கிலாபத்தொகை வருமானம் மற்றும் மூலதன இலாபங்கள் மூலம் இந்நிலைமை வழிநடத்தப்பட்டதே இதற்குக் காரணமாகும். ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையானது தனது ஒட்டுமொத்த செயல்திறன் மூலம், 2025 ஆம் ஆண்டில் 11.36% முதலீட்டின் மீதான வருவாயை (ROI) ஈட்டிக்கொண்டது.

**2025.12.31 ஆம் திகதிக்கு முதலீட்டுக் கலவையின் அமைப்பு**




## நிலையான வருமானம் தரும் பிணையங்களிலான முதலீடு

643 பில்லியன் ரூபாவாகக் கணக்கிடப்படும் நிலையான வருமானம் தரும் பிணையங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ள நிதியின் அளவு, 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மொத்த முதலீட்டுக் கலவையில் 97% ஐக் கொண்டுள்ளது. இதில் 95% அளவானது, திறைசேரிப் பிணைமுறிகள் (Treasury Bonds) மற்றும் திறைசேரி உண்டியல்கள் (Treasury Bills) சார்ந்த அரசாங்க பிணையங்களிலான முதலீடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. ஒரே இரவிற்கான கொள்கை வட்டி விகிதங்கள் 8.00% இலிருந்து 7.75% ஆகக் குறைக்கப்பட்டமை மற்றும் அதன் பின்னர் அரசாங்க பிணையங்களின் விளைச்சல் விகிதங்களில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்த போதிலும், திறைசேரிப் பிணைமுறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களை அடிப்படையாகக் கொண்டு வெவ்வேறு காலப்பகுதிகள் மற்றும் ஏனைய நிலையான வருமானம் ஈட்டும் சொத்து வகைகளின் ஊடாக விசித்திரமாக்கல் செய்ததன் மூலம், வட்டி விகித வீழ்ச்சியின் எதிர்மறைத் தாக்கத்தைச் வெற்றிகரமாகக் கடந்து செல்வதற்கு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிச் சபையினால் இயலுமாகியது. 2025 ஆம் ஆண்டில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிச் சபையானது நிலையான வருமானம் தரும் பிணையங்கள் மூலம் 69 பில்லியன் ரூபா மொத்த வருமானத்தை ஈட்டுவதற்கு சக்திபெற்றுள்ளதுடன் இத்தொகை 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 12% அதிகரிப்பாகும்.







## பங்குரிமை முதலீடு

இலங்கையின் பங்குச் சந்தை 2025 ஆம் ஆண்டில் ஆசியாவின் அதிஉயர் செயல்திறன் கொண்ட சந்தைகளுள் ஒன்றாகத் தரப்படுத்தப்பட்டு, ஒரு வலுவான மீட்சியைப் பதிவு செய்தது. அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் (ASPI), 2024 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட 15,944 அலகுகளுடன் ஒப்பிடுகையில் 2025 டிசம்பர் மாதமளவில் 41.9% இனால் அதிகரித்து 22,624 அலகுகளை எட்டியதுடன், எஸ் அண்ட் பி ஸ்ரீலங்கா 20 சுட்டெண் (S&P SL20) 26.6% இனால் அதிகரித்தது. சந்தையின் உத்தியோகபூர்வ

வியாபாரப் புரள்வு (Turnover), உயர் முதலீட்டாளர் பங்கேற்பைப் பிரதிபலிக்கும் வகையில் 1,233 பில்லியன் ரூபா வரை கணக்கிடப்பட்டு, இரண்டு மடங்குக்கும் மேலாக அதிகரித்தது. பேரினப் பொருளாதார ஸ்திரத்தன்மையின் அபிவிருத்திகள், குறைந்த வட்டி விகிதங்கள், குறைந்த பணவீக்கம் மற்றும் வலுவான நிறுவன ஈட்டங்கள் என்பன, விசேடமாக வங்கி மற்றும் நிதித் துறைகளின் செயல்திறனை வழிநடத்தின. வலுவான உள்நாட்டு வேகம் காணப்பட்ட போதிலும், 38.6 பில்லியன் ரூபா தேறிய வெளிநாட்டு மூலதன வெளிப்பாய்ச்சல் அவதானிக்கப்பட்டது. உயர் தரமதிப்பீடு கொண்ட நிறுவனங்களின் (Blue-chip companies) பங்குகள் விற்பனை செய்யப்பட்டமையே இதற்குப் பிரதான காரணமாக அமைந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4.5% இலிருந்து 5.0% வரையான வளர்ச்சி, சுற்றுலாத் துறை மற்றும் வெளிநாட்டுப் பணவனுப்பல்களின் (Remittances) புதிய எழுச்சி, நிலையான வருமானக் கருவிகளிலிருந்து பங்குரிமைகளை நோக்கி மாறுவதை ஊக்குவிக்கும் வகையில் திறைசேரி உண்டியல்களின் விளைச்சல் வீழ்ச்சியடைந்தமை மற்றும் கடன் மறுசீரமைப்பின் பின்னர் பிட்ச் மற்றும் மூடிஸ் (Fitch and Moody's) ஆகிய நிறுவனங்களால் கடன் தரப்படுத்தல்கள் உயர்வாக்கப்பட்டமை என்பன இவ்வளர்ச்சியின் முதன்மை உந்துசக்திகளாக இருந்தன. ஒட்டுமொத்தமாக, பங்குச் சந்தையின் மீளெழும் திறன், புத்துயிர் பெற்ற முதலீட்டாளர் நம்பிக்கையை பலமாக அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளதுடன், 2025 இல் இலங்கை இப்பிராந்தியத்தின் மிகச்சிறந்த செயல்திறன் கொண்ட சந்தையாகத் தன்னை நிலைநிறுத்தியுள்ளது.

2025 ஆம் ஆண்டின் இறுதியில், ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிச் சபையானது தனது பங்குரிமை முதலீடுகளை மொத்த முதலீட்டுக் கலவையின் 2.39% ஆகப் பேணியிருந்தது. பெரும்பாலான பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள் பங்கிலாபத் தொகைகளை அறிவித்தமையுடன், பேரினப் பொருளாதார ஸ்திரத்தன்மை மீட்டெடுக்கப்பட்டு வர்த்தக நடவடிக்கைகள் மேம்பட்டமை கொழும்பு பங்குச் சந்தையின் வலுவான செயல்திறனுக்குச் சாதகமான தூண்டுகோலாக அமைந்தது. சபையின் பங்குரிமைக் கலவையானது, அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண்ணின் (ASPI) 41.9% வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், ஆண்டு முழுவதும் குறிப்பிடத்தக்க 63.9% வளர்ச்சியைப் பிரதிபலித்ததுடன், அதன் பங்கிலாபத்தொகை மற்றும் மூலதன இலாபங்கள் மூலம் 3,978 மில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டியது. மேலும், ஆண்டின் இறுதியில் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண்ணில் (ASPI) காணப்பட்ட சாதகமான செயல்திறன் காரணமாக, முதலீட்டுக் கலவையின் பெறுமதி 3.08 பில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளது. விசித்திரமாக்கப்பட்ட பங்குரிமைக் கலவையை நிர்வகிப்பதில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை கையாண்ட விவேகமான முதலீட்டு அணுகுமுறையையும், ஆண்டின் போது பங்குச் சந்தையில் நிலவிய மீட்சியின் நேர்மறைத் தாக்கத்தையும் இந்த முடிவுகள் முன்னிலைப்படுத்துகின்றன.

**முதலீட்டு அமைப்பின் மொத்த வருமானம்**




## முன்னோக்கிய பாதை

எதிர்காலத்தை நோக்குகையில், 2025 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரப் பாதையானது நுண் பொருளாதார மீளெழுமதிறன், பேரினப் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் நிதிச் சீர்திருத்தங்கள் ஆகியவற்றின் கலவையினால் வடிவமைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மீட்டெடுப்பதையும் வெளிநாட்டு இருப்புகளை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட தொடர்ச்சியான கடன் மறுசீரமைப்பு, நிதி ஒருங்கிணைப்பு மற்றும் கட்டமைப்புச் சீர்திருத்தங்கள் என்பவற்றின் மூலம் நாடு பயனடையும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. சுற்றுலாத் துறையின் மீட்சி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் உள்கட்டமைப்பு விரிவாக்கம் மற்றும் ஏற்றுமதிச் செயல்திறனின் படிப்படியான மேம்பாடு ஆகியவற்றின் மூலம் வளர்ச்சி எதிர்பார்ப்புகள் மேலும் ஊக்கமடையும். பிரதான துறைகளின் ஊடாக அதிகரித்து வரும் வருமானம் மற்றும் மேம்படுத்தப்பட்ட உற்பத்தித்திறன் காரணமாக நுகர்வோர் தேவை படிப்படியாக வழமைக்குத் திரும்பும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வருமானத்தை திரட்டுவதற்கும், செலவினங்களை விவேகத்துடன் நிர்வகிப்பதற்கும், அரசாங்க நிதி ஆளுமையை வலுப்படுத்துவதற்கும் அரசாங்கம் எடுக்கும் முயற்சிகள் ஸ்திரத்தன்மையைப் பேணுவதில் முக்கிய பங்கு வகிக்கும். கடன் மறுசீரமைப்பு முயற்சிகள் நிதி அழுத்தத்தைத் தளர்த்தும் என எதிர்பார்க்கப்படுவதுடன், உட்கட்டமைப்பு, சமூக நலன்புரி மற்றும் பசுமைத் திட்டங்களிலான இலக்கு வைக்கப்பட்ட முதலீடுகள் உள்ளடங்கிய உள்ளார்ந்த வளர்ச்சிக்குத் துணையாக அமையும்.

ஒட்டுமொத்த எதிர்கால நோக்குடன் ஒப்பிடுகையில், இலங்கை வாய்ப்புகள் மற்றும் சவால்கள் ஆகிய இரண்டையும் எதிர்கொள்கின்றது. உலகளாவிய சந்தை ஸ்திரமற்ற தன்மை, மத்திய கிழக்கு பிராந்தியத்தின் பதற்ற நிலைமைகள், பொருட்களின் விலை ஏற்ற இறக்கங்கள் மற்றும் காலநிலை சார்ந்த தடைகள் போன்ற தொடர்ச்சியான வெளிப்புற அபாயங்களுக்கு மிகவும் எச்சரிக்கையுடனான கொள்கை ரீதியான பதிலளிப்புகள் அவசியமாகும். எவ்வாறாயினும், ஒழுக்கமான ஆளுமை, ஸ்திரத்தன்மையை மையமாகக் கொண்ட முதலீடுகள் மற்றும் சமூக நலன்புரிக்கான அர்ப்பணிப்புடன், 2025 ஆம் ஆண்டிலும் அதற்கு அப்பாலும் மீளெழும்திறன் மிக்க, உள்ளடங்கிய மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சியை நோக்கி முன்னோக்கிச் செல்ல இலங்கை தயாராக உள்ளது.

எதிர்வரும் ஆண்டுகளிலும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையானது இலங்கையின் முன்னணி சமூகப் பாதுகாப்பு நிதியங்களில் ஒன்றாக, அதன் உறுப்பினர்களின் நலன்புரி மற்றும் நிதிப் பாதுகாப்பை மேம்படுத்துவதில் முக்கிய உந்துசக்தியாகத் தொடர்ந்தும் விளங்கும். செயல்திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் உறுப்பினர்களுக்கான அணுகல்தன்மை ஆகியவற்றை அதிகரிப்பதற்கான தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொள்ளும் அதேவேளையில், பங்குரிமைகள் மற்றும் நிலையான வருமானம் தரும் பிணையங்கள் ஊடாக விவேகமான முதலீட்டு விசித்திரமாக்கலுக்கும் சபை அர்ப்பணிப்புடன் உள்ளது. பசுமைப் பொருளாதாரத்தை

www.etfb.lk

143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

நோக்கிய உலகளாவிய மாற்றத்திற்கு ஆதரவளிக்கும் வகையில், வரவிருக்கும் ஆண்டுகளில் பசுமை, சமூக மற்றும் நிலையானதன்மை (GSS+) பிணைப்புக் கருவிகள் (Bond Instruments) மீது அதிக கவனம் செலுத்துவதற்கான மூலோபாய முக்கியத்துவத்துடன் சபை செயல்படும்.

அதேநேரம், போதுமான இடர் மேற்பார்வை மற்றும் ஆளுமைக் கட்டமைப்புகளுடன் கூடிய வலுவான முதலீட்டு உத்திகளின் மூலம், பங்குதாரர்களுக்கு நிலையான மதிப்புச் சேர்ப்பை உறுதி செய்வதில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை சிறப்பாகத் தன்னை நிலைநிறுத்தியுள்ளது.

## பங்களிப்புத் தொகை அறவீடு மற்றும் தொழில் வழங்குநர் உறவுகள்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் அறவீடு மற்றும் தொழில் வழங்குநர் உறவுகள் பிரிவு, தொழில் வழங்குநர்களிகளிடமிருந்து அறவிட வேண்டிய பங்களிப்புத் தொகைகளை சரியான நேரத்தில் அறவிடுவதற்கும், தாமதமான பங்களிப்புகளுக்கு மேலதிகக் கட்டணம் அறவிடுவதற்கும் பொறுப்பாக உள்ளது. செலுத்தப்படும் பங்களிப்புத் தொகைகள் துல்லியமாகக் கணக்கிடப்பட்டு அறிக்கை செய்யப்படுவதை உறுதி செய்வதற்காக, சம்பந்தப்பட்ட முக்கிய பங்குதாரர்களான தொழில் வழங்குநர்கள், வங்கி நிறுவனங்கள் மற்றும் தபால் திணைக்களத்துடன் நெருக்கமாக ஒருங்கிணைந்து செயற்படுகின்றது.

மேலும், இந்தப் பிரிவு புதிய தொழில் வழங்குநர்களைக் கண்டறிந்து இந்த நிதியின் கீழ் அவர்களைப் பதிவு செய்யும் பணிகளையும் மேற்கொள்கின்றது. தற்போதுள்ள அமைப்பின் கீழ், தொழில் திணைக்களத்தின் ஊழியர் சேமலாப நிதிப் பிரிவு, 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்தின் கீழ் அவர்களுக்கு வழங்கப்பட்ட அதே தொழில் வழங்குநர் எண்ணின் கீழ் தொழல் வழங்குநர்களைப் பதிவு செய்கின்றது மற்றும் ஒரு எளிய விண்ணப்பத்தின் மூலம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தொழில் வழங்குநர் கணக்குகளைத் தயாரிக்கின்றது. அதற்கமைய, சபை நேரடியாக தொழில் வழங்குநர்களைப் பதிவு செய்வதில்லை. மேலும், பிராந்திய அலுவலகங்களால் நடத்தப்படும் கள ஆய்வுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையிலும், தொழில் வழங்குநர்களின் கோரிக்கைகளின் அடிப்படையிலும் புதிய தொழில் வழங்குநர் கணக்குகள் தயாரிக்கப்படுகின்றன.

இந்தப் பிரிவு தொழில் வழங்குநர்களுக்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் கீழ் சுயதொழில் செய்பவர்கள் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் உறுப்பாண்மையை ஊக்குவிப்பதற்கும் செயல்படுகின்றது.

அதற்கமைய, சேகரிப்பு மற்றும் தொழில் வழங்குநர் உறவுகள் பிரிவு, நிர்ணயிக்கப்பட்ட செயல்திறன் இலக்குகளை அடைவதற்கு சபையின் பிராந்திய அலுவலக வலையமைப்புடன் இணைந்து செயல்படுகின்றது.

| | 2021 | 2022 | 2023 | 2024 | 2025 |
|---|---|---|---|---|---|
| செயலிலுள்ள தொழில் வழங்குநர்களின் எண்ணிக்கை | 69,094 | 64,026 | 75,485 | 79,895 | 84,578 |
| செயலூக்கமுள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை | 2,430,091 | 2,455,609 | 2,592,923 | 2,548,200 | 2,654,811 |
| சுயதொழிலில் ஈடுபட்டுள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை | 41,517 | 41,113 | 43,640 | 44,494 | 45,404 |
| புலம்பெயர் ஊழியர்களின் எண்ணிக்கை | 228 | 241 | 274 | 291 | 328 |

### தனது ஊழியர்களுக்கு பங்களிப்புத் தொகை செலுத்துவதற்கு இணக்கம் தெரிவிக்க வேண்டிய தொழில் வழங்குநர்கள்

நிரந்தர ஓய்வூதியத்திற்கு தகுதியற்ற அரசாங்க மற்றும் தனியார் துறைகளில் உள்ள ஊழியர்கள் 1980 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிச் சட்டத்தின்படி சட்டப்பூர்வ அடிப்படையில் நிதியத்தில் உறுப்பினர்களாக உள்ளனர், மேலும் வெளிநாடுகளில் பணிபுரியும் சுயதொழில் செய்பவர்கள் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களும் தங்கள் சொந்த முயற்சியில் நிதியத்தில் உறுப்பினராவதற்கு விண்ணப்பிக்க முடியும்.

அதற்கமைய, இந்த நிதியம் இலங்கையில் நிரந்தர ஓய்வூதியத்திற்கு தகுதியற்ற அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கிய ஓய்வூதியம் மற்றும் பிற நலன்புரி சலுகைகளை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது சம்பந்தமாக, தொழில் வழங்குநர்கள் தங்கள் நிரந்தர ஊழியர்களுக்கு மட்டுமல்லாமல், சாதாரண மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் ஊழியர்களுக்கும், தினசரி அல்லது துண்டு வீத அடிப்படையில் ஊதியம் பெறும் ஊழியர்களுக்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பங்களிப்புகளை செலுத்த வேண்டும். இருப்பினும், தொழில் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் புள்ளிவிவரங்களின்படி பதிவுசெய்யப்பட்ட தொழில் வழங்குநர்களின் எண்ணிக்கைக்கும் அவர்களின் கீழ் உள்ள அனைத்து ஊழியர்களுக்கும் இந்த நிதியத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட எண்ணிக்கைக்கும் இடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்படுகின்றன. இந்த ஏற்றத்தாழ்வைக் குறைப்பதற்காக, சபை ஏற்புடைய நிறுவனங்களிலிருந்து புதுப்பிக்கப்பட்ட தகவல்களைப் பெற்று, அந்தத் தகவலின் அடிப்படையில் கள விசாரணைகளை மேற்கொள்வதன் மூலம் செயல்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது.

சபையினால் வழங்கப்படும் ஓய்வூதிய சலுகைகளுக்கு மேலதிகமாக வழங்கப்படும் நலன்கள் தொழில் வழங்குநர்களினால் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு தொடர்ந்து பங்களிப்புகளைச் செலுத்தும் உறுப்பினர்களுக்கு மாத்திரமே வழங்கப்படுகின்றன. எனவே, உறுப்பினர்கள் சலுகைகளைப் பெறுவதற்காக, பங்களிப்புக்களை தாமதமின்றி தொழில் வழங்குநர்களினால் தொடர்ந்தும் செலுத்தப்படுகிறதா என்பதை எங்கள் உத்தியோகத்தர்கள் கண்காணித்து வருகின்றனர்.

## பிராந்திய அலுவலகங்கள் மூலம் பங்களிப்புத் தொகைகளை அறவிடுதல்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புகளை செலுத்த வேண்டிய புதிய தொழில் வழங்குநர்களை அடையாளம் கண்டு பரிந்துரைப்பதற்கும், ஏற்கனவே பதிவுசெய்யப்பட்ட தொழில் வழங்குநர்களால் பங்களிப்புகள் செலுத்தப்படுவதை உறுதி செய்வதற்கும், நாட்டின் ஒவ்வொரு பகுதியையும் உள்ளடக்கியதாக நிறுவப்பட்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் 19 பிராந்திய அலுவலகங்கள், தொழில் வழங்குநர்களைக் கண்காணிக்க ஆண்டுதோறும் 25,000 முதல் 27,000 வரை கள ஆய்வுகளை நடத்தியுள்ளன. இவற்றில், சுமார் 70% பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டதாகப் முறைப்பாடுகள் அளிக்கப்பட்ட நிறுவனங்களின் அடிப்படையில் நடத்தப்பட்டுள்ளன. கள ஆய்வுகளின் மூலம் அடையாளம் காணப்பட்ட புதிய தொழில் வழங்குநர்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு சராசரியாக சுமார் 3,762 ஆகும்.

2025 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட மொத்த கள ஆய்வுகளின் எண்ணிக்கை 25,782 மற்றும் பங்களிப்புகளை செலுத்தாதவர்களாகக் கண்டறியப் பட்ட தொழில் வழங்குநர்களின் எண்ணிக்கை 16,648 ஆகும். மேலும், கள விசாரணைகள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களின் அடிப்படையில், நிதியத்தில் பதிவுசெய்யப்பட்ட புதிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 17,095 ஆகும்.

## பங்களிப்புத் தொகைகளை இணைய வழியில் செலுத்தும் முறை (Online)

நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் 2022.12.22 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி இல. 2311/39 இல் வெளியிடப்பட்ட கட்டளைகளின்படி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு நிதியை அனுப்பும்போது, 15 க்கும் மேற்பட்ட ஊழியர்களைக் கொண்ட நிறுவனங்கள், 2023 பெப்ரவரி 01 ஆம் திகதி முதல் கணினி அமைப்பு அல்லது கையடக்க இலத்திரனியல் சாதனம் மூலம் இணைய வழிமுறையில் பங்களிப்புகளை அனுப்புதல் வேண்டும். அதற்கமைய, 2025 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட மொத்த பங்களிப்புகளில் 82.28% இணையவழி அமைப்பு மூலம் செய்யப்பட்டுள்ளன, இது மொத்த செயலில் உள்ள தொழில் வழங்குநர்களின் எண்ணிக்கையில் 19.34% ஆகும். அரசாங்கத்தின் டிஜிட்டல் பொருளாதாரக் கொள்கையை செயல்படுத்துவதற்கான தற்போதைய ஏற்பாடுகளின்படி, மேற்குறிப்பிடப்பட்ட உத்தரவின் பிரகாரம் பங்களிப்புகள் மற்றும் பணம் அனுப்பும் அறிவிப்புகளை இணைய வழியில் செலுத்துவதில் தொழில் வழங்குநர்களுக்கு மிகுந்த கவனம் செலுத்தப்பட்டுள்ளது, மேலும் இது மிகவும் வசதியான மற்றும் பொருத்தமான முறையாக பரிந்துரைக்கப்படுகின்றது. ஏனெனில் இது ஒரே நேரத்தில் பணம் அனுப்பும் அறிவிப்புகள்/உறுப்பினர் தகவல்களை வழங்க அனுமதிக்கிறது. அதன்படி, 15 க்கும் குறைவான ஊழியர்களைக் கொண்ட நிறுவனங்களும் இந்த முறையைப் பயன்படுத்தி பங்களிப்புகள் மற்றும் பணம் அனுப்பும் அறிவிப்புகளை அனுப்ப ஊக்குவிக்கப்படுகின்றன. அதற்கமைய, இந்த முறையின்படி பங்களிப்புகளை இதுவரை செலுத்தாத தொழில் வழங்குநர்களை அவ்வாறு செய்வதற்கு தூண்டுவது முன்னுரிமையாகக் கருதப்படுகின்றது.

பின்வரும் 2 முறைகளைப் பயன்படுத்தி (Online) முறை மூலம் பங்களிப்புகளை செலுத்துவதற்கான வசதிகள் தொழில் வழங்குநர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

### 1. இலத்திரனியல் வங்கி முறைமை (E-Bank/ Online Banking)

இணைய வழியில் இலத்திரனியல் வங்கி முறைமை (E-Bank/Online Banking) மூலம் பங்களிப்புத் தொகை செலுத்துவதற்கு பின்வரும் வணிக வங்கிகள் மூலம் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

- இலங்கை வங்கி
- மக்கள் வங்கி
- கொமர்ஷல் வங்கி
- சம்பத் வங்கி
- செலான் வங்கி
- நேஷன் டிரஸ்ட் வங்கி
- டீஎப்சீசீ வங்கி
- ஹற்றன் நெஷனல் வங்கி
- தேசிய அபிவிருத்தி வங்கி

### 2. நேரடியான வைப்பு (Direct Debit)

நேரடியான வைப்புக்கள் (Direct Debit) ஊடாக பங்களிப்புத் தொகைகளை எந்தவொரு வணிக வங்கி ஊடாகவும் செய்ய முடியும். மேலே குறிப்பிடப்பட்ட இணைய வழிமுறைக்கு மேலதிகமாக, காசோலைகள், காசுக் கட்டளைகள் மற்றும் காசாக பாரம்பரிய முறைகள் மூலம் தலைமை அலுவலகம் அல்லது கிளை அலுவலகங்களுக்கு பணம் செலுத்த முடியும், ஆனால் தற்போதைய அரசாங்கத்தின் டிஜிட்டல் பொருளாதாரக் கொள்கையை செயல்படுத்தும் முயற்சியாக இந்த முறைகள் ஊக்கப்படுத்தப்படவில்லை. அதற்குப் பதிலாக, இணைய வழியாக பணம் அனுப்புவதற்கு இணைய வழிமுறைகளைப் பயன்படுத்துவது செயல்முறையை எளிமையாகவும் வினைத்திறனாகவும் மாற்றும்.



143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்





பங்களிப்புத் தொகைகளை செலுத்தல் பற்றிய பகுப்பாய்வு (இணைய வழியில் மற்றும் வழமையான முறையில்)

| # | செலுத்தும் முறை | 2024 | | | 2025 | | | வளர்ச்சி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தொழில் தருநர் எண்ணிக்கை (சாதாரண பெறுமானம்) | பெறுமதி (ரூபா. மில்) | % | தொழில் தருநர் எண்ணிக்கை (சாதாரண பெறுமானம்) | பெறுமதி (ரூபா. மில்) | % | தொழில் தருநர் எண்ணிக்கை (சாதாரண பெறுமானம்) | பெறுமதி (ரூபா. மில்) | % |
| **இணைய வழிமுறை (Online)** | | | | | | | | | | |
| 1 | இணைய வங்கி முறை | 10,618 | 32,227 | 76.65% | 11,535 | 37,280 | 71.16 | 917 | 5,053 | 15.68 |
| 2 | நேரடி வைப்புக்கள் | 209 | 2,273 | 5.41% | 198 | 2,470 | 5.11 | (11) | 197 | 8.67 |
| | மொத்தம் (1+2) | 10,827 | 34,500 | 82.05% | 11,733 | 39,750 | 82.28 | 906 | 5,250 | 15.22 |
| **பாரம்பரிய முறைகள்** | | | | | | | | | | |
| 3 | காசோலைகள் | 39,074 | 7,051 | 16.77% | 41,131 | 7,942 | 16.44 | 5,057 | 891 | 12.64 |
| 4 | காசுக் கட்டளைகள் | 2,767 | 86 | 0.20% | 3,015 | 106 | 0.22 | 248 | 20 | 23.26 |
| 5 | பணம் | 4,128 | 409 | 0.97% | 4,691 | 515 | 1.07 | 563 | 106 | 25.92 |
| | மொத்தம் (3+4+5) | 45,969 | 7,546 | 17.95% | 48,837 | 8,563 | 17.72 | 2,868 | 1,017 | 13.48 |
| **முழு மொத்தம்** | | **56,796** | **42,046** | **100.00%** | **60,570** | **48,313** | **100** | **3,774** | **6,267** | **14.91** |

# அங்கத்தவர் சேவைகள் பிரிவு

1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் முக்கிய நோக்கம், ஊழியர் உரிமைகள், ஊழியர் நலன் மற்றும் நிர்வாகத்தில் ஊழியர் பங்கேற்பை மேம்படுத்துதல் மற்றும் உறுப்பினர்களின் பொருளாதார ஜனநாயகத்தை மேம்படுத்துதல் என்பனவாகும். அங்கத்தவர் சேவைகள் பிரிவு 7 பிரிவுகளைக் கொண்டுள்ளது மற்றும் அவற்றின் முக்கிய செயற்பாடுகளாக அங்கத்தவர் கணக்குகளைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல், அங்கத்தவர்களுக்கு வருடாந்த கணக்கு அறிக்கைகளை வழங்குதல் மற்றும் அங்கத்தவர்களுக்கு சட்டரீதியான சலுகைகள் மற்றும் சட்டத்தால் குறிப்பிடப்படாத நலன்புரி சலுகைகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் என்பனவாகும்.




*Figure 1: Organization Structure of Member Service Division*

## அங்கத்தவர் உரிமைக் கொடுப்பனவுகள் (சட்டமுறையான நலன்கள்)

சட்டமுறையான சலுகைத் தொகையின் கீழ், ஒரு உறுப்பினர் தனது பணி நீக்கத்திற்குப் பிறகு அல்லது 60 வயது நிறைவடைந்தவுடன், பணி நீக்கத்திற்கு உட்பட்டு தனது கணக்கு இருப்பைத் திரும்பப் பெறலாம். மேலும் உறுப்பினர் இறந்தால், கணக்கு இருப்பு உறுப்பினரின் வாரிசுகள், பின்னுரித்தாளிகள் அல்லது பரிந்துரைக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும்.

2024 ஆம் ஆண்டில், 195,896 உறுப்பினர்களுக்கு ரூ.34 பில்லியன் தொகை வழங்கப்பட்டது. மேலும் 2025 ஆம் ஆண்டின் இறுதியில், 166,444 உறுப்பினர்களுக்கு ரூ.30.7 பில்லியன் தொகை வழங்கப்பட்டது. நாட்டின் பொருளாதார நிலைமை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு உறுதிப்படுத்தப்பட்டு ஊழியர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும் போக்கு குறைந்தது. மேலும், கோவிட் 19 தொற்றுநோயால் மூடப்பட்ட வணிகங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட காரணத்தினால் 2025 ஆம் ஆண்டில் உறுப்பினர்களால் உரிமைகளை திரும்பப் பெறுவதில் குறிப்பிடத்தக்க குறைவு ஏற்பட்டது. இந்தக் குறைவு 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது அது 15% சதவீதமாக காணப்பட்டது.




| | 2021 | 2022 | 2023 | 2024 | 2025 |
|---|---|---|---|---|---|
| Value (Mn.) | 20,061.97 | 25,298.00 | 38,774.81 | 33,799.21 | 30,713.86 |
| No of Members | 149,019 | 195,212 | 240,888 | 195,896 | 166,444 |

Value (Mn.) — No of Members

## நலன்புரி நன்மைகள் (சட்டத்தில் குறிப்பிடப்படாத நலன்கள்)

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையை நிறுவுவதன் முக்கிய நோக்கங்களாக, உறுப்பினர்களின் நலனை மேம்படுத்தல் மற்றும் அவர்களின் பொருளாதார ஜனநாயகத்தைப் பாதுகாத்தல் என்பன பிரதானமானவையாகும். அதற்கமைய, 1986 ஆம் ஆண்டு 'தானியங்கி ஆயுள் காப்புறுதி சலுகை (இறப்பு நலன்) திட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டது முதல் 2024 ஆம் ஆண்டு அரசாங்க பல்கலைக்கழக கல்வியில் பதிவு செய்யும் எமது சபையில் செயலில் உள்ள உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு 'விஸ்வ யாத்ரா' என்ற பெயரில் ரூ.25,000.00 நிதி மானியம் வரையிலான 11 நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

உறுப்பினர் கணக்கு இருப்பில் இருந்து எந்தத் தொகையையும் கழிக்காமல் மருத்துவ உதவி வழங்குதல், சலுகை வட்டி விகிதத்தில் வீட்டுக் கடன்களை வழங்குதல் மற்றும் எங்கள் உறுப்பினர்களின் குழந்தைகளின் எதிர்காலத்தை வலுப்படுத்த கல்வி உதவித்தொகைகளை வழங்குதல், தேவைப்படும் நேரத்தில் எமது உறுப்பினர்களின் எதிர்காலத்தை வலுப்படுத்த நாம் பணியாற்றி வருகின்றோம்.



143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

## நலன்புரி நன்மைகள்




| | I.O.L | Heart Surgery | Life Insurance | Permanent Disable | Shramasuwa Rakawarana | Kidney Transplant |
|---|---|---|---|---|---|---|
| 2024 Amount LKR (Mn) | 8.19 | 126.77 | 121.16 | 19.91 | 18.53 | 1.42 |
| 2025 Amount LKR (Mn) | 9.68 | 168.59 | 98.38 | 24.15 | 16.90 | 6.46 |
| 2024 No of Claims | 367 | 421 | 1223 | 81 | 835 | 6 |
| 2025 No of Claims | 414 | 551 | 995 | 95 | 796 | 19 |

2024 Amount LKR (Mn)   2025 Amount LKR (Mn)   2024 No of Claims   2025 No of Claims

இந்த நலன்கள் அனைத்தும், சுயதொழில் செய்பவர்கள் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களாகப் பதிவுசெய்து சபையில் உறுப்புரிமையைப் பெற்ற உறுப்பினர்களுக்கும் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த நலத்திட்டங்களுக்கான செலவை அனைத்து உறுப்பினர்களும் விகிதாசாரப்படி ஏற்றுக்கொண்டாலும், தேவைப்படும் நேரங்களில் அனைத்து உறுப்பினர்களுக்கும் அவர்களால் உதவுவதற்கு முடிகின்றமை அனைத்து உறுப்பினர்களின் அமைதியான பெருமையாக மாறியுள்ளது.
2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில், நிபுணதா சவியா மற்றும் விஸ்வ யாத்ராவின் நலத்திட்டங்களை அறிமுகப்படுத்தி, சலுகைகளுக்கான பெறுமதியை அதிகரிப்பதன் மூலம் சபையின் நலத்திட்டங்களுக்கு ஒரு புதிய அத்தியாயம் அறிமுகப்படுத்தப்பட்டது.

தேசிய தொழில் தகுதி (NVQ) நிலை 3,4 மற்றும் 5 பாடநெறிகளைத் தொடர்வதற்கு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களை திறமையான மற்றும் தகுதிவாய்ந்த நபராக உள்ளூர் மற்றும் சர்வதேச வேலைச் சந்தையில் பெருமையுடன் நுழைவதற்கு ரூ. 50,000.00 நிதியுதவி வழங்கப்படுகின்றது. 2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள், இந்த நலன்கள் மூலம் உறுப்பினர்களின் 12 பிள்ளைகளுக்கு ரூ.437,800 தொகை வழங்கப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டில், உயர்தரப் பரீட்சையில் சிறப்புத் தேர்ச்சிபெற்ற அரசாங்க பல்கலைக்கழகங்களில் சேரும் உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு ரூ. 25,000.00 நிதியுதவி வழங்கப்பட்டது, மேலும் 2,196 பிள்ளைகளுக்கு ரூ. 5,490,000.00 தொகை வழங்கப்பட்டுள்ளது. நலன்புரி சலுகைகளில் ஒரு தனித்துவமான மைல்கல்லாக, உறுப்பினர் நலன்புரி சலுகைகளை விரிவுபடுத்தும் விஸ்வ யாத்ரா சலுகை அறிமுகப்படுத்தப்பட்டதை நான் முக்கிய ஒரு மைல்கல்லாகக் கருதுகின்றேன்.

### அங்கத்தவர் கணக்குகளைப் பேணிவரல்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தொழில் வழங்குநர்கள் ஒவ்வொரு ஊழியரின் மாதாந்த மொத்த வருவாயில் 3% க்கு சமமான தொகையை சபைக்கு அனுப்புதல் வேண்டும். சுயதொழில் செய்பவர்கள் மாதத்திற்கு ரூ. 500.00 மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மாதத்திற்கு ரூ. 2000.00 ஐ சபைக்கு அனுப்புவதன் மூலம் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

உறுப்பினரின் கணக்கின் இருப்புக்கு சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட வட்டி விகிதத்திற்கு மேலதிகமாக உறுப்பினர் கணக்குகள் ஆண்டுதோறும் பங்கிலாபத் தொகையால் அதிகரிக்கப்படுகின்றன. இந்தச் செயற்பாடு 15 க்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட நிறுவனங்களுக்கான பெரிய வகை உறுப்பினர் கணக்குகளாலும், 15 க்கும் குறைவான உறுப்பினர்களைக் கொண்ட நிறுவனங்களுக்கான சிறிய வகை உறுப்பினர் கணக்குகளாலும் மேற்கொள்ளப்படுகின்றது.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின பிரிவு 8 (ஒ) இன் படி, ஒவ்வொரு செயலில் உள்ள உறுப்பினரின் தனிப்பட்ட கணக்கு மீதி, ஒவ்வொரு நிதி ஆண்டையும் தொடர்ந்து வரும் ஆண்டின் செப்டம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் வருடாந்த கணக்கு அறிக்கை மூலம் உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்படும். 2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள், எமது சபையில் செயலில் உள்ள 2,602,200 உறுப்பினர் கணக்குகளில், 2,453,114 கணக்குகள் புதுப்பிக்கப்பட்டு, உறுப்பினர் கணக்கு அறிக்கைகள் அவர்களின் தொழில் வழங்குநர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. மேலும், சுமார் 15,440,000 செயலற்ற உறுப்பினர் கணக்குகள் உள்ளன, மேலும் சுமார் 15,296,781 கணக்குகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

மேலும், சபையினால் பராமரிக்கப்படும் இலத்திரனியல் சேவை (E-service) மூலம் குறுஞ்செய்தி மூலம் உறுப்பினர்கள் தங்கள் தனிப்பட்ட கணக்கு இருப்பை அறிய தேவையான வசதிகளை வழங்குவதன் மூலம், உறுப்பினர்கள் தங்கள் கணக்குத் தகவல்களை அணுகுவதை விரிவுபடுத்தும் பொருட்டு சபை ஒரு தனித்துவமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.









# மனிதவள முகாமைத்துவம்

ஓய்வுபெறுகை மற்றும் பதவி விலகல் காரணமாக 2024 ஆம் ஆண்டில் 837 ஆக இருந்த ஆளணி எண்ணிக்கை சிறு மாற்றத்துடன் 2025 ஆம் ஆண்டின் இறுதியில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் ஆளணி எண்ணிக்கை 847 ஆகும்.

| மட்டம் | தோழில் தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சிரேஸ்ட | பொது முகாமையாளர் | - | - | - |
| | மேலதிக பொது முகாமையாளர் | - | - | - |
| | பிரதிப் பொது முகாமையாளர் | 6 | - | 6 |
| | உதவிப் பொது முகாமையாளர் | 4 | 1 | 5 |
| | முகாமையாளர் | 20 | 18 | 38 |
| | **மொத்தம்** | **30** | **19** | **49** |
| மூன்றாம் நிலை | கனிஸ்ட முகாமையாளர் | 33 | 28 | 61 |
| | முகாமைத்துவ உதவியாளர் | 71 | 109 | 180 |
| | **மொத்தம்** | **104** | **137** | **241** |
| இரண்டாம் நிலை | முகாமைத்துவ உதவியாளர் 2-2 | 4 | 2 | 6 |
| | முகாமைத்துவ உதவியாளர் 1-2 | 165 | 262 | 427 |
| | **மொத்தம்** | **169** | **264** | **433** |
| ஆரம்ப நிலை | ஆரம்ப மட்டம் | 111 | 13 | 124 |
| | **மொத்தம்** | **111** | **13** | **124** |
| **மொத்தம்** | | **414** | **433** | **847** |



143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

## ஆளணி வயது அடிப்படையில்

| ஆளணி வயது அடிப்படையில் (2025.12.31 திகதிக்கு) வயதுப் பிரிவு வருடங்கள் மொத்தம் | | |
|---|---|---|
| 21-25 | 0 | 0% |
| 26-30 | 76 | 8.88% |
| 31-35 | 124 | 14.65% |
| 36-40 | 130 | 15.34% |
| 41-45 | 147 | 17.35% |
| 46-50 | 87 | 10.27% |
| 51-55 | 142 | 16.76% |
| 55 க்கு மேல் | 141 | 16.65% |
| **மொத்தம்** | **847** | **100%** |

## ஆளணி தொழில் தரம் அடிப்படையில்

| | தோழில் தரம் | மொத்தம் | % |
|---|---|---|---|
| சிரேஸ்ட | பொது முகாமையாளர் | | |
| | மேலதிக பொது முகாமையாளர் | 6 | 0.71% |
| | பிரதிப் பொது முகாமையாளர் | 5 | 0.59% |
| | உதவிப் பொது முகாமையாளர் | 38 | 4.49% |
| | **மொத்தம்** | **49** | **5.79%** |
| மூன்றாம் நிலை | கனிஸ்ட முகாமையாளர் | 61 | 7.20% |
| | முகாமைத்துவ உதவியாளர் 4 | 180 | 21.25% |
| | **மொத்தம்** | **241** | **28.45%** |
| இரண்டாம் நிலை | முகாமைத்துவ உதவியாளர் 2-2 | 6 | 0.71% |
| | முகாமைத்துவ உதவியாளர் 1-2 | 427 | 50.41% |
| | **மொத்தம்** | **433** | **51.12%** |
| ஆரம்ப நிலை | ஆரம்ப மட்டம் | 124 | 14.64% |
| | **மொத்தம்** | **124** | **14.64%** |
| **மொத்தம்** | | **847** | **100%** |

## ஆளணி பாலினம் அடிப்படையில்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் ஆளணி ஆண் மற்றும் பெண் வீதம் 2025 ஆம் இறுதியில் 48.87:51.12 ஆக காணப்பட்டது.

| ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|
| 414 | 433 | 847 |
| 48.87 % | 51.12% | 100% |

## ஆளணி வயதின் அடிப்படையில்

| | |
|---|---|
| பிரதான அலுவலகம் | 468 |
| கிளை அலுவலகங்கள் | 379 |
| மொத்தம் | 847 |

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் ஊழியர்கள் 847 பேரில் 468 பேர் பிரதான அலுவலகத்திலும் 379 பேர் கிளை அலுவலகங்களிலும் பணியாற்றுகின்றனர்.

## ஊழியர்கள் சேவையில் ஈடுபடல்

| விபரம் | நிறைவேற்றுத் தரம் | நிறைவேற்றுத் தரம் அல்லாத | மொத்தம் |
|---|---|---|---|
| ஓய்வுபெறகை | 10 | 16 | 26 |

### ஊழியர் இடமாற்றங்கள்

சபையின் இடமாற்றக் கொள்கைக்கு அமைய சபையில் ஐந்து வருடங்களுக்கு மேல் ஒரே பிரிவில் கடமையாற்றிய ஊழியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டனர்.

### சம்பளம் மற்றும் நலன்கள்

சபையின் அனைத்து ஊழியர்களும் நிரந்தரப் பதவி வகிக்கின்றனர். நியதிச்சட்ட நிறுவனமொன்றில் ஊழியர்கள் என்ற ரீதியில் அவர்கள் தமது அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக பல நலன்களை அனுபவிக்கின்றனர்.

| | 2025 ரூ. '000 | 2024 ரூ. '000 | வித்தியாசம் % |
|---|---|---|---|
| சம்பளம் | 548,670 | 533,429 | (2.86) |
| வாழ்க்கைச் செலவுப்படி | 183,295 | 163,397 | (12.18) |
| உணவுக் கொடுப்பனவு | 11,829 | 11,941 | 0.93 |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | 29,644 | 38,885 | 23.77 |
| லீவுக்கான சம்பளம் | 11,811 | 16,260 | 27.36 |
| **மொத்தம்** | **785,249** | **763,912** | **37.02** |

## நலன்கள்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் ஊழியர்கள் வழங்கப்படும் பல சலுகைகளுக்கு தகுதியுடையவர்கள். தரம் அடிப்படையிலான ஊக்கத்தொகை, மருத்துவக் கட்டணத் திருப்பிச் செலுத்தும் வசதிகள், வருடாந்த போனஸ் மற்றும் பல்வேறு கடன்கள், உயர் கல்வித் தகுதிகளுக்கான சம்பள உயர்வுப் நலன்கள் மற்றும் நிரந்தர ஊனம் அல்லது ஊழியரின் இறப்புக்கான இழப்பீடு ஆகியவை உள்ளடங்கும்.

| | 2025 ரூ. '000 | 2024 ரூ. '000 | வித்.ம % |
|---|---|---|---|
| ஊக்குவிப்புக் கொடுப்பனவு | 131,853 | 141,870 | 7.06 |
| சீருடைகள் மற்றும் தையல் செலவுகள் | 28,904 | 24,616 | (17.42) |
| விசேட ஓய்வூதிய போனஸ் கொடுப்பனவு | 1,400 | 1,600 | 12.50 |
| தேனீர் மற்றும் ஏனைய ஆளணி நலன்புரிச் செலவினங்கள் | 14,656 | 16,569 | 11.55 |
| லீவு தினங்களுக்கான கொடுப்பனவு | 19,502 | 19,489 | (0.07) |
| வருடாந்த போனஸ் கொடுப்பனவு | 85,470 | 78,113 | (9.42) |
| மருத்துவச் செலவினங்களை மீளளித்தல் | 127,434 | 116,584 | (9.31) |
| வீட்டுக் கடனுக்கான வட்டி | 5,794 | 7,015 | 17.41 |
| வட்டிச் செலவினம் | 39,502 | 39,439 | (0.16) |
| தற்போதைய சேவைச் செலவு | 19,364 | 14,511 | (33.44) |
| ஊ.சே.நி | 111,573 | 104,594 | (6.67) |
| ஊ.ந.பொ.நி. | 22,268 | 20,941 | (6.34) |
| தோலைப்பேசிப் பட்டியல்களை மீளளிப்புச் செய்தல் | 3,780 | 3,690 | (2.44) |
| **மொத்தம்** | **611,500** | **589,031** | **(3.81)** |

## ஊக்குவிப்புக் கொடுப்பனவு

அடிப்படைச் சம்பளத்தின் அடிப்படையில் ஊக்குவிப்புக் கொடுப்பனவுக்கு மாதாந்த அடிப்படையில் வழங்கப்படும் வருகைத்தரு மற்றும் செயலாற்றுகை ஊக்குவிப்புக் கொடுப்பனவு உள்ளடக்கப்பட்டுள்ளது.

## மருத்துவ வசதிகள்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் ஊழியர்களின் மருத்துவ வசதிகளுக்கு பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்படுகின்றன.

- ஒரு ஊழியருக்கு ரூ. 75,000.00 வரை வருடாந்த வெளி நோயாளர் வைத்திய சேவைகளுக்கான நிதி மீளளிப்பு
- ஒரு ஊழியருக்கு வருடாந்தம் ரூ. 125,000.00 வரையில் வைத்தியசாலை அனுமதிக்கான செலவுகள் மீளளிப்பு.

## ஊழியரின் நிரந்தர அங்கவீனம் அல்லது மரணத்திற்கான நட்டஈடு

| சம்பவம் | தரம்/ பதவி | நட்டஈட்டின் அளவு |
|---|---|---|
| ஊழியரின் மரணம் | தவிசாளர் / செயற்பாட்டுப் பணிப்பாளர் | 1,500,000.00 |
| | உயர் முகாமைத்துவம் (2-1), (1-3) மற்றும் (1-1) | 1,450,000.00 |
| | நடுத்தர முகாமைத்துவம் (1-3) | 1,350,000.00 |
| | கனிட்ட முகாமைத்துவம் (1-1) | 1,250,000.00 |
| | முகாமைத்துவ உதவியாளர் (4) | 1,125,000.00 |
| | முகாமைத்துவ உதவியாளர் (2-2), (1-2) | 1,000,000.00 |
| | ஆரம்ப மட்டம் (1), (2), (3) | 875,000.00 |

| சம்பவம் | தரம்/ பதவி | நட்டஈட்டின் அளவு |
|---|---|---|
| நிரந்தர அங்கவீனம் | தவிசாளர் / செயற்பாட்டுப் பணிப்பாளர் | 1,750,000.00 |
| | உயர் முகாமைத்துவம் (2-1), (1-3) மற்றும் (1-1) | 1,700,000.00 |
| | நடுத்தர முகாமைத்துவம் (1-3) | 1,650,000.00 |
| | கனிட்ட முகாமைத்துவம் (1-1) | 1,500,000.00 |
| | முகாமைத்துவ உதவியாளர் (4) | 1,350,000.00 |
| | முகாமைத்துவ உதவியாளர் (2-2), (1-2) | 1,200,000.00 |
| | ஆரம்ப மட்டம் (1), (2), (3) | 1,050,000.00 |

## வருடாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு

டிசம்பர் மாதத்தில் வழங்கப்படும் வருடாந்த போனஸ் கொடுப்பனவு, வாழ்க்கைச் செலவுப் படி உள்ளடங்களாக இரண்டு மாதகால அடிப்படைச் சம்பளத்திற்கு சமனாக வழங்கப்படும்.

www.etfb.lk

143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடைமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

### கடன்

### வாகனக் கடன்

எந்தவொரு ஊழியருக்கும் துவிச்சக்கர வண்டிக் கடன், வாகனக் கடன், முச்சக்கர வண்டிக் கடன் மற்றும் மோட்டார் சைக்கிள் கடன் ஆகியவற்றில் ஒரு கடனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

| | | |
|---|---|---|
| மோட்டார் வாகனம் | கடன் தொகை | ரூ. 3,000,000.00 |
| | வட்டி | 15 வருடங்கள் |
| | கடன் தொகை | வருடாந்தம் 4.2% |
| முச்சக்கர வண்டி | கடன் தொகை | ரூ. 1,250,000.00 |
| | மீளமைக்கப்பட்ட காலப் பகுதி | 15 வருடங்கள் |
| | வட்டி | வருடாந்தம் 4.2% |
| மோட்டார் சைக்கிள் | கடன் தொகை | ரூ. 500,000.00 |
| | மீளமைக்கப்பட்ட காலப் பகுதி | 10 வருடங்கள் |
| | வட்டி | வருடாந்தம் 4.2% |
| துவிச்சக்கர வண்டி | கடன் தொகை | ரூ. 25,000.00 |
| | மீளமைக்கப்பட்ட காலப் பகுதி | 36 தவணைகள் |
| | வட்டி | வருடாந்தம் 4.2% |

### விசேட கடன்

| | |
|---|---|
| கடன் தொகை | ரூ.100,000.00 |
| மீளமைக்கப்பட்ட காலப் பகுதி | தவணைகள் 60 |
| வட்டி | வருடாந்த 4.2% |

### விசேட இடர் கடன்

| | |
|---|---|
| கடன் தொகை | 12 மாத சம்பளம் |
| மீளமைக்கப்பட்ட காலப் பகுதி | 120 தவணைகள் |
| வட்டி | வருடாந்தம் 4.2% |

### வீட்டுக் கடன்

| | |
|---|---|
| கடன் தொகை | ரூ. 3,000,000.00 |
| மீளமைக்கப்பட்ட காலப் பகுதி | 25 வருடங்ள் அல்லது 60 வயது பூர்த்தியடைதல் |
| வட்டி | 1 ஆவது ரூ. 2,000,000 வருடத்திற்கு 4.2% மீதி ரூ. 1,000,000 வருடத்திற்கு 7.0% |

## தகவல் தொழில்நுட்ப பிரிவு

2025 ஆம் ஆண்டில், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் தகவல் தொழில்நுட்பப் பிரிவானது நிறுவனத் திறன், நிதிப் பொறுப்புக்கூறல் மற்றும் டிஜிட்டல் மாற்றம் போன்ற பணிகளில் ஒரு முன்னணி மற்றும் வினைத்திறன்மிக்க பங்களிப்பாளராகத் தனது பங்கினை மேலும் வலுப்படுத்தியது. அமைப்பின் நம்பகத்தன்மையை மேம்படுத்தல், ஆளுமைக் கட்டமைப்புகளை வலுப்படுத்தல், உட்கட்டமைப்பின் மீளெழும் திறனை அதிகரித்தல் மற்றும் தேசியக் கொள்கைகளுக்கு இணங்க மூலோபாய டிஜிட்டல் முயற்சிகளை முன்னோக்கிக் கொண்டு செல்லல் ஆகியவற்றின் மீது தகவல் தொழில்நுட்பப் பிரிவு தனது அவதானத்தைச் செலுத்தியது.

### விசேட சாதனைகளும் செயற்பாட்டு மேம்பாடுகளும்

**"சேஜ் எக்பெக்" (Sage Accpac) கணக்கியல் கட்டமைப்பு - பலவருடப் பராமரிப்பு ஒப்பந்தம்**

எவ்விதத் தடையுமின்றி நிதிச் செயல்பாடுகளை மேற்கொள்வதையும் சட்டரீதியான அறிக்கைகளைக் காலப்போக்கில் சமர்ப்பிப்பதையும் உறுதிசெய்வதற்காக, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையானது 'சேஜ் எக்பெக்' (Sage Accpac) கணக்கியல் கட்டமைப்புக்காக மூன்றாண்டு கால வருடாந்த பராமரிப்பு ஒப்பந்தமொன்றில் கையெழுத்திட்டது. இந்த முயற்சியானது கணக்கியல் கட்டமைப்பின் ஸ்திரத்தன்மையை மேம்படுத்தி, சேவைத் தடங்கல்களைக் குறைத்து, செலவினங்களை முன்கூட்டியே கணிப்பதை உறுதி செய்கின்றது. அத்துடன், விற்பனையாளர் தரப்பின் பொறுப்புக்கூறலையும் வலுப்படுத்துகின்றது.

**ஐ.பி.எம் (IBM) கட்டமைப்பு ஆதரவு - தொடர்ச்சி மற்றும் அபாயக் குறைப்பு**

இப்பிரிவானது மரபுவழிக் கட்டமைப்புகளுடன் தொடர்புடைய அபாயங்களைக் குறைப்பதற்கான ஆதரவு வழிமுறைகளை வலுப்படுத்தும் அதேவேளையில், செயல்பாட்டுத் தொடர்ச்சியை உறுதிசெய்து, ஐ.பி.எம் (IBM) கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்ட முதன்மை உற்பத்திச் சூழலைத் தொடர்ந்து பேணி வந்தது.

**இலங்கை அரசாங்க மேகக் கணிமை கட்டமைப்பிற்கு (LGC) மாறுதல்**

'சேஜ் எக்பெக்' (Sage Accpac) கணக்கியல் கட்டமைப்பு, இலத்திரனியல் ஈ-சேவை தளம் மற்றும் புதிய பிரதான கட்டமைப்பு உள்ளிட்ட முக்கிய கணினி அமைப்புகள், ஸ்ரீலங்கா டெலிகொம் தரவு மையங்களில் ஹோஸ்ட் செய்யப்பட்டுள்ள இலங்கை அரசாங்க மேகக் கணிமை கட்டமைப்புச் (LGC) சூழலுக்கு வெற்றிகரமாக மாற்றப்பட்டன.

## தகவல் தொழில்நுட்ப நிர்வாகமும் மூலோபாய முயற்சிகளும்

**டிஜிட்டல் உட்கட்டமைப்பு ஆலோசனைக் குழுவை (EDIAC) நிறுவுதல்**

உட்கட்டமைப்பு நவீனமயமாக்கல், சைபர் பாதுகாப்பு மற்றும் ஒழுங்குமுறை இணக்கம் ஆகியவற்றில் மூலோபாய மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டல்களை வழங்குவதற்காக, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் டிஜிட்டல் உட்கட்டமைப்பு ஆலோசனைக் குழு (EDIAC) நிறுவப்பட்டது. இக்குழு தேசியத் தரநிலைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுடன் ஒத்துப்போகும் பணிக்குத் துணையாக அமையும் அதேவேளை, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் இலங்கை கணினி அவசரப் பதிலளிப்பு குழு (Sri Lanka CERT) ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கொண்டுள்ளது.

**பிரதான கட்டமைப்பை அபிவிருத்தி செய்தல் - முன்னேற்றமும் எதிர்கால வழிமுறைகளும்**

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் புதிய பிரதான கட்டமைப்பு, அதன் முன்கூட்டிய அமுலாக்கல் கட்டத்தை எட்டியுள்ளது. செயற்பாட்டு மற்றும் நடைமுறை ரீதியான இடைவெளிகள் கண்டறியப்பட்டு, அவை தற்போது நிவர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கிய நடவடிக்கைகளில் செயற்பாட்டு ஏற்புத் சோதனை (Operational Acceptance Testing - OAT), இணைந்த செயல்பாட்டை நடைமுறைப்படுத்தல், மாற்றக் கோரிக்கைகளை அமுல்படுத்தல் மற்றும் பிற கட்டமைப்புகளுடன் ஒருங்கிணைத்தல் ஆகிய பணிகள் உள்ளடங்கும்.

**கருத்திட்ட நிர்வாகமும் துறைசார் மேற்பார்வையும்**

பணிப்பாய்வு சரிபார்ப்பு பங்குதாரர்களின் ஒருங்கிணைப்பு, சோதனையிடல், சிக்கல்களைக் கண்காணித்தல் மற்றும் செயல்திறனை மேற்பார்வையிடுதல் உள்ளிட்ட அன்றாட கருத்திட்ட நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கும், அவற்றின் பயனுள்ள விநியோகம் மற்றும் ஆளுமையை உறுதி செய்வதற்கும் அர்ப்பணிக்கப்பட்ட விசேட திட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

## சைபர் பாதுகாப்பும் இணக்கப்பாடும்

தேசிய சைபர் பாதுகாப்புக் கொள்கைக்கு இணங்கச் செயல்பட்டு, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையானது தனது சைபர் பாதுகாப்பு அமைப்பை மேலும் வலுப்படுத்தியது. உள்ளக ஆற்றல்களை மேம்படுத்துவதற்கும், தேசிய சைபர் பாதுகாப்புத் தரநிலைகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்கும் தகவல் பாதுகாப்பு அதிகாரிகள் (ISO) மற்றும் உதவித் தகவல் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு (AISO) விசேட பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

## திறன் விருத்தியும் பணியாளர் அபிவிருத்தியும்

தகவல் தொழில்நுட்பப் பணியாளர்களின் தொழில்நுட்ப மற்றும் செயல்பாட்டுத் திறன்கள் மற்றும் சைபர் பாதுகாப்புத் திறன்களை மேம்படுத்துவதற்காக, இப்பிரிவினால் தொடர்ச்சியான பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

## எதிர்கால நோக்கு

எதிர்காலத்தை நோக்குகையில், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிச் சபையானது தனது பிரதான கட்டமைப்பின் முழுமையான செயல்பாட்டின் ஊடாக தனது டிஜிட்டல் நிகழ்ச்சி நிரலைத் தொடர்ந்தும் முன்னெடுக்கும். சபை, வர்த்தக நிர்வாகத்திற்கான இலத்திரனியல் தரவுப் பரிமாற்ற (EDIAC) பரிந்துரைகளின் வழிகாட்டலின் கீழ் செயல்பட்டு, மையப்படுத்தப்பட்ட அச்சுறுத்தல் கண்காணிப்பு, சம்பவப் பதில் திறன்கள் மற்றும் இறுதிப்புள்ளி கண்டறிதல் மற்றும் பதில் (Endpoint Detection and Response - EDR) தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளுதல், தகவல் தொழில்நுட்ப சேவை முகாமை (ITSM) கட்டமைப்பைப் பின்பற்றுதல் மற்றும் தற்போதுள்ள உள்கட்டமைப்பை நவீனமயமாக்குதல் போன்ற பணிகளை மேம்படுத்துவதற்காக, தேசிய சைபர் பாதுகாப்பு செயல்பாட்டு மையத்துடன் (NCSOC) தனது கட்டமைப்புகளை இணைப்பதற்கான திட்டங்களை வகுத்து வருகின்றது.



143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடைமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

# நிதிப் பிரிவு

## பொதுவான பகுப்பாய்வு

வலுவான நிதி நிர்வாகம், விவேகமான நிதி முகாமை மற்றும் சட்டரீதியான மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகளைத் தீவிரமாகக் கடைப்பிடித்தல் ஆகியவற்றின் மூலம் உறுப்பினர்களின் நிதியைப் பாதுகாக்கும் பொறுப்பு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் நிதிப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. துல்லியமான நிதி அறிக்கை தயாரிப்பு, பயனுள்ள காசுப் பாய்ச்சல் முகாமை மற்றும் அனைத்து நிதிப் பொறுப்புகளையும் உரிய காலத்தில் தீர்ப்பதை உறுதி செய்வதன் மூலம் சபைக்கு ஆதரவளிப்பதில் நிதிப் பிரிவு முக்கிய பங்கையாற்றுகின்றது.
நிறுவனக் கட்டமைப்பு

நிதிப் பிரிவானது நான்கு விசேட செயற்பாட்டுப் பிரிவுகளின் ஊடாக இயங்கி வருவதுடன், அவை ஒவ்வொன்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் நிதிப் பொறுப்புகளைப் பயனுள்ள முறையில் நிறைவேற்றுவதற்குப் பங்களிக்கின்றன:

- வருமானப் பிரிவு
- கொடுப்பனவுப் பிரிவு
- பொதுப் பேரேட்டுப் பிரிவு
- இணக்கப்பாடு மற்றும் நிறுவன அறிக்கை தயாரிப்புப் பிரிவு

இப்பிரிவுகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயலாற்றுவதன் மூலம், சபையின் நிதிச் செயற்பாடுகளின் தொடர்ச்சி, வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை பேணப்படுவதை உறுதி செய்கின்றன.

## செயற்பாட்டுச் செயல்திறன்

பணியாளர் பற்றாக்குறையினால் ஏற்பட்ட செயற்பாட்டுச் சவால்களுக்கு மத்தியிலும், மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் போது நிதிப் பிரிவு தனது அடிப்படைப் பொறுப்புகளை வெற்றிகரமாகத் தொடர்ந்து நிறைவேற்றியது. அனைத்துப் பணிகளும் நிதி விதிமுறைகள், இலங்கை நிதி அறிக்கை தரநிலைகள் / இலங்கை கணக்கியல் தரநிலைகள் (SLFRS/LKAS) மற்றும் தொடர்புடைய அரசாங்கச் சுற்றறிக்கைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டதுடன், இதன் மூலம் பொறுப்புக்கூறல் மற்றும் நிதி ஒழுக்கத்தின் உயர் தரநிலைகள் பேணப்பட்டன.

## நிதிப் பிரிவின் பிரதான பணிகள்

### நிதிக் கணக்குகளைத் தயாரித்தல்

சட்டரீதியான மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகளுக்கு இணங்க அனைத்து நிதிப் பரிவர்த்தனைகளும் துல்லியமாகப் பதிவு செய்யப்பட்டு அறிக்கையிடப்படுவதை உறுதிசெய்து, மாதாந்த மற்றும் வருடாந்த நிதிச் கணக்குகளைத் தயாரிக்கும் பொறுப்பை நிதிப் பிரிவு வகிக்கின்றது.

### வருடாந்த வரவுசெலவுத் திட்ட முகாமை

நிதி வளங்களை உகந்த முறையிலும் திறமையாகவும் ஒதுக்குவதை உறுதி செய்வதற்காக, வருமானம் மற்றும் செலவினங்களை முன்கூட்டியே கணித்தல் உட்பட வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரித்தல், கண்காணித்தல் மற்றும் நிர்வகித்தல் ஆகிய பணிகளை நிதிப் பிரிவு பொறுப்பேற்றுள்ளது.

### கொடுப்பனவு முகாமை

நிலவும் நிதி விதிமுறைகளுக்கு முழுமையாக இணங்குவதை உறுதி செய்யும் அதேவேளையில், அரசாங்க வரிகளைச் செலுத்துதல் உட்பட பணியாளர்கள் மற்றும் வெளிப்புறப் பங்குதாரர்களுக்கான கொடுப்பனவுகளை நிர்வகிப்பதும் செயல்படுத்துவதும் இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

## அரசாங்க கணக்காய்வை ஒருங்கிணைத்தல்

கணக்காய்வுத் தேவைகள் மற்றும் பரிந்துரைகளுக்கு இணங்குவதை உறுதிசெய்து, முறையான மற்றும் துல்லியமான நிதித் தகவல்களை வழங்குவதன் மூலம் அரசாங்கக் கணக்காய்வுப் பணிகளை எளிதாக்குவதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் நிதிப் பிரிவு பங்களிப்புச் செய்கின்றது.

## நிறுவனத் திட்டத்தை தயாரிப்பிற்கான பங்களிப்பு

நிதிப் பிரிவு, நிறுவனத்தின் மூலோபாய குறிக்கோள் மற்றும் நீண்டகால இலக்குகளுக்கு ஆதரவளிக்கும் நிதி ரீதியான நுண்ணறிவுகள் மற்றும் முன்கணிப்புகளை வழங்குவதன் மூலம் நிறுவனத் திட்டத்தைத் தயாரிப்பதில் நிதிப் பிரிவு பங்களிக்கின்றது.

## முகாமைத்துவத் தகவல் அறிக்கையை தயாரித்தல்

நிதிச் செயல்திறன் குறித்த சரியான நேரத்திலான புரிதலை வழங்குவதற்கும், சிரேஷ்ட முகாமைத்துவத்தினர் தகவலறிந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்கு ஆதரவளிப்பதற்கும் உகந்த விரிவான முகாமைத்துவத் தகவல் அறிக்கைகளை நிதிப் பிரிவு தயாரிக்கின்றது.

## சாதனைகளும் அங்கீகாரங்களும்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் வருடாந்த அறிக்கை, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின்

(CA Sri Lanka) அரசாங்கத் துறைப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை விருதுப் போட்டிக்காகச் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த விருது வழங்கும் விழா 2026 பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடைபெற்றது.

அசரங்கத் துறைச் சார்ந்த 260 நிறுவனங்கள் பங்கேற்ற மிக உயர்ந்த போட்டிச் சூழலுக்கு மத்தியில், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையானது தொடர்ச்சியாக ஏழாவது ஆண்டாகவும் விசேட அங்கீகாரத்தைப் பெற்று, பின்வரும் விருதுகளையும் பாராட்டுக்களையும் வென்றெடுத்தது:

- ஒட்டுமொத்த வெற்றியாளர் – தங்க விருது
- நியதிச்சட்ட நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் அதிகாரசபைகள் பிரிவின் கீழ் – தங்க விருது

இவ்விருது விழாவில் பங்கேற்ற நிறுவனங்கள் அமைச்சுகள், திணைக்களங்கள், மாகாண சபைகள், பல்கலைக்கழகங்கள், மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள், வெளிநாட்டு நிதி உதவி பெற்ற திட்டங்கள் மற்றும் வர்த்தக நோக்கற்ற நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் நிதியங்கள் உள்ளிட்ட அரசாங்கத்துறையின் பரந்தளவிலான பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருந்தன.

வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், சமூகப் பொறுப்பு, நிறுவன நிர்வாகம், நிறுவன அறிக்கை தயாரிப்பு மற்றும் நிதி வெளிப்படுத்தல்கள் ஆகிய துறைகளில் மிக உயர்ந்த தரநிலைகளைப் பேணுவதற்காக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை கொண்டுள்ள தொடர்ச்சியான அர்ப்பணிப்பு இவ்விருதுகளின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுப் பாராட்டப்பட்டது.









# சட்டப் பிரிவு

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் சட்டப் பிரிவானது, அதன் சட்டரீதியான பணிகளுக்கான ஆலோசனை மற்றும் பிரதிநிதித்துவச் சேவைகளை வழங்குகின்றது. பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்) ஊடாக நிர்வகிக்கப்படும் சட்டப் பிரிவானது, சபையின் தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரியின் நேரடி மேற்பார்வையின் கீழ் இயங்குகின்றது. ஆலோசனைச் சேவைகள் மற்றும் செயற்பாட்டு ரீதியான சட்ட வெளியீடுகள் ஆகிய இரு பணிகளையும் பயனுள்ள முறையில் வழங்குவதை உறுதிசெய்து, தொழில்ரீதியாகத் தகுதிவாய்ந்த சட்ட உத்தியோகத்தர்களைக் கொண்ட பணியாளர் குழுவை சட்டப் பிரிவு உள்ளடக்கியுள்ளது.

சட்டப் பிரிவானது தனது சட்டபூர்வ நிலையைப் பயனுள்ள முறையில் பிரதிபலித்து பாதுகாப்பதை உறுதிசெய்யும் வகையில், சபையின் நீதிமன்ற மற்றும் நியாய சபை நடவடிக்கைகள் தொடர்பாக சபையை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. மேன்முறையீடுகள், எழுத்தாணை மனுக்கள், சத்தியக்கடதாசிகள் மற்றும் ஏனைய சட்ட ஆவணங்களைத் தயாரித்தல், அத்துடன் வழக்குத் தொடரும் உத்திகளை ஒருங்கிணைத்தல் ஆகிய பணிகள் இதில் அடங்கும். இது தொடர்பாக, நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் நிலைப்பாடு, கௌரவ நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்கள் முன்னிலையில் தொடர்ச்சியாகவும் தொழில்முறை ரீதியாகவும் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக, தேவையான அனைத்து சந்தர்ப்பங்களிலும் சட்டப் பிரிவானது சட்டமா அதிபர் திணைக்களத்துடன் இணைந்து செயற்படுகின்றது.

சபையின் சட்டரீதியான கட்டளைகளை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பொருட்டு, பங்களிப்புத் தொகையைச் செலுத்தத் தவறும் தொழில் வழங்குநர்களுக்கு எதிராகச்



143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

சட்டத்தை அமல்படுத்தல் மற்றும் பணத்தை மீட்டெடுக்கும் நடவடிக்கைகளில் சட்டப் பிரிவு தீர்க்கமான பக்கொன்றை ஆற்றுகின்றது. இத்தகைய நடைமுறைகள் 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் விதிகளுக்கு இணங்க அமைந்திருப்பதுடன், அதன் 28 ஆம் பிரிவும் பொருத்தமான சந்தர்ப்பங்களில் இதில் உள்ளடக்கப்படும். செயல்திறனை அதிகரிக்கும் நோக்கில், பரவலாக்கப்பட்ட பிராந்திய அலுவலகங்களின் ஊடாக பங்களிப்புத் தொகையை மீட்டெடுக்கும் நடவடிக்கைகள் நிர்வகிக்கப்படுவதுடன், சட்டரீதியான நடைமுறைகளைக் கண்காணிப்பதற்கும், வழக்கு நடவடிக்கைகளின் ஒருமைப்பாடு மற்றும் சரியான நேரத்திலான முன்னேற்றத்தை உறுதி செய்வதற்கும் மத்திய சட்டப் பிரிவோடு அந்தந்த சட்ட உத்தியோகத்தர்களால் தேவையான ஒருங்கிணைப்பு பேணப்படும்.

ஒப்பந்தங்கள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் உட்பட பணிப்பாளர் சபையின் செயற்பாடுகளுக்கு அத்தியாவசியமான சட்ட ஆவணங்கள், சட்டரீதியாகப் பொருத்தமானவையாக இருப்பதையும் நிறுவன இலக்குகளுடன் ஒத்துப்போவதையும் உறுதிசெய்து, அவற்றை வரைதல் மற்றும் மீளாய்வு செய்யும் பணி சட்டப் பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், இது உள்ளக மற்றும் வெளிவாரி ஆகிய இரு தரப்பினருக்கும் தொடர்ச்சியான வழிகாட்டலை வழங்குகின்றது. சட்ட விழிப்புணர்வு திட்டங்களை நடத்துதல் மற்றும் இணக்கப்பாட்டு வழிகாட்டல்களை வழங்குவதன் ஊடாக, சட்டப் பிரிவானது சபையின் நிறுவனத் திறனை மேம்படுத்துவதுடன், சட்டரீதியான பொறுப்புகளைக் கடைப்பிடிப்பதை ஊக்குவித்து, நடைமுறை ரீதியான பலவீனங்களையும் குறைக்கின்றது. மேலும், இதன் மூலம் நிறுவனத்தின் ஒட்டுமொத்த செயல்திறனும் வலுப்பெறுகின்றது.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் பயனுள்ள செயற்பாட்டிற்குச் சட்டப் பிரிவு ஒரு பிரதான பணியை ஆற்றுகின்றது. சட்ட ஆலோசனை, பிரதிநிதித்துவப்படுத்தல், அமுலாக்க ஆதரவு, ஆவணமாக்கல் மற்றும் சட்ட அபிவிருத்திக்கான அதன் விரிவான பங்களிப்பின் ஊடாக, உறுப்பினர்களின் உரிமைகளைப் பாதுகாத்து, சட்டரீதியான கடப்பாடுகளுடன் தொழில் வழங்குநரின் இணக்கப்பாட்டை ஊக்குவிப்பதன் மூலம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையானது ஒரு வலுவான சட்டக் கட்டமைப்பிற்குள் இயங்குவதை சட்டப் பிரிவு உறுதி செய்கின்றது.

# உள்ளக கணக்காய்வுப் பிரிவு

உள்ளக கணக்காய்வு என்பது முகாமைத்துவத்திற்கு வழங்கப்படும் ஒரு சேவையாக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிச் சபையின் செயல்பாடுகளை முறைப்படுத்துவதற்காக நிலவுகின்ற சுயாதீனமான, பக்கச்சார்பற்ற, புறவயமாக சான்றளிக்கும் மற்றும் ஆலோசனை வழங்கும் ஒரு செயற்பாட்டுச் செயன்முறையாகும். சபையின் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக முறையான மற்றும் ஒழுக்கமான அணுகுமுறையின் ஊடாக இடர் முகாமைத்துவம், கட்டுப்பாடு மற்றும் நிர்வாகச் செயல்முறைகளின் பயனுள்ளத்தன்மையை மதிப்பீடு செய்வதும் மேம்படுத்துவதும் இதன் அடிப்படைப் பணியாகும். உறுப்பினர்களின் பங்களிப்புத் தொகையைச் சரியாகச் சேகரித்தல், நலன் கொடுப்பனவுகளை விரைவுபடுத்தல், சொத்துக்களைப் பாதுகாத்தல் மற்றும் முதலீட்டுச் செயல்முறையின் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்தல் ஆகியவற்றின் மீது இங்கு விசேட அவதானம் செலுத்தப்படுகின்றது.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் உள்ளக கட்டுப்பாட்டுக் கட்டமைப்பின் வலுவான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் தொடர்ச்சியான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன்போது, நிதி அறிக்கை தயாரிப்பின் துல்லியம் மற்றும் சொத்துக்களைப் பாதுகாத்தல், சட்டரீதியான ஏற்பாடுகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்குதல் மற்றும் மோசடிகள், ஊழல்களைத் தடுப்பதற்கான கட்டுப்பாட்டு வழிமுறைகளின் செயல்திறன் ஆகியன விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றன. விசேடமாக, உறுப்பினர்களின் நிதியைப் பாதுகாத்தல் மற்றும் அதிகபட்ச நன்மைகளை வழங்குவதற்காகச் செயற்படுத்தப்படும் முதலீட்டுக் கொள்கைகள், சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்றனவா என்பது இங்கு பிரதானமாக அவதானிக்கப்படுகின்றது.

உள்ளக கணக்காய்வுப் பிரிவானது நேரடியாகக் கணக்காய்வுக் குழுவிற்குப் பொறுப்புக் கூறக் கடமைப்பட்டுள்ளதுடன், அதன் சுயாதீனத்தன்மையைப் பாதுகாப்பதற்காக நிர்வாக ரீதியாகத் தவிசாளர் / பொது முகாமையாளருக்கு அறிக்கையிடுகின்றது. பிரிவின் தலைவராகச் செயல்படும் பிரதிப் பொது முகாமையாளர் (உள்ளக கணக்காய்வு) அவர்களின் கீழ் இயங்கும் இப்பிரிவானது, அந்தந்த வருடாந்த கணக்காய்வுப் பணிகளை ஒரு திட்டத்திற்கு அமையத் தயாரித்து, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் அனைத்துப் பிரிவுகளையும் பிராந்திய அலுவலகங்களையும் உள்ளடக்கும் வகையில் பரிசோதனைகளை நடாத்தி, அதன் மூலம் கண்டறியப்படும் பலவீனங்களைத் தவிர்த்துக் கொள்வதற்காகத் தேவையான பரிந்துரைகளை முகாமைத்துவத்திற்குச் சமர்ப்பிக்கின்றது.

# பணிப்பாளர்கள் சபை

2025 டிசம்பர் 31ஆம் திகதியில்



**திரு. சோமசிறி ஏகநாயக்க**
தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அரச துறையில் மூலோபாய திட்டமிடல், கொள்கை செயற்படுத்தல் மற்றும் தேசிய அபிவிருத்தி முயற்சிகளில் இரண்டு தசாப்தங்களுக்கும் மேலான அனுபவமுள்ள திரு. சோமசிறி ஏகநாயக்க மிகவும் திறமையான தொழிற்துறை நிபுணர் ஆவார். தற்போது அவர் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தவிசாளராக உள்ளார். தனது அரச சேவை வாழ்க்கையில், புத்தசாசனம், சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சில் திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் ரன்மினிதென்ன தேசிய டெலிசினிமாப் பூங்காவின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட முக்கிய பதவிகளை வகித்து, பல அரசாங்க நிறுவனங்களில் முக்கிய பங்கை ஆற்றியுள்ளார். கருத்திட்ட மேற்பார்வை மற்றும் முகாமைத்துவத் திணைக்களம், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகம், கலாச்சார மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சு, மாத்தளை மாவட்ட செயலகம் மற்றும் தொழில் திணைக்களம் போன்ற அரசாங்க நிறுவனங்களுக்கும் திரு. சோமசிறி ஏகநாயக்க தனது சேவைகளை வழங்கியுள்ளார்.

திரு. ஏகநாயக்க, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைத்துறையில் இளங்கலைப் பட்டமும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் பிராந்திய அபிவிருத்தி மற்றும் திட்டமிடலில் கலாநிதிப் பட்டமும், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் ஊடகத் துறையில் கலாநிதிப் பட்டமும் பெற்றுள்ளார். அவர் நிர்வாகம், தலைமைத்துவம் மற்றும் கொள்கை வகுத்தல் ஆகிய துறைகளில் சர்வதேச பயிற்சித் திட்டங்களிலும் பங்கேற்றுள்ளார். பௌத்த தலைமைத்துவ குணங்களைக் கொண்ட திரு. ஏகநாயக்க, புத்தாக்க மூலோபாயங்கள் மற்றும் கொள்கை சீர்திருத்தங்கள் மூலம் நிலையான அபிவிருத்தி மற்றும் தேசிய முன்னேற்றத்தை மேம்படுத்தும் தொலைநோக்கைக் கொண்டுள்ளார்.



**திரு. இந்திக பத்தேவிதான**
பணிப்பாளர்
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. இந்திக பத்தேவிதான, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பணியாற்றி, வரி நிர்வாகத் துறையில் 17 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவமுள்ள தொழிற்துறை நிபுணர் ஆவார். தற்போது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் சிரேட்ட பிரதி ஆணையாளராகப் பணியாற்றி வருகின்றார். மதுவரித் திணைக்களத்தில் மதுவரி பரிசோதகராக எட்டு ஆண்டுகள் சேவை மற்றும் களனிப் பல்கலைக்கழகத்தில் பௌதீகவியல் தற்காலிக உதவி விரிவுரையாளராக குறுகிய காலம் பணியாற்றியது உட்பட அவரது தொழில் வாழ்க்கை பல்வேறு பணிகளை உள்ளடக்கியது. வரிக் கொள்கை, வருவாய் நிர்வாகம், சட்ட நடைமுறைகள் மற்றும் அலுவலக முகாமை ஆகியவற்றில் வலுவான அடித்தளத்துடன், வரிவிதிப்பு மற்றும் நிர்வாகத் துறையில் அவரது பங்களிப்பு தன்னிகரற்றது.

திரு. பத்தேவிதான, களனிப் பல்கலைக்கழகத்தில் பௌதீகவியலில் விசேட (சிறப்பு) பட்டத்தையும், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டமாணிப் பட்டத்தையும் (LLB) மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் பட்டப் பின்படிப்பு டிப்ளோமாவையும் பெற்றுள்ளார். அவரது தொழில்முறை மேம்பாட்டின் ஒரு பகுதியாக, இந்தியாவில் வரிக் கொள்கை மற்றும் மலேசியாவில் ஈ - நிர்வாகம் மற்றும் மாற்ற முகாமை குறித்து பயிற்சி பெற்றுள்ளார். சட்ட வழக்குச் சட்டம், நீதிமன்ற நடைமுறைகள் மற்றும் அலுவலக நிர்வாகம் ஆகியவற்றில் உள்நாட்டுப் பயிற்சியையும் பெற்றுள்ளார். வரி இணக்கம், வருமான சேகரிப்பு மற்றும் சட்ட கட்டமைப்புகளில் அவரது நிபுணத்துவம் தேசிய நிதி நிர்வாகத்திற்கு தொடர்ந்து சிறந்த ஒத்துழைப்பை வழங்கி வருகின்றது.

www.etfb.lk

143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்



## திரு. எஸ்.எப்.எச். பெர்னாந்து
பணிப்பாளர்

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. சுசந்த பெர்னாந்து ஒரு புகழ்பெற்ற தொழில்முறை கணக்காளர் ஆவார், மேலும் இலங்கையிலும், இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா போன்ற வெளிநாடுகளிலும் தனியார் மற்றும் பொதுத் துறைகளில் பல சிரேட்ட பதவிகளை வகித்துள்ளார். நன்கு அறியப்பட்ட பட்டியலிடப்பட்ட நிறுவனமான (Bartleet Finance Ltd.) நிறுவன நிர்வாக பணிப்பாளராக இருந்த அவர், பார்ட்லீட் மல்லோரிஸ்டாக் புரோக்கர்ஸ் லிமிடெட், (Bartleet Mallory Stockbrokers Ltd.) பார்ட்லீட் அண்ட் கம்பெனி லிமிடெட் (Bartleet and Company Ltd.) மற்றும் பார்ட்லீட் டிரான்ஸ்கேபிடல் லிமிடெட் (Bartleet Transcapital Ltd.) உள்ளிட்ட பார்ட்லீட் குழுமத்தின் பல துணை நிறுவனங்களின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் பணியாற்றினார். கூட்டுத்தாபனத் துறைக்கு அவர் செய்த பங்களிப்புகளுக்கு மேலதிகமாக, நாட்டின் பல தேசிய நிறுவனங்களிலும் சிரேட்ட பதவிகளை வகித்தார். இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், தேசிய வணிக முகாமைத்துவ நிறுவனம் (NIBM) மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் துணை நிறுவனமான ஜெயா கண்டெய்னர் டெர்மினல்ஸ் லிமிடெட் (Jaya Container Terminals Ltd.) ஆகியவற்றின் தலைவராகவும் பணியாற்றினார். திரு. சுசந்த பெர்னாந்து இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் பணிப்பாளராகவும், சுற்றுலா அமைச்சரின் ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார். அவுஸ்திரேலியாவில் (BDS Corporation) கார்ப்பரேசனின் நிதிக் கட்டுப்பாட்டாளராகவும், ஐக்கிய இராச்சியத்தில் உள்ள இக்ட்ரோஹேட்டிங் (Ictrohating Group of Companies) குழும நிறுவனங்களின் குழு கணக்காளராகவும் பணியாற்றியது அவரது சர்வதேச அனுபவத்தில் அடங்கும். அவர் தேசிய தொழில் ஆலோசனைக் குழுவின் (NLAC) உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார் மற்றும் களுத்துறை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் தலைவராக விளையாட்டுத் துறைக்கு மகத்தான பங்களிப்புகளைச் செய்துள்ளார்.



## திரு. அதுல ஹரிச்சந்திர
பணிப்பாளர்

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. அதுல ஹரிச்சந்திரா, வங்கித் துறையில் நிபுணத்துவம் பெற்ற, 20 ஆண்டுகளுக்கும் மேலான விரிவான தொழில்முறை அனுபவமுள்ள ஒரு புகழ்பெற்ற தொழிற்துறை நிபுணர் ஆவார். நிதிச் சந்தைகள் மற்றும் நிறுவன இடர் முகாமைத்துவம் ஆகிய துறைகளில் வலுவான தலைமைத்துவத்தின் மூலம் அவர் சிறப்பான சேவையை வழங்கியுள்ளார். அவர் தற்போது இலங்கையில் உள்ள ஒரு புகழ்பெற்ற வெளிநாட்டு வங்கியில் சிரேட்ட முகாமையாளராகப் பணியாற்றி வருகின்றார்.

நிதிச் சந்தைகள், திறைசேரி இடர், வர்த்தக இடர் மற்றும் செயல்பாட்டு இடர் முகாமை ஆகிய துறைகளில் வலுவான பின்னணியைக் கொண்ட அனுபவம் வாய்ந்த நிபுணர் ஆவார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் நிதிப் பொருளாதாரத்தில் முதுகலைப் பட்டம் (Masters of Financial Economics - MFE) மற்றும் பேராதனை பல்கலைக்கழகத்தில் இளங்கலை – சிறப்புப் பட்டம் பெற்றுள்ளார. (Bachelor of Arts - Honors). மேலும், திரு. அதுல ஹரிச்சந்திர, நிதிச் சந்தை செயல்பாடுகளில் ACI செயல்பாட்டுச் சான்றிதழ் (ACI Operations Certificate in Financial Market Operations), (பிரான்ஸ்), தயாரிப்புகள் மற்றும் சந்தை இடர்களில் (KESDEE intermediate Certificate in Products & Market Risk) இடைநிலைச் சான்றிதழ் (USA), மற்றும் இலங்கை மத்திய வங்கியிலிருந்து தரவுத்தள முகாமையில் டிப்ளோமா (Diploma in Database Management (CBSL) உள்ளிட்ட பல சர்வதேச தொழில்முறை தகுதிகளைக் கொண்டுள்ளார். பகுப்பாய்வு சிந்தனை மற்றும் சிக்கல் தீர்க்கும் திறன்கள் பற்றிய கூர்மையான புரிதலுடன், திரு. அதுல ஹரிச்சந்திர, தொழில்முறை மற்றும் நெறிமுறைகளின் மிக உயர்ந்த தரங்களைப் பேணி நிறுவன வெற்றியை முன்னெடுப்பதில் உறுதியாக செயற்படுகின்றார்.

# பணிப்பாளர்கள் சபை

## 2025 டிசம்பர் 31ஆம் திகதியில்





### திரு. இந்திக பிரேமரத்ன
பணிப்பாளர்

பொதுத் திறைசேரியின் பிரதிநிதி

திரு. இந்திக பிரேமரத்ன, பேரினப் பொருளாதார திட்டமிடல், பொது முதலீடு மற்றும் வெளிநாட்டு வளங்கள் முகாமை ஆகியவற்றில் விரிவான அனுபவமுள்ள ஒரு சிரேட்ட அரசாங்கத்துறை நிபுணர் ஆவார். அவர் தற்போது பேரினப் பொருளாதார திட்டமிடல் பிரிவு மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் தொழில், வர்த்தகம் மற்றும் முதலீட்டுப் பிரிவின் பணிப்பாளராக பணியாற்றி வருகின்றார். இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக அரசாங்க சேவையில் பணியாற்றும் திரு. பிரேமரத்ன, நிதி அமைச்சு மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தில் முக்கிய பதவிகளை வகித்துள்ளார், அங்கு அவர் சர்வதேச கூட்டாளர்களுடன் அபிவிருத்தி நிதிகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதிலும் கட்டமைப்பதிலும் முன்னணிப் பங்காற்றியுள்ளார். வெளிநாட்டு நிதிகளால் நிதியளிக்கப்பட்ட முக்கிய கருத்திட்டங்களை திரு. பிரேமரத்ன மேற்பார்வையிட்டுள்ளார் மற்றும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கு மூலோபாய மேற்பார்வையை வழங்கியுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் பிளிண்டர்ஸ் பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகத்தில் முதுகலைப் பட்டம் (கொள்கை), களனி பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் முதுகலைப் பட்டம் மற்றும் ஜப்பானின் (IDE Advanced School) அபிவிருத்தி ஆய்வுகளில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளார். அவர் களனி பல்கலைக்கழகத்தில் அறிவியல் இளங்கலை (சிறப்பு) பட்டத்தையும் பெற்றுள்ளார், மேலும் சர்வதேச நாணய நிதியம் (IMF), ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) மற்றும் லீ குவான் யூ பொதுக் கொள்கை கல்லூரி (Lee Kuan Yew School of Public Policy) போன்ற நிறுவனங்களில் கருத்திட்ட முகாமை, நிதிக் கொள்கை மற்றும் பொது நிதி முகாமை ஆகியவற்றில் சிறப்புப் பயிற்சிப் பாடநெறிகளை நிறைவு செய்துள்ளார்.

திரு. பிரேமரத்ன மத்திய கலாச்சார நிதியம் உட்பட பல பணிப்பாளர் சபைகளில் பணியாற்றியுள்ளார். அரசாங்கத் துறையில் இணைவதற்கு முன்னர் அவர் ஒரு பிரபலமான நிறுவனத்தில் முகாமைத்துவ பயிற்சியாளர்/உற்பத்தி நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றினார், மேலும் தனியார் துறையிலும் பணியாற்றி அனுபவத்தைப் பெற்றுள்ளார். அர்ப்பணிப்புள்ள கொள்கைத் திட்டமிடுபவரான திரு. இந்திக பிரேமரத்ன, மூலோபாய பொது முதலீடு மற்றும் நிதி நிர்வாகம் ஆகிய துறைகள் மூலம் இலங்கையின் பொருளாதார மற்றும் அபிவிருத்தித் திட்டமிடலுக்கு தொடர்ந்தும் பங்களிப்புச் செய்து வருகின்றார்.

### திருமதி கே.ஏ.பி. டி சில்வா
பணிப்பாளர்

வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருமதி டி சில்வா, களனி பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் முதுகலைப் பட்டமும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் வணிகத்தில் இளங்கலைப் பட்டமும், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவத்தில் முதுகலை டிப்ளோமாவும் பெற்றுள்ளார். இலங்கை பட்டய நிதி கணக்காளர்கள் (CPFA) தகுதியைப் பெற்றுள்ளார். அவர் தற்போது வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் பிரதம நிதி அதிகாரியாகவும், சீ.டபிள்யு.ஈ. கட்டுமானம் மற்றும் பொறியியல் தனியார் லிமிடெட்டின் தலைவராகவும் பணியாற்றி வருகின்றார். வெளியுறவு அமைச்சு, பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் விவசாயத் திணைக்களத்தில் பிரதம கணக்காளராக பணியாற்றியுள்ளார். திருமதி டி சில்வா, நெல் சந்தைப்படுத்தல் சபையின் பிரதிப் பொது முகாமையாளராகவும் (நிதி) பொது சேவை ஆணைக்குழுவின் நிதி பிரதிச் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

www.etfb.lk

143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்



## திரு. ஜூட் டினால் பீரிஸ்

பணிப்பாளர்

இலங்கை தொழில் வழங்குநர் கூட்டமைப்பின் பிரதிநிதி

திரு. டினால் பீரிஸ் வணிகத் துறையில், குறிப்பாக அலுமினியம், இரும்பு, ஒட்டுப் பலகைகள், கட்டிடப் பொருட்கள், நெசவு மற்றும் ஆடை உற்பத்தி போன்ற பல கைத்தொழில் துறை கம்பனிகளுடன் தொடர்புடைய பல வருட அனுபவமுள்ள ஒரு திறமையான தொழிலதிபர் ஆவார். அவர் ஒரு பொறியியலாளர் மற்றும் இலண்டன் வணிகப் பாடசாலையில் வர்த்தக முகாமைத்துவத்தில் பட்டம் பெற்றவர். அவர் பல பொது மற்றும் தனியார் நிறுவனங்களின் தலைவராகவும் பணிப்பாளராகவும் உள்ளார். திரு. டினால் பீரிஸ் மனித வளங்களில் மிகுந்த ஆர்வம் கொண்டவர் மற்றும் இலங்கை தொழில் வழங்குநர் கூட்டமைப்பின் கவுன்சில் உறுப்பினராகவும் உள்ளார்.



## திரு. சன்ன திசாநாயக்க

பணிப்பாளர்

தொழிற்சங்கப் பிரதிநிதி

திரு. சன்ன திசாநாயக்க, வங்கித் துறையில் பல ஆண்டுகளாகப் பணியாற்றி வரும் ஒரு அனுபவம் வாய்ந்த வங்கி அதிகாரி ஆவார். மேலும் வங்கி ஊழியர்களின் உரிமைகள் மற்றும் நலனுக்காக அர்ப்பணிப்புடன் செயல்படும் தொழிற்சங்கத் தலைவராகவும் அவர் அறியப்படுகின்றார். அவர் தற்போது இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் தலைவராகப் பணியாற்றி வருகின்றார், வங்கித் துறையில் நியாயமான தொழில் நடைமுறைகள் மற்றும் ஊழியர் நலன்களை மேம்படுத்துவதில் முன்னணிப் பங்காற்றுகின்றார். UNI (UNI Global Union) உலகளாவிய ஒன்றியத்தின் கீழ் உள்ள ஒரு அமைப்பான UNI (UNI Sri Lanka License Council) இலங்கை உரிமக் குழுவின் தலைவராகவும் பணியாற்றுகின்றார், மேலும் உலகளாவிய தொழிலாளர் தரநிலைகள் மற்றும் தொழிலாளர்களின் உரிமைகளை நிலைநிறுத்துவதற்கு உறுதிபூண்டுள்ள சர்வதேச தளங்களில் இலங்கை தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றார். திரு. சன்ன திசாநாயக்க தேசிய தொழிலாளர் ஆலோசனைக் குழுவின் (NLAC) உறுப்பினராகவும் உள்ளார். இந்தப் பொறுப்பில், பல்வேறு தொழில்களில் பல்வேறு தொழில் கொள்கைகள் மற்றும் சுமூகமான வேலை நிலைமைகளை அறிமுகப்படுத்த கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் பங்குதாரர்களுடன் இணைந்து பணியாற்றியுள்ளார். வங்கித் துறை மற்றும் தொழில் உறவுகளில் அவரது அனுபவம், இலங்கையில் தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் நியாயமான பணியிட சூழலுக்கான அவரது அயராத அர்ப்பணிப்பு மெச்சத்தக்கது.

# பணிப்பாளர்கள் சபை

2025 டிசம்பர் 31ஆம் திகதியில்



**திரு. கனிஸ்க நிரோஷன்**
பணிப்பாளர்
தொழிற்சங்கப் பிரதிநிதி

திரு. கனிஸ்க நிரோக்ஷன், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வர்த்தக பீடத்தில் வர்த்தக முகாமைத்துவத்தில் இளங்கலை (சிறப்பு) பட்டம் பெற்ற ஒரு தொழில்முறை நிபுணர் ஆவார். தொழிலாளர் உரிமைகள் நலனில் அர்ப்பணிப்புள்ள தலைவராக, தற்போது இலங்கையில் முன்னணிதொழிற்சங்கமான,தொழிலாளர்உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயல்படும் நிறுவனங்களுக்கு இடையேயான ஊழியர் சங்கத்தின் பிரதித் தலைவராக உள்ளார். தொழிலாளர் உரிமைகள் துறையில் அவரது தலைமைத்துவமும் அனுபவமும் தேசிய எல்லைகளைக் கடந்தது. அவர் உலக தொழிற்சங்க கூட்டமைப்பின் உறுப்பினராக உள்ளார். மேலும் அவர் பிராந்திய மற்றும் சர்வதேச மன்றங்களில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார். கடந்த இரண்டு ஆண்டுகளில், சர்வதேச தொழிலாளர் அமைப்பு மற்றும் அனைத்து சீன தொழிற்சங்க கூட்டமைப்பினால் (ACFTU) ஏற்பாடு செய்யப்பட்ட முக்கிய தொழிற்சங்க பேச்சுவார்த்தை மாநாடுகளில் அவர் முனைப்புடன் பங்கேற்றுள்ளார்.



143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

# சிரேஷ்ட முகாமைத்துவம் குழு

## சிரேஷ்ட முகாமைத்துவம்



**திரு. சோமசிறி ஏகநாயக்க**
தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அரச துறையில் மூலோபாய திட்டமிடல், கொள்கை செயற்படுத்தல் மற்றும் தேசிய அபிவிருத்தி முயற்சிகளில் இரண்டு தசாப்தங்களுக்கும் மேலான அனுபவமுள்ள திரு. சோமசிறி ஏகநாயக்க மிகவும் திறமையான தொழிற்துறை நிபுணர் ஆவார். தற்போது அவர் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தவிசாளராக உள்ளார். தனது அரச சேவை வாழ்க்கையில், புத்தசாசனம், சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சில் திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் ரன்மினிதென்ன தேசிய டெலிசினிமாப் பூங்காவின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட முக்கிய பதவிகளை வகித்து, பல அரசாங்க நிறுவனங்களில் முக்கிய பங்கை ஆற்றியுள்ளார். கருத்திட்ட மேற்பார்வை மற்றும் முகாமைத்துவத் திணைக்களம், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகம், கலாச்சார மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சு, மாத்தளை மாவட்ட செயலகம் மற்றும் தொழில் திணைக்களம் போன்ற அரசாங்க நிறுவனங்களுக்கும் திரு. சோமசிறி ஏகநாயக்க தனது சேவைகளை வழங்கியுள்ளார்.

திரு. ஏகநாயக்க, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைத்துறையில் இளங்கலைப் பட்டமும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் பிராந்திய அபிவிருத்தி மற்றும் திட்டமிடலில் கலாநிதிப் பட்டமும், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் ஊடகத் துறையில் கலாநிதிப் பட்டமும் பெற்றுள்ளார். அவர் நிர்வாகம், தலைமைத்துவம் மற்றும் கொள்கை வகுத்தல் ஆகிய துறைகளில் சர்வதேச பயிற்சித் திட்டங்களிலும் பங்கேற்றுள்ளார். பௌத்த தலைமைத்துவ குணங்களைக் கொண்ட திரு. ஏகநாயக்க, புத்தாக்க மூலோபாயங்கள் மற்றும் கொள்கை சீர்திருத்தங்கள் மூலம் நிலையான அபிவிருத்தி மற்றும் தேசிய முன்னேற்றத்தை மேம்படுத்தும் தொலைநோக்கைக் கொண்டுள்ளார்

# பிரதிப் பொது முகாமையாளர்கள்





### கே.எஸ். திரு. வெலிவிட்ட

பிரதிப் பொது முகாமையாளர்
(உள்ளக கணக்காய்வு)
(2025.08.02 ஆம் திகதி ஓய்வுபெற்றுள்ளார்)

திரு. கே.எஸ். வெலிவிட்ட அவர்கள் பிரதிப் பொது முகாமையாளர் (உள்ளக கணக்காய்வு) பதவியை வகிக்கின்றார். அவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் பிரயோக கணக்கியலில் இளங்கலை விஞ்ஞானமானி பட்டம் பெற்றுள்ளார். அவர் இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம், கணக்கியல் தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் மற்றும் இலங்கையின் நிதிக் கணக்காளர்கள் நிறுவனம் ஆகியவற்றின் இணை உறுப்பினராக உள்ளார். மேலும், அவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் நிதியியல் வணிக நிர்வாகத்தில் முதுகலைப் பட்டத்தையும், இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தில் தகவல் அமைப்புகள் பாதுகாப்பு மற்றும் கட்டுப்பாட்டு கணக்காய்வில் டிப்ளோமாவையும் பெற்றுள்ளார். தனியார் மற்றும் பொது நிறுவனங்களில் நிதி மற்றும் கணக்காய்வுத் துறையில் 30 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளார். திரு. வெலிவிட்ட அவர்கள் தான் தெரிவுசெய்த துறையில் ஒரு திறமையான நிறைவேற்று அதிகாரி ஆவார்.

### திரு எம்.ஏ.கே. அளுத்கமகே

பிரதிப் பொது முகாமையாளர்
(முதலீடு)

திரு. எம்.ஏ.கே. அலுத்கமகே தற்போது பிரதிப் பொது முகாமையாளர் (முதலீடு) ஆகிய பதவிகளில் கடமையாற்றுகின்றார். அவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வணிகவியல் இளங்கலை (சிறப்பு) பட்டத்தையும், களனி பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாக முதுகலைப் பட்டத்தையும் பெற்றுள்ளார். மேலதிகமாக, இலங்கை கணக்கியல் தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் மற்றும் இலங்கை முகாமைத்துவ நிறுவகத்தின் உறுப்பினரான திரு. அலுத்கமகே, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் மையப் பகுதியொன்றை கண்காணிக்கும் அதிகாரியாக காணப்படுகின்றார்.

www.etfb.lk

143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடைமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்



## திரு. டபிள்யூ.ஜி.கே. ரத்நாயக்க

பிரதிப் பொது முகாமையாளர்
(அங்கத்தவர் சேவைகள்)

பிரதிப் பொது முகாமையாளர் (அங்கத்தவர் சேவைகள்) திரு. டபிள்யு. ஜீ.கே. ரத்நாயக்க ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் மனித வள முகாமைத்துவத்தில் இளங்கலை விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்றுள்ளார். அவர் இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் மற்றும் இலங்கையின் சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனம் ஆகிய இரண்டிலும் இணை உறுப்பினராக உள்ளார். மேலும், அவரது பதவிக்கு மேலதிகமான பெறுமதியைச் சேர்த்துள்ளார். அவர் இங்கிலாந்தில் உள்ள பட்டய முகாமைத்துவக் கணக்காளர்களின் இரண்டாம் II கட்டத்திற்கு பகுதியளவு தகுதி பெற்றுள்ளார்.



## திரு. எச்.எம்.ஏ. ஜயந்த குமார

பிரதிப் பொது முகாமையாளர்
(சட்டம்)

திரு. எச்.எம்.ஏ. ஜயந்த குமார தற்போது பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்) பதவியில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் சட்டப் பணிகளை மேற்கொண்டு வருகின்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலை விஞ்ஞானப் பட்டமும் (சிறப்பு) கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சர்வதேச உறவுகளில் முதுகலைப் பட்டமும் பெற்ற திரு. ஜயந்த குமார அவர் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் சட்டப் பட்டமும், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்ட இளங்கலைப் பட்டமும் பெற்றுள்ளார். திரு. ஜயந்த குமார இலங்கை உச்ச நீதிமன்றத்தின் வழக்கறிஞர், பிரசித்திபெற்ற நொத்தாரிசு மற்றும் சத்தியப்பிரமாண ஆணையாளர் ஆவார். கம்பனி செயலாளராகவும் பதிவு செய்துள்ளார்.



## திரு. கே.டி.ஏ.பி. கருணாரத்ன

பிரதிப் பொது முகாமையாளர
(நிதி)

திரு. கே.டி.ஏ.பி. கருணாரத்ன பிரதிப் பொது முகாமையாளர (நிதி) பதவியை வகிக்கின்றார். அவர் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் இணை உறுப்பினராக உயர் கல்வி மற்றும் தொழில்முறை தகைமைகளைப் பெற்றுள்ளார். திரு. கருணாரத்ன அவர்கள் நிதி மற்றும் கணக்கியல் துறையில் தனது திறனையும் அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்துவதன் மூலம் தனது கடமைகளைச் செய்கின்றார். அவரது தொழில்துறையில் தொழில்முறை திறன் மற்றும் நெறிமுறை நடத்தை ஆகியவற்றின் உயர் தரங்களை பராமரிப்பதற்கான அவரது அர்ப்பணிப்பு மெச்சப்படுகின்றது.

# பிரதிப் பொது முகாமையாளர்கள்



**திரு. ஆர்.ஜே.சி.எஸ் சம்பத் குணவர்தன**
பிரதிப் பொது முகாமையாளர்
(நிர்வாகம் மற்றும் மனித வளங்கள்)

திரு. ஆர்.ஜே.சி.எஸ் சம்பத் குணவர்தன அவர்கள் நிருவாகம் மற்றும் மனித வளங்களின் பிரதிப் பொது முகாமையாளராகப் பணிபுரிகின்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்திக்கான டிப்ளோமா பட்டம் பெற்றவர். மேலும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் தொழில் கல்வியில் பட்டமும் பெற்றுள்ளார். திரு. குணவர்தன களனிப் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம் மற்றும் வணிகக் கற்கைகளில் முதுமாணிப் பட்டம் பெற்று தனது திறமைகளை மேலும் வெளிக்காட்டியுள்ளார். அவர் தான் பணிபுரியும் நிறுவனத்தில் பிரதான பிரிவொன்றுக்கு மிகவும் பொருத்தமானவராக காணப்படுகின்றார்.



**திரு. எஸ்.பி.ஆர்.டி. பெர்னாந்து**
பிரதிப் பொது முகாமையாளர்
(தகவல் தொழில்நுட்பம்)

தற்போது தகவல் தொழில்நுட்பம் பிரதிப் பொது முகாமையாளராகப் பணியாற்றும் திரு. பிரதீப் பெர்னாந்து, தகவல் தொழில்நுட்பத் துறையில் 19 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவமுள்ள ஒரு தொழிற்துறை நிபுணர் ஆவார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் மென்பொருள் பொறியியலில் நிபுணத்துவம் பெற்ற அவர் கணினி விஞ்ஞானத்தில் இளங்கலைப் பட்டத்தையும் தகவல் பாதுகாப்பில் முதுகலைப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

தனது தொழில் வாழ்க்கை முழுவதும், பாரிய தொழில்நுட்ப அமைப்புகளை நிர்வகிப்பதிலும், முக்கிய டிஜிட்டல் உருமாற்றத் திட்டங்களைச் செயல்படுத்துவதிலும், முன்னெச்சரிக்கை தகவல் பாதுகாப்பை உறுதி செய்வதிலும் அவர் வலுவான திறன்களை வெளிப்படுத்தியுள்ளார். புத்தாக்கங்களை இயக்குவதிலும், செயல்பாடுகளை மேம்படுத்துவதிலும், அதன் மூலம் நிறுவனத்தின் ஒட்டுமொத்த இலக்குகளை அடைய உதவுவதிலும் அவரது தலைமைத்துவமும் தொழில்நுட்ப நிபுணத்துவமும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

www.etfb.lk

143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடைமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்



**திரு. எச்.ஜி.டி. நிஹால் பிரசன்ன**

பிரதிப் பொது முகாமையாளர் (சேகரிப்பு மற்றும் தொழில் வழங்குநர் உறவுகள்) கடமை மேற்கொள்ளல்

திரு. எச்.ஜி.டி. நிஹால் பிரசன்ன அவர்கள் உதவிப் பொது முகாமையாளராக (அங்கத்தவர் சேவைகள்) பதில் கடமை அடிப்படையில் செயற்படுகின்றார். அவர் ருஹுனு பல்கலைக்கழகத்தில் இளங்கலை விஞ்ஞானப் பட்டத்தையும், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தில் பொது முகாமைத்துவ முதுகலைப் பட்டத்தையும் பெற்றுள்ளார். மேலும், அவர் சீனாவின் வுஹானில் உள்ள (HUST) பல்கலைக்கழகத்தில் உயர் தொழில்முறை நிகழ்ச்சித்திட்டத்தை முடித்துள்ளார். அவரது கல்வி மற்றும் தொழில்சார் தகுதிகள், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபைக்கு அர்ப்பணிப்புடன் பணியாற்ற அவருக்கு மேலதிக பலத்தை அளிக்கின்றது.

# உதவி பொது முகாமையாளர்கள்



## திரு. கே.ஜி.என். ரத்நாயக்க

உதவிப் பொது முகாமையாளர்
(நிர்வாகம் மற்றும் மனித வளங்கள்)

திரு. கே.ஜி.என். ரத்நாயக்க அவர்கள் உதவிப் பொது முகாமையாளராக நிர்வாக மற்றும் மனித வள மேற்பார்வையைச் சிறப்பாகச் செய்து வருகின்றார். அவர் களனிப் பல்கலைக்கழகத்தில் வணிகவியல் இளங்கலை (சிறப்பு) பட்டம் பெற்றவர் மற்றும் ஆளணி முகாமை பட்டய நிறுவனத்தின் இணை உறுப்பினராகவும் உள்ளார்.



## திருமதி பி.எல்.சி.பி. அல்விஸ்

உதவிப் பொது முகாமையாளர்
(அமுலாக்கல் வலயம் III)

திருமதி. பி.எல்.சி.பி. அல்விஸ் பிரதிப் பொது முகாமையாளர் (பங்களிப்புத் தொகை சேகரிப்பு மற்றும் தொழில் வழங்குநர் உறவுகள்) பதவிக்கான மேலதிக பொறுப்புகளுடன் உதவிப் பொது முகாமையாளராக (அமுலாக்கல் வலயம் III) பணியாற்றுகின்றார். அவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் முதல் தரப் விஞ்ஞானமாணி இளங்கலைப் பட்டத்தையும், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உயிரியல் தொழில்நுட்பத்தில் நிபுணத்துவத்துடன் முதுமாணிப் பட்டத்தையும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தில் பொது முகாமைத்துவத்தில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். மேலும், அவர் இலங்கை பிரயோக புள்ளிவிபர நிறுவனத்தில் பிரயோக புள்ளிவிபரவியல் டிப்ளோமாவையும் பெற்றுள்ளார். தற்போது, திருமதி அல்விஸ் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டத்தில் இளங்கலைப் பட்டப்படிப்பை மேற்கொண்டு தனது தொழில்முறைத் தகைமைகளை மேலும் வலுப்படுத்திக் கொண்டுள்ளார்.



## திரு. புஷ்பரங்க வீரசேகர

உதவிப் பொது முகாமையாளர்
(தகவல் தொழில்நுட்பம்)

திரு. புக்ஷ்பரங்க வீரசேகர அவர்களின் பெயருக்கு முன்னால் நிறைய தகுதிகள் உள்ளன. தற்போது உதவிப் பொது முகாமையாளராக (தகவல் தொழில்நுட்பம்) பணியாற்றி வருகின்றார். இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் கணினி பொறியியலில் நிபுணத்துவத்துடன் பொறியியல் தொழில்நுட்பத்தில் பட்டம் பெற்றவர். மேலும், அவர் ஐக்கிய இராச்சியத்தில் UK Staffordshire பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்யப்பட்ட பொறியியல் கணினித் துறையில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளார். திரு. வீரசேகர இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகத்தின் இணை உறுப்பினராகவும் ஐக்கிய இராச்சியத்தில் உள்ள பிரிட்டிக்ஷ் கணினி சங்கத்தின் உறுப்பினராகவும் உள்ளார். திரு. வீரசேகர அவர்கள் இலங்கை பொறியியல் சபையினால் பதிவு செய்யப்பட்ட பொறியியல் நிபுணராகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளார். மேலும், அவர் செயற்கை நுண்ணறிவு அமைப்பு திட்டத்தில் டிப்ளோமா மற்றும் ஜாவா கம்ப்யூட்டர் அப்ளிகேக்ஷன் டிப்ளோமையும் நிறைவு செய்துள்ளார்.



143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்



## திரு. அனுர விக்ரமசேகர

உதவிப் பொது முகாமையாளர்
(பங்களிப்பு சேகரிப்பு மற்றும் மேலதிக் கட்டணம்)

திரு. அனுர விக்ரமசேகர பங்களிப்பு சேகரிப்பு மற்றும் மேலதிகக் கட்டணம் பிரிவின் பிரதிப் பொது முகாமையாளராகப் பணியாற்றுகின்றார். ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் அரச முகாமைத்துவத்தில் இளங்கலை (சிறப்பு) பட்டமும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் வணிகக் கற்கையில் கலாநிதிப் பட்டமும் பெற்றுள்ளார். அவர் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சான்றளிக்கப்பட்ட வணிகக் கணக்காளர் ஆவார்.

திரு. அனுர விக்ரமசேகர 2024 டிசம்பர் 3 ஆம் திகதி ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையில் இணைந்துள்ளார்.



## திரு. டி. எம். கே. ஜி. ஏ. தஸநாயக்க

உதவிப் பொது முகாமையாளர்
(பதில் கடமை) - அமுலாக்கல் வலயங்கள் 11

திரு. டி. எம். கே. ஜி. ஏ. தஸநாயக்க அவர்கள் உதவிப் பொது முகாமையாளர் (பதில் கடமை) - அமுலாக்கல் வலயங்கள் 11 ஆக பணியாற்றி வருகின்றார். இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தையும் (BA) கம்போடியாவின் IIC தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் (IICUT) வணிக நிர்வாகக் முதுமாணிப் பட்டத்தையும் (MBA) பெற்றுள்ளார்.

இவர் 1995.11.01 ஆம் திகதி சபையின் சேவையில் இணைந்துள்ளார்.



## திரு. எம். ஏ. சந்திரசேன

உதவிப் பொது முகாமையாளர்
(கடமை மேற்கொள்ளல்) -அமுலாக்கல் வலயங்கள் 1

திரு. எம். ஏ. சந்திரசேன அவர்கள் உதவிப் பொது முகாமையாளர் (கடமை மேற்கொள்ளல்) - அமுலாக்கல் வலயங்கள் 1 ஆக பணியாற்றி வருகின்றார். இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தையும் (BA), NSBM பல்கலைக்கழகத்தில் வணிகக் கல்வியில் முதுமாணிப் பட்டத்தையும் (MBS) பெற்றுள்ளார்.

இவர் 1997.04.21 ஆம் திகதி சபையின் சேவையில் இணைந்துள்ளார்.

# முகாமைத்துவக் குழு

## நிறுவன அலுவலகம்

### பங்களிப்புத் தொகை சேகரிப்பு மற்றும் தொழில் வழங்குநர் உறவுகள்

**திருமத. கே.எம்.டி.ஏ.யூ. குணவர்தன**
நிதி முகாமையாளர் (பங்களிப்புத் தொகை சேகரிப்பு)

**திருமத. ஏ. விதானபத்திரண**
முகாமையாளர் (மேலதிகக் கட்டணம்)

**திருமதி. என்.சி. ஏபா**
நிதி முகாமையாளர் (பங்களிப்புத் தொகை சேகரிப்பு)

**திரு. ஏ.ஜே.ஆர் அனுர**
முகாமையாளர் (சுயதொழில் மற்றும் இடம்பெயர்வு சேவைகள்)

### அங்கத்தவர் சேவைகள்

**திரு. எம் ரஹூப்தீன்**
முகாமையாளர் (அங்கத்துவ கணக்குகள்)

**திருமதி. ஐ விஜேதுங்க**
முகாமையாளர் (அங்கத்துவக் கணக்குகள் – சிறிய வகை)

**திருமதி. டபிள்யு.ஆர். நந்தசீலி**
முகாமையாளர் (நலன்களைத் தீர்மானித்தல்)

**திரு. எச்.கே.கே.பி. புஷ்பகுமார**
முகாமையாளர் (நலன்கள்)

### முதலீடுகள்

**திருமதி. என்.ஆர்.என். பெர்னாந்து**
நிதி முகாமையாளர்

**திருமதி. எச்.எம்.சி. தமயந்தி**
நிதி முகாமையாளர்

**திருமதி. டபிள்யு.ஏ.ஏ. ஹங்சமாலி**
முகாமையாளர் (முதலீடு)

### நிதிப் பிரிவு

**திருமதி. எம்.ஏ.வி. குமுதினி**
நிதி முகாமையாளர் (நிதி)
(2026.02.28 ஆம் திகதி முதல் ஓய்வுபெற்றுள்ளார்)

### உள்ளக கணக்காய்வு

**திரு. டி.எல்.சி.டி. குமார**
முகாமையாளர் (உள்ளகக் கணக்காய்வு)

### நிர்வாகம் மற்றும் மனித வளங்கள்

**திரு. பீ. சரத்**
முகாமையாளர் (நிர்வாகம் மற்றும் மனித வளங்கள்)
(2026.01.02 ஆம் திகதி முதல் ஓய்வுபெற்றுள்ளார்)



143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடைமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

**திரு.பி.ஏ. அஜந்தா**
முகாமையாளர் (நிர்வாகம் மற்றும் மனித வளங்கள்) (பதில் கடமை)

**திரு. ரி.எச்.சி.பி. குமார**
முகாமையாளர் (உற்பத்தித்திறன்)

## தகவல் தொழில்நுட்பம்

**திரு. பீ. டி. வடுகே**
முகாமையாளர் (தகவல் தொழில்நுட்பம்)

## சட்டம்

**திருமதி எஸ்.ஆர்.எஸ். புஞ்சிஹேவா**
முகாமையளார் (சட்டம்)

**திருமதி எஸ்.பி. ராஜபக்ஷ**
முகாமையாளர் (சட்டம்)

**திருமதி. வி.எம்.ஜெ. ஜயலங்கா**
முகாமையாளர் (சட்டம்)

# பிராந்திய அலுவலகங்கள்

**திரு.எம்.ஏ. சந்திரசேன**
பிராந்திய முகாமையாளர் (கொழும்பு 1 - 7)

**திரு. கே.என். அசோக**
பிராந்திய முகாமையாளர் (கொழும்பு 8-15)

**திரு. யு.எச்.எஸ். ரஞ்சித்**
பிராந்திய முகாமையாளர் - நுவரெலியா

**திரு. என்.கே.யு.கே. நாகசிங்க**
பிராந்திய முகாமையாளர் - பதுளை

**திருமதி. பிரியங்கி யூஜேரத்ன**
பிராந்திய முகாமையாளர் - களுத்துறை

**திரு. டி.எம்.கே.ஜி.ஏ.திசாநாயக்க**
பிராந்திய முகாமையாளர் - குருநாகல்

**திரு. டி.கே.எஸ்.எஸ். திஸாநாயக்க**
பிராந்திய முகாமையாளர் - ஹம்பாந்தோட்டை

**திரு. ஈ.எம்.எஸ்.கே. ஏகநாயக்க**
பிராந்திய முகாமையாளர் - கண்டி

**திருமதி. ஏ.கே.என். பிரசாங்கனி**
முகாமையாளர் - (சட்டம்) கண்டி

**திருமதி எஸ்.எம். குணசிங்க**
பிராந்திய முகாமையாளர் - கேகாலை

**திருமதி. ஜே.எம்.எஸ்.வீ.எஸ். சில்வா**
பிராந்திய முகாமையாளர் - கம்பஹா (பதில் கடமை)

**திருமதி. சி. அபேகுணசேகர**
பிராந்திய முகாமையாளர் - மாத்தறை

**திரு. ப. ஹெட்டியாராச்சி**
முகாமையாளர் - (சட்டம்) மாத்தறை

**திரு. ப. ஹெட்டியாராச்சி**
பிராந்திய முகாமையாளர் - அநுராதபுரம் (பதில் கடமை)

**திரு.ஜெ. தமிழழகன்**
பிராந்திய முகாமையாளர் - யாழ்ப்பாணம்

**திரு. ஏ ஜி ஜி குணேந்திரா**
பிராந்திய முகாமையாளர் - காலி

**திரு. ரி. அருதுஸ்தன்**
பிராந்திய முகாமையாளர் - வவுனியா

**திரு. டி.டி.குலரத்ன**
பிராந்திய முகாமையாளர் - இரத்தினபுரி

**செல்வி. ஜே.சி. ஜயசிங்கஆராச்சி**
பிராந்திய முகாமையாளர் - அம்பாறை

**திரு. கே.ஜீ.ஈ.பி. பிரேமவர்தன**
பிராந்திய முகாமையாளர்
(கொழும்பு மாவட்டம்)
(பதில்கடமை)

# ஆளுகை அறிக்கை

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை அரசாங்க நியதிச்சட்ட நிறுவனமாக இருக்கும் நிலையில், எல்லா நியிதிச்சட்ட மற்றும் ஒழுங்குமுறை ரீதியான தேவைகளுக்கும் இணங்கக் கூடிய உறுதியான ஆளுகை நடைமுறைகள் ஊடாக அங்கத்தவர்களுக்கு உயர் பெறுமானத்தை உருவாக்குவதை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகின்றது. சபையின் செயற்பாடுகளின் நோக்கங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு வெளிப்படைத்தன்மையினை மிக உயர்ந்த தரத்திற்கு கடைபிடித்தல், நம்பகத்தன்மை மற்றும் இணங்கி ஒழுகுதல் என்பன நன்கு நிறுவப்பட்ட மூவகை வழிகாட்டல் நெறிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.





143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

**நிறுவன ஆளுகையின் செயல் சட்டகம்**

சபையின் நிர்வாக அமைப்பு கீழே வரைபடமாக விளக்கப்பட்டுள்ளது:

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிறுவன ஆளுகை அமைப்பு குறிப்பிட்ட பொறுப்புகள் மற்றும் தெளிவான அறிக்கையிடல் நிரல்களைக் கொண்ட பல அடுக்கு ஆளும் குழுக்களைக் கொண்டுள்ளது. அதன் பணிப்பாளர்கள் சபை, சபையின் செயல்பாடுகள் தொடர்பான அதன் மேற்பார்வை பணியை வழங்கும் அதே வேளையில் அதன் மூலோபாய திசைமுகம், நிதி இலக்குகள், வள ஒதுக்கீடு மற்றும் இடர் நோக்குநிலை குறித்து சபையின் உயர் நிர்வாகத்துடன் தொடர்ந்தும் தொடர்பு கொள்கின்றது.




### சபையின் துணைக்குழுக்கள்

சபையின் துணைக்குழுக்கள் குறிப்பிட்ட பொறுப்புகள் மற்றும் தெளிவாக வரையறுக்கப்பட்ட ஆணைகளுக்குள் செயல்படுகின்றன. குழுக்கள் திறம்பட செயல்படுவதற்கும் அந்தந்த செயல்பாடுகள் குறித்து சபைக்கான பரிந்துரைகளை செய்வதற்கும் குழுவின் தலைவர்கள் பொறுப்பாக உள்ளனர்.

### முகாமைத்துவக் குழுக்கள்

செயல்பாட்டு முடிவுகளின் முகாமை பொது முகாமையாளரின் தலைமையிலான சிரேஸ்ட நிர்வாகக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நாளாந்த செயல்பாட்டு முடிவுகளை எடுப்பதற்கும் தலைவர்/ பிரதம நிர்வாக அதிகாரிக்கு பரிந்துரை செய்வதற்கும் முகாமைத்துவக் குழு நிறுவப்பட்டுள்ளது.

நிறுவன நிர்வாகத்தின் மிக உயர்ந்த தரங்களைப் பராமரிப்பதும் அதன்படி செயல்படுவதும் பணிப்பாளர் சபையின் கடமை மற்றும் பொறுப்பு என்பதை இந்த அறிக்கை வலியுறுத்துகின்றது. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் பணிப்பாளர் சபை, நல்லாட்சி கட்டமைப்புகளை செயல்படுத்தல் மற்றும் கொள்கை கட்டமைப்புகளை உருவாக்குதல் ஆகியவற்றில் அதிக பொறுப்பைக் கொண்டுள்ளது. மேலும் அவை சபையின் பணி மற்றும் நோக்கத்திற்கு மிக உயர்ந்த அளவிலான ஒத்துழைப்பை சிறப்பாக வழங்குதல் வேண்டும். ஒழுங்குமுறை மாற்றங்கள், சாத்தியமான அபாயங்கள் மற்றும் வாய்ப்புகள் மற்றும் உள்ளக மாற்றங்களை பிரதிபலிக்கும் வகையில் நிர்வாக நடைமுறைகள் மற்றும் விதிமுறைகள் தொடர்ந்தும் மீளாய்வு செய்யப்பட்டு புதுப்பிக்கப்படுகின்றன.

கீழே பட்டியலிடப்பட்டுள்ள பல வெளிப்புற மற்றும் உள்ளக மாற்றக் கருவிகளுக்கு இணங்க சபையின் ஆளுகை கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது:

- 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம்.
- நிதி ஒழுங்கு விதிகள் (அரசாங்க)
- பொது தொழில்முயற்சி வழிகாட்டுதல்கள் (பொது தொழில் முயற்சிகள் திணைக்களம்)
- சிறந்த நடைமுறைகள் மற்றும் நடத்தைக் கோவை (பொது தொழில் முயற்சிகள் திணைக்களம்)
- முக்கிய பங்குதாரர் குழுக்களின் உரிமைகளை நிறைவேற்றும் போது பெரு நிறுவனங்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைத் தெரிவிக்கும் இலங்கைப் பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட கூட்டாண்மை ஆளுகைக்கான சிறந்த நடைமுறை நடத்தைக் கோவை.
- இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு தரநிலை கண்காணிப்பு சபை சட்டம்
- தேசிய கொள்முதல் வழிகாட்டு நெறிகள் கோவை.
- ஊழியர் உரிமைகளப் பாதுகாக்கும் 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடை மற்றும் அலுவலக பணியாளர்கள் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள்
- பணத்தை சேகரிக்கும் முகவர்களுக்காக வரிவிதிப்பு அதிகாரிகளால் வெளியிடப்பட்ட சட்டங்கள், சுற்றறிக்கைகள், வர்த்தமானி அறிவித்தல்கள்.
- தொடர்புடைய அரசாங்க சுற்றறிக்கைகள் (பொதுத் திறைசேரி. பொது நிர்வாக அமைச்சு)

## 1. பணிப்பாளர் சபை

### 1.1. சபை

அரசாங்க மற்றும் அதன் பங்குதாரர்கள் சார்பாக நிதியத்தின் நிர்வாகத்தில் பணிப்பாளர் சபைக்கு சட்டபூர்வமான பொறுப்பு உள்ளது.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் நிர்வாகமானது திறமையான செயல்பாடுகள் மற்றும் பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்குவதற்கான உத்தரவாதத்தை வழங்கும் ஒரு பயனுள்ள உள்ளக கட்டுப்பாடு அமைப்பைப் பராமரிக்கிறது என்பதை உறுதிப்படுத்துவதற்கு சபை முயற்சி எடுக்கின்றது.

#### 1.1.1 பணிப்பாளர் சபைக்கான நியமனங்கள்

பணிப்பாளர்கள் சபை பரந்த அளவிலான பின்னணியில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றது. (நிதி, வர்த்தகம், தொழில் வழங்குனர் கூட்டமைப்பு, தொழிற்சங்கம் போன்றவை) அதிக பன்முகத்தன்மையை ஊக்குவித்தல். சபைக் கூட்டங்களில் கலந்துரையாடப்படும் விடயங்கள் தொடர்பான ஒரு சுயாதீனமான பார்வையை வழங்க இது அவர்களுக்கு உதவுகின்றது.

பணிப்பாளர் சபையானது பின்வரும் ஒன்பது உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- அமைச்சரினால் நிமிக்கப்படும் நான்கு உறுப்பினர்கள்
- நிதி விடயம் தொடர்பாக பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் நியமிக்கப்படும் ஓரு உறுப்பினர்
- வர்த்தக விடயம் தொடர்பாக பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் நியமிக்கப்படும் ஓரு உறுப்பினர்
- இலங்கை தொழில் வழங்குநர் சங்கத்தால் நியமிக்கப்படும் ஓரு உறுப்பினர்
- ஒவ்வொன்றும் 100,000 அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட தொழிற்சங்கங்களின் நிறைவேற்றுக் குழுவுடன் ஆலோசித்து அமைச்சரினால் நியமிக்கப்படும் இரண்டு உறுப்பினர்கள்.

#### 1.1.2 பணிப்பாளர் சபையின் பொறுப்புக்கள்

பணிப்பாளர் சபை தனது கட்டாய உரிமைகளையும் பொறுப்புகளையும் நேர்மையுடனும், பொது வளங்களின் பாதுகாவலராக நல்ல நம்பிக்கையுடனும் பயன்படுத்த வேண்டும். சபை எப்போதுமே அதன் பிரதான பொறுப்புகள் குறித்து விழிப்புடன் இருத்தல் வேண்டும். எந்தவொரு தீர்மானம் மற்றும் செயல்களின் முடிவுகள் இறுதியில் பொதுமக்களால் பொறுப்பேற்க வேண்டியிருப்பதனால் சரியான திட்டமிடலுடன் செயற்பாடுகளை முன்னெடுத்தல் வேண்டும். சபை கூட்டங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள் பின்வருமாறு :-



143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

- கொள்கை உருவாக்கம்
- நிதியத்தின் செயலாற்றுகையை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்
- துணை நிறுவனங்கள் / கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்களின் மற்றும் பிற முதலீடுகளின் செயல்திறனைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்
- வருடாந்த செயலாற்றுகையை மதிப்பீடு செய்தல்
- செயற்பாட்டு மூலதனத்தை முகாமை செய்தல்
- காலாண்டு, அரை ஆண்டு மற்றும் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள்

பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் : சபையானது வழமையாக ஒரு மாத இடைவெளியில் மற்றும் தேவைப்படும் போது ஒன்றுகூடும். இவ்வாண்டினுள் சபை பதினொரு 15 தடவைகள் ஒன்றுகூடியது. சபைக் கூட்டங்களின் செயல்திறனை மேம்படுத்துவதற்காக சபைக் கூட்டங்களுக்கு மூன்று நாட்களுக்குக் குறையாத வேலை நாட்களுக்கு முன்னர் மற்றும் நன்கு முன்கூட்டியே சபை குறிப்பாணைகள் வழங்கப்படுகின்றன. 2025 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபைக் கூட்டங்களின் போதான வரவு கீழே தரப்பட்டுள்ளது.

| பெயர் | பங்கு பற்றிய கூட்டங்களின் எண்ணிக்கை | 2025 நிதி ஆண்டில் நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| திரு. சோமசிறி ஏகநாயக்க | 15 | 15 |
| திரு. கே.டி.ஜ. பிரேமரத்ன | 15 | 15 |
| திரு. இந்திகா பத்தேவிதன | 12 | 15 |
| திருமதி. கே.ஏ.பி. டி சில்வா | 14 | 15 |
| திரு. சி. எஸ். திசாநாயக்க | 13 | 15 |
| திரு. எஸ்.எப்.எச். பெர்னாந்து | 12 | 15 |
| திரு. ஜூட் டினால் பீரிஸ் | 7 | 15 |
| திரு. அதுல ஹரிச்சந்திர | 12 | 15 |
| திரு. கே. என். பிரேமசாந்த | 13 | 15 |

### 1.1.3 சபை செயலாளர்

சபை நடைமுறைகள், சட்டம் மற்றும் தொடர்புடைய விதிகள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்க சபைக்கு ஆலோசனை வழங்குவதும் நம்பகமான மற்றும் பொருத்தமான தகவல்களை உறுதிசெய்வதும் சபைக்குப் பொறுப்பான தொழில்சார் தகுதிவாய்ந்த நிறுவன செயலாளரின் பொறுப்பாகும். சபைக்குரிய ஆலோசனை சேவைகளை சபையின் அனைத்து உறுப்பினர்களும் சபை செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும். சபை கூட்டங்களை நிர்வகிக்கும் நடைமுறைகள் பின்பற்றப்படுவதையும் சபை ஆவணங்களை சரியான நேரத்தில் விநியோகித்து சபையின் திறமையான செயல்பாட்டை செயலாளர் உறுதிசெய்கின்றார்.

### 1.1.4 சபை செயலாளரின் வகிபாகம்

சபை நடைமுறைகள் பின்பற்றப்படுவதை சபை செயலாளர் உறுதி செய்ய வேண்டும். சபை நடவடிக்கைகள் தொடர்பான சட்ட தேவைகள் குறித்த வழிகாட்டுதலை வழங்க வேண்டும். செயலாளரின் பிரதான கடமைகள் பின்வருமாறு :

- பணிப்பாளர் சபை கூட்டங்கள், கூட்டங்களின் குறிப்புகள், சபை ஆவணங்கள் மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்களின் தகவல்களை அறிவித்தல்.
- பணிப்பாளர் சபை முடிவுகளின் நடவடிக்கைகளைப் பின்னூட்டம் செய்தல்.
- உள்வாரி மற்றும் வெளிவாரி தகவல்களை வழங்குவதன் மூலம் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுக்கு உதவுதல்.

### 1.1.5 பணிப்பாளர் சபையின் நடுநிலமை

நிர்வாகக் குழுவின் உறுப்பினர்கள் நிறுவனத்தை திறம்பட நிர்வகிப்பதற்கும், நல்ல நிர்வாகத்தின் மிக உயர்ந்த தரத்திற்கு இட்டுச் செல்வதற்கும், பெருநிறுவன நோக்கங்களை அடைவதற்கும் தேவையான நிபுணத்துவம், திறன்கள் மற்றும் அனுபவம் ஆகியவற்றைக் கொண்டுள்ளனர். தொலைநோக்கு, தலைமைப் பண்பு, பெற்ற திறமை, நேரடி நேர்மை ஆகிய குணங்கள் கொண்டவர்கள். குழு உறுப்பினர்களின் தனிப்பட்ட தொழில்முறை விபரங்கள் இந்த அறிக்கையின் பக்கம் 179 இல் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

**1.1.6 பயனுள்ள பணிப்பாளர் சபை கூட்டத்திற்கு போதுமான நேரம்**

பணிப்பாளர் சபை வழக்கமாக மாதாந்தம் கூடுகிறது. ஒரு குழு கூட்டத்திற்கு சராசரியாக 3 மணி நேரம் செலவிடப்படுகிறது. சபைக்கூட்ட பத்திரங்கள் ஆய்வு செய்வதற்கும் சபை உறுப்பினர்களுக்குப் போதுமான நேரம் இருப்பதை உறுதி செய்வதற்காகவும், கூட்டத்திற்கு 3 வேலை நாட்களுக்கு முன்னதாகவே சபைக்கூட்ட பத்திரங்கள் விநியோகிக்கப்படுகின்றன.

### 1.2 தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி

முழு நிர்வாக கட்டமைப்பினதும் முக்கிய இணைப்பாக இருக்கும் தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி பதவியணியையும் நிறுவனத்தையும் சரியான திசையில் வழிநடத்துவார். முன்னரே தீர்மானிக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு முக்கிய நடவடிக்கைகள் தொடர்பான கொள்கைகளை செயல்படுத்துவதற்கும் அதற்குத் தேவையான திட்டங்களைத் தயாரிப்பதற்கும் அவர் பொறுப்புடையவர்.

**1.2.1 தவிசாளரின் நியமனம்**

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியான தவிசாளர் அமைச்சரால் நியமிக்கப்படுவார்.

**1.2.2 தவிசாளரின் பொறுப்புக்கள்**

முழு நிர்வாக கட்டமைப்பினதும் முக்கிய இணைப்பாக இருக்கும் தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி பதவியணியையும் நிறுவனத்தையும் சரியான திசையில் வழிநடத்துவார். முன்னரே தீர்மானிக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு முக்கிய நடவடிக்கைகள் தொடர்பான கொள்கைகளை செயல்படுத்துவதற்கும் அதற்குத் தேவையான திட்டங்களைத் தயாரிப்பதற்கும் அவர் பொறுப்புடையவர்.

**1.2.3 மூலோபாய மற்றும் செயல்பாட்டு நடவடிக்கைகளின் சமநிலை**

பொறுப்புகளை திறம்படப் பிரிப்பதன் மூலம் அதிகாரத்தின் சரியான சமநிலை உறுதி செய்யப்படுகிறது. தவிசாளரின் பங்கு பொது முகாமையாளரிடம் இருந்து வேறுபட்டது. தவிசாளர் ஒரு நிர்வாக பணிப்பாளராக உள்ளார் மற்றும் குழுவிற்கு தலைமைத்துவத்தை வழங்குகிறார், அதே நேரத்தில் பொது முகாமையாளர் செயல்பாட்டுத் தலைமையை வழங்குகிறார் மற்றும் பணிப்பாளர் சபையில் அங்கம் வகிக்கவில்லை. தவிசாளர் மற்றும் பொது முகாமையாளரின் முக்கிய பங்கு:. பொறுப்புகள் கீழே தரப்பட்டுள்ளன:

#### தவிசாளர்

சபையின் ஒட்டுமொத்த மூலோபாய நோக்கு

மூலோபாய நடத்தையை உயர் மட்டத்தில் பேணல்

அனைத்து மூலோபாய திசைகளுக்கும் பணிப்பாளர் சபையின் செயல்திறனை உறுதி செய்தல்

இலங்கை அரசாங்கம் உட்பட அனைத்து பங்குதாரர்களுடனும் பயனுள்ள தொடர்பை பேணுதல்

அனைத்து பணிப்பாளர்களுக்கும் போதுமான தகவல்கள் கிடைப்பதை உறுதி செய்தல்

பணிப்பாளர் சபை முழுவதும் நெறிமுறை நடத்தையை நிறுவுதல்

#### பொது முகாமையாளர்

தொலைநோக்கை எட்டுவதற்கு மூலோபாய நோக்கை செயல்படுத்துதல்

நிறுவன திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட செயல்திறன் இலக்குகளை அடைதல்

லக்குகளை தொடர்ந்து கண்காணித்து அதன் சாதனைகளை பணிப்பாளர் சபைக்கு அறிவித்தல்

அங்கீகரிக்கப்பட்ட இடர் மற்றும் வலுவான உள்ளக கட்டுப்பாட்டிற்குள் சபை செயல்படுவதை உறுதி செய்தல்.

சிரேஸ்ட முகாமைத்துவத்திற்கு செயல்பாட்டுத் தலைமைத்துவத்தை வழங்குதல்.



143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

# கணக்காய்வு குழு
## அறிக்கை - 2025

### குழுவின் பொருந்தனை

கணக்காய்வுக்குழு பணிப்பாளர் சபையின் துணைக்குழுவாக, நிதி அறிக்கையிடல், உள்ளக கட்டுப்பாட்டு விதிகள் மற்றும் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் பணிப்பாளர் சபையின் பொறுப்புக்களை நிறைவேற்றும் செயற்பாட்டில் பணிப்பாளர் சபைக்குத் தேவையான ஒத்துழைப்பு வழங்குதல்.

### குழுவின் அமைப்பு மற்றும் கூட்டங்கள்

கணக்காய்வுக்குழு, சுயாதீன நிறைவேற்றுத்தரத்தைச் சாராத பணிப்பாளர்கள் இருவரைக் கொண்டுள்ளது.

| பெயர் | பதவி | கலந்துகொண்ட கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| திரு.கே.டி.ஜ. பிரேமரத்ன | குழுவின் தலைவர் | 2/2 |
| திரு. கே.என்.பிரேமசாந்த | குழு உறுப்பினர் | 1/2 |
| திருமதி. கே.ஏ.பி. டி.சில்வா | குழு உறுப்பினர | 2/2 |
| திரு. கே.எஸ். வெலிவிட்ட | குழுச் செயலாளர் | |

### கணக்காய்வுக் குழுவின் கடமைப் பொறுப்பு

**குழுவின் பிரதான செயற்பாடுகள் பின்வருமாறு:**

- நடைமுறையிலுள்ள உள்ளக கட்டுப்பாட்டுத் தொகுதி, நிதி அறிக்கையிடல் செயன்முறை, ஏற்புடைய கணக்கீட்டுத் தரங்களுக்கான இசைவு மற்றும் ஏற்புடைய ஒழுங்குபடுத்தல் தேவைகள் போன்ற எண்ணளவான மற்றும் பயனுறுதிமிக்க மீளாய்வை மேற்கொள்ளல்.
- முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும் அர்த்தமுள்ள மதிப்பீடுகள் மற்றும் உறுதிப்பாடுகளை மீளாய்வு செய்தல்.
- பணிப்பாளர் சபைக்கு பொருத்தமான பரிந்துரைகளை செய்தல்.

### உள்ளக கணக்காய்வு

சபையின் உள்ளக கணக்காய்வுப் பணிகள், பிரதிப் பொது முகாமையாளர் (உள்ளக கணக்காய்வு) அவர்களின் தலைமையில் வழிநடாத்தப்படுகின்றதோடு, உள்ளக கணக்காய்வின் தீர்மானங்கள் மற்றும் பரிந்துரைகள் மற்றும் அவற்றுக்கு முகாமைத்துவம் வழங்கும் பதிலளிப்புக்கள் மீளாய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. மொத்த நிர்வாகக் கட்டமைப்பையும் வலுப்படுத்தும் நோக்கில் அந்தப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுவதன் முன்னேற்றம் குறித்து அடிக்கடி பின்னூட்டம் செய்யப்படும்.

### வெளிவாரி கணக்காய்வு

கணக்காய்வுக் குழுவினால் கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கைகளை முறையாக கருத்திற்கொண்டு அவற்றை மீளாய்வு செய்து கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்படுகின்றது.

### கவனம் செலுத்தப்படும் பிரதான துறைகள்

வேறுபடுத்தாத வருமதிகள், பொருள் சுற்றாய்வுச் சபை, பிராந்திய அலுவலகங்கள் மூலம் செய்யப்படும் சேகரிப்புக்கள் மற்றும் நிதி மற்றும் காசோலைகளை வங்கியில் வைப்பிலிடல், சட்டத்திற்குச் செய்யப்படும் திருத்தங்களின் முன்னேற்றம், நவம் மாவத்தையில் அமைந்துள்ள வாகனத் தரிப்பிடத்தின் வருமானம், அங்கத்துவ நலன்களை செலுத்தும் செயன்முறை விடயத்தில் உள்ளக கட்டுப்பாட்டு விதிகள், நிதி அறிக்கையிடல் செயன்முறை மற்றும் நீதிமன்றத்தின் ஊடாக பங்களிப்புத் தொகை மற்றும் மேலதிகக் கட்டணம் சேகரித்தல் போன்ற நடவடிக்கைகள் தொடர்பில் கணக்காய்வுக் குழுவினால் வருடத்தினுள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

### அறிக்கையிடல்

குழுவின் கண்டுபிடிப்புகள் மற்றும் அவற்றுக்குரிய பரிந்துரைகள், எழுத்துமூல மற்றும் வாய்மூலமாக சுருக்கமாக குறிப்பிடுதல் மற்றும் குழுக் கூட்டங்களின் போது கலந்துரையாடப்படும் விடயங்களை அறிக்கைகள் மூலம் சபைக்கு முன்வைப்பதன் மூலம் பணிப்பாளர் சபைக்கு அறிவிக்கப்படுகின்றது.

### முடிவுரை

வருடத்தில் குழுக் கூட்டங்களுக்கு சமர்ப்பிக்கப்படும் விடயங்கள் மற்றும் ஏற்புடைய கணக்காய்வு அவதானிப்புகள் பற்றிய ஆழமாக பரிசீலனைக்கு எடுத்து அவை தொடர்பில் பணிப்பாளர் சபைக்குத் தேவையான பரிந்துரைகளை சமர்ப்பித்து சபையின் சிரேட்ட முகாமைத்துவத்திற்குத் தேவையான வழிகாட்டல்கள் குழுவினால் ஏற்பாடு செய்யப்படுகின்றது. முதலீட்டுகளை பாதுகாப்பாக பேணுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதோடு, நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள நிதி நிலமை மற்றும் பெறுபேறுகள், உண்மையான தகவல்களுடன் எண்ணிக்கை அடிப்படையிலான வழுக்கள் இன்றி காணப்படுவதாக உறுதிப்படுத்திக்கொள்வதற்கு அந்த நடவடிக்கைகள் போதுமானவை என்பது கணக்காய்வுக் குழுவின் அபிப்பிராயமாகும்.

கணக்காய்வுக்குழு சார்பாக,

**ஒப்பம் : திரு. கே.டி.ஜ. பிரேமரத்ன**
தலைவர்
கணக்காய்வுக்குழு



# இடர் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை

## நோக்கம்

நிறுவன இடர் முகாமை (ERM) என்பது நமது வணிகச் சூழலில் உள்ளார்ந்த அபாயங்களைக் கண்டறிந்து, மதிப்பிடவும், நிர்வகிக்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த அணுகுமுறை சாத்தியமான பாதகமான இடர் சூழ்நிலைகளை எதிர்பார்க்கவும், அவற்றுக்கு சிறந்த முறையில் பதிலளிக்கவும் உதவும். நமது இடர் முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் பரீட்சயங்கள் மூலோபாய நோக்கங்களை அடைவதிலும், நமது பங்குதாரர்களின் நலன்களைப் பாதுகாப்பதிலும் ஒரு முக்கிய அங்கமாக காணப்படும்.

## இடரைக் கட்டுப்படுத்தல்

பணிப்பாளர் சபை, கணக்காய்வுக் குழுவின் மற்றும் இடர் முகாமைத்துவக் குழுவின் ஒத்துழைப்புடன் செயற்பட்டு இடர் முகாமைத்துவ செயன்முறைக்கு பொறுப்பாகும்.

## பிரதான அபாயங்கள்

| ஆபத்து | சமாளிக்கும் உத்திகள் |
|---|---|
| **கடன் ஆபத்து**<br>தொழில் வழங்குநர் ஒருவருக்கு தனது உறுப்பினர் ஒருவரின் பங்களிப்பு பொறுப்பு மற்றும் கடப்பாடுகளை நிறைவேற்ற இயலாதவிடத்து கவனம் செலுத்தப்படும். | • பிரதேசத்திற்கு அமைய அடிக்கடி மீளாய்வு<br>• மாதாந்த தவணைக் கொடுப்பனவை செலுத்தும் திட்டங்கள்<br>• பிராந்திய அலுவலக வலையமைப்பினூடாக முனைப்புடன் அமுல்டுத்தும் செயற்பாடுகள் |
| **சட்ட மற்றும் ஒழுங்குமுறை அபாயம்**<br>சட்டப்பூர்வ மற்றும் ஒழுங்குமுறை தேவைகளுக்கு இணங்காத காரணத்தினால் எழுகின்றது. | • அனைத்து கொள்கை மாற்றங்கள் மற்றும் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பில் புரிந்து வைத்திருத்தல்.<br>• ஒழுங்குமுறை விழிப்புணர்வை விருத்தி செய்துகொள்ளல் மற்றும் கலந்துரையாடல் அமர்வுகளை நடத்துதல். |



143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

| ஆபத்து | சமாளிக்கும் உத்திகள் |
|---|---|
| **முதலீட்டு அபாயங்கள்**<br>எந்தவொரு முதலீட்டின் எதிர்கால இழப்பு அல்லது குறைவான செயல்திறன் அபாயத்துடன் தொடர்புடையது. | • அடிக்கடி முதலீட்டுக் குழு கூட்டங்கள்.<br>• பங்கு நிறுவனங்கள் தொடர்பில் சந்தைக்கு சந்தை மறு மதிப்பீட்டை அளவிடுதல்.<br>• முதலீட்டுக் கொள்கைகளை மீளாய்வு செய்தல் மற்றும் இணங்குதல்.<br>• பணிப்பாளர் சபையினால் தொடர்ந்து மீளாய்வுகளை மேற்கொள்ளல். |
| 30 | லங்கா ஐ.ஓ.சி | 14,746 | 102,415 | 104,447 |
| 31 | லங்கா டைல்ஸ் | 16,745 | 20,907 | 17,864 |
| 32 | லங்கா வோல்டைல் | 25,053 | 21,542 | 18,781 |
| 33 | என்.டி.பி வங்கி | 1,505,792 | 1,628,561 | 2,032,201 |
| 34 | நவலோகா ஹாஸ்பிட்டல் | 27,011 | 13,369 | 31,903 |

| | முதலீட்டுக் கம்பனிப் பெயர் | உண்மைச் செலவினம் (ரூ. 000) | சாதாரணப் பெறுமதி (ரூ. 000) | சந்தைப் பெறுமதி (ரூ. 000) |
|---|---|---|---|---|
| 35 | ஓவர்சீஸ் ரியாலிட்டி | 27,343 | 42,275 | 67,052 |
| 36 | பீப்பள்ஸ் லீசிங் | 33,627 | 40,892 | 59,599 |
| 37 | பீப்பள்ஸ் இன்சூரன்ஸ் | 54,925 | 69,242 | 70,324 |
| 38 | பிஜிபி கிளாஸ் பிஎல்சி | 13,338 | 25,755 | 40,557 |
| 39 | ரேணுகா ஹோல்டிங்ஸ் | 68,221 | 33,597 | 88,509 |
| 40 | ரீசஸ் எனர்ஜி டார்கட் | 33,083 | 35,661 | 59,350 |
| 41 | ரிச்சர்ட் பீரிஸ் கம்பனி | 115,544 | 147,801 | 242,531 |
| 42 | ரோயல் செராமிக்ஸ் | 2,138 | 3,514 | 3,742 |
| 43 | சம்பத் வங்கி | 386,523 | 777,972 | 965,872 |
| 44 | செலான் வங்கி | 397,733 | 406,417 | 541,976 |
| | செலான் வங்கி (X) | 56,311 | 68,013 | 91,044 |
| 45 | ஸ்ரீ லங்கா டெலிகொம் | 110,326 | 230,163 | 275,402 |
| 46 | டீஜே லங்கா | 115,357 | 139,501 | 93,715 |
| 47 | ட்ரான்ஸ் ஏசியா ஹோட்டல்ஸ் | 37,073 | 25,737 | 34,888 |
| 48 | டோக்கியோ சிமெண்ட் பிஎல்சி | 110,492 | 131,353 | 211,137 |
| 49 | வெலிபெல் பவர் | 66,065 | 86,044 | 113,728 |
| 50 | வின்ட்போர்ஸ் பிஎல்சி | 86,749 | 115,508 | 211,687 |
| | **மொத்தம்** | 9,303,571 | 11,766,413 | 14,711,972 |

## பட்டியல் படுத்தப்படாத கம்பனிகளின் பங்குகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | புரொபர்டி டிவலொப்மன்ட் | 5 | 45 | - |

புடிராபர்டி டிவலொப்மன்ட் பீஎல்சி 2022 ஒக்டோபர் 27 ஆம் திகதி முதல் நீக்கப்பட்டுள்ளது.



143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

2025.12.31 ஆம் திகதிக்கு விரிவான வருமானத்தின் ஊடாக சாதாரண பெறுமதியை மீள் வகைப்படுத்தப்படாத பங்கு முதலீடுகள்

| | கம்பனிப் பெயர் | செலவு (ரூ. '000) | தேசிய சொத்து பெறுமதி (ரூ. '000) 31.12.2024 | தேசிய சொத்து பெறுமதி (ரூ. '000) 31.12.2025 |
|---|---|---|---|---|
| 1 | பிச் ரேடிங் லங்கா லிமிடட் | 1,649 | 3,779 | 2,398 |
| | **மொத்தம்** | **1,649** | **3,779** | **2,398** |

2025.12.31 ஆம் திகதிக்கு துணை நிறுவனங்களில் முதலீடு

| | கம்பனிப் பெயர் | செலவு (ரூ. '000) |
|---|---|---|
| 1 | இலங்கை சோல்ட்ட லிமிடட் | 470,961 |
| | **மொத்தம்** | **470,961** |

வெளியிடப்பட்ட பங்கு முதலீடுகள் - "இலாபம் அல்லது நட்டம்" என மீள் வகைப்படுத்தப்பட்டவை 2025.12.31

| | கம்பனிப் பெயர் | உண்மைச் செலவு (ரூ. 000) | சாதாரணப் பெறுமதி (ரூ. 000) | சந்தைப் பெறுமதி 2025.12.31 ஆம் திகதிக்கு (ரூ. 000) |
|---|---|---|---|---|
| 1 | அக்சஸ் இன்ஜினியரிங் | 128,045 | 128,045 | 147,370 |
| 2 | ஏ.சி.எல் கேபிள்ஸ் பிஎல்சி | 21,634 | 21,634 | 26,318 |
| 3 | கேபிள் சொல்யூஷன்ஸ் பிஎல்சி | 21,950 | 21,950 | 22,004 |
| 4 | சி.ஐ.சி ஹோல்டிங்ஸ் | 59,076 | 59,076 | 62,432 |
| | சி.ஐ.சி ஹோல்டிங்ஸ் (X) | 48,597 | 48,597 | 48,694 |
| 5 | செவ்ரான் லுப்ரிகண்ட்ஸ் | 176,596 | 176,596 | 179,706 |
| 6 | டிப்ட் புரொடக்ட்ஸ் | 144,578 | 143,440 | 159,930 |
| 7 | டிஸ்டிலரீஸ் கம்பனி பிஎல்சி | 52,806 | 52,806 | 51,861 |
| 8 | எச்.என்.பி வங்கி | 241,876 | 295,952 | 322,676 |
| | எச்.என்.பி பிஎல்சி (X) | 168,588 | 168,588 | 172,207 |
| 9 | ஹேகார்ப் பிஎல்சி | 8,044 | 9,519 | 11,857 |
| 10 | ஹெய்லீஸ் பிஎல்சி | 23,770 | 23,770 | 26,311 |
| 11 | ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் | 7,132 | 7,132 | 11,915 |
| 12 | ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | 180,058 | 180,058 | 175,650 |
| 13 | லங்கா ஐ.ஓ.சி | 222,908 | 307,889 | 302,167 |
| 14 | லங்கா டைல்ஸ் பிஎல்சி | 183,850 | 156,723 | 133,912 |
| 15 | லங்கா வோல்டைல் | 314,486 | 245,171 | 213,739 |
| 16 | லாஃப்ஸ் பவர் | 1,337 | 833 | 933 |
| 17 | எல்.வி.எல் என்.ஜி பண்ட் | 28,755 | 28,755 | 26,197 |
| 18 | மெல்ஸ்டாகோப் பிஎல்சி | 58,109 | 58,109 | 55,711 |
| 19 | பீப்பள்ஸ் இன்சூரன்ஸ் | 51,899 | 50,265 | 51,051 |

| | கம்பனிப் பெயர் | உண்மைச் செலவு (ரூ. 000) | சாதாரணப் பெறுமதி (ரூ. 000) | சந்தைப் பெறுமதி 2025.12.31 ஆம் திகதிக்கு (ரூ. 000) |
|---|---|---|---|---|
| 20 | ரிச்சர்ட் பீரிஸ் கம்பனி | 36,321 | 54,835 | 89,981 |
| 21 | ரோயல் செராமிக்ஸ் | 326,434 | 318,122 | 338,694 |
| 22 | சம்பத் வங்கி | 174,184 | 174,184 | 174,246 |
| 23 | செலான் வங்கி | 796 | 891 | 1,188 |
| 24 | சன்ஷைன் ஹோல்டிங்ஸ் | 3,282 | 3,282 | 5,677 |
| 25 | திரீ ஏகர் பார்ம்ஸ் | 92,760 | 92,760 | 91,270 |
| 26 | டோக்கியோ சிமெண்ட் பிஎல்சி | 11,149 | 11,149 | 14,115 |
| | டோக்கியோ சிமெண்ட் பிஎல்சி (X) | 15,360 | 15,360 | 19,066 |
| | **மொத்தம்** | **2,804,381** | **2,855,492** | **2,936,877** |

**2025.12.31 ஆம் திகதிக்கு பட்டியலிடப்பட்ட அலகு பொறுப்புக்கள்**

| | கம்பனிப் பெயர் | உண்மைச் செலவு (ரூ. 000) | சாதாரணப் பெறுமதி (ரூ. 000) | சந்தைப் பெறுமதி 2025.12.31 ஆம் திகதிக்கு (ரூ. 000) |
|---|---|---|---|---|
| 1 | CTCLSA எசர்ட் | 1,403 | 6,188 | 9,284 |
| 2 | தேசிய பங்கிலாப நிதியம் | 22,131 | 117,536 | 169,511 |
| | **மொத்தம்** | **23,534** | **123,724** | **178,794** |



143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

## 1. தாபனத் தகவல்கள்

### 1.1 சட்ட மற்றும் இட அமைவு

1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை சட்டத்தின் கீழ் 1981 மார்ச் 01 ஆம் திகதி நிறுவப்பட்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் முயற்சியொன்றாகும். ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கிவருகின்றது.

இலங்கை சோல்ட் லிமிடட் எனப்படும் வரையறுக்கப்பட்ட உப்புக் கம்பனி இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு வரையறுக்கப்பட்ட பொது கம்பனியாகும். கம்பனியின் பிரதான வர்த்தகத் தளம் மற்றும் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் ஹம்பாந்தோட்டை, மகாலேவாயாவில் அமைந்துள்ளது.

### 1.2 ஒருங்கிணைந்த நிதி அறிக்கைகள்

2025 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் ஒருங்கிணைந்த நிதி நிலைமை அறிக்கைகள் சபை (தாய் நிறுவனம்) மற்றும் அதன் முழு உரிமையுடைய துணை நிறுவனத்தை உள்ளடக்கியது (ஒன்றாக 'குழு' என குறிப்பிடப்படுகிறது). 2025 டிசம்பர் 31 ஆம் திகதியில் சபையின் துணை நிறுவனமாக லங்கா சோல்ட் லிமிடெட் உள்ளது. அவ்வாறே, ETFB குழுமத்தின் இறுதித் தாய் நிறுவனமாகவும் உள்ளது.

சபையின் மற்றும் அதன் துணை நிறுவனங்களின் நிதி அறிக்கைகள் டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் பொதுவான நிதியாண்டைக் கொண்டது. 'சபை' மற்றும் 'குழுமம்' ஆகியவற்றின் நிதி அறிக்கைகள் டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த 12 மாத காலத்திற்கு தயாரிக்கப்படுகின்றன.

### 1.3 பிரதான செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகளின் தன்மை

இவ்வாண்டினுள், இந்நிதிக் கூற்றுக்களுக்குள் இருந்த வண்ணம் செயற்படுத்தப்பட்ட கம்பனியினதும் அதன் துணை நிறுவனங்களினதும் பிரதான செயற்பாடுகள் பின்வருமாறு :

| கம்பனியின் பெயர் | வியாபாரத்தின் தன்மை |
|---|---|
| ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை | அரசாங்க ஓய்வூதியத் திட்டத்திற்கு உரித்தாகாத எல்லா அரசாங்கத் துறை ஊழியர்களும் எல்லா தனியார் துறை ஊழியர்களும் இந்நிதியத்தின் உறுப்பினர்களாவதுடன், அவர்களின் தொழில்தருநர்கள் அவ்வூழியர்கின் மொத்த வருவாயில் 3% இனை மாதாந்தம் நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும். மேலும் இந்த நிதியமானது புலம்பெயர் மற்றும் சுய தொழில் துறையினரையும் உள்ளடக்குகின்றது. இது எதிர்காலத்தில் மேலும் விரிவுபடுத்தப்படவுள்ளது. நிதியத்தினை நிர்வகித்தல் தவிர, ETF சபை, அதன் உறுப்பினர்களுக்கு அவர்களது பணிபுரியும் காலப்பகுதியில் சமூக மற்றும் நலன்புரி நன்மைகள் பலவற்றை நிறைவேற்றுவதில் ஈடுபடுகின்றது. |
| இலங்கை உப்புக் கம்பனி | கம்பனியின் பிரதான செயற்பாடுகளாக உப்பு உற்பத்தியும் விநியோகித்தலும் காணப்படுகின்றது. |

### 1.4. நிதி அறிக்கைகளுக்கான பொறுப்பு

1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் இலங்கை கணக்கியல் தரநிலைகள் (LKAS/SLFRS) என்பவற்றுக்கு இணங்க, குழு மற்றும் சபையின் நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதும் சமர்ப்பிப்பதும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் பணிப்பாளர் சபையினது பொறுப்பாகும்.

### 1.5. வெளியிடுவதற்கான அதிகாரம் பெறும் திகதி

2025 டிசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நுவுகு சபையின் நிதிக் கூற்றுக்களை 2026 மார்ச் மாதம் 23 ஆந் திகதியன்று பணிப்பாளர் சபையின் தீர்மானம் பிரகாரம் வெளியிடுவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

2025 டிசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை உப்புக் கம்பனியின் நிதிக் கூற்றுக்களை 2026 பெப்பரவரி மாதம் 10 ஆந் திகதியன்று பணிப்பாளர் சபையின் தீர்மானம் பிரகாரம் வெளியிடுவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## 2. முக்கியமான கணக்கியற் கொள்கைகளின் சுருக்கம்

### 2.1. பொதுவான கொள்கைகள்

#### 2.1.1. நிதி நிலைமைக் கூற்றுக்களை முன்வைத்தல்

நிதி நிலைமைக் கூற்றில் முன்வைக்கப்பட்ட நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தன்மையைக் கொண்டு வகைப்படுத்தப்பட்டு மற்றும் அவை தொடர்பில் திரவத்தன்மையைப் பிரதிபலிக்கும் பொருட்டு பட்டியலிடப்படுகின்றன. நிதிக் கூற்றுக்களைப் பாதிக்கும் பணவீக்கக் காரணிகளுக்கு செம்மையாக்கல்கள் ஏற்படுத்தப்படவில்லை. 12 மாதங்களுக்குள் மற்றும் அறிக்கையிடும் திகதியிலிருந்து 12 மாதங்களுக்குப் பிறகு மீட்சி அல்லது தீர்த்தல் மீதான பகுப்பாய்வொன்று இங்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

#### 2.1.2. இணக்கக் கூற்று

2025 டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மற்றும் அப்போது முடிவுற்ற ஆண்டிற்கான, நிறுவனத்தின் கணக்கியற் கொள்கை மற்றும் குறிப்புக்கள் ('நிதிக் கூற்றுக்கள்') உள்ளடங்கலாக நிதி நிலைமைக் கூற்று, விபரமான வருமானக் கூற்று, உரிமையாண்மை மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் (SLFRS/LKAS) இணங்குகின்றன.

இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் (SME களுக்கான SLFRS) வழங்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் LSL இன் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் முன்வைத்தல் என்பன 2007 இன் கம்பனிகள் சட்ட இல. 07 இன் தேவைகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றன.

#### 2.1.3. முக்கியமான கணக்குகளின் தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள்

சபை எதிர்காலத்திற்காக குறிப்பிட்ட சில மதிப்பீடுகள் மற்றும் ஊகங்களை மேற்கொள்கின்றது. எதிர்காலத்திற்கான எதிர்பார்ப்புகள் உட்பட வரலாற்று ரீதியான அனுபவம் மற்றும் ஏனைய காரணிகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புக்கள் தொடர்ச்சியாக கணிக்கப்படுகின்றன.

SME களுக்கான SLFRS உடன் இணங்குமாறு இலங்கை உப்புக் கம்பனி நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு சில தீர்க்கமான கணக்கீட்டு மதிப்பீடுகளைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. நிதிக் கூற்றுக்களுக்கு முக்கியமான ஊகங்கள் மற்றும் மதிப்பீடுகள் கொண்ட விடயங்கள் அல்லது உயர்ந்த அளவிலான தீர்ப்பு அல்லது சிக்கல் கொண்ட விடயங்கள் என்பன பின்வருமாறு எடுத்துக்காட்டப்படுகின்றன.

**தீர்ப்புக்கள்**

**பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள்:**

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள், இழப்புக்கள் பயன்படுத்தக்கூடியதற்கு மாறாக வரிக்குட்பட்ட இலாபம் கிடைப்பதில் சாத்தியப்பாடு உள்ளது என்ற அளவிற்கு எல்லா பயன்படுத்தப்படாத வரி இழப்புக்களும் இனங்காணப்படும். முக்கியமான முகாமைத்துவத் தீர்ப்பு, எதிர்கால வரித் திட்டமிடல் உபாயங்களுடன் எதிர்கால வரிக்குட்பட்ட இலாபங்களின் வாய்ப்பு மற்றும் மட்டத்தின் அடிப்படையில் இனங்காண முடியுமான பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களின் அளவினைத் தீர்மானிப்பதற்கு தேவைப்படுகின்றது.

#### 2.1.4. அளவிடுதலின் அடிப்படை

நிதிநிலமை அறிக்கைகள் நியாயமான மதிப்பில் அளவிடப்பட்ட சில சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தவிர, இலங்கை கணக்கியல் தரநியமங்கள் இலக்கம் 09 இன் கீழ் நிதிக் கருவிகளின் அவசியப்பாட்டுக்கு அமைய கடன்கழிப்பு செலவின் கீழ் முன்கொண்டு செல்லப்படும் நிதிச் சொத்துக்களுக்கும் தவிர, இலங்கைக் கணக்கியல் தரநியமங்கள் இலக்கம் 26 இன் கீழ் வரலாற்று செலவு உடன்படிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிநிலை அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பிப்பதில் இலங்கை கணக்கியல் தரநிலை இலக்கம் 26 ஆன கணக்கியல் மற்றும் ஓய்வூதிய நன்மைத் திட்டங்களின் மூலம் அறிக்கையிடல் பயன்படுத்தப்பட்டது.

143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை, நிதிநிலமை அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பிப்பதில், இலங்கைக் கணக்கியல் தரநியமங்கள் இலக்கம் 26 பிரகாரம் கணக்கியல் மற்றும் ஓய்வூதிய நலன் திட்டங்களின் மூலம் அறிக்கையிடுவதற்குப் பயன்படுத்தியது என்பது முன்னைய நிதிநிலமை அறிக்கைகளில் குறிப்பாக வெளிப்படுத்தப்படவில்லை. இந்த விடயத்தை வெளியிடாததால், முன்னைய நிதிநிலமை அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்ட தொகைகளை மீண்டும் வெளியிட வேண்டிய அவசியமில்லை.

இலங்கை உப்புக் கம்பனி லிமிடெட்டின் நிதி அறிக்கைகள் வரலாற்றுச் செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. நிறுவனத்தின் செயல்பாட்டு நாணயம் இலங்கை ரூபாய் மற்றும் நிதி அறிக்கைகள் இலங்கை ரூபாயில் வழங்கப்படுகின்றன.

### 2.1.5. தொழிற்படு மற்றும் முன்வைத்தல் நாணயம்

கம்பனியின் புழக்கத்திலுள்ள நாணயமான இலங்கை ரூபாவில் இந்நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. சபையின் ஆரம்ப பொருளாதார சூழலில் எல்லா நிதிசார் தகவல்களும் இலங்கை ரூபாவில் முன்வைக்கப்பட்டுள்ளன.

### 2.1.6. மட்டந்தட்டல்

இலங்கை கணக்கியல் தரநிலை - LKAS 1 'நிதி அறிக்கைகளை சமர்ப்பித்தல்' (LKAS 1) இல் அனுமதிக்கப்பட்டுள்ளதைத் தவிர, நிதிநிலமை அறிக்கைகளில் உள்ள தொகைகள் கிட்டிய ஆயிரம் ரூபாவுக்கு மட்டந்தட்டப்பட்டுள்ளன.

### 2.1.7. ஈடுசெய்தல

கணக்கியல் தரநிலை அல்லது விளக்கமளித்தல் (IFR விளக்கக் குழு மற்றும் தரநிலைகள் விளக்கக் குழுவால் வெளியிடப்பட்டது) தேவையாக்கப்பட்டால் அல்லது அனுமதிக்கப்பட்டால் அன்றி, வருமானம் மற்றும் செலவுகள் வருமானக் கூற்றில் ஈடுசெய்யப்படமாட்டாது. அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை ஈடுசெய்வதற்கு சட்டப்பூர்வமாக நடைமுறைப்படுத்தக்கூடிய உரிமை இருந்தால் மட்டுமே, மற்றும் நிகர அடிப்படையில் தீர்வு செய்ய அல்லது ஒரே நேரத்தில் சொத்துக்களை விடுவித்து பொறுப்புகளைத் தீர்க்கும் எண்ணம் இருந்தால் மட்டுமே, நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புகள் ஈடுசெய்யப்பட்டு நிகரத் தொகை நிதி நிலைமைக்கூற்றில் (SOFP) அறிக்கை செய்யப்படும்.

### 2.1.8. பொருள் மற்றும் திரட்டல்

ஒத்த உருப்படிகளின் ஒவ்வொரு பொருள் வகுப்பும் நிதி அறிக்கைகளில் தனித்தனியாக வழங்கப்படுகின்றன. 2016 ஜனவரி 1 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்த LKAS 1 மற்றும் LKAS 1 இல் 'வெளிப்படுத்தல் முன்முயற்சியில்' திருத்தங்களில் அனுமதித்துள்ளபடி அவை முக்கியமற்றவை அல்லாத போது, வேறுபட்ட தன்மை அல்லது செயல்பாட்டின் உருப்படிகள் தனித்தனியாக வழங்கப்படுகின்றன.

### 2.1.9. தொடர்ச்சியான வியாபார நிலமை

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் முகாமை தொடர்ச்சியான நிலைப்பாட்டினைத் தொடர்வதற்கான சபையின் இயலுமையை மதிப்பீடு செய்துள்ளதுடன், எதிர்வரும் எதிர்காலத்திற்கு வர்த்தகத்தில தொடர்ந்தும் ஈடுபடுவதற்கான வளங்களை சபை கொண்டுள்ளது என்பதில் திருப்தியடைந்துள்ளது. மேலும், தொடர்ச்சியான நிலைப்பாட்டினைத் தொடருவதற்கு சபையின் இயலுமை மீது குறிப்பிடத்தக்க சந்தேகத்தினை ஏற்படுத்தக் கூடிய ஏதேனும் நிச்சயமற்ற தன்மைகள் குறித்து முகாமை அறியவில்லை. அதனால், நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்தும் தொடர்ச்சியான நிலைப்பாட்டின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன.

இலங்கை உப்புக் கம்பனியின் பணிப்பாளர்கள் தொடர்ச்சியான நிலைப்பாட்டினைத் தொடர்வதற்கான சபையின் இயலுமையை மதிப்பீடு செய்துள்ளதுடன், அவர்கள் வர்த்தகத்தை நிறுத்தவோ அல்லது கலைப்பதற்கோ எண்ணவில்லை.

### 2.1.10. ஒப்பீட்டுத் தகவல்

கணக்கியற் கொள்கைகள் கம்பனியால் தொடர்ந்தும் செயற்படுத்தப்பட்டுள்ளதுடன் கடந்த ஆண்டுடன் இசைவானவையாகவும் உள்ளன. முன்னைய ஆண்டின் நிதிநிலமை அறிக்கைகளின் சமர்ப்பிப்பு மற்றும் வகைப்பாடு திருத்தப்பட்டது. சிறந்த சமர்ப்பித்தலுக்கு நடப்பு ஆண்டுடன் ஒப்பிடுவது பொருத்தமானது.

## 2.2. ஒருங்கிணைவின் அடிப்படை

### அ) ஒருங்கிணைவு

ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் 2025 டிசம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறு கம்பனியினதும் அதன் துணை நிறுவனங்களினதும் நிதிக் கூற்றுக்களை உள்ளடக்குகின்றன.

துணை நிறுவனமானது, குழுமம் கட்டுப்பாட்டினைப் பெற்றுக்கொண்ட நாளாகிய, கையகப்படுத்திய நாள் முதல் ஒருங்கிணைக்கபட்டுள்ளதுடன் அத்தகைய கட்டுப்பாடு முடிவடையும் நாள் வரை தொடர்ந்தும் ஒருங்கிணைக்கபட்டிருக்கும். துணை நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்கள் தாய் நிறுவனத்தைப் போன்றே அறிக்கையிடும் அதே காலப்பகுதியில் தயாரிக்கப்படும்.

எனினும், குழு கணக்கியற் கொள்கைகளுள் முன்னிலைப்படுத்தப்பட்ட இரு நிறுவனங்களினதும் கணக்கியற் கொள்கைகள் வித்தியாசமானவை. அவை குழுமத்திற்குரிய கணக்கீட்டுக் கொள்கைகளில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

**ஆ) துணை நிறுவனங்கள**

துணை நிறுவனங்களாவன, வாக்குரிமைகளின் அரைப்பகுதிக்கும் மேலாக பங்குரிமையினைப் பொதுவாகக்கொண்ட செயற்பாட்டுமற்றும்நிதிசார்கொள்கைகளைநிர்வகிப்பதற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆற்றலைக் கொண்ட குழுமத்தாலான நிறுவனங்களாகும். குழுமம் வேறோரு நிறுவனத்தைக் கட்டுப்படுத்துகின்றதா என மதிப்பிடும் போது நடைமுறைப்படுத்தக் கூடியதும் அல்லது மாற்றக்கூடியதுமான சாத்தியமான வாக்குரிமைகளின் நிலைப்பாடு மற்றும் விளைவு கருத்திற் கொள்ளப்படும். குழுமத்திற்கு கட்டுப்பாட்டினை மாற்றப்பட்ட நாள் முதல் துணை நிறுவனங்கள் முற்றாக ஒருங்கிணைக்கப்படும். கட்டுப்பாடு நிறுத்தப்பட்ட நாளிலிருந்து அவை ஒருங்கிப்பினை இழக்கும்.

கம்பனியிதும் மற்றும் அதன் துணை நிறுவனங்களினதும் எல்லா சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களிலும் மற்றும் ஒருங்கிணைப்பிலும உள்ளடங்கிய கம்பனியின் மற்றும் ஒருங்கிணைப்பில் உள்ளடங்கிய அதன் துணை நிறுவனங்களின் வருடத்திற்கான மொத்த இலாபங்கள் மற்றும் நட்டங்கள் முறையே விபரமான வருமானத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட கூற்றில் மற்றும் நிதி நிலைமைக் கூற்றிலும் காட்டப்பட்டுள்ளன.

**இ) அறிக்கையிடும் திகதி**

12 மாதங்களுடன் முடிவடையும் டிசம்பர் 31 ஆந் திகதியான பொதுவான அறிக்கையிடும் காலப்பகுதியில் துணை நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும்.

## 2.3. இலாபம் மற்றும் நட்டத்தினை அளவிடுவதன் அடிப்படை

### 2.3.1. வருமானம்

வருமானம் இனம் காணப்படுவது அதன் மூலம் பொருளாதார நலன்கள் வியாபார நிறுவனத்திற்கு வந்துசேரும் என அனுமானிக்கப்படும் மற்றும் அந்த வருமானத்தை நம்பிக்கையுடன் கணக்கிட முடியுமாக உள்ள அளவுக்காகும். வருமானத்தை இனம் காண்பதற்கு முன்னர் பின்வரும் விசேட அடையாளம் காணும் நியதிகளை பூரணப்படுத்தல் வேண்டும்.

பொருட்களின் விற்பனை மூலம் கிடைக்கப்பெறும் வருமானம் அடையாளம் காணப்படுவது பொருட்களின் விற்பனைக்காக அனுப்பப்பட்டு அதன் உரிமை கையளிக்கப்படும் போதாகும். கழிவு மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் சார்ந்த அரசாங்கம் சார்பில் சேகரிக்கப்படும் வரிகள் அற்ற கிடைக்கப்பெற்ற அல்லது கிடைக்கவுள்ள நிதியின் சாதாரண பெறுமதியின் மீது வருமானம் கணக்கிடப்படும். வருமானத்தை அடையாளம் காண்பதற்கு முன்னர் பின்னர் விசேட அடையாளம் காணும் நியதிகளையும் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

**அ) பொருட்களின் விற்பனை**

பொதுவாக விற்பனைக்காக பொருட்களை ஏற்றியனுப்பும் போது பொருட்களுக்கே உரிய தனித்துவமான அபாயங்கள் மற்றும் பொருட்களின் உரிமைக்கான நலன்கள் அவற்றை கொள்வனவு செய்பவருக்கு கையளிக்கப்பட்டிருக்கும் போது பொருட்களின் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானம் அடையாளம் காணப்படுகின்றது.

**ஆ) சேவைகளை நிறைவேற்றல்**

ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த மனித உழைப்பு மணித்தியாலங்களின் சதவீதமாக தற்போதைய தினம் வரையில் செலவு செய்யப்பட்ட மொத்த மனித உழைப்பு மணித்தியாலங்களைக் கருத்திற்கொண்டு நிர்ணயிக்கப்படும் ஏற்புடைய பணிகள் நிறைவுசெய்யப்பட்ட கட்டத்திற்கு மதிப்பிட்டு சேவைகளை நிறைவேற்றுவதன் மூலம் கிடைக்கப்பெறும் வருமானம் அடையாளம் காணப்படும். ஏற்புடைய ஒப்பந்தப் பணியின் பெறுபேறாக நம்பகத்தன்மையுடன் கணக்கிட முடியாத போது மீள அறவிட முடியுமான செய்யப்பட்ட செலவின் அளவு வரை மாத்திரம் வருமானம் அடையாளம் காணப்படும்.



143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

**இ) வட்டி**

சொத்தின் மீதான பயனுள்ள வட்டி வீதம் கணக்கிடப்படும் கால வீதத்தை அடிப்படையாகக் கொண்டு வருமானம் அடையாளம் காணப்படும்.

**ஈ) வேறு**

வேறு வருமானம் திரண்ட அடிப்படையில் அடையாளம் காணப்படும்.

### 2.3.2. வட்டி மற்றும் ஒத்த வருமானமும் செலவும்

கடன் தீர்ப்பனவுச் செலவில் அளவிடப்படும் எல்லா நிதிச் சாதனங்களுக்காக நிதிச் சொத்துக்களையுடைய வட்டி விற்பனைக்கு உள்ளவையாகவும் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் பெயர் குறிப்பிடப்பட்ட நிதிச் சாதனங்களாகவும் வகைப்படுத்தப்படுவதுடன், வட்டி வருமானம் அல்லது செலவு பயனுறுதிமிக்க வட்டி வீதத்தைப் (EIR) பயன்படுத்தி பதிவு செய்யப்பட்டுள்ளது. நிதிச்சொத்துக்கள் அல்லது நிதிப் பொறுப்புக்கள் மீதான தேறிய காவுகைத் தொகைக்கு பொருத்தமான விதத்தில், மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுக் கொடுப்பனவுகள் அல்லது கிடைப்பனவுகளை நிதிச் சொத்துக்களின் குறுகிய கால அல்லது எதிர்பார்க்கப்பட்ட ஆயுட் காலத்தினூடாக EIR துல்லியமாகக் தள்ளுபடி செய்கின்றது. நிதிச் சாதனங்களின் எல்லா ஒப்பந்த ரீதியான நிபந்தனைகளையும் (உதாரணமாக, முன்கொடுப்பனவு விருப்ப படிகள்) மதிப்பீட்டுக் கணக்கில் வைப்பதுடன், எதிர்கால பற்று நட்டங்கள் அல்லாமல், EIR இன் முக்கிய அங்கமாக உள்ளதும் சாதனங்களுக்கு நேரடியான காரணிகளாக இருக்கக்கூடியதுமான ஏதேனும் கட்டணங்களை அல்லது வருமானம் சார் செலவினங்களை உள்ளடக்குகின்றது. வட்டி வருமானம் கூப்பன் வருமானத்தை மற்றும் சாதனங்களின் தவணைப்பணம் அல்லது விலைக்கழிவின் கடன்கழிப்பு மீதான ஏதேனும் இலாபத்தையோ அல்லது நட்டத்தையோ உள்ளடக்குகின்றது.

நிதிச்சொத்தொன்றின் பெறுமதி அல்லது பெறுமதி இழப்பு நட்டம் காரணமாக குறைக்கப்பட்ட ஒத்த நிதிச் சொத்துக்களின் தொகுதி பதிவு செய்யப்பட்டதும், பெறுமதி இழப்பு நட்டத்தினை அளவிடும் நோக்கத்திற்காக எதிர்கால காசுப் பாய்ச்சலை தள்ளுபடி செய்வதற்கு பயன்படும் மூல வட்டி வீதத்தினைப் பயன்படுத்தி வட்டி வருமானம் தொடர்ந்தும் இனங்காணப்படும்.

அவ்வருடத்தின் டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிதியத்தின் ஒவ்வொரு அங்கத்தவரினதும் தனிப்பட்ட கணக்கின் பற்றுக்கான தொகை மீதான, நிதியத்தின் பண முதலீட்டிலிருந்து வருமானத்தின் மூலம், அவ்வப்போது அமைச்சரின் மற்றும் நிதிசார் விடயங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒப்புதலோடு சபை நிர்ணயிக்கும் ஒவ்வொரு வருடமும் செலுத்தப்பட வேண்டிய, மூன்று சதவீதத்திற்கு குறையாத, சபை அவ்வாறான வீதத்தில் வட்டி செலுத்த வேண்டும் என்ற ETFB சட்டத்தின் 22 ஆவது பிரிவின் பிரகாரம் வட்டிச் செலவினம் இனங்காணப்படும்.

### 2.3.3. பங்கிலாப வருமானம் மற்றும் செலவினம்

பங்கிலாப இலாபமானது கொடுப்பனவைப் பெறுவதற்கான தாபனத்தின் உரிமை ஏற்றுக்கொள்ளப்படும் போது இனங்காணப்படுகின்றது. நிதியத்தின் பண முதலீட்டினால் தேறக்கூடிய இலாபங்களில் இருந்து சபை பங்கிலாபங்களைப் பிரகடனப்படுத்த வேண்டும் என்ற ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 14 ஆவது பிரிவின் பிரகாரம் பங்கிலாபச் செலவு இனங்காணப்படும்.

### 2.3.4. ஏனைய வருமானங்கள்

ஊழியரின் சேவைக் காலம் முழுவதும் கடன் கழிப்புச் செய்யப்படும் ஊழியர் கடன்களில் சாதாரணப் பெறுமதியை மதிப்பிடுவதன் மூலம் கிடைக்கப்பெறும் வட்டி வருமானத்திற்கு மேலதிகமாக வேறு ஏற்புடைய கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளும் வியாபார நிறுவனங்களின் உரிமை உறுதிப்படுத்தப்படும் போது வேறு வருமானங்கள் இனங்காணப்படுகின்றன.

## 2.4. வரிவிதிப்பு

### 2.4.1. தற்போதைய வரிகள்

கடந்த ஆண்டுகளில் செலுத்த வேண்டிய வரிக்கு ஏதேனும் சரிப்படுத்தல்கள் மற்றும் அமுலாக்கப்பட்ட அல்லது அறிக்கையிடும் திகதியில் குறிப்பிடத் தக்க வகையில் அமுலாக்கப்பட்ட வட்டி வீதங்களைப் பயன்படுத்தி வருடத்திற்கான வசிக்குட்பட்ட வருமானம் அல்லது நட்டதின் மீதான எதிர்பார்க்கப்பட்ட வரி செலுத்த வேண்டியவை அல்லது கிடைக்க வேண்டியவையே தற்போதைய வரி ஆகும்.

கடன் கழிப்பு ஆதாயம் மற்றும் வருமான வரிச் செலவினம் குறித்து ஒரு நியாயமான நோக்கினை வழங்குவதற்கு கடன்கழிப்பு ஆதாயக் கணக்கிற்கு மீளச் சேர்ப்பதற்கு ஆண்டிறாகன திறைசேரி முறிகள் மற்றும் உண்டியல்கள் மீதான ஈட்டப்பட்ட வருமானத்திற்கு பொருந்தக்கூடிய நிறுத்தி வைப்பு வரியின் (WHT) விகிதாசாரத்தினை இனங்காண்பதற்கு சபை அதன் கணக்கியற் கொள்கைகளை மாற்றியது.

தற்போதைய செலுத்தவேண்டிய வரி வருடத்திற்கான வரிக்குட்பட்ட இலாபத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. வருமான வரிக்கான ஏற்பாடு உள்நாட்டு வருவாய் சட்டத்தின் ஏற்பாட்டின் பிரகாரம் கணக்கிடப்பட்ட மற்றும் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிட்டுள்ளவாறு வருமானம் மற்றும் செலவினக் கூறுகளின் அடிப்படையில் உள்ளது.

**2.4.2. பிற்போடப்பட்ட விரிவிதிப்பு**

ஐந்தொகைத் திகதியில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரி அடிப்படைகளுக்கு இடையிலான எல்லா தற்காலிக வித்தியாசங்கள் மற்றும் அறிக்கையிடும் காலத்திற்கான அவற்றின் காவுகைத் தொகைகள் மீது பொறுப்பு முறைமையினைப் பயன்படுத்தி பிற்போடப்பட்ட வரி வழங்கப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் எதிர்காலத்தில் வரிக்குட்பட்ட இலாபத்தினை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் எல்லா தற்காலிக வித்தியாசங்களுக்கும் இனங்காணப்படும். பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் எதிர்காலத்தில் வரிக்குட்பட்ட இலாபத்தினை மற்றும் ஏதேனும் பயன்படுத்தப்படா வரி இழப்புக்களை அல்லது பயன்படுத்தப்படா வரிக்கடன்களைக் குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படும் எல்லா தற்காலிக வித்தியாசங்களுக்கும் இனங்காணப்பட்டு மீட்கப்படமாட்டாது என்பதை விட வாய்ப்பு உள்ள தற்போதைய அல்லது மதிப்பிடப்பட்ட எதிர்கால வரிக்குட்பட்ட இலாபம் மீதான உயர்ந்த தொகையில் பிற்போடப்பட்ட சொத்துக்கள் அளவிடப்படும்.

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களின் தேறிய காவுகைத் தொகை ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன் எதிர்கால வரிக்குட்பட்ட இலாபங்களின் தற்போதைய மதிப்பீட்டினைப் பிரதிபலிப்பதற்கு சரிப்படுத்தப்படும். சரிப்படுத்தல்கள் இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படும்.

அமுலாக்கப்பட்ட அல்லது அறிக்கையிடும் திகதியில் குறிப்பிடத் தக்க வகையில் அமுலாக்கப்பட்ட வரி வீதங்களின் அடிப்படையில் பிற்போடப்பட்ட வரிச் சொத்து தேறப்பட வேண்டும் அல்லது பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு தீர்க்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கும் காலங்களில் வரிக்குட்பட்ட இலாபத்திற்கு (வரி இழப்பு) பிரயோகிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் வரி வீதங்களில் பிற்போடப்பட்ட வரி கணக்கிடப்படும்.

**2.5. வெளிநாட்டு நாணயப் பரிமாற்றம்**

கம்பனியின் புழக்கத்திலுள்ள நாணயமான இலங்கை ரூபாவில் நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. பரிவர்த்தனை திகதியில் நடைமுறையிலுள்ள தொழிற்பாட்டு நாணய விகிதத்தில் ஆரம்பத்தில் வெளிநாட்டு நாணயங்களில் பரிவர்த்தனைகள் பதிவுசெய்யப்படும். ஐந்தொகைத் திகதியில் நடைமுறையில் உள்ள பரிமாற்றத்தின் தொழிற்பாட்டு நாணய விகிதத்தில் மீள்பரிமாற்றம் செய்யப்பட்ட வெளிநாட்டு நாணயங்களில் நாணயச் சொத்துக்களும் பொறுப்புக்களும் நிர்ணயிக்கப்படும். எல்லா வித்தியாசங்களும் இலாபம் அல்லது நட்டத்திற்கு எடுக்கப்படும். வெளிநாட்டு நாணயத்தில் வரலாற்றுச் செலவின் பிரகாரம் அளவிடப்படும் நாணயமற்ற உருப்படிகள் ஆரம்ப கொடுக்கல் வாங்கல்களின் திகதியகளில் உள்ளவாறு பரிமாற்ற வீதங்களைப் பயன்படுத்தி பரிமாற்றம் செய்யப்படும். வெளிநாட்டு நாணயத்தில் நியாயமான பெறுமதியில் அளவிடப்படும் நாணயமற்ற உருப்படிகள் நியாயமான பெறுமதி தீர்மானிக்கப்பட்ட திகதியில் பரிமாற்ற வீதங்களைப் பயன்படுத்தி பரிமாற்றம் செய்யப்படும்.

**2.6. முதலீடுகள் மற்றும் ஏனைய நிதிச் சொத்துக்கள்**

**2.6.1. வகையீடு**

சபையானது தனது நிதிச் சொத்துக்களை பின்வரும் அளவீட்டுத் தொகுதிக்குள் இருந்த வண்ணம் 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் வகையீடு செய்கின்றது.

- சாதாரணப் பெறுமதியின் பின்னர் சமகாலத்தில் கணக்கிடப்பட வேண்டியுள்ள நிதிச் சொத்துக்கள் (வேறு விஸ்தீரண வருமானங்கள் ஊடாகவோ அல்லது இலாப நட்டத்தின் ஊடகவோ) மற்றும்
- கடன் கழிப்பு செலவின் மீது கணக்கிடப்படவுள்ள நிதிச் சொத்துக்கள்.

  இந்த வகையீடு நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பாய்ச்சலின் ஒப்பந்தம் மற்றும் நிபந்தனைகளை முகாமை செய்வதற்கான நிறுவன ரீதியான வியாபார மாதிரியின் மீது தங்கியுள்ளது.



143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

சாதாரணப் பெறுமதியின் மீது கணக்கிடப்படும் சொத்துக்கள் தொடர்பில் நலன்கள் மற்றும் நட்டம் அடைதல் இலாபம் அல்லது நட்டத்தினுள் அல்லது வேறு விஸ்தீரண வருமானத்தினுள் அறிக்கையிடப்படும். விற்பனைக்காக தடுத்துவைக்கப்படாத பங்குரிமை செயலாற்றுகை கருவிகள் தொடர்பில் நோக்கும் போது, இது தங்கியிருப்பது வேறு விஸ்தீரண வருமானங்கள் ஊடாக சாதாரண பெறுமதியின் (FVOCI) மீது பங்குரிமை முதலீடுகளை கணக்கிடுவதற்காக ஆரம்ப இனம்காணும் சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்ய முடியாத தேர்வொன்று நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்டதா என்ற விடயத்தின் அடிப்படையிலாகும்.

அந்தச் சொத்தில் நிகழும் மாற்றங்களை முகாமை செய்யும் பொருட்டு தனது வியாபார மாதிரியை பயன்படுத்தும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் கடன் முதலீட்டு நிதியங்கள் மீள்வகையீடு செய்யப்படுகின்றன.

### 2.6.2. இனம்காணல் மற்றும் இனம்காணாப்படாமை

நிதிச் சொத்துக்களின் நிலையான கொள்வனவுகள் மற்றும் விற்பனை முறைகள் இனம்காணப்படுவது நிதியம் அந்தச் சொத்துக்களை கொள்வனவு செய்த அல்லது விற்பனை செய்த ஏற்புடைய வியாபார தினத்திற்காகும். நிதிச் சொத்துக்கள் இனம்காணப்படாமை அந்த நிதிச் சொத்துக்களின் நிதிப் பாய்ச்சலொன்றைப் பெற்றுக்கொள்ளும் உரிமை நிறைவடைந்துள்ள போது அல்லது கையளிக்கும் போது மற்றும் உரிமை பற்றிய அனைத்து ஆபத்துக்கள் மற்றும் கொடைகள் நிதியத்தினால் போதியளவு கையளிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்திலாகும்.

### 2.6.3 கணக்கிடுதல்

ஆரம்ப இனங்காணலின் போது நிதியத்தினால் தனது நிதிச் சொத்தொன்றை இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சாதாரணப் பெறுமதியின் மீது அல்லாத தனது நிதிச் சொத்தொன்று தொடர்பில் கணக்கிடப்படுவது அந்த நிதிச் சொத்தை கையகப்படுத்திக்கொள்வதற்கு நேரடியாக பொறுப்பேற்க முடியுமான அங்கு கொடுக்கல் வாங்கல் செய்ய முடியுமான செலவினத்திற்கு மேலதிகமாக அதன் சாதாரண பெறுமதியின் மீதாகும். இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சாதாரண பெறுமதியின் மீது முன்கொண்டு செல்லப்படும் நிதிச் சொத்துக்களின் கொடுக்கல் வாங்கல் செலவினங்கள் செலவு வைக்கப்படுவது இலாப அல்லது நட்டக் கணக்கிலாகும். நிதிச் சொத்துக்களின் காசுப் பாய்ச்சல், வெறுமனே முதலீடு செய்யப்பட்ட ஆரம்ப நிதியின் மற்றும் வட்டியின் கொடுப்பனவுகள் மாத்திரமா என தீர்மானிக்கும் சந்தர்ப்பத்தில் இடைதொடர்புள்ள பெறப்பட்ட நிதிச் சொத்துக்கள் அவற்றின் சராசரியாக கணிக்கப்படும்.

### 2.6.3.1 கடன் செயலாற்றுகைக் கருவி

கடன் செயலாற்றுகைக் கருவி தொடர்பில் பிற்காலத்தில் செய்யப்படும் கணக்கிடல் தங்கியிருப்பது, சொத்துக்களை முகாமை செய்வதற்காக நிதியத்தின் வியாபார மாதிரி மற்றும் சொத்துக்கு ஏற்புடைய நிதிப் பாய்ச்சலின் அடையாளங்களின் மீதாகும். நிதியத்தினால் தனது கடன் செயலாற்றுகை கருவிகளை வகையீடு செய்யும் அளவீடுகள் மூன்று வகைப்படும்.

**கடன்கழிப்புச் செலவினம்:** ஒப்பந்தம் செய்யப்பட்ட நிதிப் பாய்ச்சல்களை சேகரிப்பதற்காக தடுத்துவைக்கப்படும் சொத்துக்கள் அந்த காசுப் பாய்ச்சலில் வெறுமனே ஆரம்ப முதலீட்டு தொகையில் மற்றும் அதன் வட்டியுடன் தொடர்புடைய கொடுப்பனவுகளை மாத்திரம் பிரதிநிதித்துவம் செய்யும் சந்தர்ப்பங்களில் கடன் கழிப்பு செலவுக்கு அமைய கணக்கீடு செய்யப்படும். இந்த நிதிச் சொத்துக்கள் மூலம் உழைக்கப்படும் வட்டி வருமானம் செயலுக்கமுள்ள வட்டி வீத முறையைப் பயன்படுத்தி நிதி வருமானங்களில் உள்ளடக்கப்படும். சொத்துக்கள் இனம்காணலின் மீது எழும் ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் ஏற்படின் அது இலாபம் அல்லது நட்டத்திற்குள் நேரடியாக இனம் காணப்பட்டு அன்னியச் செலாவணி காரணமாக எழும் இலாபம் அல்லது நட்டத்துடன் வேறு இலாபம் கூடுநட்டம்ரூ இற்குள் உள்ளடக்கப்படும். சொத்துக்கள் பலவீனமடையயும் காரணத்தினால் நிகழும் நட்டம், இலாபம் அல்லது நட்டக் கூற்றில் தனியான நிரல் விடயமொன்றாக சமர்ப்பிக்கப்படும்.

**வேறு விஸ்தீரண வருமானத்தின் ஊடாக சாதாரணப் பெறுமதி** FVOCI : ஒப்பந்தம் செய்யப்பட்ட நிதிப் பாய்ச்சல்களை சேகரிப்பதற்காக மற்றும் நிதிச் சொத்துக்களை விற்பனை செய்வதற்காக தடுத்துவைக்கப்படும் சொத்துக்கள் அந்த காசுப் பாய்ச்சலில் வெறுமனே ஆரம்ப முதலீட்டு தொகையில் மற்றும் அதன் வட்டியுடன் தொடர்புடைய கொடுப்பனவுகளை மாத்திரம் பிரதிநிதித்துவம் செய்யும் சந்தர்ப்பங்களில் வேறு விஸ்தீரண வருமானத்தின் ஊடாக சாதாரண பெறுமதிக்கு அமைய கணக்கீடு செய்யப்படும். இலாபம் அல்லது நட்டம் பலவீனமடைவதை இனம் காணல், வட்டி வருமானம் மற்றும் இலாபம் அல்லது நட்டத்திற்குள் இனம் காணப்படும் அன்னியச் செலாவணி இலாபம் அல்லது நட்டம் தவிர முன்கொண்டு செல்லப்படும் பணத்தில் ஏற்படும் அசைவுகள் வேறு விஸ்தீரண வருமானங்கள் ஊடாக கணக்கிடப்படும். நிதிச் சொத்தொன்று இனம்காணப்படாத போது வேறு விஸ்தீரண வருமானத்திற்குள் ஏற்கனவே இனம்காணப்பட்ட திரண்ட இலாபம் அல்லது நட்டத்தை நோக்கி மீள்வகையீடு செய்யப்பட்டு வேறு இலாபம் / நட்டத்தில் காட்டப்படும். இந்த நிதிச் சொத்துக்கள் மூலம் உழைக்கப்படும் வட்டி வருமானம் பயனுள்ள வட்டி வீத முறையைப் பயன்படுத்தி நிதி வருமானங்களில் உள்ளடக்கப்படும். அன்னியச் செலாவணி காரணமாக எழும் இலாபம் அல்லது நட்டத்துடன் வேறு இலாபம்/ (நட்டம்) இற்குள் உள்ளடக்கப்படும். சொத்துக்கள் பலவீனமடையயும் காரணத்தினால் நிகழும் நட்டம், இலாபம் அல்லது நட்டக் கூற்றில் தனியான நிரல் விடயமொன்றாக சமர்ப்பிக்கப்படும்.

**இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சாதாரண பெறுமதி FVTPL :** கடன் கழிப்பு செலவினம் அல்லது வேறு விஸ்தீரண வருமானத்தின் ஊடாக சாதாரண பெறுமதிக்கான நியதிகளை பூரணப்படுத்தாத சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சாதாரண பெறுமதியின் கீழ் கணிப்பீடு செய்யப்படும். இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சாதாரண பெறுமதியின் கீழ் பிற்காலத்தில் கணிப்பீடு செய்யப்படும் கடன் முதலீடு ஒன்றின் இலாபம் அல்லது நட்டத்திற்குள் இனம் காணப்பட்டு அது நிகழ்ந்த காலப் பிரிவில் வேறு இலாபம் அல்லது (நட்டத்தின்) கீழ் தேறியதாக சமர்ப்பிக்கப்படும்.

### 2.6.3.2 பங்குரிமை செயலாற்றுகை கருவிகள்

நிதியம் தனது அனைத்து பங்குரிமை முதலீடுகளையும் சாதாரணப் பெறுமதிக்கு அமைய பிற்காலத்தில் கணிப்பீடு செய்யும். நிதிய முகாமைத்துவத்தினால் வேறு விஸ்தீரன வருமானத்திற்குள் பங்குரிமை முதலீடுகளை சாதாரண பெறுமதியுடன் கூடிய இலாபம் அல்லது நட்டத்தை சமர்ப்பிக்க தெரிவுசெய்யப்பட்டிருக்குமிடத்து ஏற்புடைய முதலீட்டை இனம்காணாத காரணத்தினால் நிகழும் சாதாரண பெறுமதியுடன் கூடிய இலாபம் அல்லது நட்டம், இலாபம் அல்லது நட்டத்தை நோக்கி பிற்காலத்தில் மீள்வகையீட்டுக்கு உட்படமாட்டாது. கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்வது தொடர்பில் நிதியத்திற்குச் சொந்தமான தனது உரிமையை உறுதிசெய்யுமிடத்து இலாபம் அல்லது நட்டத்திற்குள் அந்த முதலீகளின் மூலம் உழைக்கப்படும் பங்கிலாபம் தொடர்ச்சியாக வேறு விஸ்தீரண வருமானமாக இனம் காணப்படும்.

இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சாதாரண பெறுமதி மீது கணக்கிடப்பட்ட நிதிச் சொத்துக்களின் சாதாரண பெறுமதியில் நிகழும் மாற்றங்கள், ஏற்புடையவாறு இலாபம் அல்லது நட்டத்தின் கீழ் இனம்காணப்படும். வேறு விஸ்தீரண வருமானத்தின் ஊடாக கணிப்பிடப்படும் பங்குரிமைகள் முதலீட்டின் மீது மேற்கொள்ளப்படும் வலுக்குறை நட்டம் (மற்றும் வலுக்குறை நட்டங்களின் மாற்று) சாதாரண பெறுமதி விடயத்தில் நிகழும் மாற்றங்களினால் பிரித்தறியப்பட்டு அறிக்கையிடப்படுவதில்லை.

**அடிப்படை நிதிச் சாதனங்கள்**

நிதிச் சொத்துக்கள் வியாபாரத்திற்கு விடப்பட்ட நிதிச் சொத்துக்கள், முதிர்ச்சிக்கு விடப்பட்டவை, கடன்கள் மற்றும் வருமதிகள் மற்றும் விற்பனைக்கு உள்ள நிதிச் சொத்துக்கள் என வைகப்படுத்தப்பட்டுள்ளன. கம்பனி அதன் நிதிச் சொத்துக்களின் வகைப்படுத்தலை ஆரம்ப இனங்காணலின் போது தீர்மானிக்கின்றது.

**கடன்கள் மற்றும் வருமதிகள்**

கடன்கள் மற்றும் வருமதிகள் குறுங்கால வைப்புக்கள், நிலையான வைப்பு மற்றும் வியாபாரமும் ஏனைய வருமதிகளும் ஆகியவற்றைக் கொண்டுள்ளன. எல்லா நிதிச் சாதனங்களும் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதியில் நிதிச் சொத்துக்கள் தொடர்பில் தவிர அவற்றின் நியாயமான பெறுமதியில் மற்றும் கொடுக்கல் வாங்கல் செலவுகளில் ஆரம்பத்தில் அளவிடப்படும்.

கடன்களும் வருமதிகளும் செயற்படு சந்தையொன்றில் விலை குறிக்கப்படாத நிலையான அல்லது நிர்ணயிக்கக்கூடிய கொடுப்பனவுகளுடனான மரபு சாரா நிதிச் சொத்துக்களாகும். ஆரம்ப அளவீட்டின் பின்னர், அவ்வகை நிதிச் சொத்துக்கள் கடன்கழிப்புச் செலவில் பிற்பகுதியில் அளவிடப்படும். பெறுமதி இழப்பின் காரணமாக எழும் நட்டங்கள் விபரமான வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

**நிதிச் சொத்துக்களின் பாதிப்பு**

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் ஒரு நிதிச் சொத்து பலவீனமடைந்துள்ளது என்பதற்கு ஏதேனும் புறநிலை ஆதாரம் உள்ளதா என்பதை நிறுவனம் மதிப்பிடுகிறது. சொத்தின் ஆரம்ப அங்கீகாரத்திற்குப் பிறகு ஏற்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிகழ்வுகளின் விளைவாக சேதம் ஏற்பட்டதற்கான புறநிலை சான்றுகள் இருந்தால் மாத்திரமே நிதிச் சொத்து பலவீனமடைந்ததாகக் கருதப்படுகிறது. அவ்வாறே, அந்த இழப்பு நிகழ்வு மதிப்பிடப்பட்ட எதிர்கால பணத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. நம்பகத்தன்மையுடன் மதிப்பிடக்கூடிய நிதிச் சொத்தின் ஓட்டங்கள், கடனாளின் கணிசமான நிதிச் சிரமம், வட்டி அல்லது அசல் கொடுப்பனவுகளில் கடன் தவறுதல் அல்லது அவர்களின் வகையறவு அற்ற நிலை அல்லது பிற நிதி மறுசீரமைப்பில் நுழைவதற்குள்ள நிகழ்தகவு மற்றும் மதிப்பிடப்பட்ட எதிர்காலத்தில் அளவிடக்கூடிய குறைவு இருப்பதைக் காணக்கூடிய தரவுகள் குறிப்பிடுவது போன்ற குறைபாடுகள் காணப்படலாம். அவ்வாறே, பணப்புழக்கம், இயல்புநிலையுடன் தொடர்புடைய பொருளாதார நிலைமைகளின் நிலுவைகளில் ஏற்படும் மாற்றங்கள் போன்றவையும் தாக்கத்தை செலுத்தும்.

143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

**நிதிப் பொறுப்புக்கள்**

நிதிப்பொறுப்புக்களின் வரையறை மற்றும் ஒப்பந்திரீதியான உடன்படிக்கையின் உள்ளடக்கத்தின் பிரகாரம் இலாபம் அல்லது நட்டம் அல்லது ஏனைய நிதிப் பொறுப்புக்கள் ஊடாக நியாயமான பெறுமதியில் நிதிப் பொறுப்புக்களாக நிதிப் பொறுப்புக்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

எல்லா நிதிச் சாதனங்களும் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதியில் நிதிச் சொத்துக்கள் தொடர்பில் தவிர அவற்றின் நியாயமான பெறுமதியில் மற்றும் கொடுக்கல் வாங்கல் செலவுகளில் ஆரம்பத்தில் அளவிடப்படும்.

வட்டிக் கடன்கள் மற்றுமு் கடன்கள் மற்றும் ஏனைய நிதிப் பொறுப்புக்கள் (வியாபாரம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை) உள்ளடங்கலான நிதிப் பொறுப்புக்கள் முதலில் கையகப்படுத்துவதற்கு நேரடியாகக் கரணமாயுள்ள குறைந்த கொடுக்கல் வாங்கல் செலவில் நியாயமான பெறுமதியில் அளவிடப்பட்டு, தொடர்நதும் EIR முறைமையினைப் பயன்படுத்தி கடன்கழிப்புச் செலவில் அளவிடப்படுகின்றன. EIR இன் ஒன்றிணைந்த பகுதியான ஏதேனும் விலைக்கழிவு அல்லது தவணைப்பணம் மற்றும் செலவுகள் ஆகியவற்றைக் கணக்கில் எடுப்பதன் மூலம் கடன்கழிப்புச் செலவு கணிக்கப்படுகின்றது.

## 2.7. சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகள்

### 2.7.1 அடையாளம் காண்பதன் அடிப்படை

சொத்துடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதாரப் நலன்கள் சபையை நோக்கி வரும் இடம்பாடு காணப்படுமாயின் மற்றும் சொத்தின் விலை நம்பகத்தன்மையுடன் அளவிடப்படும் சாத்தியம் இருப்பின் சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் அடையாளம் காணப்படும். ரூ.10,000 தொகைக்கும் குறைவான ஒரு பொருளின் அலகு செலவை (பயன்பாட்டு செலவு உட்பட) சொத்து, ஆலை மற்றும் உபகரணமாக அடையாளம் காணாது அந்தப் பொருட்களை செலவாக அடையாளம் காண்பதும் சபையின் கொள்கையாகும். எவ்வாறாயினும், காணி, கட்டிடங்கள் மற்றும் வாகனங்களின் விலை (பயன்பாட்டுச் செலவுகள் உட்பட) அலகு எல்லை ரூ.10,000 என்ற போதிலும் மூலதனமாக்கப்படுகின்றது.

### 2.7.2 அளவீட்டின் அடிப்படை

சொத்துக்கள், ஆலை மற்றும் உபகரணங்களின் இலவச காணிகள் தவிர ஏனையப் பொருட்கள் குறைந்த திரட்டப்பட்ட தேய்மானம் மற்றும் ஏதேனும் குறைபாடு இழப்புகளின் மீது அளவிடப்படுகின்றன.

சொத்தின் கையகப்படுத்துதலுக்கு நேரடியாகக் காரணமான செலவினங்கள் செலவில் உள்ளடங்கும். சுயமாக நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்களின் விலையில் பொருட்கள் மற்றும் நேரடி உழைப்பு, சொத்துக்களை அவற்றின் நோக்கம் கொண்ட பயன்பாட்டிற்கான செயற்பாட்டு நிலைக்கு கொண்டு வருவதற்கு நேரடியாகக் கூறப்படும் பிற செலவுகள் என்பன உள்ளடங்கும். பொருட்களை அகற்றுவதற்கும் மற்றும் அவை இருக்கும் தளத்தை மீட்டெடுப்பதற்கான செலவுகள் மற்றும் தகுதியான கடன் செலவுகள் ஆகியன மூலதனமாக்கப்படும்.

சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் ஒரு பொருளின் பாகங்கள் வெவ்வேறு பயனுள்ள வாழ்க்கையைக் கொண்டிருக்கும் போது, அவை தனித்தனியான சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களாகக் கணக்கிடப்படுகின்றன.

### 2.7.3 அடுத்துவரும் செலவினம்

சொத்துக்கள், ஆலை மற்றும் உபகரணங்களின் ஒரு பகுதியைப் மாற்றுவதற்கான செலவு, அந்தப் பகுதியின் மூலம் எதிர்கால பொருளாதார நன்மைகள் நிறுவனத்திற்கு கிடைக்கக்கூடும் என்ற சாத்தியக்கூறு இருந்து, அதன் செலவை நம்பகமான முறையில் அளவிட முடியும் எனின், அந்தப் பொருளின் புத்தகப் பெறமதியில் அங்கீகரிக்கப்படும். மாற்றப்பட்ட பகுதியின் புத்தகப் பெறமதி கணக்கிலிருந்து நீக்கப்படும். சொத்துக்கள், ஆலை மற்றும் உபகரணங்களின் அன்றாட பராமரிப்பு மற்றும் சேவைச் செலவுகள், அவை ஏற்படும் போதே செலவினமாக அடையாளம் காணப்படும்.

சொத்துக்கள், ஆலை மற்றும் உபகரணங்களின் ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்ட செயல்திறன் மட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் எதிர்கால பொருளாதார நன்மைகளை மீளமைக்க அல்லது பேண உதவக்கூடிய பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புச் செலவுகள், அவை ஏற்படும் போது வருமானக் கூற்றில் செலவினமாக அடையாளம் காணப்படும்.

### 2.7.4 தேய்மானம்

சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் ஒவ்வொரு அலுகுகளின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலத்தின் மீது ஒரு நேர்கோட்டு அடிப்படையில் இலாபம் அல்லது நட்டத்தில் தேய்மானம் அளவிடப்படுகின்றது. காணி

மதிப்பிழக்கப்படவில்லை. தனிப்பட்ட சொத்துகளின் குறிப்பிடத்தக்க கூறுகள் மதிப்பிடப்படுகின்றன, மேலும் ஒரு கூறு சொத்தின் மீதமுள்ள பகுதியை விட வேறுபட்ட பயனுள்ள ஆயுளைக் கொண்டிருந்தால், அந்தக் கூறு தனித்தனியாக தேய்மானம் செய்யப்படுகின்றது.

ஒரு சொத்தின் தேய்மானம், பயன்பாட்டிற்காக வைத்திருக்கும் போது சொத்து விற்பனைக்கு வைக்கப்பட்டதாக வகைப்படுத்தப்பட்ட திகதி அல்லது சொத்து அடையாளம் காணப்படாத திகதி ஆகியவற்றில் முன்னைய திகதியில் முடிவடைகின்றது. சொத்துக்கள் தேய்மானம் ஆரம்பிக்கப்படுவது அது பயன்பாட்டுக்கு உள்ள மாதத்திலாகும். அவை நீக்கப்பட்ட மாதத்தில் தேய்மானம் ஏற்படாது. தேய்மான முறைகள், பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் எஞ்சிய மதிப்புகள் ஆகியவை அறிக்கையிடும் திகதியில் மதிப்பிடப்பட்டு, பொருத்தமானதாக இருப்பின் சரிசெய்யப்படும்.

| | வருடங்கள் (பயனுள்ள ஆயுட்காலம்) | தேய்மான வீதம் |
|---|---|---|
| கட்டிடங்கள் | 40 வருடங்கள | 2.5% |
| மோட்டார் வாகனங்கள் | 05 வருடங்கள் | 20% |
| கணினி உதிரிப் பாகங்கள் | 05 வருடங்கள் | 20% |
| தளபாடங்கள் | 10 வருடங்கள | 10% |
| இணைப்புகள் மற்றும் பொருத்திகள் | 10 வருடங்கள் | 10% |
| ஏனைய உபகரணங்கள் | 05 வருடங்கள் | 20% |

### 2.7.5. சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் அங்கீகாரத்தை நீக்குதல்

சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் ஒரு உருப்படி மற்றும் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு குறிப்பிடத்தக்க பகுதியும் அகற்றப்படும்போது அல்லது அதன் பயன்பாடு அல்லது அகற்றலில் இருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் எதிர்பார்க்கப்படாதபோது அது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சொத்தின் அங்கீகாரம் நீக்கப்படும்போது ஏற்படும் எந்த இலாபமோ அல்லது நட்டமோ சொத்து அங்கீகரிக்கப்படாத இலாபம் அல்லது இழப்பு அறிக்கையில் சேர்க்கப்படும். எஞ்சிய பெறுமதிகள், பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் தேய்மானத்தின் முறைகள் ஆகியவை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் மதிப்பாய்வு செய்யப்பட்டு, பொருத்தமாக இருப்பின் எதிர்காலத்தில் சரிசெய்யப்படும்.

சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் கருவிகளின் உருப்படிகள் திரண்ட பெறுமானத் தேய்வு மற்றும் ஏதேனும் திரண்ட பெறுமதி இழப்பு நட்டங்களைக் கழித்து வரலாற்றுச் செலவில் அளவிடப்படும். சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகளின் பெறுமானத் தேய்விற்கு பயன்படுத்தப்படும் வருடாந்த வீதங்களைக் கழித்து சொத்துக்களின் செலவினை ஒதுக்கீடு செய்யும் பொது பெறுமானத் தேய்வு விதிக்கப்படும்:

| | | |
|---|---|---|
| கட்டிடங்கள் மற்றும் அறுதிக் காணிகள் | ... | 2.5% |
| ஆலைகள் மற்றும் இயந்திரங்கள் | | |
| - பம்பிகள் மற்றும் உபகரணங்கள் | ... | 20% |
| - வேறு (மேசை உப்பு வலு நிலையம், அயடீன் தொழிற்சாலை, பாரம்தூக்கி மற்றும் வேறு ஆலை) | ... | 10% |
| உபகரணங்கள் | ... | 10% |
| தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் | ... | 10% |
| மென்பொருள் மற்றும் பிற கணினி நெட்வோர்க்குகள் | ... | 50% |
| மோட்டார் வாகனங்கள் | | |
| - பெருந் தெருக்கள் வாகனங்கள் | ... | 10% |
| - டிரக்டர் மற்றும் டேலர் | ... | 20% |
| அபிவிருத்தி வேலைகள் | ... | 20% |
| வளர்ந்த பெருந்தோட்டங்கள் - தென்னை | ... | 02% |

பெறுமானத் தேய்வு வீதம், பயன்தரு ஆயுட்காலம் அல்லது ஒரு சொத்தின் எஞ்சிய பெறுமதி ஆகியவற்றில் முக்கியமான மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளமைக்கான அறிகுறி இருப்பின், சொத்தின் பெறுமானத் தேய்வு புதிய எதிர்பார்ப்புக்களைப் பிரதிபலிப்பதற்கு எதிர்காலத்தில் திருத்தியமைக்கப்படும்.



143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகளின் ஓர் உருப்படியானது அகற்றுகை அல்லது அதன் பயன்பாடு அல்லது அகற்றுகை மூலம் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதார நன்மைகள் இல்லாத போது இனங்காண்பது நிறுத்தப்படும். சொத்தினை இனங்காண்பது நிறுத்தப்படுவதால் எழும் ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் (தேறிய அகற்றுகை வருவாய்கள் மற்றும் சொத்தின் காவுகைத் தொகை ஆகியவற்றிற்கு இடையிலான வித்தயாசமாகக் கணிக்கப்பட்ட) சொத்து இனங்காண்பது நிறுத்தப்பட்ட ஆண்டில் இலாபம் அல்லது நட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

- **உயிர் சொத்துக்கள்**

உயிர் சொத்துக்கள், முதிர்ச்சி அடைந்த உயிர் சொத்துக்கள் மற்றும் முதிர்ச்சி அடையாத உயிர் சொத்துக்கள் என இரு வகைப்படும். முதிர்ச்சி அடைந்த உயிர் சொத்துக்களாக அறுவடையைப் பெற்றுக்கொள்ள முடியுமான விசேட தரத்திலுள்ள அல்லது அடிக்கடி அறுவடையயைப் பெற்றுக்கொள்ள முடியுமான சொத்துக்களாகும். முதிர்ச்சி அடையாத உயிர் சொத்துக்களாக தற்காலம் அளவில் அறுவடையைப் பெற்றுக்கொள்ள முடியாத விசேட தரத்திற்கு உட்படாத சொத்துக்களாகும். தெங்குப் பயிர்ச் செய்கை மற்றும் நாற்று மேடைகள் உயிர் சொத்துக்களாக வகைப்படுத்தப்படுகின்றன. உடமை உயிர் சொத்துக்கள் விற்பனை செய்வதற்கோ அல்லது அறுவடையைப் பெற்றுக்கொள்வதற்கோ எண்ணமில்லாத போதும் விவசாய உற்பத்திகளாக அறுவடையைப் பெற்றுக்கொள்வதற்கு பயன்படுத்தாத உயிர் சொத்துக்கள் உள்ளடக்கப்படும்.

கடந்தகால நிகழ்வொன்றின் பெறுபேறாக ஏற்புடைய சொத்துக்களுடன் பின்னிப் பிணைந்து காணப்படும் எதிர்கால பொருளாதார நலன்கள் தன்னை நோக்கி வரும் என மற்றும் அந்தச் சொத்துக்களின் சாதாரணப் பெறுமதி அல்லது செலவு நம்பகமான முறையில் அளவிட முடியுமென நிறுவனம் அனுமானிக்கும் போது மற்றும் நிறுவனத்தினால் அந்த ஏற்புடைய சொத்துக்களை கட்டுப்படுத்துகின்ற போது மாத்திரம் அந்த நிறுவனம் தனது உயிர் சொத்துக்களை இனம் காணுகின்றது. உயிர் சொத்துக்கள் தொடர்பில் நிகழும் தேய்வு முழுமையாக இலாபம் அல்லது நட்டம் பற்றிய கூற்றுக்களில் அறவீடாக காட்டப்பட்டு ஏற்புடைய நட்டத்தை உறுதியாக அறிந்துகொண்ட பின்னர் அந்த நட்டம் ஏற்பட்ட ஆண்டில் அந்த சொத்துக்களுக்குரிய தேறியவைகள் முன்கொண்டு செல்லப்படும் கணக்குகளுக்கு குறைவு செய்யப்படும்.

- **உடமையுள்ள உயிர் சொத்துக்கள்**

உடமையுள்ள உயிர் சொத்துக்கள், இல 16 இலங்கை கணக்கீட்டுத் தரங்கள் – சொத்துக்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்கு அமைய அவற்றின் திரண்ட தேய்மாணம் மற்றும் மற்றும் திரண்ட குறைவு நட்டங்கள் இருப்பின் அவையும் கழிக்கப்பட்ட செலவுகளின் மீது, அளவிடப்படும். கன்றுகளை நட்டுதல் மற்றும் அறுவடையைப் பெற்றுக்கொள்ளும் (மரக் கன்றுகள் நடப்பட்ட பிரதேசம் முதிர்ச்சியடைந்து வளர்ந்த பின்னர்) காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்ட காணி சீறாக்கம், மறுசீரமைப்பு, புதிதாக கன்று நடல், மீண்டும் கன்று நடல், பயிர்களை பல்வகைப்படுத்தல், துணைப் பயிர்களை நடல் மற்றும் உரம் இடல் போன்றவற்றுக்கான செலவுகள் முதிர்ச்சியடையாத பயிர்செய்கைகள் என வகைப்படுத்தப்படும். இந்த முதிர்ச்சி அடையாத பயிர்ச் செய்கைகளுக்கான நிதியிடலுக்காக பயன்படுத்தப்படும் நீண்ட கால கடன் தொகைகளுக்குரிய வட்டி உட்பட ஏனைய ஏற்புடை அவசிய செலவுகளுக்குரிய நேரடிச் செலவுகளுக்கு அமைய எடுத்துக்காட்டப்படும். வருடத்தினுள் பயன்தரக்கூடிய உடமை உயிர்ச் சொத்துக்கள் (தெங்கு) மீது ஏற்படுத்தப்படும் செலவுகள் முதிர்ச்சியடைந்த சொத்துக்களுக்கு மாற்றப்படும்.

## 2.8 முதலீட்டுச் சொத்து

கொடுக்கல் வாங்கல் செலவுகள் உட்பட முதலீட்டுச் சொத்தக்கள் ஆரம்பத்தில் செலவில் அளவிடப்பட்டன. ஆரம்ப இனங்காணலின் பிற்பாடு, அறிக்கையிடும் தினத்தில் சந்தை நிலைமைகளைப் பிரதிபலிக்கும் நியாயமான பெறுமதியில் முதலீட்டுச் சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. முதலீட்டுச் சொத்துக்கள் மீதான நியாயமான விலையில் ஏற்படக் கூடிய மாற்றங்கள் காரணமாக எழக்கூடிய இலாபங்கள் மற்றும் நட்டங்கள் அவை ஏற்பட்ட காலப்பிரிவில் வருமானக் கூற்றில் உள்ளடங்குகின்றன.

சபையின் முதலீட்டுச் சொத்து விபரமான வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ள காவுகைப் பெறுமதியில் உள்ள மாற்றங்களுடன் திறந்த சந்தைப் பெறுமதிக்கு ஒவ்வொரு மூன்று வருடத்திலும் மீள் மதிப்பீடு செய்யப்படும்.

கிடைக்க வேண்டிய வாடகை குத்தகைக்கு விடப்பட்ட காலப்பகுதிக்குள் நேர் கோட்டு முறைமையின் அடிப்படையில் அமைக்கப்படும். வாடகைக் குடியிருப்பாளனுக்கு ஊக்குவிப்பொன்று (வாடகை அறவிடப்படாத காலப்பகுதி போன்ற) வழங்கப்படுகையில், முதலீட்டுச் சொத்தின் காவுகைப் பெறுமதி இவ்வடிப்படையில் வாடகை வருமானமாக இனங்காணப்பட்டதன் விளைவாக பிரத்தியேகமான சொத்தொன்றாக பதியப்பட்ட ஏதேனும் தொகையை நீக்கும்.

2022 ஆகஸ்ட் மாதம் 24 ஆம் திகதிய அரசாங்க மதிப்பீட்டாளரின் அறிக்கையின்படி, கொழும்பு 02, நவம் மாவத்தையில் அமைந்துள்ள 2 ஏக்கர் 1 ரூட் பேர்ச்சஸ் 28 அளவுள்ள காணி அரசாங்க மதிப்பீட்டாளரால் மதிப்பிடப்பட்டது. மேற்படி காணி மற்றும் கட்டிடத்தின் சாதாரண மதிப்பு ரூ. 4,587,406,450/= இருந்தது. மேலும், திறைசேரி செயலாளரால் வெளியிடப்பட்ட 2018 டிசம்பர் 31 ஆம் திகதிய சொத்து முகாமை சுற்றறிக்கை இலக்கம் 4/2018 இன் பிரகாரம் மதிப்பீட்டுத் திணைக்களத்தின் 2023 செப்டம்பர் 23 ஆம் திகதிய கடிதத்தின் மூலம், இந்த முதலீட்டுச் சொத்தின் மேற்குறிப்பிடப்பட்ட மதிப்பீடு 05 ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும் என எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**2.8.1. (அ) சபையின் முதலீட்டுச் சொத்துக்களின் விபரம் - விஸ்தீரணம் மற்றும் அமைவிடம்**

| அமைவிடம் | விஸ்தீரணம் (பேர்சஸ்) | முதலீட்டுச் சொத்தின் சாதாரணப் பெறுமதி |
|---|---|---|
| ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை, நவம் மாவத்தை, கொழும்பு 02. | 388 | ரூ. 4,566,000,000.00 |

| அமைவிடம் | கட்டிடம் (சதுர அடி) | முதலீட்டுச் சொத்தின் சாதாரணப் பெறுமதி |
|---|---|---|
| ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை, நவம் மாவத்தை, கொழும்பு 02. | 19,319 | ரூ. 21,406,450.00 |

**2.8.2. (ஆ) சபையின் முதலீட்டுச் சொத்துக்களின் விபரம் - விலைமதிப்பு**

| விலைமதிப்பீட்டாளரின் பெயர் / முகவரி மற்றும் அமைவிடம் | மதிப்பிடும் முறை மற்றும் குறிப்பிடத்தக்க விடயங்கள் கவனிக்க முடியாத உள்ளீடுகள் | மதிப்பீடுகளின் வரையறைகள் கவனிக்க முடியாத உள்ளீடுகள் ரூ. | முதலீட்டுச் சொத்தின் சாதாரணப் பெறுமதி ரூ. |
|---|---|---|---|
143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

(ரூ. '000)

| | காணி | கட்டிடங்கள் | மோட்டார் வாகனங்கள் | கணனிக் கருவிகள் | தளபாடங்கள், பொருத்திகள் மற்றும் அலுவலக கருவிகள் | குத்தகை காணியிலுள்ள கட்டிடங்கள் | பொறித் தொகுதி மற்றும் கருவிகள் | கடனீட்டு உயிர் சொத்துக்கள் | | அபிவிருத்திப் பணிகள் | நடைபெறும் கட்டுமானப் பணிகள் | மொத்தம் (ரூ. '000) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | முதிர்ச்சி யடையாத தாவரங்கள் | முதிர்ச்சி யடைந்த தாவரங்கள் | | | |
| **திரண்ட தேய்மானம்** | | | | | | | | | | | | |
| 2024 ஜனவரி 01 ஆம் திகதிக்கு மீதி | - | 1,182 | 208,128 | 65,421 | 93,906 | 196,399 | 243,439 | - | 2,833 | 312,307 | - | 1,123,614 |
| மூலதனக் கொள்கை மாற்றத்தின் தாக்கங்கள் | - | 591 | 40,110 | 41,227 | 25,009 | 15,836 | 16,230 | - | 245 | 12,152 | - | 151,399 |
| ஆண்டுக்கான தேய்மானக் கட்டணங்கள் | | | 1,360 | | | | | | | | | 1,360 |
| அகற்றல் | - | - | - | - | - | - | - | - | (986) | - | - | (986) |
| **2024 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி** | **-** | **1,772** | **249,598** | **106,648** | **118,915** | **212,234** | **259,669** | **-** | **2,092** | **324,459** | **-** | **1,275,388** |
| | | | | | | | | | | | | |
| 2025 ஜனவரி 01 ஆம் திகதிக்கு மீதி | - | 1,772 | 249,598 | 106,648 | 118,915 | 212,234 | 259,669 | 5,153 | 4,577 | 324,459 | - | 1,283,025 |
| ஆண்டுக்கான தேய்மானக் கட்டணங்கள் | - | 591 | 40,725 | 42,270 | 26,981 | 14,960 | 18,099 | - | 224 | 1,791 | - | 145,641 |
| அரசாங்க நிதியளிப்பு கடன் கழிப்பு | - | - | 1,360 | - | - | - | - | - | - | - | - | 1,360 |
| **2025 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி** | **-** | **2,363** | **291,683** | **148,918** | **145,896** | **227,195** | **277,769** | **5,153** | **4,611** | **326,250** | **-** | **1,429,837** |
| | | | | | | | | | | | | |
| **தேறிய புத்தகப் பெறுமதி** | | | | | | | | | | | | |
| 2024 ஜனவரி 01 ஆம் திகதியன்று | 20,000 | 22,438 | 138,251 | 138,759 | 113,991 | 435,433 | 72,453 | 10,500 | 14,884 | 13,944 | 8,060 | 988,714 |
| | | | | | | | | | | | | |
| 2024 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி | 20,000 | 21,848 | 99,968 | 103,241 | 111,489 | 430,079 | 61,572 | 16,963 | 21,100 | 1,791 | 18,298 | 906,350 |
| | | | | | | | | | | | | |
| **2025 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி** | **20,000** | **21,257** | **65,073** | **66,736** | **99,218** | **419,175** | **46,157** | **1,879** | **9,064** | **1,466** | **14,183** | **764,208** |

(ரூ '000)

| | | காணி | கட்டிடங்கள் | மோட்டார் வாகனங்கள் | கணினி உதிரிப்பாகங்கள் | தளபாடங்கள் மற்றும் ஏனைய கருவிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 22.2 | **சபை** | | | | | | |
| | **2024 ஜனவரி 01 ஆம் திகதிக்கு நிலுவை** | **20,000** | **23,620** | **103,324** | **204,180** | **83,076** | **434,200** |
| | கூட்டல் | - | - | - | 5,709 | 8,491 | 14,200 |
| | **2024 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிலுவை** | **20,000** | **23,620** | **103,324** | **209,889** | **91,567** | **448,400** |
| | | | | | | | |
| | **2025 ஜனவரி 01 ஆம் திகதிக்கு நிலுவை** | **20,000** | **23,620** | **103,324** | **209,889** | **91,567** | **448,400** |
| | கூட்டல் | - | - | - | 5,766 | 7,751 | 13,516 |
| | **2025 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிலுவை** | **20,000** | **23,620** | **103,324** | **215,655** | **99,318** | **461,916** |
| | | | | | | | |
| | **திரண்ட தேய்மானம்** | | | | | | |
| | **2024 ஜனவரி 01 ஆம் திகதிக்கு நிலுவை** | **-** | **1,182** | **39,176** | **65,421** | **17,818** | **123,596** |
| | மூலதனக் கொள்கை மாற்றத்தின் தாக்கங்கள் | - | 591 | 19,305 | 41,227 | 16,136 | 77,259 |
| | ஆண்டுக்கான தேய்மானக் கட்டணம் | - | - | 1,360 | - | - | 1,360 |
| | **2024 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிலுவை** | **-** | **1,772** | **59,841** | **106,648** | **33,954** | **202,215** |
| | | | | | | | |
| | **2025 ஜனவரி 01 ஆம் திகதிக்கு நிலுவை** | **-** | **1,772** | **59,841** | **106,648** | **33,954** | **202,215** |
| | ஆண்டுக்கான தேய்மானக் கட்டணம் | - | 591 | 19,305 | 42,270 | 17,285 | 79,450 |
| | அரசாங்க நிதியளிப்பு கடன் கழிப்பு | - | - | 1,360 | - | - | 1,360 |
| | **2025 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிலுவை** | **-** | **2,363** | **80,506** | **148,918** | **51,239** | **283,026** |
| | | | | | | | |
| | தேறிய புத்தகப் பெறுமதி | | | | | | |
| | 2024 ஜனவரி 01 ஆம் திகதியில் | 20,000 | 22,438 | 64,147 | 138,759 | 65,258 | 310,604 |
| | | | | | | | |
| | 2024 டிசம்பர் 31 ஆம் திகதியில் | 20,000 | 21,848 | 43,483 | 103,241 | 57,613 | 246,185 |
| | | | | | | | |
| | **2025 டிசம்பர் 31 ஆம் திகதியில்** | **20,000** | **21,257** | **22,818** | **66,736** | **48,079** | **178,891** |

| | | குறிப்பு | குழுமம் | | ஊ.ந.பொ.நி.சபை | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2025 | 2024 | 2025 | 2024 |
| | | | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| 23 | **குத்தகைச் சொத்துக்கள்** | | | | | |
| | **செலவு** | | | | | |
| | ஜனவரி 01 ஆம் திகதிக்கு | | 20,910 | 20,910 | - | - |
| | **டிசம்பர் 31 ஆம் திகதிக்கு** | | **20,910** | **20,910** | **-** | **-** |
| | | | | | | |
| | **திரண்ட மதிப்பிறக்கம்** | | | | | |
| | ஜனவரி 01 ஆம் திகதிக்கு நிலுவை | | 20,910 | 20,213 | - | - |
| | வருடத்திற்கான கட்டணம் | | - | 697 | - | - |
| | **டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிலுவை** | | **20,910** | **20,910** | **-** | **-** |
| | | | | | | |
| | **டிசம்பர் 31 ஆம் திகதிக்கு தேறிய புத்தகப் பெறுமதி** | | **-** | **-** | **-** | **-** |
| | | | | | | |
| 24 | **அருவச் சொத்துக்கள்** | | | | | |
| | ஜனவரி 01 ஆம் திகதிக்கு நிலுவை | | 1,148 | 6,163 | 1,148 | 6,163 |
| | கூட்டல் | | 54 | 95 | 54 | 95 |
| | வருடத்திற்கான மதிற்பிறக்கம் | | (999) | (5,110) | (999) | (5,110) |
| | கணினி மென்பொருட்கள் - அரசாங்க மானியம் | 24.1 | - | - | - | - |
| | **டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிலுவை** | | **203** | **1,148** | **203** | **1,148** |
| | | | | | | |
| 24.1 | **கணினி மென்பொருட்கள் - அரசாங்க மானியம்** | | | | | |
| | காலப் பிரிவின் ஆரம்பத்தில் மீதி | | - | 2,257 | - | 2,257 |
| | மதிப்பிறக்கம் | | - | (2,257) | - | (2,257) |
| | **காலப் பிரிவின் இறுதியில் மீதி** | | **-** | **-** | **-** | **-** |
| | | | | | | |
| 25 | **முதலீட்டுச் சொத்துக்கள்** | | | | | |
| | ஜனவரி 01 ஆம் திகதிக்கு நிலுவை | | 4,587,406 | 4,587,406 | 4,587,406 | 4,587,406 |
| | **டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிலுவை** | | **4,587,406** | **4,587,406** | **4,587,406** | **4,587,406** |



143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடைமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

## 26. வட்டி செலுத்தும் கடன் பெறுகை

| இலங்கை உப்புக் கம்பனி | 2025 டிசம்பர் 31 ஆம் திகதியில் | | | 2024 டிசம்பர் 31 ஆம் திகதியில் | | |
|---|---|---|---|---|---|---|
| | ஒரு வருடத்தினுள் செலுத்த வேண்டிய தொகை | ஒரு வருடத்தின் பின்னர் செலுத்த வேண்டிய தொகை | மொத்தம் | ஒரு வருடத்தினுள் செலுத்த வேண்டிய தொகை | ஒரு வருடத்தின் பின்னர் செலுத்த வேண்டிய தொகை | மொத்தம் |
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| நிதிக் குத்தகை | - | - | - | - | - | - |
| வங்கி மேலதிகப் பற்று | 218,203 | - | 218,203 | 403,727 | - | 403,727 |
| | **218,203** | **-** | **218,203** | **403,727** | **-** | **403,727** |

## 27. கொடைகள் மற்றும் மானியங்கள்

| | ஊ.ந.பொ.நி.சபை | |
|---|---|---|
| | 2025 | 2024 |
| | ரூ. '000 | ரூ. '000 |
| **காலப் பிரிவின் ஆரம்பத்தில்** | 4,873 | 8,490 |
| கூட்டல் | - | - |
| மதிப்பிறக்கம் | (1,360) | (3,617) |
| **காலப் பிரிவின் இறுதியில்** | **3,513** | **4,873** |

| | அயடீன் இயந்திரம் | கட்டிடம் | குழாய் நிலையம் | ஊழியர் நட்டஈடு | இலங்கை உப்புக் கம்பனி மொத்தம் 2025 | இலங்கை உப்புக் கம்பனி மொத்தம் 2024 |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| **செலவு** | | | | | | |
| ஜனவரி 1 ஆந் திகதியில் | 19,515 | 41,124 | 1,387 | 6,500 | 68,527 | 68,527 |
| **டிசம்பர் 31 ஆந் திகதியில்** | **19,515** | **41,124** | **1,387** | **6,500** | **68,527** | **68,527** |
| | | | | | | |
| **கடன்கழிப்பு** | | | | | | |
| ஜனவரி 1 ஆந் திகதியில் | 19,515 | 18,078 | 613 | 2,125 | 40,331 | 38,618 |
| வருடத்தில் மீள் மாற்றீடுகள் | - | 1,028 | 35 | 650 | 1,713 | 1,713 |
| **டிசம்பர் 31 ஆந் திகதியில்** | **19,515** | **19,106** | **647** | **2,775** | **42,043** | **40,331** |
| | | | | | | |
| **பதிவழிக்கப்பட்ட பெறுமதி** | | | | | | |
| **டிசம்பர் 31 ஆந் திகதியில்** | **-** | **22,019** | **740** | **3,725** | **26,483** | **28,196** |

| | | குறிப்பு | குழுமம் | | ஊ.ந.பொ.நி.சபை | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2025 | 2024 | 2025 | 2024 |
| | | | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| **28** | **வரையறுக்கப்பட்ட நன்மைக் கடப்பாடுகள்** | | | | | |
| | ஜனவரி 1 ஆம் திகதிக்கான ஆரம்ப வரையறுக்கப்பட்ட நன்மைக் கடப்பாடுகள் | | 838,890 | 593,245 | 381,024 | 303,379 |
| | வருமானக் கூற்றில் இனங்காணப்பட்ட தொகை | 28.1 | 87,386 | 225,811 | 58,866 | 53,950 |
| | கடப்பாடுகள் மீதான காப்புறுதிக்கணிப்பு (இலாபங்கள்) / நட்டங்கள்) | 28.2 | 50,554 | 79,318 | 50,554 | 79,318 |
| | செலுத்தப்பட்ட நன்மைகள் | | (66,532) | (59,484) | (43,821) | (55,624) |
| | **டிசம்பர் 31 ஆம் திகதிக்கான இறுதி வரையறுக்கப்பட்ட நன்மைக் கடப்பாடுகள்** | | **910,299** | **838,890** | **446,622** | **381,024** |
| | | | | | | |
| **28.1** | **வருமானக் கூற்றில் கண்டறியப்பட்ட செலவினம்** | | | | | |
| | வட்டிச் செலவு | | | | 39,502 | 39,439 |
| | நடைமுறைச் சேவைச் செலவு | | | | 19,364 | 14,511 |
| | | | | | **58,866** | **53,950** |
| | | | | | | |
| **28.2** | **ஏனைய விஸ்தீரண வருமானக் கூற்றில் இனங்காணப்பட்ட செலவினங்கள்** | | | | | |
| | நிதி அனுமானங்களின் மாற்றங்கள் காரணமாக ஏற்படும் ஆயுள்கணிப்பு (இலாபங்கள்) / நட்டங்கள் | | | | 76,694 | 79,318 |
| | சனத்தொகைப்பரம்பல் எதிர்வுகூறல்களின் மாற்றங்கள் காரணமாக ஏற்படும் ஆயுள்கணிப்பு (இலாபங்கள்) / நட்டங்கள் | | | | (31,286) | - |
| | அனுபவ சரிசெய்தல்கள் காரணமாக ஏற்படும் ஆயுள்கணிப்பு (இலாபங்கள்) / நட்டங்கள் | | | | 5,146 | - |
| | **ஏனைய விஸ்தீரண வருமானக் கூற்றில் இனங்காணப்பட்ட செலவினங்கள்** | | | | **50,554** | **79,318** |
| | | | | | | |
| **28.3** | **ஓய்வூதிய நலன் கடப்பாட்டை தீர்மானிக்கும் போது பயன்படுத்தப்படும் ஆயள்கணிப்பு எதிர்வுகூறல்** | | | | | |
| | நிதி எதிர்வுகூறல் | | | | | |
| | கழிவு வீதம் | | | | 10.00% | 11.00% |
| | எதிர்கால சம்பள ஏற்ற வீதம் | | | | 7.00% | 6.00% |
| | | | | | | |
| | சனத்தொகைப் பரம்பல் எதிர்வுகூறல் | | | | IALM2006-08 | A1967/70 |
| | **இறப்பு வீத அட்டவணை** | | | | **இறப்பு வீத அட்டவணை** | **இறப்பு வீத அட்டவணை** |
| | ஓய்வுபெறும் வயது | | | | 60 வருடங்கள் | 60 வருடங்கள் |

செயற்பாட்டுப் பங்காளர்களின் எதிர்பார்க்கப்படும் சராசரி வேலைக் ஆயுட்காலம் 12.6 வருடங்கள் ஆகும். (2024 : 8.5)

தொழில்முறை காப்புறுதிக்கணிப்பு நிறுவனமான, யூனிட்டிஸ் ஆக்சுவரீஸ் அண்ட் கன்சல்டன்ட்ஸ் (தனியார்) நிறுவனம், வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டம் தொடர்பாக சுயாதீன ஆயள்கணிப்பு மதிப்பீட்டை மேற்கொண்டுள்ளதுடன், அதற்கமைய, வரையறுக்கப்பட்ட நன்மைகளின் செலவுகளைத் தீர்மானிப்பதில் பொருத்தமான இணக்கப்பாட்டு அனுமானங்கள் பயன்படுத்தப்படவில்லை.

143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

| | குறிப்பு | குழுமம் | | ஊ.ந.பொ.நி.சபை | |
|---|---|---|---|---|---|
| | | 2025 | 2024 | 2025 | 2024 |
| | | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| **29 நடப்பு வரி பொறுப்புக்கள்** | | | | | |
| **மொத்த வரி பொறுப்புக்கள்** | | **9,611,094** | **8,678,062** | **9,611,094** | **8,678,062** |
| (-) மதிப்பீடு செய்யப்பட்ட வருமான வரி செலுத்தல்கள் | | (4,697,092) | (4,384,010) | (4,697,092) | (4,384,010) |
| **IRD க்கு செலுத்த வேண்டிய வரி** | | **4,914,002** | **4,294,051** | **4,914,002** | **4,294,051** |
| | | | | | |
| **30 ஏனைய பொறுப்புக்கள்** | | | | | |
| செலுத்த வேண்டிய கணக்குகள் மற்றும் நானாவித கடன்படுநர் | 30.1 | 483,570 | 471,513 | 155,597 | 144,088 |
| | | **483,570** | **471,513** | **155,597** | **144,088** |
| | | | | | |
| **30.1 செலுத்த வேண்டிய கணக்குகள் மற்றும் நானாவித கடன்படுநர்** | | | | | |
| வர்த்தக மற்றும் ஏனைய பொறுப்புக்கள் | 30.1.1 | 325,432 | 325,649 | - | - |
| நலன் உரித்துக்கள் மீதான நிறுத்தி வைக்கப்பட்ட வரி | | 2,454 | 2,828 | 2,454 | 2,828 |
| உரித்துக்கள் மீதான செலுத்த வேண்டிய முத்திரை வரி | | 808 | 927 | 808 | 927 |
| செலுத்த வேண்டிய பங்கிலாபம் | | 2,542 | 1,777 | - | - |
| செலுத்தாத வேதனம் | | 75 | 76 | 75 | 76 |
| செலுத்த வேண்டிய முத்திரை வரி | | 93 | 111 | 93 | 111 |
| செலுத்த வேண்டின EPF | | 19,712 | 18,546 | 19,712 | 18,546 |
| செலுத்த வேண்டிய ETF | | 2,365 | 2,226 | 2,365 | 2,226 |
| திரண்ட செலவினம் | | 76,315 | 68,603 | 76,315 | 68,603 |
| மீண்டும் அனுப்பப்பட்ட நலன்கள் (காசோலை) | | 2,239 | 2,257 | 2,239 | 2,257 |
| மீண்டும் அனுப்பப்பட்ட நலன்கள் (நலன்புரி) | | 517 | 159 | 517 | 159 |
| மீண்டும் அனுப்பப்பட்ட நலன்கள் (சிட்டை) | | 6,273 | 5,416 | 6,273 | 5,416 |
| செலுத்தாத மரண நலன்கள் | | 29,500 | 27,943 | 29,500 | 27,943 |
| PAYE வரி | | 606 | 3,352 | 606 | 3,352 |
| WHT வரி | | 604 | 776 | 604 | 776 |
| கோரப்படாத உதவித்தொகை | | 60 | - | 60 | - |
| இணங்காத மீதி | | 14 | 14 | 14 | 14 |
| நூலக நிதியம் | | 17 | 14 | 17 | 14 |
| நானாவித கொடுப்பனவுகள் | | 207 | 207 | 207 | 207 |
| மீளளிக்கப்பட வேண்டிய வைப்பு | | 249 | 70 | 249 | 70 |
| பாதுகாபபு வைப்புக்கள் - வாகனத் தரிப்பிடம் | | 13,126 | 10,035 | 13,126 | 10,035 |
| சம்பள கட்டுப்பாடு | | 163 | - | 163 | - |
| சம்பள அறவீடுகள் தடைநீக்கம் | | 87 | 429 | 87 | 429 |
| முன்னர் செலுத்தப்பட்ட வருமானம் | | 111 | 101 | 111 | 101 |
| | | 483,570 | 471,513 | 155,597 | 144,088 |

| | | இலங்கை உப்புக் கம்பனி | |
|---|---|---|---|
| | | 2025 | 2024 |
| | | ரூ. '000 | ரூ. '000 |
| **30.1.1** | **வர்த்தக மற்றும் ஏனைய பொறுப்புக்கள்** | | |
| | **நிதிப் பொறுப்புக்கள்** | | |
| | செலுத்த வேண்டிய வர்த்தக மீதி | 33,242 | 81,948 |
| | செலுத்த வேண்டிய உப்பு போக்குவரத்து செலவுகள் | 21,419 | - |
| | செலுத்த வேண்டிய வைப்புக்கள் | 15,267 | 35,825 |
| | செலுத்த வேண்டிய சமூகப் பாதுகாப்பு வரி | 5,215 | 6,003 |
| | செலுத்த வேண்டிய காணி வாடகை | 27,390 | 18,925 |
| | **நிதி சாரா பொறுப்புக்கள்** | | |
| | திரண்ட செலவுகள் | 133,674 | 81,134 |
| | செலுத்த வேண்டிய - வேறு | 20,997 | 31,167 |
| | பெறுமதி சேர் வரி - செலுத்த வேண்டிய | 34,783 | 37,201 |
| | செலுத்த வேண்டிய நட்டஈடு ஒதுக்கீடு | 33,445 | 33,445 |
| | | **325,432** | **325,649** |

| | | இலங்கை உப்புக் கம்பனி | | | |
|---|---|---|---|---|---|
| | | வரி நடவடிக்கைக்கான மூலதன கொடுப்பனவுகள் | நிலையான நலன் திட்டங்கள் | வரி நட்டங்களுக்கு ஈடு செய்யக்கூடிய பிற்போடப்பட்ட வரி | மொத்தம் |
| | | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| **31** | **பின்போடப்பட்ட வரி பொறுப்புக்கள்** | | | | |
| | 2024 ஜனவரி 01 ஆம் திகதியில் | 157,825 | (86,960) | - | 70,865 |
| | வருடத்தின் இலாபத்துடன் அலலது நட்டத்துடன் செம்மையாக்கல் | (4,769) | (50,400) | - | (55,170) |
| | 2025 ஜனவரி 01 ஆம் திகதியில் | 153,056 | (137,360) | - | 15,696 |
| | வருடத்தின் இலாபத்துடன் அலலது நட்டத்துடன் செம்மையாக்கல் | (8,764) | (1,743) | - | (10,507) |
| | **2025 டிசம்பர் 31 ஆம் திகதியில்** | **144,291** | **(139,103)** | **-** | **5,188** |

| | | |
|---|---|---|
| பிற்போடப்பட்ட வரி பொறுப்புக்கள் | (144,291) | (153,056) |
| பிற்போடப்ப்ட்ட வரிச் சொத்துக்கள் | 139,103 | 137,360 |
| **தேறிய பிற்போடப்பட்ட வரி** | **(5,188)** | **(15,696)** |

| | | | குழுமம் | | ஊ.ந.பொ.நி.சபை | |
|---|---|---|---|---|---|---|
| | | குறிப்பு | 2025 ரூ. '000 | 2024 ரூ. '000 | 2025 ரூ. '000 | 2024 ரூ. '000 |
| **32** | **ஏற்பாடுகள்** | | | | | |
| | கணக்காய்வு கட்டனங்களுக்கான ஏற்பாடுகள் | | 2,500 | 2,500 | 2,500 | 2,500 |
| | ஊழியர் விபத்து நட்டஈட்டுத் திட்டத்திற்கான ஏற்பர்டுகள் | | 2,000 | 2,000 | 2,000 | 2,000 |
| | ஊக்குவிப்பு கொடுப்பனவுக்கான ஏற்புாடுகள் | | 170 | 73,975 | 170 | 73,975 |
| | பெற்றுக்கொள்ளாத விடுமுறைக்கான கொடுப்பனவு ஏற்பாடுகள் | | 15,630 | 16,320 | 15,630 | 16,320 |
| | நிபுணதா சவிய புலமைப் பரிசில் ஏற்பாடுகள் | | 72,525 | 91,275 | 72,525 | 91,275 |
| | விஸ்வ யாத்ரா புலமைப் பரிசில் ஏற்பாடுகள் | | 104,275 | 126,000 | 104,275 | 126,000 |
| | 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில்களுக்கான ஏற்பாடுகள் | | 104,340 | 135,300 | 104,340 | 135,300 |
| | | | **301,440** | **447,371** | **301,440** | **447,371** |



143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

| | | ஊ.ந.பொ.நி.சபை | |
|---|---|---|---|
| | | 2025 ரூ. '000 | 2024 ரூ. '000 |
| **33** | **அங்கத்தவர் நிதியம்** | | |
| | **ஜனவரி 01 ஆம் திகதிக்கு ஆரம்ப அங்கத்துவ நிதி நிலுவை** | **564,326,576** | **504,434,709** |
| | கடந்த ஆண்டு பங்களிப்பு சீராக்கம் | (4,247) | (3,558) |
| | கிடைக்கப்பெற்ற பங்களிப்பு | 48,120,511 | 42,028,214 |
| | பங்களிப்பு மீளளிப்பு | (30,303,612) | (33,434,593) |
| | அங்கத்துவ நிதி மதீயின் மீதான வட்டி | 17,464,353 | 15,390,525 |
| | பங்கிலாபம் | 37,839,476 | 35,911,278 |
| | **டிசம்பர் 31 ஆம் திகதிக்கு இறுதி அங்கத்துவ நிதி நிலுவை** | **637,443,057** | **564,326,576** |

**ஒதுக்கீடு செய்யப்படாத உறுப்பினர் நிதியம் - ஒதுக்கீட்டு முன்னேற்றம் (கடந்த ஐந்து வருடங்கள்)**

கடந்த ஐந்து வருடங்களில் ஒதுக்கீடு செய்யப்படாத உறுப்பினர் நிதியத்தின் வருடாந்த குறிப்பிடத்தக்க மாற்றம், இந்த நிலுவைகளை உறுப்பினர் கணக்குகளுக்கு ஒதுக்கீடு செய்வதில் காட்டப்பட்டுள்ள தொடர்ச்சியான முன்னேற்றத்தை முன்னிலைப்படுத்தி, கீழே காணப்படும் அட்டவணையில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டுள்ளது.

| காலப் பிரிவு | 2021.12.31 திகதிக்கு | 2022.12.31 திகதிக்கு | 2023.12.31 திகதிக்கு | 2024.12.31 திகதிக்கு | 2025.12.31 திகதிக்கு | 2026.03.09 திகதிக்கு |
|---|---|---|---|---|---|---|
| | மீதி | மீதி | மீதி | மீதி | மீதி | மீதி |
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| 1981-2014 | 113,890 | 83,993 | 33,116 | 14,548 | 14,508 | 14,508 |
| 2015-2023 | - | - | 954,900 | 614,099 | 390,046 | 362,221 |
| 2024 | - | - | - | - | 826,491 | 660,283 |
| | 113,890 | 83,993 | 988,016 | 628,647 | 1,231,045 | 1,037,012 |

## 34 எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்

### 34.1 சபைக்கு எதிரான வழக்குகள்

சர்ச்சைக்குரிய வரிப் பொறுப்புகள் மற்றும் உறுப்பினர்கள் சார்ந்த செலவினங்களை அனுமதிக்காமல், உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது 2018:.2019 வரிவிதிப்பு வருடத்திற்கான வரி மதிப்பீடொன்றை வழங்கியதுடன், அதன் விளைவாக ரூ. 2,328,096,677 கொண்ட சர்ச்சைக்குரிய வரித் தொகையொன்று ஏற்பட்டது. சபை இம்மதிப்பீட்டிற்கு எதிராக மேன்முறையீடொன்றைச் சமர்ப்பித்ததுடன், பின்னர், வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவானது ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபைக்குச் சாதகமாக இவ்விடயத்தைத் தீர்மானித்தது. எவ்வாறாயினும், வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவின் அத்தீர்மானத்திற்கு சவால் விடுத்து, உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடொன்றைத் தாக்கல் செய்துள்ளது.

2025 டிசம்பர் 31 ஆம் திகதி இந்த வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. பெற்றுக்கொள்ளப்பட்ட சட்டபூர்வ கருத்து மற்றும் வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட முன்னைய சாதகமான தீர்மானம் ஆகியவற்றின் அடிப்படையில், இதற்கு ஒரு சாதகமான முடிவு கிடைக்கப்பெறலாம் என்பது சபையின் கருத்தாகும். எவ்வாறாயினும், நீதிமன்றத்தினால் இறுதித் தீர்மானம் வழங்கப்படும் வரை நிதி அறிக்கைகளில் சொத்துகளோ அல்லது பொறுப்புகளோ எதுவும் இனம் காணப்படவில்லை. இவ்வழக்கின் அடுத்தகட்ட விசாரணை 2026 மே மாதம் 15 ஆம் திகதியன்று நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

# மேலதிக தகவல்கள்

## கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை 2025



143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. LSW/F/ETF/1/2025/265 | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 2026 ஜுன் 09 ஆம் திகதி

தவிசாளர்,
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை,

**ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையின் மற்றும் அதன் நிர்வாகத்தின் 2025 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் வேறு சட்டமுறையான தேவைப்பாடுகள் பற்றிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

## 01. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் ‘சபை’ மற்றும் அதன் நிர்வாகத்தின் ‘குழுமம்’ 2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலமைக் கூற்று, உரிமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் பற்றிய கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2025 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் நிதிக் கூற்றுக்கள், சபையின் மற்றும் அதன் நிர்வாகத்தின் ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை வருங்காலத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

சபையின் மற்றும் குழுமத்தின் 2025 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியல் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) அமைய என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இந்த கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் தலைப்பின் கீழ் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்காக என்னால் பெறப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சியங்கள் போதுமானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 சபையின் 2025 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

இந்தக் கணக்காய்வு அறிக்கையில் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட சபையின் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பிலான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் எனப் பொருள்படும். இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்புக்கூறல் வேண்டும்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் எனது அபிப்பிராயத்தின் மூலம் ஏனைய தகவல்கள் உள்ளடங்காது. நான் அது தொடர்பில் எவ்வித அத்தாட்சிப்படுத்தலையோ அல்லது அபிப்பிராயத்தையோ சமர்ப்பிக்கவில்லை.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.auditorgeneral.gov.lk

நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் எனது கணக்காய்வுக்கு அமைய எனது பொறுப்பாவது மேலே அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்களை வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடனோ அல்லது கணக்காய்வின் போதோ அல்லது வேறு முறையிலோ பெற்றுக்கொண்ட எனது அறிவுக்கு அமைய எண்ணிக்கை அளவில் வித்தியாசம் உண்டா என்பது தொடர்பில் பரிசீலனைக்கு எடுக்கப்படும்.

இந்தக் கணக்காய்வு அறிக்கைக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட ஏனைய தகவல்கள் மீது மற்றும் என்னால் புரியப்பட்ட பணிகள் அடிப்படையில் இந்த ஏனைய தகவல்கள் எண்ணிக்கை ரீதியில் பிழையாக குறிப்பிடப்பட்டுள்ளதென நான் தீர்மானிக்குமிடத்து அந்த விடயங்களை நான் அறிக்கையிடல் வேண்டும். இது தொடர்பில் எனக்கு அறிக்கையிட ஏதும் இல்லை.

குழுமத்தின் 2025 வருடாந்த அறிக்கையை வாசிக்கும் போது, அதில் கணிசமான அளவு தவறான வெளிப்படுத்தல்கள் உள்ளன என நான் முடிவு செய்தால், திருத்தங்களை மேற்கொள்வதற்காக நிர்வாகத் தரப்பினருக்கு அவ்விடயங்கள் அறிவிக்கப்படல் வேண்டும். மேலும் திருத்தப்படாத தவறான வெளிப்படுத்தல்கள் காணப்படின், அவை அரசியலமைப்பின் 154(6) ஆம் பிரிவின் பிரகாரம் என்னால் உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

## 1.4 நிதிக் கூற்றுக்கள் பற்றிய முகாமைத்துவத்தின் மற்றும் நிர்வகிக்கும் தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிப்பதற்காக மற்றும் நியாயமாக முன்வைப்பதற்காக மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிகழுவதற்கு இடம்பாடுள்ள எண்ணிக்கை ரீதியாக பிழையான கூற்றுக்கள் இன்றி நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் பொருட்டு தேவையான உள்ளக கட்டுப்பாடுகளை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களை தயாரிக்கின்ற போது சபையினால் தொடர்ச்சியாக பேண முடியுமான ஆற்றலை தீர்மானிக்கும் பொறுப்பு முகாமைத்துவத்துக்கு உரியதாகும். முகாமைத்துவம் சபையை கலைப்பதற்கு உத்தேசிக்குமாயின் அல்லது வேறு மாற்றீடு இல்லாத விடத்து செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் அன்றி தொடர்ந்தேர்ச்சியான இருப்புக்கு ஏற்புடைய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறைப் பற்றிய பொறுப்பு, நிர்வகிக்கும் தரப்பினரால் மேற்கொள்ளப்படும்.

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உட்பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் தற்கால நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு ஏற்ற வகையில் தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான உரிய புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படல் வேண்டும்.

## 1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மொத்தமாக நிதிக் கூற்றுக்களின் மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் எண்ணிக்கை ரீதியான பொய்யான கூற்றுக்கள் அல்ல என்ற சாதாரண உறுதிப்பாட்டை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடங்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். சாதாரண உறுதிப்பாடு உயர் மட்டத்திலான சான்றிதழ் என்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வை மேற்கொள்ளும் போது அது எப்போதும் எண்ணிக்கை ரீதியான பிறழ் கூற்றுக்களை இனம்காணக்கூடிய உறுதிப்பாடாக அமையாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியான அல்லது கூட்டாக தாக்கம் செலுத்தும் எண்ணிக்கை ரீதியான பிறழ்கூற்றுக்கள் நிகழ முடியுமாயினும் இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயனர்களினால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தாக்கத்தை செலுத்துமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில் ரீதியான முடிவு மற்றும் தொழில் ரீதியான தீர்ப்புடன் மற்றும் தொழில் ரீதியான சந்தேகத்துடன் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் நிகழ முடியுமான எண்ணிக்கை ரீதியான பிழையான கூற்றுக்களின் ஆபத்தை இனம்காணும் போது மற்றும் மதிப்பீடு செய்யும் போது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடி மற்றும் தவறுகள் காரணமாக நிகழக்கூடிய ஆபத்தை தவிர்ப்பதற்கு போதியளவு மற்றும் பொருத்தமான கணக்காய்வு சாட்சியங்களைப் பெற்றுக்கொள்வது எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். எண்ணிக்கை ரீதியான பொய்யான கூற்றுக்களினால் ஏற்படக்கூடிய

www.etfb.lk

143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

தாக்கங்களை விட மோசடியினால் நிகழும் தாக்கம் பாரியது. கூட்டுச்சதி, போலியான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே தட்டிக்கழித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை கைவிடுதல் மோசடி நிகழுவதற்கு காரணமாகும்.

- சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக சபையின் உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வு பெற்றுக்கொள்ளப்பட்ட போதிலும் உள்ளக நிர்வாகத்தின் பயனுறுதி தொடர்பில் அபிப்பிராயம் தெரிவிக்க இங்கு முன்வரவில்லை.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் தகைமையை மதிப்பிடல்.
- நிகழ்வுகள் அல்லது நிலமைகள் காரணமாக சபையின் தொடர்ச்சியான இருப்பு பற்றிய எண்ணிக்கை ரீதியான எதிர்பாராத விளைவுகள் உள்ளனவா என்பது தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டுக்கான நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு பற்றிய அடிப்படையைப் பயன்படுத்துவதன் ஏற்புடமை தீர்மானிக்கப்பட்டது. போதியளவு எதிர்பாரா நிகழ்வு உள்ளதாக நான் முடிவு செய்யுமிடத்து நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பிலான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனத்தை செலுத்த வேண்டுமென்பதோடு, அந்த வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லாத விடத்து எனது அபிப்பிராயத்தை திருத்தியமைத்தல் வேண்டும். எவ்வாறெனினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலமைகளின் மீது தொடர்ச்சியான இருப்பு முடிவடைய முடியும்.
- வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட நிதிக் கூற்றுக்களில் வெளியிடல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீடு செய்யப்பட்டதோடு, அதற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதென மதிப்பீடு செய்தல்.
- ஒன்றிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் தொடர்பிலான அபிப்பிராயத்தை முன்வைப்பதற்காக குழுமத்தினுள் காணப்படும் நிறுவனங்கள் மற்றும் வியாபாரச் செயன்முறைகளின் நிதித் தகவல்கள் தொடர்பில் போதியளவு பொருத்தமான கணக்காய்வு சாட்சியங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. குழும கணக்காய்வின் போது வழிநடாத்தல், மேற்பார்வை மற்றும் செயலாற்றுகைக்கு நான் பொறுப்பாகும். எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு நான் முழுமையாக பொறுப்புடையவன்.

எனது கணக்காய்வின் போது அடையாளம் காணப்பட்ட முக்கிய கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக நிர்வாக பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் நிர்வகிக்கும் தரப்பினர்களை அறிவூட்டுதல்.

## 02. வேறு சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

**2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.**

2.1.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய, கணக்காய்வுக்குத் தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெறப்பட்டுள்ளதோடு, எனது விசாரணை மூலம் தெரியவரும் விடயம் யாதெனில், சபை உரிய முறையில் நிதி அறிக்கைகளை பேணிவந்துள்ளது என்பதாகும். அதனை இங்கு அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

2.1.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய சபையின் நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் இணைந்து செல்கின்றது.

2.1.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (i) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய, என்னால் செய்யப்பட்ட சிபாரிசுகள் தவிர்ந்த கடந்த ஆண்டில் என்னால் செய்யப்பட்ட சிபாரிசுகள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட செயற்பாடுகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சியங்களின் மீது மற்றும் எண்ணிக்கை ரீதியான விடயங்களுக்கு வரையறுத்து பின்வரும் பிரகடனங்களை செய்யுமளவுக்கு எந்தவொரு விடயமும் எனது அவதானிப்புக்கு உட்படவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய சபையின் ஆளுநர் சபையின் எவரேனும் உறுப்பினர் ஒருவருக்கு சபையுடன் இணைந்து ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சாதாரண வியாபார நிலமைக்கு அப்பால் தொடர்பு உள்ளதென,

2.2.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்ந்த ஏதேனும் ஏற்புடைய எழுதப்பட்ட சட்டத்திற்கு அல்லது சபையின் ஆளுநர் சபையினால் வழங்கப்படும் வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு அமைவாக அன்றி செயற்பட்டுள்ளாரென,

| | சட்டங்கள்கூகட்டளைகளுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | (அ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 39(2) ஆம் பிரிவு | விளக்கமான முகாமைத்துவ கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்காக 03 மாதங்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற போதிலும், 2025 மே 30 ஆம் திகதியிடப்பட்டு வெளியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்குரிய விளக்கமான முகாமைத்துவக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைக்கு இதுவரையில் பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 396 (ஈ) பிரிவு | வழங்கப்பட்டு 06 மாதங்கள் கடந்த, மொத்த மதிப்பு ரூ. 733,791 ஐக் கொண்ட 6 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | அரச தொழில்முறயற்சிகள் சுற்றறிக்கைகள்<br><br>(i) 2021 நவம்பர் 17 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 4.2 ஆம் பந்தி | வருடத்திற்கு குறைந்தபட்சம் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும் என்ற போதிலும், மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் 02 கூட்டங்கள் மாத்திரமே நடத்தப்பட்டிருந்தன. |
| | (ii) 2023 செப்டம்பர் 27 ஆம் திகதிய 01/2021 (ii) ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | இலங்கை உப்பு நிறுவனத்தின் பங்கு மூலதனத்தில் நூற்றுக்கு 90 சதவீதத்தை சபை கையகப்படுத்தி, அதனை ஒரு கட்டுப்பாட்டு நிறுவனமாக மாற்றியிருந்த போதிலும், சுற்றறிக்கையின் விதிகளுக்கமைய கட்டுப்பாட்டு நிறுவனங்கள் தொடர்பான கொள்கைத் திட்டம் இதுவரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 2023 செப்டம்பர் 27 ஆம் திகதிய 01/2021 (iii) ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | சபையின் நிதி மற்றும் செயல்பாட்டு நடைமுறைக் கோவைக்காக அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இதுவரை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2025 மார்ச் 25 ஆம் திகதிய 01/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 20 ஆம் பந்தி | ஊழியர் வகைப்பாட்டிற்கேற்ப செலுத்தப்பட்ட இணைந்த படிகள் தொகையானது ஊழியர் மட்டத்திற்கு ஏற்ப வழங்கப்பட வேண்டும் என சுற்றறிக்கையின் மூலம் உத்தரவிடப்பட்டிருந்த போதிலும், அதற்குப் புறம்பாகச் செயற்படப்பட்டிருந்தது. |
| (ஈ) | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2024 ஆம் ஆண்டின் கொள்முதல் வழிகாட்டித் தொகுதியின் 2.4 (ஆ) (iii) ஆம் பந்தி | சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் (ITN) மூலம் பயன் பெறும் திட்டங்கள் குறித்து உறுப்பினர்களுக்குத் தெளிவுபடுத்தும் செயல்முறைக்குரிய கொள்முதல் குழுவினால் அதன் முதலாவது கூட்டத்திலேயே பரந்த விளம்பரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக விளம்பரம் செய்யப்பட வேண்டிய தினங்கள், முறைமை, கொள்முதல் ஆவணங்களை வெளியிடுதல், ஏல முன்மொழிவுகளைப் பொறுப்பேற்றல், நிறைவு செய்தல் மற்றும் திறக்கும் தினங்கள் ஆகியவற்றைத் தீர்மானித்திருக்க வேண்டும் என்ற போதிலும், ரூ.15 மில்லியன்கள் செலவிடப்பட்டிருந்த கொள்முதல் செயல்முறையில் அதற்கமைய செயற்படப்பட்டிருக்கவில்லை. |

143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

2.2.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய, பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர சபையின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்காத வண்ணம் நடவடிக்கை எடுக்கப்படவில்லையென.

(அ) 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின்படி, ஊழியர் ஈட்டுகின்ற மொத்த உழைப்பில் மூன்று சதவீதத்திற்கு (3%) சமமான பங்களிப்புத் தொகையை அடுத்ததாக வரும் மாதத்தின் இறுதித் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ தொழில் வழங்குநரால் இந்நிதிக்குச் செலுத்தப்பட வேண்டும் என்றபோதிலும், 2001 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் சபையில் பதிவு செய்யப்பட்ட 20 ஆடைத் தொழிற்சாலைகள் ஆரம்பம் முதற்கொண்டும், துப்புரவாக்கல் வசதிகளை வழங்கும் 15 நிறுவனங்கள் மற்றும் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலுள்ள முறையே 29 மற்றும் 12 விடுதிகள் மற்றும் உணவகங்கள் 2025 ஆம் ஆண்டிற்கான பங்களிப்புத் தொகையைச் செலுத்தியிருக்கவில்லை. அந்த நிறுவனங்களுள் 51 நிறுவனங்கள் களப் பரிசோதனை நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் சட்டத்தின் 16.3 ஆம் பிரிவின் பிரகாரம், தொழில் வழங்குநர்களினால் சபைக்கு அனுப்பப்படும் பங்களிப்புத் தொகைகள் அந்தந்த உறுப்பினர்களின் தனிப்பட்ட கணக்குகளில் வரவு வைக்கப்பட வேண்டும் என்றபோதிலும், 2026 ஏப்ரல் 27 ஆம் திகதியாகும் போது 1981 முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் 6,612 தொழில் வழங்குநர்களினால் சபைக்கு வரவு வைக்கப்பட்டிருந்த ரூ.911.27 மில்லியன் தொகை அவ்வாறு வரவு வைக்கப்பட்டிருக்கவில்லை. இதற்குள் 2015 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்குரியதாக 6,211 தொழில் வழங்குநர்கள் சார்பில் ரூ.896.74 மில்லியன் தொகை காணப்பட்டது. 2026 மே 22 ஆம் திகதியாகும் போது தொழில் வழங்குநர்களின் எண்ணிக்கை 5,960 வரை குறைவடைந்ததுடன், பகிர்ந்தளிக்கப்படாத பண நிலுவை ரூ.876.4 மில்லியனாகக் காணப்பட்டது.

2.2.4 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய, பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்ந்த சபையின் வளங்களை சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் பயனுறுதியுடனும் ஏற்புடைய காலப் பிரிவில் ஏற்புடைய சட்ட விதிகளுக்கு அமைய பெறுகை மேற்கொண்டு பயன்படுத்தப்பட்டுள்ளதென,

(அ) புதிய கணினி அமைப்புத் திட்டச் செயற்பாடுகளுக்காக 2023 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட, மொத்தப் பெறுமதி ரூ.2,478,000 ஐக் கொண்ட 21 QR குறியீட்டு அச்சுப்பொறிகளும் (QR Code Printers), மொத்தப் பெறுமதி ரூ. 2,277,572 ஐக் கொண்ட 44 QR குறியீட்டு வருடிகளும் (QR Code Scanners) பயன்படுத்தப்படாமல் மூன்றரை வருடங்களாகக் களஞ்சியசாலையில் செயலற்றுக் காணப்பட்டன.

(ஆ) காசோலை சேகரிப்பு வசதிகளை வழங்குவதற்காக இலங்கை வங்கிக்கும் சபைக்குமிடையே 2006 ஆகஸ்ட் 06 ஆம் திகதியிட்ட கடிதத்தின் பிரகாரமான உடன்படிக்கைக்கு அமைவாக, ரூ.10 மில்லியன் மற்றும் ரூ. 490 மில்லியன் பெறுமதியான இரண்டு வைப்புகள் இலங்கை வங்கியில் பேணப்பட்டு வருகின்றன. கடந்த 20 வருடங்களுக்கு அண்மையப் காலப்பகுதியாகப் பேணப்பட்டு வரும் இந்த வைப்புகளுக்கு, ஒப்பீட்டளவில் கூடிய சந்தை வட்டியினைப் பெற்றுக்கொள்வதற்குச் சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. ரூ.500 மில்லியன் போன்றதொரு தொகையைத் தொடர்ச்சியாக இவ்வளவு காலம் இலங்கை வங்கியில் வைத்திருந்ததன் மூலம், சபைக்கு அதிகளவிலான நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கிருந்த வாய்ப்புகள் இழக்கப்பட்டுள்ளன.

(இ) சபையினால் 2011 ஆம் ஆண்டில் தனியார் நிறுவனமொன்றின் 761,478 பங்குகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், 2025 டிசம்பர் 31 ஆம் திகதியன்று அதன் சந்தைப் பெறுமதி ரூ.48,811,600 ஆகும். 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை முதலீடுகளுக்கான பங்கிலாபத்தொகைகள் எதுவும் கிடைக்கப்பெறாததுடன், மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் கிடைக்கப்பெற்ற பங்கிலாபத்தொகை ரூ.383,739 ஆகும். 2020 ஆம் ஆண்டு முதல் மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்திற்கு இடைப்பட்ட காலப்பகுதியில், இந்த நிறுவனம் தொடர்பில் சபை எவ்வித பங்குச்சந்தை கொடுக்கல் வாங்கல்களிலும் ஈடுபடவில்லை என்பதுடன், இப்பணத்தை வினைத்திறனான நலன்களைத் தரும் நிறுவனங்களில் முதலீடு செய்வதற்குச் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) சபையினால் 2002 ஆம் ஆண்டில் ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனத்தின் 3,302,188 பங்குகள் ரூ.2,224,218,565 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. கடந்த 5 வருடங்களில் இப்பங்குகளுக்காகப் பெற்ற பங்கிலாபத்தொகையின் அளவு ரூ.13,241,773 ஆகும். ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனத்தின் பங்குகளை, பொதுத் திறைசேரியின் அறிவுறுத்தலின் பேரில் விற்பனை செய்வது 2008 ஆம் ஆண்டு முதல் நிறுத்தப்பட்டு 17 வருடங்கள் கடந்துள்ள போதிலும், இப்பங்குகளுக்கான மூலதன இலாபத்தைப் பெற்றுக்கொள்ளாமல் சபை தொடர்ச்சியாகப் பேணி வருகின்றது. உறுப்பினர்களின் பணத்தைக் கொண்டுள்ள இந்நிதியத்தின் பணத்தை நீண்டகாலமாக இவ்வாறு வைத்திருந்ததன் மூலம், உறுப்பினர்களுக்குக் கிடைக்க வேண்டிய நன்மைகளின் மட்டத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

(உ) நவம் மாவத்தையில் அமைந்துள்ள, சபைக்குச் சொந்தமான 19,319 சதுர அடி பரப்பளவைக் கொண்ட, 2025 டிசம்பர் 31 ஆம் திகதியன்று அதன் செலவினப் பெறுமதி ரூ.21.41 மில்லியனாகக் காணப்பட்ட இருமாடிக் கட்டிடம் எவ்வித முதலீட்டு வருமானத்தையும் ஈட்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 02. ஏனைய விடயங்கள்

(அ) மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தின் நிதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள அல்கடுவ பெருந்தோட்ட நிறுவனத்தின் கடன்பத்திரங்களுக்காகக் கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் ரூ.24,793,485 மற்றும் மொத்தப் பெறுமதி ரூ.3,175,000,000 ஐக் கொண்ட 05 பட்டியலிடப்பட்ட கடன்பத்திர முதலீடுகளுக்குப் பொருத்தமாக, அந்நிறுவனங்களிடமிருந்து கிடைக்க வேண்டிய நிலுவைகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்திற்குரிய வருடாந்தச் செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள குறிக்கோள்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றிக்கொள்வதற்கான முன்னேற்றம் சம்பந்தமாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன:

(i) கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த தொழில் வழங்குநர்களின் எண்ணிக்கை 235,624 ஆகும். எனினும், மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தின் இறுதியில் அவர்களுள் இயங்கு நிலையிலுள்ள தொழில் வழங்குநர்களின் எண்ணிக்கை 84,491 அல்லது 35.8 சதவீதம் ஆகும். இயங்கு நிலையிலுள்ள தொழில் வழங்குநர்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரிப்பதற்கும் புதிய தொழில் வழங்குநர்களை இனங்காண்பதற்கும் சபை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மேலும் மேம்படுத்தப்பட வேண்டியிருந்தன.

(ii) 2024 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, உறுப்பினர்கள் தங்களது தனிப்பட்ட கணக்கின் நிலுவையை ஒரு குறுஞ்செய்தி (SMS) மூலம் அறிந்துகொள்வதற்கான வசதிகளைச் சபை வழங்கியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போதைய நிலையில், 2.6 மில்லியன் இயங்கு நிலையிலுள்ள உறுப்பினர்களில் இவ்வசதியைப் பெற்றுக்கொள்வதற்காகச் சபையில் பதிவு செய்துகொண்டுள்ளவர்களின் எண்ணிக்கை 35,662 என கணக்காய்வுக்கு அறிக்கை செய்யப்பட்டுள்ளது. கொடுப்பனவுகளுக்கு விண்ணப்பிக்கும் போது, தான் ஒரு இயங்கு நிலை உறுப்பினரா என்பதை இலத்திரனியல் சேவை ஊடாக அறிந்துகொள்வதற்கான இந்த நடைமுறை குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேலும் மேம்படுத்தப்பட வேண்டிய மட்டத்தில் காணப்பட்டன.

(iii) சபையின் பணிகள் மற்றும் சேவைகளின் வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நோக்கில், உறுப்பினர்களை மையமாகக் கொண்ட அமைப்பொன்றை அபிவிருத்தி செய்வதற்காக, இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரகத்துடன் (ICTA) இணைந்து 3 வருடங்களில் நிறைவு செய்யும் நோக்குடன் 2016 நவம்பர் மாதத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று எட்டப்பட்டிருந்த போதிலும், தற்போதைய நிலையிலும் இவ்வமைப்பை உத்தியோகபூர்வமாக நேரலையாக நடைமுறைப்படுத்த முடியாமல் உள்ளது. திட்டமிடப்பட்ட காலப்பகுதிக்குள் திட்டப் பணிகள் நிறைவடையாததன் காரணமாக, தகவல் தொழில்நுட்ப ஆலோசகர் ஒருவரின் சேவை ஒரு வருட காலத்திற்குப் பெற்றுக்கொள்ளப்பட்டு, அதற்காகக் கொடுப்பனவாக ரூ. 2,400,000 செலுத்தப்பட்டிருந்ததுடன், 2025 டிசம்பர் இறுதியளவில் இத்திட்டத்திற்காகச் சபை மேற்கொண்டிருந்த மொத்தச் செலவு ரூ.193 மில்லியன் ஆகும். இத்திட்டம் வெற்றிகரமாக நிறைவடையாததால், புதிய ஒப்பந்தமொன்றை செய்வதற்குச் சபை இதுவரையில் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) சபையின் முதலீட்டுச் சொத்தாகக் காணப்படும் நவம் மாவத்தை வாகன நிறுத்துமிடத்தின் தற்போதைய மதிப்பீட்டுப் பெறுமதி ரூ.4,566 மில்லியன் ஆகும் என்பதுடன், அதன் வருடாந்த வருமானம் ரூ.44 மில்லியன் ஆகும். வாகன நிறுத்துமிடத்தைப் பேணுதல், வருமானம் சேகரித்தல், ஒப்பந்தங்களை மேற்கொள்ளல் சம்பந்தமாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன:

(i) சபைக்குச் சொந்தமான நவம் மாவத்தை வளாகத்தினுள் தற்போதைய நிலையிலும் 2 விளம்பரப் பலகைகள் பொருத்தப்பட்டுள்ளதுடன், அவற்றுள் ஒரு நிறுவனத்தின் விளம்பரப்



143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

பலகை 2016 ஆம் ஆண்டு முதலும், மற்றைய நிறுவனத்தின் விளம்பரப் பலகை 2022 ஆம் ஆண்டு முதலும் பேணப்பட்டு வருகின்றது. கொள்முதல் நடைமுறைகளைப் பின்பற்றாமல் தொடர்ச்சியாக ஒரே நிறுவனத்திற்கு இவ்வாய்ப்பைச் வழங்குவதற்குச் சபை நடவடிக்கை எடுத்துள்ளதுடன், இந்நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கும் இதுவரையில் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) வாகன நிறுத்துநர்களிடமிருந்து 2025 டிசம்பர் 31 ஆம் திகதி சேகரிக்கப்பட வேண்டிய மொத்த நிலுவை பெறுமதி ரூ.6,858,325 ஆகக் காணப்பட்டதுடன், இதற்குள் 90 நாட்களைக் கடந்தும் செலுத்தப்படாத நிலுவைப் பெறுமதி ரூ.3,950,000 ஆகும். மாதாந்த வாடகை அடிப்படையில் வாகனங்களை நிறுத்தும் 78 நிறுவனங்கள் காணப்பட்ட போதிலும், ஒரு நிறுவனத்துடன் மாத்திரமே சபை ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது.

(iii) வாகன நிறுத்துமிட வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக, மாதாந்த வாகன நிறுத்தக் கட்டணத்தைப் போல் மூன்று மடங்கு தொகையைப் பிணை வைப்பாக வைப்பிலிட வேண்டும் என்ற போதிலும், 111 வாகனங்களுக்கான நிறுத்த வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் நிறுவனமொன்று ரூ.2,664,000 ஐ (8,000 x 3 x 111) பிணை வைப்பாகச் செலுத்தியிருக்க வேண்டும். எனினும், ரூ. 1,584,000 மாத்திரமே வைப்பிலிடப்பட்டிருந்ததால், ரூ.1,080,000 நிலுவைத் தொகை இதுவரையில் சேகரிக்கவில்லை.

(ஈ) தகவல் சொத்துகளின் இரகசியத்தன்மை, கிடைப்புத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கும், அவற்றுக்கான அங்கீகாரமற்ற அணுகல்களைத் தடுத்தல், மாற்றியமைத்தல் அல்லது அழித்தல்களிலிருந்து தகவல் சொத்துகளைப் பாதுகாப்பதற்கும் அறிமுகப்படுத்தப்பட்ட சைபர் பாதுகாப்பு கொள்கைக்கு அனைத்து அரசாங்க நிறுவனங்களும் இணங்கிச் செயற்பட வேண்டும் என தொழில்நுட்ப அமைச்சின் 2023 மே 02 திகதியிட்ட MOT/2023/01 இலக்கச் சுற்றறிக்கை மூலம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. சுற்றறிக்கையின் அளவுகோல்களுக்கு இணங்க, சபையினுள் தகவல் பாதுகாப்பு குழுக்களை அமைத்தல், இடர் முகாமைக் குழுக்களை அமைத்தல், தகவல் சொத்துப் பதிவேடு மற்றும் தகவல் தொழில்நுட்பச் சொத்துப் பதிவேட்டைப் பேணுதல் போன்ற பணிகள் இதுவரையில் பூர்த்தி செய்யப்படவில்லை.

(உ) மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தின் இறுதியில் சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 1,106 ஆகும் என்பதுடன், உண்மையான ஊழியர்களின் எண்ணிக்கை 848 ஆகக் காணப்பட்டதால் 258 வெற்றிடங்கள் நிலவின. சபையின் குறிக்கோள்களை எய்தும் செயற்பாட்டில் ஊழியர்களின் பங்களிப்பு மற்றும் ஆட்சேர்ப்பு சம்பந்தமாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன:

(i) பிரதிப் பொது முகாமையாளர் (உறுப்பினர் சேவைகள்) பதவிக்கு 2021 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அதிகாரியின் தனிப்பட்ட கோப்பினைப் பரிசோதித்த போது, அவரது சேவைப் அனுபவத்திற்கான புள்ளிகளை வழங்குவதற்குரிய சேவைச் சான்றிதழ்கள் கோப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ii) தாபன விதிக் கோவை அத்தியாயம் ஜஜ இன் 1-10 இன் பிரகாரம், நியமன அதிகாரி ஒருவரினால் எவ்வித காரணத்திற்காகவும் தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியின்றி நியமனமொன்றை முன்திகதியிடல் செய்யக் கூடாது என்ற போதிலும், 2020 செப்டம்பர் 01 ஆம் திகதி முதல் உதவி நிர்வாக அதிகாரியாக நியமனம் பெற்ற ஒருவரின் நியமனத் திகதி, 2016 ஜூன் 01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் முன்திகதியிடப்பட்டிருந்தது.

(iii) தாபன விதிக்கோவை அத்தியாயம் ஜஜ இன் 13.1.2 இன் படி, பதில் கடமை நியமனங்களுக்காகப் பரிந்துரைக்கப்படும் அதிகாரி, அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின்படி அனைத்து வகையிலும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும். எனினும், உதவி முகாமைத்துவ மட்டத்தின் தரம் ஜஜ பதவியொன்றில் கடமையாற்றி வந்த அதிகாரி ஒருவருக்கு, 2021 டிசம்பர் 22 ஆம் திகதி முதல் முகாமையாளர், கொடுப்பனவு நிர்வாகப் பதவியில் (ஆஆ 1-3) பதில் கடமையாற்றுவதற்காக நியமனம் வழங்கப்பட்டிருந்தது.

(iv) உள்ளக கணக்காய்வுப் பிரிவிற்கான அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 15 ஆக இருந்த போதிலும், 2025 டிசம்பர் 31 ஆம் திகதியன்று உண்மையான ஊழியர்களின் எண்ணிக்கை 05 ஆகக் காணப்பட்டது. உதவிப் பொது முகாமையாளர் (உள்ளக கணக்காய்வாளர்) பதவி 2023 ஆம் ஆண்டிற்கு முன்னரிலிருந்தே வெற்றிடமாகக் காணப்படுவதுடன், தற்போது இணைக்கப்பட்டுள்ள ஊழியர்களில் 03 அதிகாரிகள் மாத்திரமே தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்திருந்தனர்.

(ஊ) 2016 ஆகஸ்ட் 26 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்க தொழில் முயற்சிகள் பற்றிய குழுவின் (COPE) கூட்டத்தில், சபையின் தவிசாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி (CEO) ஆகிய பதவிகளை ஒரே நபர் வகிப்பதைச்

சட்டத் திருத்தத்தின் மூலம் மாற்றியமைக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டிருந்தது. எனினும், அக்கூட்டம் நடைபெற்று 08 வருடங்கள் கடந்துள்ள போதிலும், அப்பணியை விரைவுபடுத்தித் திருத்தங்களை மேற்கொள்வதற்குத் தவறியுள்ளது.

(எ) நிதியத்தினால் மேற்கொள்ளப்படும் முதலீடுகளின் சந்தை விலையில் ஏற்படும் பாரிய ஏற்ற இறக்கங்கள் காரணமாக, உறுப்பினர்களின் பகிர்ந்தளிக்கக்கூடிய இலாபங்களில் பாதிப்பு ஏற்படும் போது, அதன் மோசமான விளைவுகளைத் தடுக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட இலாபச் சமனாக்கல் ஒதுக்கிற்கு 2015 முதல் 2022 ஆம் ஆண்டு வரை இலாபத்திலிருந்து ஒதுக்கீடுகள் எதுவும் செய்யப்படவில்லை. எனினும் 2023, 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் முறையே ரூ.10 மில்லியன், ரூ.3 மில்லியன் மற்றும் ரூ.5.8 மில்லியன் வீதம் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. ஒரு குறிப்பிட்ட கொள்கை உடன்படிக்கைக்குப் புறம்பாக, இலாபச் சமனாக்கல் ஒதுக்கிற்கு இவ்வாறு நிலுவையை மாற்றுவதன் மூலம், உறுப்பினர்களுக்குப் பகிர்ந்தளிக்கக்கூடிய இலாபம் குறைவடைவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்பட்டன.

(ஏ) 2025 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு உரிமை கோரப்படாத சாதாரண கொடுப்பனவுக் கணக்குகளின் மொத்த நிலுவை ரூ.9.029 மில்லியனாகக் காணப்பட்டதுடன், அதற்குள் 2001 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய பெறுமதி ரூ. 4.6 மில்லியன் ஆகும். இந்நிலுவைகளைத் தீர்ப்பதற்கோ அல்லது மீண்டும் உறுப்பினர்களின் கணக்கில் வரவு வைப்பதற்கோ மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

(ஐ) 1982 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்கு அமைவாக, தொழில் வழங்குநர்களை இனங்காண முடியாமல் மீளாய்வுக்கு உட்பட்ட வருடம் வரை தொடர்ச்சியாக நிலவி வரும் 'V999' என்ற எதிரபாராக் கணக்கின் நிலுவைத் தொகை ரூ. 6.52 மில்லியனாகக் காணப்பட்டது.

(ஒ) ஓய்வுபெற்று முறையே சுமார் 1.5 வருடங்கள் முதல் 17 வருடங்கள் வரை கடந்துள்ள 06 அதிகாரிகளுக்குரிய, கடன் அல்லாத அறவிடப்பட வேண்டிய பண நிலுவை ரூ.108,415 ஆகும். அத்துடன் ஓய்வுபெற்று 1.5 வருடங்கள் முதல் 4 வருடங்கள் வரை கடந்துள்ள 04 அதிகாரிகளுக்குரிய, அறவிடப்பட வேண்டிய ரூ.3,211,035 கடன் நிலுவையை 2026 ஏப்ரல் 30 ஆம் திகதியாகியும் அறவிட முடியாமல் போயுள்ளது.

**ஒப்பம் : எல்.எஸ்.ஐ. ஜயரத்ன**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி



143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

2025 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்பில்

**முகாமைத்துவத்தின் கருத்துக்களை முன்வைத்தல்**

**2.2.2 சட்டங்கள்∴விதிகள் மற்றும் கட்டளைகளுக்கு இணங்காமை**

(அ) 2024 ஆம் ஆண்டின் விரிவான முகாமைத்துவ கணக்காய்வாளர் அதிபதி அறிக்கையின் முன்னேற்றத்தை ஒரு மாதத்திற்குள் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு வருவதுடன், 2025 ஆம் ஆண்டுக்குரிய முகாமைத்துவக் கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், தாமதமின்றி அதன் முன்னேற்ற அறிக்கைகளை வழங்குவதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் நிர்வாகத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(ஆ) ரூ.6,868.64**

கணினி அமைப்பில் ஏற்பட்டுள்ள பிழை (System Error) காரணமாக, 2018 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் இந்தத் தொகையானது 06 மாதங்கள் கடந்த காசோலைகள் பற்றிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ரூ.1,669.05**

இத்தொகையைக் கொண்ட காசோலையானது, A/23775/240 என்ற அங்கத்துவ இலக்கத்தைக் கொண்ட திரு. ஏ.ஆர்.ஏ.ஆர். செனவிரத்ன அவர்களுக்கு 2023/515801 என்ற தொகுதி இலக்கத்தின் கீழ் வழங்கப்பட்ட ஒரு காசோலையாகும். இது வங்கியில் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் (Unpresented Cheques) பட்டியலில் மறைப் பெறுமதியாக (1,669.05-) குறிப்பிடப்பட்டிருந்தது. இது கணினி அமைப்பில் ஏற்பட்ட பிழையினால் நிகழ்ந்ததொன்றாகும் என்பதுடன், இதில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி தவறானது என்பதால், அதற்குப் பதிலாக 2023/527336 என்ற தொகுதி இலக்கத்தின் கீழ் உறுப்பினருக்குப் பணம் செலுத்தப்பட்டு கணக்குத் தீர்க்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட இரண்டு காசோலை இலக்கங்களும் கணினி அமைப்பின் வங்கியில் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் (Unpresented Cheques) பட்டியலில் காண்பிக்கப்படுவது கணினி அமைப்பில் ஏற்பட்டுள்ள பிழை (System Error) காரணமாகும். கணினிப் பிரிவின் உதவியுடன் இந்த இரண்டு காசோலைகளையும் எதிர்காலத்தில் காசோலைப் பட்டியலிலிருந்து நீக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய பிரிவுகளை அறிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கின்றேன்.

**ரூ.147,939.16, ரூ.415,865.10, ரூ.154,438.25, ரூ.10,349.59**

இக்காசோலைகள், நிறுத்தி வைக்கப்பட்ட வரிகளை விடுவிக்கும் போது உறுப்பினர்களுக்குச் செலுத்த வேண்டிய பணத்தை விடுவிப்பதற்காக வழங்கப்பட்ட காசோலைகளாகும். இவற்றை உரிமை கோரப்படாத (Unclaimed) கணக்குகளுக்கு மாற்றும் போது கணினி அமைப்பில் பிழைகள் ஏற்படக்கூடும் என்பதால், இவை வங்கியில் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் (Unpresented) பட்டியலிலிருந்து நீக்கப்பட்டு உரிமை கோரப்படாத கணக்குகளுக்கு மாற்றப்படவில்லை.

கணினி அமைப்பில் ஏற்பட்டுள்ள பிழைகள் காரணமாக நிதிப் பிரமாணங்களின்படி செயலாற்றுவது கடினமாக உள்ளதால், இப்பிழைகளைத் திருத்துவதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைக் குழுவிடம் சமர்ப்பித்து பரிந்துரைகளைப் பெற்ற பின்னர், பணிப்பாளர் சபையின் அனுமதியின் பேரில் எதிர்காலத்தில் செயலாற்ற எதிர்பார்க்கின்றேன்.

(இ) (i) 2026 ஆம் ஆண்டு முதல் முறையாக கணக்காய்வு மற்றும் முகாமைக் குழுக் கூட்டங்களை நடத்துவதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. 2026 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுக்குரிய கணக்காய்வு மற்றும் முகாமைக் குழுக் கூட்டம் நடத்தப்பட்டுள்ளதுடன், இரண்டாம் காலாண்டுக்குரிய கூட்டம் ஜூன் மாதத்தில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

(ii) இலங்கை உப்பு நிறுவனம் (Lanka Salt Ltd - கட்டுப்பாட்டு நிறுவனம்) தொடர்பான கொள்கைத்திட்ட வரைபை தயாரிப்பதற்கான பணி இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திற்கு (SLIDA) வழங்கப்பட்டுள்ளதுடன், தற்போது அதன் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் முன்னேற்றம் எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும்.

www.etfb.lk

143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

2026.03.30 ஆம் திகதி மதிப்பிடப்பட்ட தொகையான ரூ.529,444.44 இன் கீழ், மேற்படி நிறுவனத்திற்கு கொள்கைத்திட்ட வரைபைத் தயாரிப்பதற்கான பணியை வழங்குவதற்கு இலங்கை உப்பு நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் அனுமதி கிடைத்துள்ளது. மதிப்பிடப்பட்ட தொகையில் 50மூ தற்பொழுது செலுத்தப்பட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.





**(iii) செயல்முறை நடைமுறைக் கோவை**

பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் தற்போது பயன்படுத்தப்படும் சபையின் செயல்முறை நடைமுறைக் கோவையை, இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் (SLIDA) ஒத்துழைப்புடன் இக்காலத்திற்கு ஏற்ப புதுப்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், அப்பணிகள் நிறைவடைந்த பின்னர் பணிப்பாளர் சபையின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

**நிதி நடைமுறைக் கோவை:**

பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நடைமுறை கையேடு (Financial Procedure Manual) 2022 ஜூன் 23 ஆம் திகதி அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட கையேடு இதுவரையில் மீண்டும் கிடைக்கப்பெறவில்லை. அதற்கான அனுமதியை விரைவாகப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான அறிவுறுத்தல்களை உரிய பிரிவுகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

(எ) இணைந்த படிகள் வழங்குவது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள உள்ளக சுற்றறிக்கைகளின் நிபந்தனைகளை, அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கங்கள் 20/2018 இற்கு இணங்க திருத்துவதற்காக 2024.03.25 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் வழங்கப்பட்ட அனுமதிக்கு அமைய, முன்னிருந்த உள்ளக சுற்றறிக்கை இலக்கம் 2006/26 இன் 1 ஆம் இலக்க நிபந்தனை திருத்தப்பட்டு, மாதாந்த அடிப்படைச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு இணைந்த படிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும், முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 01:.2025 இன் 20 ஆம் நிபந்தனையில் குறிப்பிட்டுள்ளவாறு, உப அட்டவணை இலக்கம் 111 இல் உள்ள ஊழியர் வகைப்படுத்தலுக்கு ஏற்ப இணைந்த படிகளை வழங்குவது குறித்து அடுத்த பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(ஒ) 2024 ஆம் ஆண்டின் கொள்முதல் வழிகாட்டுதல் கோவையின் 2.4(ஆ) iii பந்தியின்படி, கொள்முதல் குழு தனது முதலாவது கூட்டத்தில் கொள்முதல் செயல்முறைக்குரிய திகதிகளைத் தீர்மானிக்கவில்லை என்ற கருத்தை ஏற்றுக்கொள்கிறோம். இக்குறைபாடு 2026 ஆம் ஆண்டு முதல் திருத்திக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. முதலாம் கொள்முதலின் போது திகதிகள் தீர்மானிக்கப்படாவிட்டாலும், கணக்காய்வுப் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்கான கொள்முதல் செயல்முறையின் போது திகதிகள் வழங்கப்பட்டுள்ளன. விபரங்கள் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகின்றன:

அ. விளம்பரம் செய்யப்பட வேண்டிய திகதிகள் ஒப்பந்தத்தின் 3 ஆம் நிபந்தனையின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

ஆ. கொள்முதல் ஆவணங்களை வழங்குதல் மற்றும் விலைமனுக்களை ஏற்றுக்கொள்வதை நிறைவு செய்வது தொடர்பான விபரங்களை இன் கீழ் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களை ஆராய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

இ. கொள்முதல் ஆவணம் திறக்கப்பட்ட திகதி 2025 பெப்ரவரி 05 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

## 2.2.3

(அ) கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களுடன் உடன்படுவதுடன், கணக்காய்வுப் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள் தொடர்பாக களப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது. நிலைமை அவ்வாறிருந்தபோதிலும், சபையினால் கணக்காய்வு வினவலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களைத் தீர்ப்பதற்காகக் களப் பரிசோதனைகள் எவையும் செய்யப்படவில்லை என்பது அதன் கருத்தல்ல.

சபையினால் 86,000 செயலில் உள்ள பங்களிப்புச் செலுத்தும் தொழில் வழங்குநர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவர்களின் மூலம் பங்களிப்புப் பணத்தை முறையாகச் செலுத்தாத நிறுவனங்கள் தொடர்பாக களப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. செயலற்ற நிலையிலுள்ள 125,000 தொழில் வழங்குநர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவ்வாறு அடையாளம் காணப்பட்ட தொழில் வழங்குநர்களை மீண்டும்

செயலுக்கமுள்ள பங்களிப்பாளர்களாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டு களப் பரிசோதனைகளும் செய்யப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட விடயங்களை வெற்றிகரமாகச் சாதிக்கும் நோக்கில், வசூலிப்பு மற்றும் தொழில் வழங்குநர் உறவுகள் பிரிவு நிறுவப்பட்டுள்ளதுடன், பணிகளை மேலும் முறைப்படுத்துவதற்காக நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில் பிரதேச அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளன. இவ்வலுவலகங்களால் பிரதானமாகக் களப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதுடன், 2008 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்ட தொழில் வழங்குநர் பரிசோதனைகளின் எண்ணிக்கை 47,020 ஆகும். அதன் சுருக்கம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது:

| காலப்பகுதி | நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---:|
| 2008/07 – 2012/12 | 9,112 |
| 2013/01 – 2016/12 | 14,182 |
| 2017/01 – 2021/12 | 13,894 |
| 2022/01 – 2025/12 | 9,832 |
| **மொத்தம்** | **47,020** |

கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள நிறுவனங்களை விரைவாகப் பரிசோதித்து தற்போதைய முன்னேற்றத்தை வழங்குமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், சபையினால் அடையாளம் காணப்பட்டுள்ள, பங்களிப்புகளைச் சரியாகச் செலுத்தாத மற்றும் செயலற்ற தொழில் வழங்குநர்களைக் கண்டறிந்து, அந்நிறுவனங்களின் தற்போதைய செயல்பாட்டுத் தன்மை குறித்த பரிசோதனையொன்றை ஏற்றுக்கொள்ளத்தக்க அளவுகோல்களின்படி தரம் பிரித்து எதிர்வரும் 05 வருட காலப்பகுதிக்காக களப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்குத் தேவையான திட்டங்களைத் தயாரித்துச் சமர்ப்பிக்குமாறு ஏற்புடைய பிரிவுகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய, எதிர்காலத்தில் அத்திட்டத்தின்படி செயல்பட்டுள்ளதா மற்றும் அதன் மூலம் சபை அடைந்துள்ள முன்னேற்றம் குறித்துப் பரிசோதித்து எனக்கு அறிக்கையிடுமாறு சபையின் உள்ளக கணக்காய்வுப் பிரிவுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, மாதாந்தம் பிராந்திய அலுவலகங்களுடன் நடத்தப்படும் முன்னேற்றக் கூட்டங்களில் இது குறித்துக் கலந்துரையாடி பின்னூட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான பணிகள் திட்டமிடப்பட்டுள்ளன. மேலே குறிப்பிடப்பட்ட உள்ளக கட்டுப்பாட்டு முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தேவையான கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இது தவிர, கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பிரச்சினையை நிர்வகிப்பதற்காகப் பின்வரும் குறிப்பிட்ட இலக்குகள் பிராந்திய அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன:

1. மாதாந்தம் பரிசோதிக்கப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைகள்
2. பயனுள்ள இடப் பரிசோதனைகளின் சதவீதம்
3. அடையாளம் காணப்பட்ட புதிய உறுப்பினர்களின் எண்ணிக்கை
4. மாதாந்த இடப் பரிசோதனைகளின் அடிப்படையில் கணக்கிடப்படும் கொடுப்பனவு முகவர் பெறுமதி

மேற்கூறிய இலக்குகளை அடைவதன் மூலம் பின்வரும் பணிகள் பிரதேச அலுவலகங்களால் மேற்கொள்ளப்படுகின்றன:

1. இதுவரையில் பங்களிப்புச் செலுத்தாத, ஊழியர் சேமலாப நிதியத்தின் கீழ் (EPF) பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு பங்களிப்புப் பணத்தைச் செலுத்துவதற்காக எழுத்துமூலம் அறிவித்தல்.

2. கொடுப்பனவுகளைத் தாமதப்படுத்தியுள்ள தொழில் வழங்கும் நிறுவனங்களுக்கு கொடுப்பனவுகளைச் செலுத்துமாறு அறிவித்தல்.

3. மேற்படி அறிவித்தல்களுக்குப் பதிலளிக்காத தொழில் வழங்குநர்களின் நிறுவனங்களைப் பரிசோதித்து, நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

www.etfb.lk

143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

4. ஊழியர்களுக்கான பங்களிப்புப் பணம் செலுத்தப்படாமை குறித்துக் கிடைக்கும் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளுதல், விசாரணை செய்தல் மற்றும் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

கணக்காய்வுப் பந்தி இலக்கங்கள் 2 மற்றும் 3 இல் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் குறித்துச் செயல்படும் போது, சபையின் எல்லைக்கு அப்பாற்பட்ட விடயங்களும் காணப்படுவதுடன், அதன் மூலம் ஏற்படும் தடைகளினாலும் இப்பிரச்சினைகளைத் தீர்ப்பது கடினமாக உள்ளது. அவ்விடயங்களாவன:

1. நடைமுறைப்படுத்தல் பணிகளுக்குரிய விபரங்களை கணினிமயமாக்குவது 2008 ஆம் ஆண்டிலேயே மேற்கொள்ளப்பட்டதுடன், அதற்கு முன்னைய வருடங்களின் விபரங்களைப் பெற்றுக்கொள்வதில் நடைமுறைச் சிக்கல்கள் காணப்படல்.

2. தொழில் வழங்கும் நிறுவனங்கள் மூடப்பட்டிருத்தல் ∴ கைவிடப்பட்டிருத்தல் ∴ கண்டுபிடிக்க முடியாமை காரணமாகத் தாமதங்கள் ஏற்படல்.

3. தொழில் வழங்கும் நிறுவனங்கள் மூடப்பட்டிருந்த போதிலும், சபையின் கணக்குகளிலிருந்து சம்பந்தப்பட்ட விபரங்களை நீக்க முடியாமை.

மேற்கூறிய விடயங்களைத் தீர்ப்பதற்குத் தேவையான வழிமுறைகளை ஆராய்ந்து, இப்பிரச்சினைகளை விரைவாகத் தீர்ப்பதற்கான ஒரு கட்டமைப்பை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

(ஆ) 2026.05.22 ஆம் திகதிக்கு தொழில் வழங்குநர்களின் எண்ணிக்கை 5,960 ஆகக் குறைந்துள்ளதுடன், வகைப்படுத்தப்படாத பணம் 20 மில்லியனால் குறைவடைந்துள்ளது. அதற்கமைய, 2026.05.20 ஆம் திகதிக்கான வகைப்படுத்தப்படாத பணத்தின் மீதி ரூ.876,405,046.75 ஆகும்.

எதிர்காலத்தில் இத்தகைய நிலைமைகளைக் குறைப்பதற்காக, ETF பங்களிப்புப் பணத்தை இணையவழி முறைமையினூடாக மாத்திரம் அனுப்புவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, Form II Text File இணையவழி முறைமையினூடாக வழங்குவதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

2015 முதல் 2024 வரையான காலப்பகுதிக்குரிய வகைப்படுத்தப்படாத பணத்தை விரைவாக வகைப்படுத்துவதற்காகச் ஏற்புடைய பிரிவுகளுக்கு எழுத்துமூலம் அறிவுறுத்தல்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அது குறித்து கணக்காய்வுப் பிரிவுக்கு அறிவிக்கப்படும்.

2.2.4

(அ) இத்திட்டம் 2023 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. திட்டமிட்டபடி குறிப்பிட்ட காலத்திற்குள் செயல்பாட்டு ஏற்பு அமர்வுகளை ஆரம்பிக்க முடியாமல் போனது. ஏற்புடைய வன்பொருள் சாதனங்களை கொள்முதல் செய்ய வேண்டும் என ICTA நிறுவனம் தொடர்ந்து வலியுறுத்தி வந்ததால், அதற்குரிய அமைச்சின் அனுமதியைப் பெற்ற பின்னர் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இவ்வியந்திரங்களின் தேவை ஏற்படுவதுடன், அதற்கமைய இவற்றை உபயோகிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) வருடாந்தம் புதுப்பிக்கும் அடிப்படையில் ரூபா 500 மில்லியனை நிலையான வைப்புகளிலும் மறுகொள்வனவுகளிலும் முதலீடு செய்துள்ளமையானது, சபையின் பிரதான பங்களிப்புப் பணம் அறவீட்டுக் கணக்கை பராமரிப்பதற்கான வசதியை வழங்குவதற்காக இலங்கை வங்கிக்கும் சபைக்கும் இடையே எட்டப்பட்ட உடன்பாட்டுக்கு அமையவே ஆகும். மேலும், அவ்முதலீடுகளை வருடாந்தம் புதுப்பிக்கும் போது, (Renew) மறுகொள்வனவுகள் மற்றும் நிலையான வைப்புகளுக்காக 3 அரசாங்க வங்கிகளில் அன்றைய தினத்தில் நிலவும் வட்டி வீதங்களை ஒப்பிட்டு, மிகவும் சாதகமான வட்டி வீதத்தின் கீழ் இலங்கை வங்கியில் முதலீடு செய்யப்படுகின்றது. அதற்கமைய, வருடாந்த சந்தை வட்டி வீதங்களின் மாறுபாடுகளுக்கு ஏற்ப, நிலவும் வட்டி வீதங்களின் கீழ் அவ்வைப்புகளைப் பராமரிப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

சபைக்கு காசோலைகள் மூலம் கிடைக்கும் பங்களிப்புப் பணத்தைச் சேகரிப்பதற்காகப் பராமரிக்கப்படும் பிரதான வங்கிக் கணக்கான இலங்கை வங்கியின் கணக்கு இலக்கம் 1839 இன் ஊடாக, 2025 ஆம் ஆண்டில் 512,981 காசோலைகளுக்காக ரூ.7,940 மில்லியன் பெறுமதியான கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலதிகமாக, இக்கணக்குடன் தொடர்புடையதாக அவ்வருடத்தில் மறுக்கப்பட்ட காசோலைகளின் எண்ணிக்கை 1,707 ஆகும் என்பதுடன் அதன் பெறுமதி ரூ. 33 மில்லியன் ஆகும்.

இக்கணக்குகளைப் பராமரிப்பதற்காகப் பின்வரும் விசேட வசதிகள் இலங்கை வங்கியினால் வழங்கப்படுகின்றன:

- நாளைக்கு இருமுறை இலங்கை வங்கியின் கூரியர் சேவை சபைக்கு வருகை தந்து காசோலைகளை எடுத்துச் செல்லல் (பிற்பகல் 12.00 மற்றும் பிற்பகல் 2.30)

- வங்கி அறிக்கைகள் மற்றும் மறுக்கப்பட்ட காசோலைகளைச் சபையிடம் ஒப்படைத்தல்.

- வங்கியிடம் பிற்பகல் 12.00 மணி வரை வழங்கப்படும் காசோலைகளின் பெறுமதியை அன்றைய தினமே வங்கிக் கணக்கில் வரவு வைத்தல் மற்றும் அதற்குப் பின் வழங்கப்படும் காசோலைகளின் பெறுமதியை மறுநாள் அல்லது அதற்கு அடுத்த நாள் கணக்கில் வரவு வைத்தல்.

- சபைக்கு நாளாந்தம் கணக்கின் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீதியை சரிபார்ப்பதற்கான இணையப் பிரவேச வசதிகளை வழங்குதல்.

அதற்கமைய, வங்கியினால் வழங்கப்படும் சேவைகள் மற்றும் விசேட வசதிகளுக்காக ரூ. 100,000.00 மாதாந்த சேவைக்கட்டணம் 2005 ஆம் ஆண்டு முதல் இன்று வரை எவ்வித அதிகரிப்புமின்றி சபையினால் செலுத்தப்பட்டு வருகின்றது.

எவ்வாறாயினும், இந்த நிலையான வைப்புகளை மீண்டும் முதலீடு செய்வதற்கு முன்னர், தற்போதைய நிலையை விட அதிக இலாபகரமான திட்டத்தின் கீழ் பராமரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் அல்லது பிற சாதகமான மாற்று வாய்ப்புகள் குறித்து பகுப்பாய்வு செய்து தீர்மானிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) மேற்படி நிறுவனத்திலான முதலீடானது, நீண்டகால முதலீட்டுப் பட்டியலிலுள்ள சுற்றுலாத்துறை சார்ந்த நிறுவனமொன்றின் முதலீடாகும். இந்நிறுவன முதலீட்டின் மூலம் 2011 முதல் 2020 வரை இலாபப்பங்கு வருமானமாக ரூ.24.16 மில்லியன் கிடைத்துள்ளதுடன், 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் இந்நிறுவனத்தின் பங்குகளை விற்று மூலதன இலாபமாக ரூ.18 மில்லியன் ஈட்டப்பட்டுள்ளது. எனினும், 2020 ஆம் ஆண்டில் நிலவிய கொரோனா தொற்றுநோய் நிலைமை மற்றும் நாட்டின் பொருளாதார வீழ்ச்சி காரணமாக சுற்றுலா விடுதித் துறை நட்டமடையும் நிலைக்குத் தள்ளப்பட்டதால், 2020 முதல் 2024 வரை இலாபப்பங்கு அறிவிக்கப்படவில்லை. 2025 ஆம் ஆண்டு முதல் மீண்டும் சுற்றுலாத்துறையின் வளர்ச்சியுடன் அந்நிறுவனமும் இலாபமடையும் நிலையை அடைந்துள்ளதுடன், இலாபப்பங்கு அறிவிக்கப்பட்டு ரூ.383,739 இலாபப்பங்காகக் கிடைத்துள்ளது. நாட்டில் நிலவும் சுற்றுலாத்துறையின் வளர்ச்சியுடன் எதிர்வரும் வருடங்களிலும் இலாபப்பங்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதுடன், இந்நிறுவனப் பங்குகளின் பங்குச்சந்தை விலை அதன் உண்மையான செலவை விட அதிகரிக்கும் போது, மூலதன இலாபத்துடன் அவற்றை விற்பனை செய்ய எதிர்பார்க்கின்றோம்.

(எ) சபையினால் 2002.11.29 அன்று ஸ்ரீ லங்கா டெலிகொம் (SLT) நிறுவனத்தின் ஆரம்பப் பொது வழங்கீட்டின் (IPO) போது ஒரு பங்கு ரூ.15.00 வீதம் 12,793,288 பங்குகளுக்காக ரூ. 191,899,320 முதலீடு செய்யப்பட்டது. அவ்வனைத்துப் பங்குகளும் 2002 முதல் 2006 வரையான காலப்பகுதியில் ரூ. 38,011,523.24 மூலதன இலாபத்துடன் அவ்வப்போது விற்பனை செய்யப்பட்டன.

மீண்டும் 2006.02.10 முதல் 2009.03.30 வரையான காலப்பகுதியில் 4,181,400 பங்குகள் வெவ்வேறு விலை எல்லைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டதுடன், 925,000 பங்குகள் ரூ.6.9 மில்லியன் மூலதன இலாபத்துடன் அவ்வப்போது விற்கப்பட்டன. கணக்காய்வு வினவலில் குறிப்பிடப்பட்டுள்ள 3,302,188 பங்குகளும் இக்காலப்பகுதியிலேயே கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

2008.02.25 திகதிய கடிதத்தின் மூலம், ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனத்தின் பங்குகள் அரசின் உரிமையாண்மையில் தாக்கத்தை ஏற்படுத்துவதால், நிதி அமைச்சின் முன் அனுமதியின்றி அவற்றை விற்பனை செய்ய வேண்டாம் என பொதுத் திறைசேரியினால் எழுத்துமூல அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய, பங்குச்சந்தையில் SLT பங்குகளை மூலதன இலாபத்துடன் விற்பனை செய்வது நிறுத்தப்பட்டது. 2009.03.30 ஆம் திகதியளவில் SLT நிறுவனத்தின் 3,302,188 பங்குகளின் உரிமையாண்மை சபையிடம் இருந்ததுடன், அதன் மொத்த உண்மையான செலவு ரூ. 110,340,299.24 ஆகும். ஒரு பங்கின் உண்மையான செலவு ரூ.33.41 ஆகக் காணப்பட்டது.



143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

SLT நிறுவனத்தின் ஒரு பங்கின் விலையில் கணிசமான அதிகரிப்பு நடப்பு ஆண்டுகளில் காண முடிகின்றது. அதாவது ரூ.33.41 ஆக இருந்த ஒரு பங்கு தற்போது சந்தையில் ரூ. 88.50 விலைக்கு விற்பனையாகியுள்ளது. 2026.04.30 அன்று ஒரு பங்கின் உண்மையான செலவு ரூ. 33.41 ஆக இருக்கும் போது அதன் சந்தை விலை ரூ. 86.00 ஆக இருந்தது. இப்பங்கு 2026.02.02 அன்று ரூ. 107.25 என்ற உயர்ந்த சந்தை மதிப்பில் கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்டுள்ளது.

பொதுத் திறைசேரியின் அறிவுறுத்தலின் பேரில் 2008 ஆம் ஆண்டு முதல் SLT பங்குகளை விற்பனை செய்வது நிறுத்தப்பட்டதால், 17 வருட காலமாக அப் பங்குத் தொகையை மூலதன இலாபமின்றி கைவசம் வைத்திருக்க வேண்டிய நிலை சபைக்கு ஏற்பட்டுள்ளது. 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்பட்ட 7% மற்றும் 6.5% இலாபப்பங்கிற்கு மேலதிகமாக, ஒவ்வொரு வருடத்திற்கும் 3% வட்டியும் செலுத்தப்பட்டுள்ளது.

(ஓ) நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் புதிய முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்குவது குறித்து சபை தற்போது கலந்துரையாடி வருவதுடன், அதன் மூலம் உகந்த முதலீட்டு வாய்ப்புகளைத் தேர்ந்தெடுத்து அதிகபட்ச நன்மைகளைப் பெற்றுக்கொள்ளவும், சபையின் பயன்படுத்தப்படாத வளங்களை அதிகபட்ச திறனுடன் முதலீடு செய்யவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## 3. ஏனைய விடயங்கள்

**(அ)** Elkaduwa Plantation Debenture:

இந்நிறுவனத்தினால் மாதாந்தம் ரூ.300,000.00 வீதம் நிலுவை வட்டி சபைக்குச் செலுத்தப்பட்டு வருவதுடன், நிறுவனத்தைக் கலைப்பது தொடர்பான சட்ட நடவடிக்கைகள் இன்னும் நிறைவடையாத காரணத்தினால் கணக்கு உறுதிப்படுத்தல் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) (i) உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காகச் சபையினால் பல்வேறு உத்திகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், அது பற்றிய விபரங்கள் சபையின் இணையப்பக்கம், தேசிய பத்திரிகைகள், விளம்பர நிகழ்ச்சிகள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு விளம்பர அஞ்சல்களை வழங்குவதன் மூலம் உரிய பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக, சபையின் பிராந்திய அலுவலகங்கள் ஊடாக 05 வருட காலத்திற்கு விரிவடையும் முறையான திட்டமொன்றைத் தயாரித்த பின்னர், செயலூக்கமுள்ள தொழில் வழங்குநர்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்கவும் புதிய தொழில் வழங்குநர்களை அடையாளம் காணவும் தேவையான பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட பிரிவுப் பிரதானிகளுக்கு எழுத்துப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன், மாதாந்த முன்னேற்றக் கூட்டங்களின் போது பிரதேச அலுவலகங்களுக்கு இது குறித்து மேலும் விளக்கமளிக்க நடவடிக்கை எடுக்கப்படும். முன்னைய கணக்காய்வு வினவல்களின் போது இது தொடர்பாக தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு எழுத்துமூலம் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டு முதல் வருடாந்த அறிக்கையின் மூலம் சபையின் ஆரம்ப தொழில் வழங்குநர்கள் மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை வெளிப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

(ii) உறுப்பினர்களுக்கு நேரடியாக விழிப்புணர்வூட்டுதல் மற்றும் ஊடகங்கள் வாயிலாக தற்போது இ-சேவை (e-services) வசதிகளை உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக 3 மாத காலப்பகுதிக்குள் 1,938 புதிய உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், இதனை மேலும் அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஏற்புடைய பிரிவுகளுக்கு எழுத்துமூலம் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதன் முன்னேற்றத்தை காலாண்டு அடிப்படையில் பெற்று தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

(iii) திட்டமிட்ட காலத்திற்குள் கருத்திட்டப் பணிகள் நிறைவடையாமைக்கு முக்கியமாகப் பின்வரும் காரணங்கள் செல்வாக்கு செலுத்தின:

1. கருத்திட்ட நிர்வாகத்தை ICTA நிறுவனம் வகித்ததுடன், கருத்திட்ட நிர்வாகத்திலிருந்த சிக்கல்கள் பிரதானமாக இத்திட்டம் தாமதமாவதற்கு வழிவகுத்தன.
2. கொவிட் சூழ்நிலை காரணமாக ஏற்பட்ட தாமதங்கள்.
3. மாற்றக் கோரிக்கைகளை (Change Requests - CR) நிறைவு செய்வதற்கு கணிசமான காலம் எடுத்தமை.
4. முறைமை நேரலையாக மாறுவதற்கு முன்னர் மேலும் சில முக்கிய மாற்றங்களை நிறைவு செய்ய வேண்டியிருந்தமை.
5. OAT ஐ ஆரம்பிப்பதற்கு முன்னர் முறைமையைப் பரிசோதிக்கும் போது முறைமைக்குள் சிக்கல்களும் பிழைகளும் ஏற்பட்டமை.

அக்காலப்பகுதியில் இருந்த நிறுவனப் பிரதானிகளின் தீர்மானத்திற்கு அமைய, அரசாங்க நிறுவனங்கள் திணைக்களத்தின் அனுமதியுடன் கொள்முதல் செயல்முறையொன்றை மேற்கொண்டு, இத்திட்டத்திற்காக தகவல் தொழில்நுட்ப ஆலோசகர் ஒருவரின் ஆலோசனைச் சேவை 2024 ஆம் ஆண்டில் ஓராண்டு காலத்திற்குப் பெற்றுக்கொள்ளப்பட்டது. இதன்போது, திட்டத்தின் செயல்பாட்டு ஏற்பு அமர்வுகளை (OAT) ஆரம்பிப்பதற்கு முன்னர் முறைமைக்குரிய பணிப்பாய்வுகளை அடையாளம் காணல் மற்றும் முறைமையை ஒரு சோதனைச் செயல்முறைக்கு உட்படுத்துவதன் அவசியத்தை தகவல் தொழில்நுட்ப ஆலோசகர் சுட்டிக்காட்டினார். இதன்போது முறைமைக்குள்ளும் அதனுடன் தொடர்புடையதாகவும் இருந்த முறைமைச் சிக்கல்களை அடையாளம் காண முடிந்தது.

சபையின் தற்போதைய வணிகத் தேவைகளுக்கும் புதிய முறைமைக்கும் இடையே முரண்பாடுகள் இருப்பதும் அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக திட்டமிட்டபடி OAT செயல்முறையை ஆரம்பிக்க முடியாமல் போனது. இத்தருணத்தில் முறைமைக்குரிய பணிப்பாய்வுகளைச் சரியாக அடையாளம் கண்டு, அவை அனைத்தையும் உள்ளடக்கும் வகையில் முறைமைக்குள் சோதித்துப் பார்ப்பதை ஒரு முன்னுரிமைப் பணியாக தகவல் தொழில்நுட்ப ஆலோசகர் அடையாளம் கண்டார். அதற்கமைய அது தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது, தகவல் தொழில்நுட்ப ஆலோசகர் சபையின் தவிசாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரிக்குத் தனது கடமைகளைப் பொறுப்பளித்ததுடன், கருத்திட்டம் தொடர்பான அவரது அறிக்கைகள் சபையின் தவிசாளருக்கும் பணிப்பாளர் சபைக்கும் அவ்வப்போது சமர்ப்பிக்கப்பட்டன. 2025 டிசம்பர் இறுதியாகும் போது இத்திட்டத்திற்காக சபை மேற்கொண்டுள்ள மொத்த செலவு ரூ. 193 மில்லியன் எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அதில் ரூ. 151 மில்லியனுக்கும் அதிகமான தொகை, ஆரம்ப முறைமை விரிவாக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இணையாக அன்றாட செயல்பாடுகளைத் தடையின்றி முன்னெடுப்பதை உறுதி செய்வதற்கான வன்பொருள் சாதனங்களைக் கொள்வனவு செய்வதற்கே செலவிடப்பட்டுள்ளது. எமது சபையின் செயல்பாடுகளின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காக இச்சாதனங்கள் ஏற்கனவே திறம்படப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இக்கருத்திட்டம் தொடர்பான கொள்முதல் மற்றும் கருத்திட்ட முகாமை என்பன ICTA நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டதுடன், கருத்திட்டம் தொடர்பாக அரசாங்க நிறுவனங்களுக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று (MOU) எமது சபைக்கும் ICTA நிறுவனத்திற்கும் இடையே காணப்படுகிறது. இத்திட்ட மேம்பாடு தொடர்பான ஒப்பந்தம் ICTA நிறுவனத்திற்கும் சேவை வழங்குநருக்கும் இடையே காணப்பட்டதுடன், கருத்திட்டம் தொடர்பான நிதி விடயங்களும் ICTA நிறுவனத்தினாலேயே கையாளப்பட்டன.

கருத்திட்டம் தொடர்பாக சேவை வழங்குநருக்கும் எமது சபைக்கும் இடையே எவ்வித ஒப்பந்தமும் செய்துகொள்ளப்படவில்லை என்பதுடன், அவ்வாறான ஒப்பந்தமொன்று இத்திட்டம் எமது சபையிடம் உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கப்பட்ட பின்னரே அவசியமாகின்றது.

கருத்திட்டத்தின் செயற்பாட்டுப் பொறுப்பை எமது சபையிடம் ஒப்படைப்பதற்கு ICTA நிறுவனத்தின் பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்து, 2026 மே 15 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அதன் பதில் தலைமை நிர்வாக அதிகாரி எமக்கு அறிவித்துள்ளார். இது தொடர்பாக எமது சபையின் பணிப்பாளர் சபைக்கு தற்போது பணிப்பாளர் சபை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கான அனுமதிகள் கிடைத்த பின்னர், புதிய ஒப்பந்தமொன்றில் ஈடுபடுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(இ) i) சபைக்குச் சொந்தமான நவம் மாவத்தை வாகன நிறுத்தத்தில் பொருத்தப்பட்டுள்ள விளம்பரப் பலகைகள், பல வருடங்களுக்கு முன்னர் நவம் மாவத்தை வாகன நிறுத்தம் சபையினால் மற்றொரு தரப்பினருக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த போது அவர்களின் சொந்தச் செலவில் அமைக்கப்பட்ட பலகைகள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவ்விளம்பரப் பலகைகளுக்குரிய காலப்பகுதிக்கு ஏற்ற பெறுமதியின் அடிப்படையில் வருடாவருடம் 10% பெறுமதியில் பணம் வசூலிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்த போதிலும், வணிக மதிப்புமிக்க இந்நிலத்தில் இப்பெறுமதி போதுமானதல்ல எனக் கண்டறியப்பட்டதால், அரச மதிப்பீடொன்றைப் பெற்று அவ்மதிப்பீட்டுத் தொகையின் அடிப்படையில் விலையைத் தீர்மானிக்க முன்மொழியப்பட்டது. அதற்கமைய, அவ்விளம்பரப் பலகைகளுக்குச் சொந்தமான நிறுவனத்திற்கு இவ்விடயம் அறிவிக்கப்பட்டு, ஒப்பந்தக் காலம் முடியும் வரை காட்சிப்படுத்துவதற்கான வாய்ப்பு



143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

வழங்கப்பட்டது. அது 2026.03.31 உடன் நிறைவடைந்தது. அதற்கமைய சபையின் எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக 2026.01.12 ஆம் திகதி அரச மதிப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு கோரிக்கை கடிதமொன்று அனுப்பப்பட்ட போதிலும், மதிப்பீட்டு அதிகாரிகளின் பற்றாக்குறை காரணமாக இதனை குறுகிய காலத்தில் முடிக்க முடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எமது கடிதத்திற்குப் பதிலாக 2026.05.21 ஆம் திகதி மதிப்பிடப்பட வேண்டிய பகுதிகள் தொடர்பான விபரங்கள் கோரப்பட்டுள்ளன. அதற்கமைய இப்பலகைகள் தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ii) நவம் மாவத்தை வாகன நிறுத்த வசதியைப் பெற்றுக்கொள்ளும் நிறுவனங்களுக்கு, ஒவ்வொரு விலைப்பட்டியலும் 14 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்து அனுப்பப்படுகின்றது. அவ்வாறு அனுப்பப்படும் விலைப்பட்டியல்களில் 50% அளவிலானவை குறிப்பிட்ட காலவரையறைக்குள் செலுத்தப்படுவதுடன், மற்றுமொரு பகுதி கொடுப்பனவுகளுக்காக ஒரு மாதத்திற்கும் மேலான கால அவகாசத்தை எடுத்துக்கொள்கிறது. நீண்ட காலமாக இந்த நிறுவனங்கள் எமது சபையுடன் கொண்டுள்ள உறவின் அடிப்படையில் இச்சேவையைப் பெற்றுக்கொள்வதால், இந்நிறுவனங்களுக்கு வழங்கப்படும் வசதிகளை நீக்க முடியாது.

ஒரு மாதத்தின் விலைப்பட்டியல் கொடுப்பனவு தாமதமாகும் போது, மற்றொரு மாதத்தின் விலைப்பட்டியல் வெளியிடப்படுவதன் மூலம் அந்நிறுவனத்திற்கு முன்னால் நிலுவைத் தவணைகள் உருவாகின்றன. நிலைமை அவ்வாறிருப்பதால், நிலுவைத் தவணைகள் உருவாவதைத் தடுப்பதற்காக, எதிர்காலத்தில் ஒரு மாதத்தின் ஆரம்பத்திலேயே கொடுப்பனவுகளை மேற்கொண்டு, இவ்வாகன நிறுத்த வசதிகளுக்காக முன்கொடுப்பனவு செய்யும் முறைமையொன்றின் ஊடாக வாகன நிறுத்த வசதியைப் பெற்றுக்கொள்ளும் செயல்முறையொன்றை வகுக்க எதிர்பார்க்கப்படுகிறது.

iii) நவம் மாவத்தை வாகன நிறுத்த வசதியைப் பெற்றுக்கொள்ளும் பிரதான நிறுவனங்களில் ஒன்றான N.T.B. நிறுவனத்தினால் ஆரம்பத்தில் 66 வாகனங்களுக்கான பிணை வைப்புப் பணம் சபையில் வரவு வைக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் புதிதாக 45 வாகனங்கள் சேர்க்கப்பட்டதுடன், அதற்காக வசூலிக்கப்பட வேண்டிய பிணை வைப்புத் தொகையான ரூ.1,080,000 ஐ வசூலிப்பதற்காக அந்நிறுவனத்தில் இது தொடர்பாகப் பணியாற்றும் அதிகாரிக்கு மின்னஞ்சல் மற்றும் தொலைபேசி ஊடாக அறிவிக்கப்பட்டது. அதற்கமைய, அவர்கள் இவ்விரைவில் இப்பணத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

(எ)

- சபைக்குள் தகவல் பாதுகாப்புக் குழுவை நிறுவுவது தொடர்பான வரைபுகள் தயாரிக்கப்பட்டு வருவதுடன், நியமனங்களுக்கான அனுமதியைப் பெற்ற பின்னர் அதனை மேற்கொள்வதற்குக் கட்டமைப்பு தயாராகி வருகின்றது.

- சபையில் இடர் முகாமைக் குழுவை நிறுவுவது தொடர்பான ஆரம்ப வரைபு தயாரிக்கப்பட்டு வருவதுடன், நியமனங்களுக்கான அனுமதியைப் பெற்ற பின்னர் அதனை மேற்கொள்வதற்குக் கட்டமைப்பு தயாராகி வருகின்றது.

- சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டத்தில் தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்பை உறுதி செய்யும் விதம் குறித்த செயல் திட்டம் சேர்க்கப்பட்டுள்ளதுடன், சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டிலும் அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- தகவல் சொத்துக்கள் பதிவேட்டை தயாரிப்பது தொடர்பாக (SLCERT) அமைப்பிடமிருந்து ஆலோசனைகள் தேவைப்படுவதுடன், அதன் பின்னர் இதனைத் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. சொத்துக்கள் பதிவேடு தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. தகவல் தொழில்நுட்ப சொத்துக்கள் பதிவேட்டைத் திறம்படப் பெற்றுக்கொள்ள, புதுப்பிக்க மற்றும் பராமரிக்க மென்பொருளொன்றைக் கொள்வனவு செய்வதற்காக 2026 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

- சபையின் பிரதான அலுவலகம், பிராந்திய அலுவலகங்கள் மற்றும் தரவு மையம் என்பன SDWAN தொழில் நுட்பத்தின் ஊடாக ஒன்றோடொன்று பாதுகாப்பாக இணைக்கப்பட்டுள்ளன. இந்த SDWAN தொழில் நுட்பத்தின் மூலம் கணினி வலையமைப்பு வாயிலாகத் தகவல்கள் குறியீடாக்கப்பட்டு பரிமாறப்படுகின்றன. பிரதான தரவு முறைமைக்குரிய பயனர்களின் கடவுச்சொற்கள் குறியீடாக்கப்பட்டு தரவுத்தளத்தினுள் சேமிக்கப்படுகின்றன.

- சபைக்குரிய பிரதான கணினி முறைமை உட்பட பிரதான முறைமைகள் தரவு மையத்தினுள் நிறுவப்பட்டுள்ளன. அதற்காக சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன், நம்பகத்தன்மையை உறுதி செய்வதற்கான முறைமையொன்றும் வழங்கப்பட்டுள்ளது. பிரவேசக் கட்டுப்பாட்டு வழிமுறையொன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது.

- சபைக்குள் செயல்படும் அனைத்து முறைமைகளுக்கும் அவற்றைப் பயன்படுத்துபவர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்தி, அவர்களின் பயன்பாட்டுத் தேவைக்கு ஏற்ப பிரவேசிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், அடையாள முகாமை மற்றும் பிரவேசக் கட்டுப்பாட்டு முறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

- சபையிடம் பேரழிவு மீட்பு வழிமுறையொன்று காணப்படுகிறது. SLCERT அமைப்புடன் கலந்துரையாடி இத்திட்டத்தைத் தயாரிப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஓ) i. பிரதிப் பொது முகாமையாளர் (உறுப்பினர் சேவைகள்) பதவிக்கு 2021 ஆம் ஆண்டில் பதவியமர்த்தப்பட்ட அதிகாரியின் சேவைப் பணிஅனுபவத்தை உறுதிப்படுத்துவதற்காக, அவர் பணியாற்றிய நிறுவனப் பிரதானிக்கு அனுப்பப்பட்ட கடிதத்திற்குப் பதில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதற்கமைய அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ii. செப்டம்பர் 01 ஆம் திகதி நியமிக்கப்பட்ட உதவி நிர்வாக அதிகாரியின் பதவி உயர்வுத் திகதியை முன்திகதியிடுவதை திருத்துவதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளதுடன், அதற்கமைய அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

iii. கனிஷ்ட முகாமையாளர் மட்ட அதிகாரியொருவருக்கு வழங்கப்பட்டிருந்த முகாமையாளர் (கொடுப்பனவு நிர்வாகம்) பதவியின் பதில் கடமையாற்றலை திருத்துவதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பரிந்துரைகள் கிடைத்துள்ளதுடன், அதற்கமைய எதிர்காலத்தில் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின்படி இப்பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஐ. உள்ளக கணக்காய்வுப் பிரிவின் பிரிவுப் பிரதானியால் இப்பிரிவின் எதிர்காலச் செயல்திறன் குறித்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டு, அதன் ஊழியர் தேவைக்கு ஏற்ப எதிர்காலப் பதவியமர்த்தல்களை மேற்கொள்வதற்குத் தேவையான விபரங்களை நிர்வாகம் மற்றும் மனித வளப் பிரிவுக்கு எழுத்துப்பூர்வமாக வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், சேவை வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஃ) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் (ETF) சட்டத்திற்காக முன்மொழியப்பட்டுள்ள 5(2) ஆம் பிரிவுக்குரிய திருத்தம் உட்பட அனைத்துத் திருத்தங்கள் தொடர்பிலும் அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு முன்னர், அது குறித்துப் பொறுப்பான அமைச்சருடன் கலந்துரையாடி மீளாய்வு செய்து இறுதித் தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் என 2025.06.27 திகதிய பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய, 2025.08.13 ஆம் திகதி நிதி அமைச்சில் பணிப்பாளர் நாயகம் (தாபனக் கடமைகள்) மற்றும் மேலதிக பணிப்பாளர் நாயகம் (சட்ட நடவடிக்கைகள்) உட்பட அமைச்சின் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் தவிசாளர் உட்பட உரிய அதிகாரிகளின் பங்களிப்புடன் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் குறித்துக் கலந்துரையாடலொன்று நடத்தப்பட்டது.

மேற்படி கலந்துரையாடல் தொடர்பான தீர்மானங்கள் மற்றும் அறிவுறுத்தல்கள், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்குப் பதிலாக பணிப்பாளர் நாயகத்தினால் (தாபனக் கடமைகள்) 2025.10.24 திகதிய கடிதத்தின் மூலம் சபையின் தவிசாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளன. அக்கடிதத்தில் சட்டம் திருத்தப்படுவது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் மற்றும் உரிய திருத்தப்பட்ட ஆவணங்களை அமைச்சுக்கு அனுப்புமாறு சபையின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, அமைச்சரவைப் பத்திரம் மற்றும் மறுசீரமைக்கப்பட்ட சட்டத்திற்கு முன்மொழியப்பட்ட திருத்தங்களின் வரைபிற்காக, 2025 நவம்பர் மாதம் 24 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு (776 ஆவது) பணிப்பாளர் சபை பத்திரமொன்று (இலக்கம் 282:.2025) சமர்ப்பிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அனுமதி பெறப்பட்டது.

அதன் பின்னர், பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டத்திற்கான முன்மொழியப்பட்ட திருத்தங்களின் வரைபு மற்றும் அதனுடன் ஏற்புடைய அமைச்சரவைப் பத்திரத்தின் வரைபு என்பன தேவையான அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்காக 2025.12.17 ஆம் திகதி நிதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.



143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

(உ) இலாபப்பங்கு சமன்பாட்டு குழுமத்தின் (Dividend Equalization Reserve) நோக்கமானது, நிதியத்தின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படும் இலாபப்பங்கை ஒரு நிலையான மட்டத்தில் பேணுவதாகும். சாதகமற்ற சந்தை வட்டி வீத ஏற்ற இறக்கங்கள் (மாறுபாடுகள்) காரணமாக வட்டி வருமானம் குறையும் காலப்பகுதிகளில் இச்சேமம் பயன்படுத்தப்படுகிறது.

இந்தக் குழுமத்தின் பயன்படுத்துவதன் மூலம், நிதியத்திற்குத் தனது உறுப்பினர்களுக்காக நிலையான வட்டி மற்றும் இலாபப்பங்கு விகிதத்தைப் பேண முடிகிறது. இக்குழுமத்திற்கான நிதி ஒதுக்கீடுகள் பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் மேற்கொள்ளப்படுகின்றன. உரிமை கோரப்படாத மரணக் கொடுப்பனவுகளின் (2025.12.31 திகதிய மீதியின், 2026.04.30 ஆம் திகதிய நிலவரப்படி உள்ள நிலைமை பின்வருமாறு:

| | Unpaid Death Benefits | |
|---|---|---|
| | **விண்ணப்பங்களின் எண்ணிக்கை** | **பெறுமதி (ரூ)** |
| 2025.12.31 ஆம் திகதிக்கு மீதி | 1337 | 29,500,167.18 |
| 2026 ஆம் ஆண்டில் விடுவித்தல் | 9 | 742,217.64 |
| 2026.04.30 ஆம் திகதிக்கு மீதி | 1328 | 28,757,949.54 |

2026 ஆம் ஆண்டில் விடுவிக்கப்பட்ட 09 பேரின் தகவல்கள் பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1 | 06/2025/506786/D/M | MADUSANKA H K B | 1,109.96 |
| 2 | 07/2010/532009/D/S | SUBHAWICKRAMA J V | 48,541.86 |
| 3 | 03/2014/513107/D/M | A DEVADAS | 4,273.15 |
| 4 | 11/2015/548361/D/S | SALHAUMMAH A L | 18,584.10 |
| 5 | 07/2017/532127/D/M | B S AMARADASA | 1,717.45 |
| 6 | 10/2020/526270/D/M | INDRAN K | 302,387.01 |
| 7 | 08/2024/512121/D/M | ANULAWATHI M W | 44,104.46 |
| 8 | 03/2017/511876/D/S | K S CHANDRABOSE | 75,634.99 |
| 9 | 12/2023/528441/D/S | RUPASINGHE K | 245,864.66 |
| | | | **742,217.64** |

(ஊ) உரிமை கோரப்படாத மரணக் கொடுப்பனவுகளாகக் கணக்கு மீதிகள் உருவாவது, எமது சபையின் மரணமடைந்த உறுப்பினர்களின் கணக்கு மீதிகளைச் செலுத்தும் போது, மரணமடைந்தவரின் வாரிசுகள் அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர்கள் அனைவரும் கொடுப்பனவுப் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்காததன் காரணமாகவே ஆகும். அதற்கமைய, முன்வரும் வாரிசுகள் அல்லது நியமிக்கப்பட்டவர்களுக்குரிய பங்கைச் செலுத்திய பின்னர், எஞ்சிய தொகை உரிமை கோரப்படாத மரணக் கொடுப்பனவு' எனச் சபையின் கணக்கில் தக்கவைக்கப்படுவதுடன், பெரும்பாலான வாரிசுகள் அல்லது நியமிக்கப்பட்டவர்களின் தனிப்பட்ட விபரங்கள் எங்களிடம் இல்லாததாலும், அவர்கள் வெளிநாடு சென்றிருப்பதாலும் வருடாந்த உரிமை கோரப்படாத மரணக் கொடுப்பனவு மீதி படிப்படியாக அதிகரித்துள்ளது. அனைத்து வாரிசுகளும் முன்வராத போது கொடுப்பனவுப் பணத்தைச் செலுத்தாமல் இருக்கத் தீர்மானித்தால், முன்வரும் வாரிசுகள் அக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை இழக்க நேரிடும் என்பதால், வருடாந்தம் இம் மீதி அதிகரித்த போதிலும், மரணமடைந்த உறுப்பினர்களின் சில வாரிசுகளுக்காவது கொடுப்பனவை அனுபவிக்கும் வாய்ப்பு இதன் மூலம் கிடைக்கிறது.

(எ) சில தொழில் வழங்குநர்களால் பங்களிப்புப் பணம் சபைக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும், அக் கொடுப்பனவுகள் தொடர்பான தொழில் வழங்குநர் விபரங்கள் சரியாகக் கிடைக்கப் பெறாததன் காரணமாக அடையாளம் காண முடியாத பங்களிப்புப் பணம் V100 மற்றும் V999 ஆகிய இடைநிறுத்தப்பட்ட கணக்குகளில் கணக்கிடப்பட்டுள்ளதுடன், பின்னர் உரிய தொழில் வழங்குநர் விபரங்கள் கிடைத்தவுடன் சரியான கணக்குகளுக்கு மாற்றப்பட்டுள்ளன.

இக்கணக்குகள் தொடர்பாக 2021 ஆம் ஆண்டில் இருந்த மீதி ரூ. 28.309 மில்லியன் ஆக இருந்ததுடன், சரியான தொழில் வழங்குநர் கணக்குகளை அடையாளம் கண்டு மீதியை மாற்றும் செயல்முறையின் ஊடாக அந்த மீதி தற்போது ரூ.6.52 மில்லியன் வரை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்த மீதியிலிருந்து 2020 ஆம் ஆண்டிற்குப் பின்னர் தொழில் வழங்குநர்கள்ால் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டுள்ள ரூ.389,411.90 தொகையுடன் தொடர்புடைய கொடுப்பனவு விபரங்கள் தொழில் வழங்குநர்களால் அவ்வப்போது வழங்கப்பட்டு வருவதுடன், சில கொடுப்பனவுகள் பற்றிய விபரங்கள் சம்பந்தப்பட்ட வங்கிகள் மூலமும் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. அவ்விபரங்களின் அடிப்படையில் V999 கணக்கில் கணக்கிடப்பட்டுள்ள கொடுப்பனவுகள் சரியான தொழில் வழங்குநர் கணக்குகளுக்கு மாற்றப்பட்ட போதிலும், மேலும் அவ்வாறு விபரங்களைப் பெற்றுக்கொள்வது மிகவும் கடினம் என அவதானிக்கப்பட்டுள்ளது.

நிச்சயமற்ற கணக்குகளின் மீதியைக் குறைப்பதற்கும், அந்த மீதி மேலும் அதிகரிப்பதைத் தடுப்பதற்கும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பின்வருமாறு:

a) 2006 ஆம் ஆண்டிற்கு முன்னர் செய்யப்பட்டுள்ள ரூ.6,135,719.13 வரவுகளை தற்போது அடையாளம் காண முடியாதுள்ளதால், 2023.03.29 ஆம் திகதி நடைபெற்ற கணக்காய்வுக் குழுவின் அறிவுறுத்தலின்படி அக்கணக்கு மீதிகளைத் தனிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து கணக்காய்வுக் குழுவின் அறிவுறுத்தல்கள் மற்றும் பரிந்துரைகளைப் பெற்று அதற்கமைய செயல்படவுள்ளது.

b) தொழில் வழங்குநர்களால் பங்களிப்புப் பணம் மற்றும் மேலதிக கட்டணங்களைச் செலுத்தும் போது நேரடியாக வங்கியில் வைப்புச் செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த வசதிகள் காரணமாக இத்தகைய சிக்கல்கள் ஏற்பட்டதால், தற்போது அத்தகைய நேரடி வங்கி வைப்புகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

c) தொழில் வழங்குநர்களை இலத்திரனியல் கொடுப்பனவு வழிமுறைகளின் ஊடாக பங்களிப்புப் பணத்தைச் செலுத்த வழிநடத்துதல்.

(ஏ) எதிர்காலத்தில் உரிய நிலுவைப் பணத்தை வசூலிப்பதற்காகப் பிரிவுப் பிரதானிகளுக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

**சோமசிறி ஏக்கநாயக்க**
தவிசாளரர் / பிரதம நிறைவேற்று அதிகாரி



143 எமது 45 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்
155 நிறுவனத்தின் பொறுப்புடைமை
210 நிதித் தகவல்கள்
261 மேலதிக தகவல்கள்

වාර්ෂික වාර්තාව
வருடாந்த அறிக்கை
Annual Report
2025

EMPLOYEES' TRUST FUND BOARD

19 - 23 Floors, "MEHEWARA PIYESA",
P.O.Box 807, Kirula Road, Narahenpita, Colombo 05.
Tel: 011 7747201 | Fax: 011 2503917
Email: finance@etfb.lk
Web: www.etfb.lk